நிலைமாற்றலின் கதை

உறுதுணையளிக்கும் ஓர் முறைமைப்படுத்துபவர்



SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

ஆண்டறிக்கை 2020

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நிலைமாற்றலின் கதை

உறுதுணையளிக்கும் ஓர் முறைமைப்படுத்துபவர்

நாட்டின் பிணையங்கள் சந்தையினை மேற்பார்வை செய்யும் பணியானது ஒப்படைக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (இபிபஆ) கடந்த காலங்களில் ஓர் முறைமைப்படுத்துபவரது பாரம்பரிய பங்கிற்குள் அதனை கட்டுப்படுத்திக்கொண்டது. எவ்வாறாயினும், காலங்களிலான மாற்றம் மற்றும் பிணையங்கள் சந்தையின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, இபிபஆ தன்னை ஓர் உறுதுணையளிக்கும் ஓர் முறைமைப்படுத்துபவராக உருமாற்றியுள்ளதுடன், மூலதனச் சந்தை அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தலுக்கிடையே ஓர் சரியான சமநிலையினை எட்டியுள்ளது. இபிபஆ இனால் கடைப்பிடிக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மை மற்றும் செயலூக்கல் அணுகுமுறையானது மீளாய்வாண்டில் பிணையங்கள் சந்தை கண்ட பல முன்னேற்றகரமான முன்னெடுப்புகளை இயலுமையாக்கியது. கோவிட்-19 தொற்றின் காரணமாக இயங்குதிறன் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் தறுவாயில் டிஜிட்டல் மயமாக்கலினூடாக பிணையங்கள் சந்தையின் தடையற்ற செயற்பாட்டினை உறுதிப்படுத்தியமையினை ஓர் அற்புதமான நிலைமாற்றலாகக் கருதமுடியும்.

அடித்தளமானது பதிக்கப்பெற்றதுடன், இபிபஆ நாட்டின் பிணையங்கள் சந்தையானது உயரிய வளர்ச்சிக்கு நியமித்துள்ளதாக நம்பிக்கை கொண்டுள்ளது.

உள்ளடக்கம்

03 எம்மைப் பற்றி

04 தலைவரின் மீளாய்வு

08 பணிப்பாளர் அதிபதியின் மீளாய்வு

18 ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

23 முழுமையான, நடவடிக்கை சார்ந்த, நடைமுறையான மற்றும் அளவிடத்தக்க மூலதனச் சந்தை மூலோபாயம் 2020 - 2025

24 முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள்

26 பங்குச் சந்தையின் முனைவு முதல் முனைவு வரையான செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இபிஆ/கொப கூட்டுக் குழு

27 டிஜிட்டல் மயமாக்கலினூடாக ஒவ்வொரு இலங்கையரையும் எட்டல்

30 எதிர்காலத்திற்கான மிகைப்புப் பாய்ச்சல்

32 சிரேஷ்ட முகாமைத்துவம்

35 முகாமையாளர்கள்

36 பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்

42 செயற்பாட்டு மீளாய்வு

74 மேலதிகத் தகவல்கள்

நிதியியல் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

81 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

84 நிதி நிலைமைக் கூற்று

85 நிதிச் செயற்திறன் கூற்று

86 தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று

87 காசுப் பாய்ச்சல் கூற்று

89 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

103 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

106 நிதி நிலைமைக் கூற்று

107 நிதிச் செயற்திறன் கூற்று

108 தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று

109 காசுப் பாய்ச்சல் கூற்று

110 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

114 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

117 நிதி நிலைமைக் கூற்று

118 நிதிச் செயற்திறன் கூற்று

119 இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று

120 காசுப் பாய்ச்சல் கூற்று

121 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

125 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

127 நிதி நிலைமைக் கூற்று

128 நிதிச் செயற்திறன் கூற்று

129 தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று

130 காசுப் பாய்ச்சல் கூற்று

131 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

உபிஅ கூட்டாண்மைத் தகவல்கள்



Scan the QR code or visit
https://www.sec.gov.lk/

எம்மைப் பற்றி


இபிபஆ 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டதுடன் இது 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றினால் திருத்தியமைக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. நிதி அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் வருகின்றது.

தொலைநோக்கு

பயனுறுதிமிக்க, திறமைமிக்க மற்றும் உயிர்ப்பான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு பிராந்தியத்திலேயே சிறந்த முறைமைப்படுத்துபவராக வருவது.

பணிநோக்கு

நியாயமான, திறமைமிக்க, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தை ஒன்றை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றும் பராமரிப்பதற்கு.



தலைவரின் மீளாய்வு



மூலதனச் சந்தையின் இறுதியான இலக்கு என்னவெனில் முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஆகிய இரு சாராரும் வர்த்தகம் செய்வதற்கு அவசியமான சூழல் மற்றும் நம்பகத்தன்மையினை கொண்டிருப்பதனை உறுதிசெய்வதாகும்.

விராஜ் தயாரத்ன, ஐச
தலைவர்

கோவிட்-19 தொற்றின் பேரழிவான தாக்கம் இருந்தபோதிலும், கடந்த வருடத்தில் சந்தையின் மனதில் பதியத்தக்க செயற்திறனாது ஆபத்தின் மத்தியிலும் எமது சந்தையின் மீளெழும் தன்மையினை காட்சிப்படுத்தியது. இதற்கு அனைத்து பங்காளிகளதும் அயராத முயற்சிகளை பாராட்டுதல் வேண்டும். முதலீட்டாளர்களது பங்களிப்பு மட்டத்திலான அதிகரிப்பானது முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையினையும் நன்னம்பிக்கையினையும் பிரதிபலிக்கின்றது.

மூலதனச் சந்தையின் இறுதியான இலக்கு என்னவெனில் முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஆகிய இரு சாராரும் வர்த்தகம் செய்வதற்கு அவசியமான சூழல் மற்றும் நம்பகத்தன்மையினை கொண்டிருப்பதனை உறுதிசெய்வதாகும். மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துனராக இபிபஆ, அவசியமான சீர்திருத்தங்கள் மற்றும் வழிகாட்டியுடன் மேலும் வளர்ச்சி மற்றும் நிலைப்புத்தன்மையினை அடைவதில் தொடர்ந்தும் துணைபுரியும்.

தொற்றிலான சமர்

தொற்றினால் பாதிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு துணைபுரிவதற்காக இபிபஆ கூட்டாண்மை அறிக்கையிடலுக்கான காலத்தின் நீடிப்புகள் மற்றும் ஆகக்குறைந்த பொதுப் புழக்கத் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் உள்ளடங்கலாக பல நிவாரண நடவடிக்கைகளை வழங்கியது. அத்துடன் நாம் அனைத்து பதிவீடளிக்கப்பட்ட எல்லைக் கடன் வழங்குநர்கள் மற்றும் அனைத்து உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர்களது வாடிக்கையாளர்களுக்கு அவர்களினால் பெறப்பட்ட கடனிலான வட்டி செலுத்துவதிலிருந்து ஓர் காலம் தாழ்த்தி செலுத்தும் வசதி வழங்கப்பட்டது. முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களைப் பொறுத்தளவில், நாம் பின்வருவனவற்றை வழங்கினோம், நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல் கடப்பாடுகளில் நெகிழ்வுத்தன்மை, வருடாந்த உரிமமளித்தல் / பதிவீடளித்தல் கட்டணங்கள் செலுத்துவதில் ஒத்திவைப்பு மற்றும் கடன் வெளிப்பாட்டிலான வழிகாட்டிகளையும் வழங்கினோம்.

மார்ச் மாதத்தில் அமுல்படுத்தப்பட்ட கடுமையான முடக்கலானது பங்குப் பரிவர்த்தனை வர்த்தகத்திற்காக திறந்திருப்பதில் இயலாமையினை விளைவித்தது. பிரதான தடையாக காணப்பட்டது என்னவெனில் சில முக்கியமான நடவடிக்கைகளை டிஜிட்டல் மயத்தினூடாக நடாத்துவதற்கான இயலாமையாகும். எவ்வாறு செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம் என்பது பற்றிய பங்காளிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களின்போது அமைப்பு முறைமையில் நிலவுகின்ற போதாமைகள் வெளிச்சத்திற்கு வந்தன.

இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொபப) செயற்பாடுகளை முனைப்பிலிலுருந்து முனைப்பு வரையான டிஜிட்டல் மயமாக்களுக்கு தலைமைதாங்குவதற்கு இபிபஆ இனை தூண்டியது. இந்த நோக்கத்திற்காக இபிபஆ மற்றும் கொபப இன் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஓர் கூட்டுக் குழு நியமிக்கப்பட்டதுடன், டிஜிட்டல் மயமாக்கலின் முதலாம் கட்டமானது மிகவும் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், மான்புமிகு பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இந்நிகழ்வினை குறிப்பதற்காக ஓர் விசேட சந்தை ஆரம்பித்தல் விழா செப்டம்பர் 2020 இல் இடம்பெற்றது. அனைத்து பங்காளிகளதும் தொடுபுள்ளிகளை உள்ளடக்கும் விதமாக டிஜிட்டல் மயமாக்கல் இயக்கம் மூன்று கட்டங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

முதலாம் கட்டத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாக காணப்பட்டது இயங்கலையூடாக ஓர் கணக்கினை திறக்கக்கூடிய ஆற்றல் மற்றும் உடனடியாக வர்த்தகத்தினை ஆரம்பிக்கக்கூடிய ஆற்றல் என்பவையாகும். உங்களது வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் செயல்முறையின் அங்கமாக ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களத்திலிருந்து (ஆபதி) இயங்கலையூடாக ஓர் வாய்ப்புள்ள முதலீட்டாளரின் தேசிய அடையாள அட்டை தகவல்களை சரிபார்க்கக்கூடிய ஆற்றலைக் கொண்ட நாட்டிலுள்ள முதலாவது நிறுவனமாக கொபப வந்தது. இது இபிபஆ, கொபப மற்றும் ஆபதி ஆகியவற்றிற்கிடையே செய்துகொள்ளப்பட்ட முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக சாத்தியமாயிற்று.

இதன் ஏனைய சிறப்பியல்புகள், தாள் அடிப்படையிலான கூற்றுக்களை இலத்திரணியல் வடிவத்தில் மாற்றுதல், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் பங்கிலாபத்தினை இலத்திரணியல் மூலமாக செலுத்தக்கூடிய ஆற்றல் மற்றும் முதலீட்டாளர்கள் ஓர் குறுஞ்செய்தி விழிப்பூட்டலின் மூலம் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களை அறியப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. தொற்றின் காரணமாக காலா காலம் உடல்ரீதியான அசைவுகளுக்கான தடைகள் காணப்பட்டபோதிலும் டிஜிட்டல் மயமாக்கல் சந்தையின் தடையற்ற செயற்பாட்டினை இயலுமையாக்கியது.


சந்தையின் நிலைப்புத்தன்மையினை பாதிக்கக்கூடிய சடுதியான விலை அசைவுகளை தடுப்பதற்காக ஓர் மூன்றடுக்கு சுற்றுமுறிப்பான் கட்டமைப்பு எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டிக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஓர் குறிப்பிடத்தக்க சந்தை வீழ்ச்சியின்போது முப்பது நிமிடங்கள் வரையான காலத்திற்கு ஓர் வர்த்தக நிறுத்தலினை இயலுமையாக்குவதுடன் சந்தை பங்குபற்றுநர்களுக்கு சந்தை நிலைமையினை மதிப்பிடுவதற்கான ஓர் வாய்ப்பினை வழங்குவதனூடாக சந்தையில் நம்பகத்தன்மையினை உருவாக்குவதற்கு துணைபுரிகின்றது.

உடல்ரீதியான அசைவுகளுக்கான தடைகள் காணப்பட்டபோதிலும் டிஜிட்டல் மயமாக்கல் சந்தையின் தடையற்ற செயற்பாட்டினை இயலுமையாக்கியது.



கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் டிஜிட்டல் மயமாக்கல்

கொபப கைப்பேசி செயலியானது இலங்கையில் விரைவாக வளர்ச்சியடையும் செயலிகளில் ஒன்றாகும்.



சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் நடப்புமுறை

இபிபஆ அதன் பணியான முறைமைப்படுத்தலை ஓர் பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள விதத்தில் செயலாற்றும்வேளை முதலீட்டாளர்களது நலன்களையும் பாதுகாக்கவேண்டுமாயின், ஏனைய நியாயதிக்கங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு இணையாக எமது சட்ட நடப்புமுறையானது புதுப்பிக்கப்படுதல் அவசியமானதாகும். அத்துடன் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் சேர்ந்தொழுகுதல் முக்கியமானது, குறிப்பாக சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான ஒழுங்கமைப்பினால் (சபிஆஒ) எடுத்துரைக்கப்படுவதுடன் ஆகும்.

எமது சட்டத்தின் நவீனமயப்படுத்தலானது ஓர் தசாப்தத்திற்கும் மேலாக பல்வேறு கட்ட கலந்துரையாடல்களில் காணப்பட்டது. இது முன்னைய ஆணைக்குழுவினால் ஓர் வரைவுச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும் அதனை சட்டமாக்குவதற்கான சாத்தியம் அற்று காணப்பட்டது. வரைவினை மிகவும் கவனமாக ஆய்வுசெய்ததன் பின்னர் இபிபஆ புதிய சட்டமூலத்தினை நிறைவுசெய்ததுடன் இது அமைச்சர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது சட்டவாக்கச் செயல்முறையின் இறுதிக் கட்டத்தில் உள்ளது. அரசாங்கம் விரைவில் சட்டமாக்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். முன்மொழியப்பட்ட சட்டமானது பல ஆரோக்கியமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன் இவை முறைமைப்படுத்தலில் செயற்திறனை மேம்படுத்துவதுடன் சந்தையின் அபிவிருத்தியினையும் இயலுமையாக்கும். நீண்ட தாமதமானது எமது நன்மைக்கே என நாம் நம்புவதுடன், பல வருடங்களாக நுண்மாற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளினால் முகங்கொடுக்கப்பட்ட சவால்களிலிருந்து கற்றுக்கொண்டதன் பின்னர் நாம் தற்போது புத்தியலுக்கு விரைவாக முன்னேறக்கூடியதாயுள்ளது.

முதலீட்டாளர் பாதுகாப்பினை மேலும் மேம்படுத்தும் நோக்கில், இபிபஆ மற்றும் கொபப, முதலீட்டாளர்கள் மற்றும் தரகு நிறுவனங்களிடையேயான பிணக்குகளை தீர்ப்பதற்கான ஓர் புதிய பொறிமுறையினை அறிமுகப்படுத்தும் செயல்முறையிலுள்ளன. முடிவுறுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் பொறிமுறையானது செயல்முறையின் சுயாதீனத்தன்மை மற்றும் நடுநிலைமையினை பலப்படுத்துவதுடன் அதனை விரைவாக்கும்.

தலைவரின் மீளாய்வு

மிகவும் தெளிவு, முன்கணிப்புத்தன்மை மற்றும் ஒவ்வுமை ஆகியவற்றை கொண்டுவருவதற்காக நாம் சந்தை இடையீட்டாளர்கள் விதிகளை திருத்தியமைக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளோம். பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவை தொடர்பாக எமது முறைமைப்படுத்தல் நடப்புமுறையினை வெளித்தோன்றும் போக்குகளுடன் ஒத்தாற்போல் கொண்டு வருவதற்காக ஓர் புதிய கோவையினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நியாயமான வர்த்தகத்திற்கான ஓர் வாய்ப்பான சந்தை

சூழ்ச்சியான அல்லது மோசடியான நடத்தைகளை தவிர்ப்பதற்காக விரைவான தடுப்புக்குரிய நடவடிக்கையினை பின்பற்றுவதில் நாம் முன்னிறுத்தம் செய்தோம். கடந்த ஆண்டு மே மாதம் முதல் சந்தையானது உயர்ந்த மட்டத்திலான நடவடிக்கையினை கண்டதுடன் ஓர் சாதனையான எண்ணிக்கையிலான புதிய முதலீட்டாளர் கணக்குகள் திறக்கப்பட்டன. எனவே நாம், ஏதேனும் சந்தை துர்நடத்தைகளை கண்டுபிடிப்பதற்காக எமது கண்காணிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளோம். எமது கண்காணிப்பு ஆற்றல்கள், எதிர்வரும் காலத்தில் ஓர் அதிநவீன கண்காணிப்பு அமைப்புமுறைமையின் கையகப்படுத்தலுடன் மேலும் பலப்படுத்தப்படும்.

மீளாய்வாண்டில், இபிபஆ பங்குத் தரகு நிறுவனங்களுக்கான சிறந்த நடைமுறைகளிலான ஓர் வழிகாட்டிகளின் தொகுப்பினை அங்கீகரித்தது. இந்த வழிகாட்டிகள் பங்குத் தரகு நிறுவனங்களுடனான கலந்துரையாடலுடன் இபிபஆ மற்றும் கொபப இனால் விருத்திசெய்யப்பட்டன. இவை அவர்களினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதுடன் நியமங்களையும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இபிபஆ மற்றும் கொபப இணைந்து வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவையிலான வழிகாட்டுதலை உள்ளடக்கிய ஓர் கண்காணித்தல் கையேட்டினை விருத்திசெய்தன.

நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான வெளிப்படுத்தல்கள்

முதலீட்டாளர்கள் தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்கள் மேற்கொள்வதனை இயலுமையாக்குவதற்காக, அனைத்து கணிசநிலை தகவல்களும் நேரகாலத்துடன் சந்தைக்கு பரப்பப்படுதல் முக்கியமானதாகும். ஆண்டறிக்கைகளில் மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தல்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கூட்டாண்மைச் செய்திகள் ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன் இந்த செயல்முறையானது ஏதேனும் கூட்டாண்மை துர்நடத்தைகள் கண்டுபிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு துணைபுரியும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம். பட்டியலிடப்பட்ட கம்பனிகள் அவர்களின் வணிகத்திலான தொற்றின் தாக்கத்தினை வெளிப்படுத்தியதுடன் இது முதலீட்டாளர்களுக்கு அவர்களது தீர்மானம் மேற்கொள்வதில் துணைபுரிந்தது.

பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் சிறந்த கூட்டாண்மை ஆளுகையினை அடைவதற்கும் மற்றும் பொறுப்புக்கூறல், நியாயமானதன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்வதற்காக, அனைத்து பங்காளிகளது பங்களிப்புடன் வரைவு செய்யப்பட்ட கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையினை முடிவுறுத்துவதற்கு முன்னர் ஓர் பொது கலந்துரையாடலை மேற்கொள்ளும் செயல்முறையில் உள்ளோம்.

நிதிக்கான அணுக்கம்

தகமை வரன்முறைகள், கூட்டாண்மை ஆளுகை விதிமுறைகள் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளை தளர்த்துதல் போன்ற பல வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் கம்பனிகளுக்கு ஓர் மிருதுவான பட்டியலிடல் அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்காக இபிபஆ முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை சீராக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. பட்டியலிடுவதற்கான அங்கீகாரத்தினை வழங்கும் செயல்முறை தொடர்பாக கொபப க்கு பூரண சுயாதிகாரம் வழங்கப்பட்டது.

இலங்கையிலுள்ள முதலீட்டாளர்கள் எப்போதும் ஓர் பாதுகாப்பான முதலீட்டுத் தெரிவாக ஆதனத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கை பொறுப்புகளுக்கான (ஆமுநபொ) மிகவும் காத்திருந்த சட்ட வரம்புறுகையின் அறிமுகத்துடன் ஆதனத்தில் முடக்கப்பட்டுள்ள மூலதனமானது விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இயங்கலை மாற்றீட்டு நிதியளிப்பு மேடைகளை ஊக்கவிப்பதற்காக நாம் கூட்டு நிதிநல்கை மற்றும் சமஉரிமை கடன் வழங்கல் என்பவற்றை அறிமுகப்படுத்துவதனை கருத்திலெடுக்கின்றோம். இந்த மேடைகளுக்கான முறைமைப்படுத்தல் வரம்புறுகையானது கொபப உடன் சேர்ந்து விருத்திசெய்யப்படும் என்பதுடன் நாம் பின்வருவன குறித்து கவனத்துடன் உள்ளோம். மூலதன உருவாக்கத்தின் நலன்களை அத்தகைய செயற்பாடுகள் கடன்வழங்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்கைகளுக்கெதிராக சமநிலைப்படுத்தலின் அவசியம் ஆகும்.

> சூழ்ச்சியான அல்லது மோசடியான நடத்தைகளை தவிர்ப்பதற்காக விரைவான தடுப்புக்குரிய நடவடிக்கையினை பின்பற்றுவதில் நாம் முன்னிறுத்தம் செய்தோம்.

வணிகத் தொடர்ச்சி

சந்தையின் நிலைப்புத்தன்மையினை பராமரிப்பதற்கும் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் விசேடமாக இந்த நிலையற்ற காலத்தில் மீளெழுச்சியுடன் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காகவும் நாம் அவர்களது மூலதனம் மற்றும் ஏனைய விவேகமான தேவைப்பாடுகள், வாடிக்கையாளர்களது சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளகக் கட்டுபாடுகளுடனான இணக்கம் என்பவற்றில் விசேடக் கவனம் செலுத்தினோம். இது சந்தை பங்குபற்றுநர்கள் அவர்களது வணிகத் தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்காக அவர்களது நலிவுறுநிலைகள் மற்றும் செயற்பாட்டு ஆயத்த நிலையினை இனங்கண்டு மதிப்பிடுவதற்கு உதவியது.

விழிப்புணர்வினை உருவாக்குதல்

இலங்கை பல்வேறுவகைப்பட்ட முதலீட்டாளர் சனத்தொகையினைக் கொண்டிருப்பதுடன் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலதனச் சந்தையுடன் முதலீட்டாளர்கள் தொடர்புகொள்ளும் விதத்தினை மாற்றியுள்ளன. சமூக ஊடகங்களினூடாக முதலீட்டு ஆலோசனையினை வழங்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துள்ளது. இது எமக்கு ஓர் கரிசனையாகும் ஏனெனில் இவர்களுள் பெரும்பாலானோர் சான்றளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்கள் அல்ல, தவறாக வழிநடத்தப்படுவதிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்காக, அவர்கள் முக்கிய நிதியியல் கோட்பாடுகள் குறித்து ஓர் முறையான புரிந்துணர்வினை கொண்டிருத்தல் மற்றும் சாத்தியமான இடர்நேர்கைகள் குறித்தும் உணர்ந்திருப்பதனை உறுதிப்படுத்துதல் அவசியமாகும். இது தொடர்பில், இபிபஆ ஓர் தீவிரமான சமூக ஊடக பிரச்சாரத்தினை ஆரம்பித்ததுடன், நான்கு மும்மொழிகளிலான

குறுகிய அசைவூட்டக் காணொளிகள் உள்ளடங்கலாக முக்கிய கற்றல் மற்றும் முறைமைப்படுத்தல் வளங்களை பரப்பியது.

பாடசாலை பிள்ளைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடையே சேமிப்பு, முதலீடுகள் போன்ற கோட்பாடுகளின் முக்கியத்துவம் மற்றும் மூலதனச் சந்தையில் பங்கு மற்றும் நலன்கள் குறித்து புகட்டுதல் முக்கியமானதாகும். இதனை அடையும் நோக்கில், பாடசாலை பாடத்திட்டங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள உரிய அதிகாரிகளுடன் நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் எமது முன்மொழிவுகள் வரவேற்பினை பெற்றது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இது தரம் ஆறு முதல் 2023 இல் பாடசாலை பாடத்திட்டம் திருத்தியமைக்கப்படும்போது அதனுள் உள்ளடக்கப்படும் என்றும் பல்கலைக்கழக பாடத்திட்டம் திருத்தியமைக்கப்படும்போதும் உள்ளடக்கப்படும் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தினை நோக்கிய பார்வை

ஓர் வலுவான மற்றும் வசதியளிக்கக்கூடிய முறைமைப்படுத்தல் சூழலுக்கு நாம் ஒவ்வொரு முயற்சியினையும் மேற்கொள்ளும் வேளை, புத்தாக்கத்தினை தூண்டி ஓர் செழிப்பான மூலதனச் சந்தையினை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் நாம் உணர்வுடன் உள்ளோம். இதனைக் கருத்திற்கொண்டு. இபிபஆ கடந்த ஆண்டில் ஓர் செயல்திறனுடனான பங்கினை வகித்ததுடன் கொபப உடன் சேர்ந்து பல முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியது. இது எமது மூலதனச் சந்தையினை அகலமாக்குவதற்கும் ஆழமாக்குவதற்கும் துணைபுரியும் என நாம் நம்பிக்கையுடன் உள்ளோம்.

டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பின் இரண்டாம் கட்டமானது ஜூன் 2021 இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்பதுடன் இது பல்வேறு நலன்களை கொண்டுவரும். கொபப இலுள்ள தன்னியக்க வர்த்தக முறையின் (தவமு)விலைமாற்றத்தின் சிறும அலகானது விலைச் செயற்திறன், திரவத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பங்குகளின் நிலையற்ற தன்மையினை குறைப்பதற்காகவும் திருத்தியமைக்கப்பட்டன. விசேட நோக்குடைய கையகப்படுத்தல் கம்பனிகளுக்கு வழிசமைப்பதற்காக இபிபஆ கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன் அதற்கான விதிகள் தற்போது தயாரிக்கப்பட்டவண்ணமுள்ளன. இது கொபப இல் பட்டியலிடலைப் பெறுவதற்கு கம்பனிகளுக்கு ஓர் மாற்றீட்டு வழியினை வழங்கும் நோக்கிலாகும். கொபப இன் சாளரவழியினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகளை இயலுமையாக்குவதற்கும் தங்கப் பின்னணைவுடனான கருவிகளது அறிமுகத்திற்கும் நாம் கொள்கையளவில் அங்கீகாரத்தினை வழங்கினோம். இது சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுக் கருவிகள் கிடைக்கப்பெறுவதனை இயலுமையாக்கும் நோக்கிலாகும்.

பிணையங்கள் கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்கலூடாக காப்பான குறை விற்பனை, இஸ்லாமிய கருவிகள், கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள் மற்றும் பசுமை முறிகள் என்பவற்றின் அறிமுகத்திற்கு வசதியளித்தல் வரிசையிலுள்ள ஏனையவையாகும். இதற்கும் மேலாக, உள்ளூர் கம்பனிகள் உரித்துவம் அல்லது கடன் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் மூலதனத்தினை திரட்டுவதனை வசதியளிப்பதற்கான ஓர் முன்னெடுப்பானது இபிபஆ இன் ஆசீர்வாதத்துடன் கொபப இனால் தொடரப்படுகின்றது. இது தற்போது இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றது.

முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையினை தடையின்றி அணுகுவதனை இயலுமையாக்குவதற்காக இபிபஆ டிஜிட்டல் மேடை செயற்பாட்டாளர்களை அனுமதிக்கும் சட்ட வரம்புறுகையினை முடிவுறுத்துவதற்காக கொபப க்கு அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இது அவர்களது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது மேடைகளினூடாக பங்குச் சந்தையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வசதியினை வழங்குவதற்காகும்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட விநியோகம் எதிர் கொடுப்பனவு (விஎகொ) பொறிமுறை மற்றும் மேம்படுத்தப்பட்ட விடுமிகைத்தல் மாதிரி என்பன 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் அமுல்படுத்தப்படும். விஎகொ பிணையங்கள் சந்தையின் நிலைப்புத்தன்மையினை மிகையூட்டுவதுடன் வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கைகளை பயனுறுதிமிக்க விதத்தில் முகாமைப்படுத்துவதற்கு உதவும். இபிபஆ மற்றும் கொபப இன் இறுதி குறிக்கோள் மத்திய எதிர்தரத்தவர் (மஎ) வைத்திருப்பதாகும். கொபப இன் பரஸ்பரமற்றமயமாக்கலினை இயலுமையாக்கும் சட்டவாக்கமானது அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வரைவு சட்டமூலமானது நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் நிலுவையிலுள்ள ஒரே விடயம் பங்கு ஒதுக்கமாகும். அதில் உடன்பாடு கண்டவுடன் வரைவானது முடிவுறுத்தப்படும்.

ஒப்புரைகள்

மூலதனச் சந்தை மற்றும் அதன் அபிவிருத்தியுடன் அரசாங்கம் இணைத்துள்ள முக்கியத்துவத்தினை நான் ஒப்புக்கொள்ளல் வேண்டும். இது மூலதனச் சந்தைக்கு ஓர் தனியான இராஜாங்க அமைச்சரை உருவாக்கியபோது மற்றும் அதன்பின்னர் வழங்கப்பட்ட பல வரிச் சலுகைகளின் மூலம் முதலில் வெளிப்படுத்தப்பட்டது. நான் மான்புமிகு பிரதம மந்திரி மற்றும் நிதி அமைச்சர் மஹிந்த இராஜபக்ஷ, மதிப்பிற்குரிய மூலதனச் சந்தைகள் மற்றும் நாணயம் மற்றும் நிறுவனங்கள் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் திறைசேரியின் செயலாளர் திரு. எஸ். ஆர்.ஆட்டிகல ஆகியோருக்கு அவர்களது ஊக்கம் மற்றும் உறுதுணைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுடன் பணிபுரிவது மிகவும் மகிழ்ச்சிகரமானதாகக் காணப்பட்டதுடன், ஆணைக்குழுவின் அலுவல்களை நடாத்துவதற்கு அவர்களது பரந்த மற்றும் பல்வேறுபட்ட நிபுணத்துவம் மற்றும் அனுபவமானது பலமடங்கு பங்களித்துள்ளது. நான் எனது மனமார்ந்த நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பணிப்பாளர் தலைமை அதிபதி திரு. சிந்தக்க மெண்டிஸ் அயராது பணிபுரிந்துள்ளதுடன் செயலகத்தின் அலுவல்களை மிகவும் செயற்திறனான விதத்தில் முகாமைப்படுத்தியுள்ளார். பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதியின் ஏனைய அங்கத்தவர்கள் அவர்களது மிகச்சிறப்பானதை வழங்கி சிரமமான காலத்திற்கு மத்தியிலும் மிகவும் பயனுறுதிமிக்க விதத்தில் அவர்களது கடமைகளை செயலாற்றியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் கொபப இன் தலைவர், பணிப்பாளர்கள் சபை, பிநிஅ மற்றும் பணியாட்டொகுதியின் ஏனைய அங்கத்தவர்களுடன் மிகவும் நெருக்கமாக செயலாற்றியுள்ளதுடன் அவர்களால் வழங்கப்பட்ட உறுதுணை மற்றும் ஒத்துழைப்பிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக ஆனால் மிகக் குறைவாக அன்றி, அனைத்து பங்காளிகளுக்கும் அவர்களது தடுமாற்றமுறாத உறுதுணையின் மூலம் எமது பணியினை இலகுவாக்கியமைக்காக நன்றிகூற விரும்புகின்றேன்.



விராஜ் தயாரத்ன, ஐச
தலைவர்

20 மே 2021

பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களின் மீளாய்வு



நீரானது அது ஊற்றப்படும் பாத்திரத்தின் உருவடிவத்தினை எடுத்துக்கொள்வதுபோல் இபிபஆ இல் உள்ள நாம் அச்சுறுத்தல்களை வாய்ப்புக்களாகவும் பலவீனங்களை பலமாகவும் உருமாற்றுவதன் மூலம் தடைகளை வெற்றிகொள்ள ஆர்வமாயிருப்பதற்கு வலியுறுத்தப்பட்டோம்.

சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் அதிபதி

அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் மீது இபிபஆ ஆல் பொறுப்பேற்கப்பட்ட உருமாற்றலான பணியினை நான் மிகவும் திருப்தியுடன் மீளாய்வு செய்கின்றேன்.

ஓர் உலகளாவிய தொற்றின் மத்தியிலான மீளெழுச்சி

2020 ஆம் ஆண்டு ஓர் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். ஆரம்பத்தில் நாம் மிகவும் மோசமான காலத்தில் இருப்பது போன்ற தோற்றம் காணப்பட்டது, ஆனால் பின்னோக்கி பார்க்கும்போது கடந்த காலங்கள் சிறந்த காலங்களாகக் காணப்பட்டன என நான் கூறுகின்றேன். நான் இதனைக் கூறுவதற்கான காரணம் கடந்த வருடத்தில் இபிபஆ நாட்டின் பிணையங்கள் சந்தையின் மேம்பாட்டிற்காக நீண்டகாலமாக செயலற்றுக் காணப்பட்ட அமைப்புமுறைமைகள் மற்றும் முயற்சிகளை செயற்படுத்தக்கூடியதாயிருந்தது.

நாம் ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்தில் செயற்படும்போது நாடுபூராவுமான முடக்கல் அமுல்படுத்தப்பட்டவுடன், ஓர் நியாயமான மற்றும் ஒழுங்கான விதத்தில் செயற்படுவது மாத்திரமன்றி நாட்டின் பிணையங்கள் சந்தையினை திறந்து செயற்படுத்துவதற்கும் இயலாதிருந்தது. வரலாறு காணாத இந்த நிகழ்வின் விளைவாக எழக்கூடிய மிகப்பெரிய சிக்கல்கள் குறித்து நாம் மிகவும் அக்கறையுடன் காணப்பட்டோம். பின்னோக்கிய போதுதான் 2020 ஆம் ஆண்டானது ஓர் தனித்துவமான ஆண்டாக அதன் உயர்வு மற்றும் தாழ்வு நிலைகளை நாம் உணர்ந்தோம்.

2020 இன் ஆரம்ப மாதங்களில், முதலாவது நாடுபூராவுமான முடக்கலுக்கு முன்னர், இலங்கையின் பிணையங்கள் சந்தையானது தொற்றினால் உலகில் காணப்பட்ட ஏனைய சந்தைகளைப் போன்று கடுமையாக பாதிப்படைந்தது. அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (அபவிசு) நாடு பூராவுமான முடக்கலுக்கு முன்னர், 2020 இன் முதலாம் அரையாண்டில் 25% வீழ்ச்சியினை கண்டது. எவ்வாறாயினும், சந்தையானது இதுவரைக்கும் கண்டிராதளவுக்கு அதன் பிராந்திய சகாக்களை விஞ்சிய விதத்தில் மீளெழுச்சியுடன் மீண்டெழுந்ததுடன் 2020 ஆம் ஆண்டு ஓர் குறிப்பிடத்தக்க விதத்தில் நிறைவுசெய்யப்பட்டது. வருடத்தின் முதல் அரையாண்டினைப் போலன்றி, முடக்கலின் பின்னரான காலப்பகுதியில் அபவிசு குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 48% இனையும் எஸ் அண்ட் பி சுட்டியானது 35% வளர்ச்சியினையும் பதிவுசெய்தன. ஒட்டுமொத்தமாக, 2020 ஆம் ஆண்டானது ஓர் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை பதிவுசெய்தது. அபவிசு 2019 ஆம் ஆண்டின் வளர்ச்சியான 1.2% உடன் ஒப்பிடும்போது 2020 இல் 10.5% இனை பதிவுசெய்தது. 2018 இல் அபவிசு 5% எதிர்மறையான வளர்ச்சியினை

பதிவுசெய்தது. 2020 ஆம் ஆண்டில் இலங்கை ஓர் தினசரி சராசரி சந்தைப் புரள்வாக ரூபா 1.8 பில்லியனைக் கண்டதுடன் இது 2018 மற்றும் 2019 இல் உருவாக்கிய முறையே ரூபா 710 மில்லியன் மற்றும் ரூபா 833 மில்லியனுடன் ஒப்பிடும்போது மிகவும் தூரமாக தாண்டி நின்றது. அதே ஆண்டில், கொபய உடன் ஒன்றிணைந்து இபிபஆ ஆல் மேற்கொள்ளப்பட்ட பிணையங்கள் சந்தையின் டிஜிட்டல்மயமாக்கலின் விளைவாக துறையானது புதிய மத்திய வைப்புத் திட்ட முறைமைகளின் பதிவீடுகளின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பினைக் கண்டது. 2020 இல் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது தினசரி கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கையானது இரட்டிப்பாகியது. இன்று வர்த்தகங்களின் எண்ணிக்கையானது நாளாந்தம் 22,000 முதல் 25,000 வரை காணப்படுவதுடன் இது 2019 இல் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகங்களின் எண்ணிக்கையுடன் பார்க்கும்போது அண்ணளவாக ஐந்து மடங்குகளுக்கு அதிகமாகும். மேற்குறிப்பிடப்பட்ட இத்தகைய புள்ளிவிபரங்கள் முரண்பாடுகளுக்கு எதிராக நாட்டின் பிணையங்கள் சந்தையானது எவ்வாறு செயலாற்றியுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. இது தொற்றின் பின்விளைவுகளினால் ஆண்டானது கறைபட்டதன் மத்தியில் சந்தையில் உள்ளூர் முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மையினை சேகரித்தது. பிணையங்கள் சந்தையின் திருப்பத்திற்கு பல காரணிகள் உடைமையாக்கப்படலாம். சந்தையின் உயர்வுநோக்கிய மீள்தரப்படுத்தல், புதிய முதலீட்டாளர்கள், குறைந்த வட்டி வீதங்கள், கோவிட்-19 இற்கு மத்தியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் எதிர்பார்த்ததிலும் பார்க்க சிறப்பாக செயலாற்றியமை மற்றும் எதிர்வரும் வருடங்களில் கம்பனிகளின் இலாபங்கள் பெருக்கமடையும் என்ற எதிர்பார்ப்புகள் போன்றவையாகும்.

ஒரு விடயம் நிச்சயம். நாட்டின் பிணையங்கள் சந்தையினால் அடையப்பட்ட சாதனைகள் வெறுமனே காற்றிலிருந்து எட்டப்படவில்லை. நிச்சயமாக சொல்லலாம், இச்சாதனைகளை சந்தையின் அனைத்து பங்காளிகளது தொடர்ச்சியான முயற்சியின்றி அடைந்திருக்க முடியாது. மெய்யாகவே, மூலதனச் சந்தைகள் சிறப்பாகச் செயற்படுவதற்கு முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஆகிய இருசாராரும் அவர்கள் வர்த்தகம் மேற்கொள்ளும் சந்தையில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கொண்டிருப்பது அவசியமாகும். ஒட்டுமொத்தமாக சந்தையின் வளர்ச்சியானது சந்தை மற்றும் நாட்டின் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், கடந்த காலங்களில் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையின் பற்றாக்குறையானது எமது சந்தையினை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை நாம் கண்டுள்ளோம். நான் முன்னர் கூறியது போல், இபிபஆ இல் நாம் முறைமைப்படுத்தும் சந்தையின்

> தொற்றினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களை தழுவுவதன் முக்கியத்துவம் மற்றும் துறையின் பங்காளிகளது வாழ்வாதாரத்தினை பாதுகாத்தல் என்பவற்றிற்காக இபிபஆ ஓர் பாதுகாப்பவராகவும் வசதியளிப்பவராகும் செயலாற்றியது.





நம்பகத்தன்மையினை கீழே கொண்டுவரக்கூடாது என்பதில் நாம் கவனத்துடன் உள்ளோம். சந்தை மற்றும் முதலீட்டாளர்களது நலன்களை பாதுகாக்கும் அவசியம் எமக்கு உள்ளது.

மிகவும் அதிகமாக விலகிச்செல்லாமல், நான் இவ்வாறு கேட்டால், ஏன் அமெரிக்க மற்றும் உலகத்தின் அபிவிருத்தியடைந்த சந்தைகள் அந்தளவுக்கு பொருளாதார வாய்ப்பு மற்றும் செல்வத்தினை உருவாக்குகின்றது? புகழ்பெற்ற, நோபல் பரிசினை வென்ற பொருளாதார வல்லுனரான டக்ளஸ் நோர்த், இந்த கேள்வியினை பரிசீலனை செய்தார். அவருடைய வார்த்தைகளில் சொல்வதாயின், நவீன மனிதர்களை குகை மனிதர்களிலிருந்து வேறுபடுத்துவது நம்பிக்கையாகும். அவரது கண்டுபிடிப்பின் பிரகாரம், வளங்கள் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மாத்திரம் ஓர் சந்தை பொருளாதாரத்தினை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்வதற்கு போதாது. ஆனால் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை நியாயமான விதத்தில் வலியுறுத்தும் ஒழுங்குவிதிகள் மற்றும் நீதிமன்றங்கள் போன்ற சட்டக் கருவிகள் பொருளாதார முறைமைகள் செயற்படுவதனை உருவாக்குவதற்கு நம்பகத்தன்மை மற்றும் கணிப்புத்தன்மை அவசியமாகும்.

மறுதலையாக, அந்த கடினமான நேரங்களில், இபிபஆ பலவருடங்களாக செயலாற்றிய வரலாற்றுரீதியான பாத்திரத்திலிருந்து மற்றும் இதுவரைக்கும் கடைப்பிடித்த மரபுசார் அணுகுமுறை என்பவற்றிலிருந்து இபிபஆ அதனை விடுவித்துக்கொள்வதற்கு வலியுறுத்தப்பட்டது. மூலதன உருவாக்கத்திற்கு வசதியளிக்கும் இபிபஆ இன் பங்களிப்பினை மீள்அளவிடுவதற்கான அவசியமானது சந்தை முறைமைப்படுத்தல் மற்றும் சந்தை அபிவிருத்தி ஆகியவற்றிற்கிடையே சரியான சமநிலையினை ஏற்படுத்துதல் தொற்றின் முன்னரே உணரப்பட்டது. எவ்வாறாயினும், இபிபஆ செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அவலமான சூழ்நிலைகளில் இபிபஆ பயனற்று காணமுடியாது என்ற உண்மையானது தெளிவாக உணரப்பட்டது. நீரானது அது ஊற்றப்படும் பாத்திரத்தின் உருவடிவத்தினை எடுத்துக்கொள்வதுபோல் இபிபஆ இல் உள்ள நாம் அச்சுறுத்தல்களை வாய்ப்புக்களாகவும் பலவீனங்களை பலமாகவும் உருமாற்றுவதன் மூலம் தடைகளை வெற்றிகொள்ள ஆர்வமாயிருப்பதற்கு வலியுறுத்தப்பட்டோம். எனது இபிபஆ சகாக்கள் சிந்தனையுடனும் கவனமாகவும் குறிப்பிடத்தக்க வேகத்துடன் பணியாற்றினார்கள். இது சந்தையினை பாதுகாப்பதற்கும் மற்றும் முடக்கல் மற்றும் அதனுடனிணைந்த சிரமமான நிலைமைகளில் சந்தையினை செயற்படவைப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்காகும். இபிபஆ இன் முக்கிய முன்னிலை செயற்பாடுகளை செயலாற்றுபவர்கள் விரைவாக மாற்றமடையும் சூழலில் முக்கிய சேவைகள் இடம்பெறுவதனை உறுதிப்படுத்தினார்கள்.

பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களின் மீளாய்வு

இந்த எதிர்பார்க்காத மற்றும் முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத காலத்தில், அதன் சட்டமயமாக்கலானது இபிபஆ க்கு மாத்திரமன்றி துறைக்கும் மற்றும் அதன் அனைத்து பங்காளிகளுக்கும் அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் ஈட்டப்பட்ட கடினமான வெற்றியாகும்.

இந்தப் பின்னணியில், அசாதாரணமான சூழ்நிலைகளில் ஒரு வருடகாலத்தில் இபிபஆ அடைந்த வெற்றி குறித்து இந்த மீளாய்வின் அடுத்துவரும் பகுதிகளில் மீண்டும் எண்ணிப்பார்ப்பது ஓர் கௌரவம் என நான் கருதுகின்றேன்.

இபிபஆ ஓர் முறைமைப்படுத்துபவராக, பாதுகாப்பவராக மற்றும் ஓர் வசதியளிப்பவராக

தொற்றினால் கொண்டுவரப்பட்ட மாற்றங்களை தழுவுவதன் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் பிணையங்கள் சந்தையின் வாழ்வாதாரத்திற்கு துறையின் பங்காளிகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம் என்பதனை தெரிந்துகொண்டு இபிபஆ ஓர் முறைமைப்படுத்துபவர் மாத்திரமான அதன் பாரம்பரிய பங்களிப்பிற்கு வரையறை செய்யப்படாது ஓர் பாதுகாப்பாளராகவும் வசதியளிப்பவராகவும் செயலாற்றியது. பாதுகாப்பவர் மற்றும் வசதியளிப்பவர் என்ற இந்த பங்களிப்பானது தொற்றின்போது பங்குத்தரகர்கள்/வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய முறைமைப்படுத்துப்படுபவர்கள் அவர்களது வணிகத்தினை தொடர்வதற்கு உதவியளிப்பதற்காக பல நிவாரண வழிமுறைகளை (அவற்றுள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன) இபிபஆ வழங்குவதனை இயலுமையாக்கியது.

பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு பின்வரும் நிவாரணங்கள் வழங்கப்பட்டன. ஆகக்குறைந்த பொது புழக்கத் தேவைப்பாடுகளுடன் இணங்குதல், ஆண்டறிக்கைகள் / துணை அறிக்கைகளின் சமர்ப்பிப்பு ஆகியவற்றிற்கான காலக்கெடுவிற்கான நீடிப்பினை வழங்குதல், மற்றும் பட்டியலிடல் விதிகளினால் வேண்டப்படும் பொதுவான இணக்கப்பாடுகளுக்கான ஏனைய நிவாரண வழிமுறைகள் என்பனவாகும். மேலும், சந்தை ஏதேனும் தடையின்றி செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பங்குத்தரகர்கள்/வர்த்தகர்களினால் பொறுப்பேற்கப்பட் கடன் வெளிப்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு விசேட வழிகாட்டிகள் வழங்கப்பட்டன. எல்லைக் கடன் வழங்குநர்களும் எல்லைகள் நீட்டப்படாததனை உறுதிசெய்வதற்காக கண்காணிக்கப்பட்டார்கள். இதற்கும் மேலாக, அனைத்து பதிவுசெய்யப்பட்ட எல்லைக் கடன் வழங்குநர்கள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் செலுத்தவேண்டிய வட்டி தொடர்பாக இபிபஆ தலையிட்டு அதனை தவணை தாழ்த்தி செலுத்துவதற்கான வசதியினை வழங்கியது. அத்துடன், சந்தை இடையீட்டாளர்களினால் 2020 ஆம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய உரிமமளித்தல்/பதிவீடளித்தல் கட்டணங்களை ஒரு வருடத்திற்கு ஒத்திப்போடுவதற்கு வசதியளித்தது.

மேற்கூறிய நிவாரண வழிமுறைகள் இபிபஆ எவ்வாறு ஓர் சிக்கலான தருணத்தில் பிணையங்கள் சந்தையின் தடையற்ற செயற்பாட்டினை உறுதிசெய்தது என்பதனை குறிப்பிடுகின்றன.

பயனுறுதிமிக்க முறைமைப்படுத்தலுக்கான சட்டம் மற்றும் கொள்கை

1987 ஆம் ஆண்டின் இபிபஆ சட்டம் சட்டமயமாக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்துள்ளதுடன் தற்போதைய தறுவாயானது மூலதனச் சந்தை முறைமைப்படுத்தக்கூடிய மிகவும் வலுவான மற்றும் வசதியளிக்கக்கூடிய சட்டத்தினை வேண்டுகின்றது. கணசிமான அளவு நீண்டகாலத்தில் திட்டமிடப்பட்டிருந்தாலும் புதிய இபிபஆ. சட்டமானது வெகுவிரைவில் வெளியிடப்படும். இந்த எதிர்பார்க்காத மற்றும் முன்னெப்பொழுதும் நிகழ்ந்திராத காலத்தில் இதன் சட்டமயமாக்கலானது இபிபஆ க்கு மாத்திரமன்றி துறைக்கும் மற்றும் அதன் அனைத்து பங்காளிகளுக்கும் அத்துடன் நாட்டின் பொருளாதாராத்திற்கும் ஈட்டப்பட்ட கடினமான வெற்றியாகும்.

பல அனுகூலமான சிறப்பம்சங்களுடனான புதிய இபிபஆ சட்டமானது முறைமைப்படுத்தலில் செயற்திறன், முன்கணிப்புத்தன்மை மற்றும் நிலைப்புத்தன்மை என்பவற்றை எதிர்நோக்குவதுடன் தவறிழைப்பவர்களில் சுமத்தப்படும் வலுவளிப்புகள் அவர்களினால் இழைக்கப்பட்ட தவறுகளுக்கு தகுந்ததாகக் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதாகும். புதிய சட்டமானது அதிநவீன உட்கட்டமைப்பின் பயன்பாட்டினை அங்கீகரித்து இயலுமையாக்குவதுடன், மற்றும் சந்தையின் அபிவிருத்தியினை இயலுமையாக்கும் பல சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளன. புதிய சட்டமானது கம்பனிகள் அவற்றின் வணிகங்களுக்கு நிதியினை திரட்டுவதற்கு பல்வேறு தெரிவுகள் மற்றும் வாய்ப்புக்களை வழங்குவதனால் இது பொருளாதாரத்திற்கு பாரியளவில் நன்மை பயக்கும். இது பொதுமக்களுக்கு அதிக முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கங்கக்கூடிய ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இந்த நடவடிக்கைகள் நாடு நிலைபேறுள்ள பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை அடைவதனை உறுதிசெய்யும்.

புதிய சட்டமானது அனைத்து தவறுகளையும் உருவகப்படுத்துவதுடன் ஓர் தவறாகக் கருதப்படக்கூடிய நடத்தையானது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெறக்கூடிய விதிவிலக்குகள் மற்றும் பாதுகாப்புகள் குறிப்பாக கூறப்பட்டுள்ளதுடன், தற்போது நிலவுகின்ற ஏதேனும் சந்தேகங்களை வெளியேற்றுகின்றது. பிரதான சந்தை தவறுகள் 'சந்தை துர்நடத்தை' என்று தலைப்பிடப்பட்ட ஓர் பிரத்தியேக பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இது மேலும் இரண்டு அத்தியாயங்களாக "தடைசெய்யப்பட்ட நடத்தை" (பொய்யான வர்த்தகம் மற்றும் சந்தையில் செயற்கை ஏற்ற இறக்கம், பங்குச் சந்தை கையாளுதல்கள், பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் கூற்றுக்கள், பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கு நபர்களை மோசடியாக தூண்டிவிடுதல், சூழ்ச்சியான மற்றும் ஏமாற்றக்கூடிய சாதனங்களின் பயன்பாடு) மற்றும் 'உள்ளுறைபவர் வர்த்தகம்" என பிரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய தவறுகள் மேல் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்தகைய ஒரு தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் 10 மில்லியன் ரூபாய்க்கு குறையாத குற்றப்பணத்திற்கும் அல்லது 10 வருடங்களை விஞ்சாத காலத்திற்கு சிறைத்தண்டனைக்கும் அல்லது குற்றப்பணம் மற்றும் சிறைத்தண்டனை இரண்டிற்கும் பொறுப்புடையராவார்.

மேலே குறிப்பிட்டவை புதிய சட்டத்தினால் எவ்வாறு குற்றவியல் தவறுகள் கையாளப்படும் என்பதனை சுருக்கமாக விபரிப்பதுடன், இது குடியியற் பரிகாரத்திற்கும் வசதியளிக்கின்றது என்பதனைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அதாவது, புதிய சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்படும் ஓர் புதிய சிறப்பம்சம்

என்னவெனில் நட்டஈட்டினை மீட்பதற்கு அல்லது ஓர் குற்றப்பணத்தினை விதிக்குமாறு வேண்டி வர்த்தக மேல் நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைகளை தொடர்வதற்கு இபிபஆ க்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளதாகும். அத்தகைய நடவடிக்கைகள் "சந்தை துர்நடத்தைகள்" எனத் தலைப்பிடப்பட்ட பகுதியின் கீழ் ஓர் மீறுதலை இழைத்த ஓர் நபருக்கெதிராக தொடரப்படலாம். அத்தகைய நடவடிக்கைகளை தொடர்வதற்கான ஆணைக்குழுவின் தீர்மானமானது "மீறுதலின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது ஏற்படுத்திய தாக்கம், யாரேனும் முதலீட்டாளருக்கு ஆட்பட்ட நட்டத்தின் அளவு" என்பவற்றில் தங்கியுள்ளது.

அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமோர் முக்கியமான சிறப்பியல்பாக "நிருவாக வலுவளிப்புகளை" சுமத்துவதற்கான ஆணைக்குழுவின் அதிகாரம் காணப்படுகின்றது. தற்போதைய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அனைத்து மீறல்களும் தவறுகளாகக் கருதப்பட்டாலும், குற்றப்பணங்களை அல்லது ஏனைய நிருவாக வலுவளிப்புகளை விதிப்பதற்காக ஆணைக்குழுவுக்கு வெளிப்படையாக அதிகாரமளிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், புதிய சட்டமானது யாரேனும் நபரில் விதிக்கப்படக்கூடிய பல்வேறு வகையான நிருவாக வலுவளிப்புகளுக்கான தீர்ப்புரிமையினை ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளது. இது மீறலின் தன்மை மற்றும் விதம், இணக்கப்பாடின்மை மற்றும் மீறல் மற்றும் அதன் தாக்கம் என்பவற்றில் தங்கியுள்ளது.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய சில அதிகாரங்கள் பின்வருவனவாகும். முதலீட்டாளர்களது சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம், புலனாய்வுகள் அல்லது புலன்விசாரணையினை நடாத்தும்போது 'முடக்கல் கட்டளைகளை' வழங்குவதற்கான அதிகாரம் (இது ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் அதன்பின்னர் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்), நிகழக்கூடிய மீறல்களது சூழ்நிலையில் சில கட்டளைகளை வேண்டி நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கக்கூடிய அதிகாரம் (ஓர் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல் வெறிதானது என பிரகடனப்படுத்துவதற்கு, ஏதேனும் பிணையங்களை விற்பனை செய்வதற்கு ஓர் நபரினை பணிப்புறுத்தல், பயணத் தடைகளை அமுல்படுத்தல் போன்றன.) என்பனவாகும்.

சந்தையின் அபிவிருத்தி என வரும்போது புதிய சட்டமானது அதிகமானவற்றை வழங்குகின்றது. புதிய சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சில குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் பின்வருமாறு;

- சந்தைகள், சந்தை நிறுவனங்கள் (பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் மத்திய வைப்புத்திட்டம்) , சந்தை இடையீட்டாளர்கள் என்பன தெளிவாக இனங்காணப்பட்டு ஓர் உரிமத்தினை பெறுவதற்காக நிறைவேற்றவேண்டிய தேவைப்பாடுகள், வழங்கப்படும் சேவைகள் என்பன குறிப்பாக விபரிக்கப்பட்டுள்ளன.

- ஓர் வீச்சான "துணைச்சேவை வழங்குநர்கள்" உம் இனங்காணப்பட்டுள்ளதுடன் அத்தகைய சேவை வழங்குநர்கள் தொடர்பான ஏற்பாடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- சட்டத்தில் சந்தை செயற்பாட்டாளர்களது அங்கீகாரமானது ஓர் மேலதிக வர்த்தக மேடையில் பட்டியலிடப்படா பிணையங்களது வர்த்தகத்திற்கு வசதியளித்துள்ளது.

- தற்போது கிடைக்கப்பெறும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்டிசிகளுக்கு அப்பால் தங்க பன்கூட்டு நிதியங்கள், இடர்காப்பு நிதியங்கள் போன்ற கூட்டு முதலீட்டு திட்டங்களுக்கு சட்டமானது வசதியளிக்கின்றது.

- மூலாதாரப் பிணையங்கள், பங்கு கடன்பெநல் மற்றும் கடன் வழங்கல் போன்றவை சந்தையின் ஆழம் மற்றும் திரவத்தன்மை மட்டங்களை மேம்படுத்துவதுடன் அதன்மூலம் நீண்டகால முதலீட்டாளர்களுக்கு நன்மைபயக்கும்.

- சந்தை உருவாக்குபவர்களின் அறிமுகமானது கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடையே தொடர்ச்சியான மற்றும் செயற்திறனான பங்குகளின் பரிவர்த்தனையினை உறுதிப்படுத்தும். இது சந்தைக்கு ஆழம் மற்றும் திரவத்தன்மையினை வழங்குவதுடன் பரிமாற்றக வர்த்தக நிதியங்களது உருவாக்கத்திற்கு ஊக்கமளிக்கும்.

- அங்கீகாரம் பெற்ற முதலீட்டாளர்களின் அங்கீகாரமானது எளிமையான முதலீட்டாளர்களை பாதுகாப்பதனை இயலுமையாக்கும். இது சந்தைக்கு உயர் இடர்நேர்கையுடைய கருவிகளை வழங்குவதற்கு வசதியளிப்பதுடன் இது உயர்ந்த இடர்நேர்கையினை பொறுப்பேற்க விரும்புவர்களினால் பயன்படுத்தப்படலாம்.

- தவறுகளை அறிவிப்பவர்கள் தொடர்பான ஏற்பாடுகளின் அறிமுகமானது அத்தகைய தவறுகளை அறிவிப்பவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களது நடத்தைக்கு வெகுமதியளித்தல் சந்தை துர்நடத்தைகள் தவிர்க்கப்படுவதனை விளைவிக்கும்.

> முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும் அவர்களது கனவுகளை நனவாக்கும் இடமாக மூலதனச் சந்தையினை உருவாக்குவதற்கு நாம் எண்ணியுள்ளோம்.

உலகளாவிய போக்குகளுக்கு ஏற்றாற்போல் ஓர் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையினை நிறுவுதல் எய்தப்பெறும் எல்லையில் காணப்படுவது மற்றுமோர் மைற்கல்லாகும். கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பரஸ்பரமற்றமயமாக்கலானது சந்தையில் நியாயத்தன்மையினை எதிர்நோக்குவதுடன் ஓர் மூலோபாய முதலீட்டாளரது ஈடுபாடானது அதன் தொழில்நுட்ப செயலறிவு மற்றும் உட்கட்டமைப்பினூடாக சிறந்த செயற்திறனை கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய ஓர் பங்குப் பரிவர்த்தனையினை முறைமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்படாவிட்டால் அது கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளப்படும். இந்த காரணத்திற்காக, புதிய இபிபஆ சட்டமானது ஓர் பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையினை முறைமைப்படுத்தலுக்கு வசதியளிக்கின்றது.

இதற்கும் மேலாக, சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் துணைச் சேவை வழங்குனர்களை முறைமைப்படுத்தக்கூடிய குறிப்பிட்ட ஏற்பாடுகள் அவர்கள் துறைசார் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதனை உறுதிப்படுத்தும். அத்துடன் அவர்களது பக்கத்தில் ஏதேனும் மீறுதல்கள் நிகழ்ந்தால் அவற்றை இபிபஆ கையாளக்கூடிய முறையானது குறிப்பிடப்பட்டுள்ளதுடன் புதிய சட்டத்தின் குறிப்பிடத்தக்க மற்றுமோர் நன்மையான சிறப்பியல்பாகும். புதிய சட்டத்தின் காரணமாக, ஓர் மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையின் உருவாக்கலானது விவேகமான இடர்நேர்கை முகாமைத்துவத்துடன் தீர்வக மற்றும் தீர்ப்பனவு சேவைகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தற்போதைய சட்டம் மாற்றீடு செய்யப்பட்டவுடன் ஓர் தொடரான

பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களின் மீளாய்வு

புதிய / திருத்தியமைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. ஏனையவற்றுக்கிடையில், ஓர் புதிய மற்றும் நேரத்திற்கேற்ற பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையிலிருந்து மூலதனச் சந்தை மற்றும் அதன் அனைத்து பங்காளிகளும் நன்மையடைவார்கள் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

ஏதேனும் ஏனைய ஆண்டினைப் போலன்றி, 2020 ஆம் ஆண்டானது இபிபஆ க்கு ஓர் மைல்கற்கள் நிறைந்த ஆண்டாகக் காணப்பட்டது. வர்த்தமானியிடப்பட்ட ஆதன முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்களது (ஆமுநபொ) அறிமுகமானது 31 ஜூலை 2020 முதல் அமுலிலுள்ளது. சந்தை இடையீட்டாளர்களான முதலீட்டு முகாமையாளர்கள், எல்லைக்கடன் வழங்குநர்கள் மற்றும் கடன் தரப்படுத்தல் முகவர்கள் ஆகியோருக்கான விதிகள் எதிர்வரும் காலங்களில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும். முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு தேவையான சிறந்த நடைமுறைகளிலான வழிகாட்டிகள் பங்குத்தரகர்கள் / வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மூலதனச் சந்தையினை பலப்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றுக்கு சுற்று முறிப்பான்கள் கட்டமைப்பு மற்றும் பிணையங்கள் சந்தையில் பெறுமதியினைக் கண்டுபிடிக்கும் செயல்முறையிலான உருத்திரிபுகளை ஒழிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல் என்பன கடந்த வருடத்தில் இபிபஆ ஆல் அடையப்பெற்ற முக்கிய மைல்கற்களாகும்.

வலுவளித்தல் பலகையினை தூண்டுவதற்காக மிகவும் தளர்வான விதிகளுக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் விதிகளின் திருத்தியமைப்புடன் ஓர் பாரிய வெற்றி இபிபஆ ஆல் அடையப்பட்டது. இதனைத் தொடர்ந்து வலுவளித்தல் பலகையில் சிநநி இன் முதலாவது பட்டியலிடல் இடம்பெற்றது. மெய்யாகவே, தனியார் துறையிலுள்ள பாரிய கம்பனிகளினால் பட்டியலிட்டு மூலதனத்தை திரட்டுவதற்கு காட்டும் ஆர்வத்தினை சந்தையானது வரவேற்றதுடன் கம்பனிகள் இன்னும் பெரிதாக கனவு காணலாம். இந்த புதிய வழங்கல்களுக்கு மேலதிகமான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடுவதற்கு முக்கியமானதாகும் என்பதுடன் மீண்டும் ஒருமுறை சந்தையில் முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கை நிரூபணமாகியது. இந்தப் பின்னணியில், வெளிநாட்டு நிதிகள் எமது நாட்டில் முதலீடு செய்வதற்கான அங்கீகாரத்திற்கு வசதியளிப்பதில் இபிபஆ முனைப்பான ஆர்வத்தினை காட்டியது.

நுண்ணறிவான சிந்தனைகளைக் கொண்ட கம்பனிகளுக்கு அவை முயற்சியாளர்களாய் இருந்தாலும் சரி சிறிய நடுத்தர மட்டத்திலான நிறுவனங்களாய் இருந்தாலும் சரி அல்லது சேவைத் துறை கம்பனிகளாய் இருந்தாலும் சரி கொபப இல் பட்டியலிட்டு அவற்றின் பயன்படுத்தப்படாத சாத்தியத்தினை வெளிக்கொணர்வதற்காக நாம் ஓர் நுழைவாயிலினை திறந்துள்ளோம்.

புதுமையினால் வலுவளிக்கப்பட்ட மாற்றத்தினை தழுவுதல்

பிரதான பலகை மற்றும் திரிசவி பலகை பட்டியலிடல்களுக்கு பிரயோகிக்கப்படும் தகமை வரன்முறைகளை விரிவாக்குவதன் மூலம் சந்தையில் பட்டியலிடப்படவுள்ள புதிய வணிக மாதிரிகள் மற்றும் பிரிவுகளை இபிபஆ வரவேற்றது. புதிய வணிக மாதிரிகளான மனித மூலதனத்தில் பெருமளவில் தங்கியுள்ள சேவை சார்ந்த கம்பனிகள் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடுவதன் மூலம் மூலதனத்தை திரட்டி அவர்களது வணிகங்களை மேம்படுத்துவதன் ஊடாக பாரியளவில் நன்மையடைந்துள்ளன. மெய்யாகவே, ஆகக் குறைந்த நிலையான சொத்துக்கள் வேண்டப்படாத வணிக மாதிரிகள் சாதனை மட்டத்திலான வளர்ச்சி மற்றும் உறுதியளிப்புடன் மாற்றியமைக்கும் காரணியாக வந்துள்ளன. ஓர் சிறந்த உதாரணமாக உலகத்திலேயே பாரிய தங்குமிட வழங்குனரான எயார்பிஎன்பி, இது எவ்வித ஆதனத்தினையும் உடைமையில்லாதபோதிலும் அமெரிக்க டொலர்கள் 47 பில்லியனுக்கு பெறுமதியிடப்பட்டது. எயார்பிஎன்பி 2020 இல் அமெரிக்க டொலர்கள் 100 பில்லியனை தாண்டியுள்ளதுடன் அமெரிக்காவிலுள்ள நஸ்டாக் பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட மிகப்பெரிய ஆரம்ப பொது வழங்கலாகும் (ஆபொவ). அதேபோன்று, உலகின் பாரிய வாடகைக்கார் கம்பனியான "ஊபர்" எவ்வித வாகனத்தினையும் உடைமையாக்காது அமெரிக்க டொலர்கள் 75 பில்லியனுக்கும் மேலாக பெறுமதியிடப்பட்டுள்ளது. இந்த மாதிரியான கருத்துக்கள் மற்றும் கனவுகளே வளர்ச்சியடைவதற்கு உறுதுணை தேவையானது என்பதுடன் உயரப் பறப்பதற்கு உதவிபுரியும் அவர்களது இறக்கைகளின் கீழான காற்றாக இபிபஆ இருக்க முடியும். நுண்ணறிவான சிந்தனைகளைக் கொண்ட கம்பனிகளுக்கு அவை முயற்சியாளர்களாய் இருந்தாலும் சரி, சிறிய நடுத்தர மட்டத்திலான நிறுவனங்களாய் இருந்தாலும் சரி அல்லது சேவைத்துறை கம்பனிகளாய் இருந்தாலும் சரி கொபப இல் பட்டியலிட்டு அவற்றின் பயன்படுத்தப்படாத சாத்தியத்தினை வெளிக்கொணர்வதற்காக நாம் ஓர் நுழைவாயிலை திறந்துள்ளோம். உதாரணமாக, கூட்டுநிதி நல்கைகள் போன்ற முன்னெடுப்புகள் சந்தையில் மூலதனத்தினை திரட்டுவதற்கு கிடைக்கக்கூடிய ஓர் தறுவாய்க்கு ஏற்ற முயற்சியாக ஆக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக, திருத்தியமைக்கப்பட்ட பட்டியலிடல் வரம்புறுகையானது நன்கு நிலைநாட்டப்பட்ட ஏனைய உலகளாவிய பரிமாற்றகங்களது நியமங்களுக்கு ஒத்ததாக காணப்படுவதுடன் கொபப இல் பட்டியலிடவுள்ள ஓர் புதிய இனக் கம்பனிகளுக்கு புதிய வாழக்கைக்கான சுவாசத்தினை வழங்குகின்றது. இவை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் பயணத்தில் நிச்சயமாக ஓர் மூலைக்கல்லாக செயலாற்றும். இதற்காகவே நாம் இளம் முயற்சியாளர்கள் மற்றும் சிநநி ங்களை அவர்களது தொடக்கநிலைகள் மற்றும் வணிகங்களுக்கு பரிவர்த்தனையில் கிடைக்கக்கூடிய மேடைகள், புதிய கருவிகள் மற்றும் திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம் பாரிய வளர்ச்சியினை கற்பனை செய்யலாம்.

டிஜிட்டல் மயமாக்கல்: சந்தை உங்கள் விரல் நுனியில்

டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்புடன் பிணையங்கள் சந்தையானது ஓர் புதிய தோற்றத்தினை பெறும் விளிம்பில் உள்ளது. இபிபஆ மற்றும் கொபப இன் பிரதிநிதிகளுடன் ஓர் கூட்டுக் குழுவானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்களான திரு.நரேஷ் அபேசேகர மற்றும் திரு. மனில் ஜயசிங்க ஆகியோரது தலைமைத்துவத்தின் கீழ் டிஜிட்டல் மயமாக்கலினூடாக சந்தையினை முற்றிலும் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பில் அவர்களது முயற்சிகள் மற்றும் வழிகாட்டுதலுக்கு அதிகமான பாராட்டுக்கள் உரித்தாகட்டும். பங்குத்தரகர் விதிகள், மவைதி விதிகள், மற்றும் பட்டியலிடல் விதிகள் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் பிணையங்கள் சந்தையினை ஓர்

தாள் அடிப்படையிலான அமைப்புமுறைமையில் இருந்து ஓர் இலத்திரணியல் அடிப்படையான அமைப்புமுறைமைக்கு உருமாற்றம் செய்வதனை இயலுமையாக்கியது. சந்தையின் பூரண டிஜிட்டல் மயமாக்கல் பயணத்திற்கு இட்டுச்செல்லும் ஓர் முக்கிய சாதனையாக கொபப கைப்பேசி செயலியின் அறிமுகம் காணப்பட்டது. இதன் மூலம் ஓர் மவைதி கணக்கினை திறத்தல் வெறுமனே ஓர் கிளிக்கினாலாகும். இச்செயலியானது இலத்திரணியல்-ஒப்பந்தக் குறிப்புகள், இலத்திரணியல் கூற்றுக்கள் மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவிற்கு இலத்திரணியல் வங்கி மாற்றல்களைப் பயன்படுத்தக்கூடிய சிறப்பம்சங்களையும் கொண்டுள்ளது. அதாவது, இச்செயலியானது மவைதி கணக்கு திறப்பதில் 63% அதிகரிப்பிற்கு பங்களித்துள்ளதுடன் டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறைகளின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் மற்றும் பொருத்தம் மற்றும் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் அவசியமான தேவைப்பாடு என நிரூபித்துள்ளது.

டிஜிட்ல் மயமாக்கல் செயற்பாட்டின் கட்டம் II ஆனது விரைவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தேகமின்றி, முதலீட்டாளர்களுக்கு இது பல நலன்கள் மற்றும் வாய்ப்புக்களை வழங்கும். தொடர்பாடல் சங்கிலியினை குறைத்தல் மற்றும் மிகைமைகளின் நீக்கமானது ஓர் தடையற்ற அமைப்புமுறைமையின் நிறுவுவதற்கு பங்களிக்கும். முதலீட்டாளர்கள் ஓர் இலத்திரணியல் வலைவாசலின் மூலம் அவர்களது மவைதி கணக்குக் கூற்றுக்களைப் பார்வையிட இயலும் மற்றும் கைப்பேசி செயலியூடாக ஆபொவ மற்றும் உரிமை வழங்கல்களுக்கு விண்ணப்பிக்க இயலும். மேலும், இலத்திரணியல் பணப்பையின் ஆரம்பமானது எதிர்வரும் காலத்தில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இது சந்தை முதலீட்டாளர்களுக்கு பரந்த நிரலிலான முதலீட்டு வாய்ப்புக்களை திறப்பதுடன் அவர்கள் அவர்களது முதலீட்டினை மிகவும் விரைவான விதத்தில் வழிநடத்த முடியும்.

இதற்கும் மேலாக, இபிபஆ இன் உள்ளக குழுக்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் இரண்டையும், ஓர் தாளற்ற சூழலூடாக செயற்படுவதற்கு, டிஜிட்டல் மயமாக்குவதில் முன்னிறுத்தம் செய்தது. இதனை இயலுமையாக்குவதற்காக தேவையான செயற்படுத்தல் கட்டமைப்பினை ஈடுபடுத்தல் மற்றும் அதன்பின்னர் ஓர் தன்னியக்கமயப்படுத்தப்பட்ட பணிப்பாய்விற்கு நிலைமாற்றமடையும். இது நிச்சயமாக ஓர் அச்சுறுத்தக்கூடிய பணி ஆனால் இது காலத்திற்கேற்றது மற்றும் அவசியமானதாகும். பயனாளர் தோழமையான மற்றும் மெய்நேரத்தில் செயற்படக்கூடிய தரப்படுத்தப்பட்ட அமைப்புமுறைமைகள் உரிய காலத்தில் உங்கள் நுனிவிரலில் கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

ஓர் ஆற்றல்வாய்ந்த சந்தைக்கான புதிய கருவிகள்

தங்கம் ஓர் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்கத்தின் ஓர் முக்கிய பாகமாக கருதப்படுகின்றது. சந்தை நலிவுற்ற நேரங்களில் சந்தை நட்டங்களை குறைப்பதற்கான ஓர் உபாயமாக இது காணப்படுகின்றது. இலங்கையில் தங்கம் தொடர்பான உற்பத்திகள் மற்றும் முதலீடுகளுக்கான பாரிய கேள்வியினை அவதானிக்கும்போது இபிபஆ மற்றும் கொபப இதனைப் பயன்படுத்தி சாளரவழி மேடையூடாக தாள் தங்கத்தில் (தாத) வர்த்தகம் செய்வதனை அறிமுகப்படுத்துவதற்கான வரம்புறுகையினை கூட்டாக நிறைவுசெய்துள்ளன. இந்த முன்னெடுப்பானது சந்தையினை கிளர்ச்சியுறச் செய்துள்ளது. தாத இனை முறையாக அறிமுகப்படுத்துவதற்கு தேவையான வரம்புறுகையானது முடிவுறுத்தலை எட்டும்சமயம், அரசாங்கத்திற்கு வரி வருமானத்தினைப் பொறுத்தளவில் ஓர் புதிய வருமான மூலத்தினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகம் பூராவும் நிகழும் புதிய சந்தை அபிவிருத்திகளுடன் இணையாக இருப்பதற்கு இபிபஆ முயற்சிக்கின்றது. சந்தையில் ஆர்வத்தினை தூண்டியுள்ள மற்றுமோர் புதிய கருவியாக, விசேட நோக்குடைய கையகப்படுத்தல் கம்பனிகள் (விநோகைக) புதிய வகுப்பின் கீழ் புதிய பட்டியலிடல்களை இயலுமையாக்குவதாகும். இது மேற்குலகத்தில், குறிப்பாக அமெரிக்க சந்தைகளில் போக்காகக் காணப்படுகின்றது. வரம்புறுகையானது ஏற்கனவே முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் கொபப செயலாற்றல் செயல்முறையினை ஆரம்பிக்கும் என்பதுடன் இதன்மூலம் நல்ல எதிர்காலமுடைய தொழில் முயற்சியாளர்களுக்கு பரவலான வாய்ப்புக்களை திறப்பதுடன் மூலதன உருவாக்கத்தில் ஓர் புதிய யுகத்தை உருவாக்குகின்றது.

வலியுறுத்தலூடாக நிலைப்புத்தன்மையினை அடைதல்

கடந்த வருடத்தில், கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் புலனாய்வுப் பிரிவுகள், வலியுறுத்தல்கள் செயற்பாடு சார்ந்த, தடுப்பு மற்றும் விவேகம் போன்ற கண்ணாடியூடாக மேற்கொள்ளப்பட்டு பலப்படுத்தப்பட்டது. உதாரணமாக, நாளாந்த வர்த்தகத்தில் கண்காணிப்பு பிரிவானது 124 அவதானிப்புகளை குறியிட்டதுடன் பின்வரும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. கலந்தாய்வுக்கு அனுப்புதல், இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் அல்லது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தல், முதலீட்டு ஆலோசகர்களுக்கு எச்சரிக்கைகளை வழங்குதல், இயங்கலை வர்த்தக வசதிகளை இடைநிறுத்தல், தரப்பினரை காரணங் காட்டுமாறு அழைத்தல், குற்றவியல் வழக்கு அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பனவாகும். அத்தகைய

உலகம் பூராவும் நிகழும் புதிய சந்தை அபிவிருத்திகளுடன் இணையாக இருப்பதற்கு இபிபஆ முயற்சிக்கின்றது.

செயற்திறனான நடவடிக்கைகள் சந்தை துர்நடத்தைகளை கணிசமானளவு குறைப்பதில் உயர்ந்த ஆற்றல் வாய்ந்ததாகக் காணப்பட்டது. இதற்கும் மேலாக “கண்காணிப்பு கையேடு” இனை ஆரம்பிப்பதனூடாக ஓர் முக்கியமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது வர்த்தகத் தளம் மற்றும் ஒட்டுமொத்த சந்தையில் செய்யக்கூடியது மற்றும் செய்யக்கூடாதவற்றை தெளிவுபடுத்துகின்றது. இந்த தொகுப்பானது மெய்யாகவே சந்தை செயற்பாட்டாளர்கள் மிகவும் சீரமைக்கப்பட்ட செயல்முறையினை பின்பற்றுவதற்கு உதவுவதுடன் சந்தை துர்நடத்தையினை தவிர்ப்பதற்காக தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடியதாகவுமிருக்கும். புலனாய்வுப் பிரிவானது மிகவும் நெருக்கமாக கண்காணிப்புப் பிரிவுடன் செயற்படுவதுடன் விடயங்களை துரிதப்படுத்துவதற்காக ஓர் கூட்டு செயலாக்கல் குழுவினை உருவாக்கியுள்ளது. எவ்வாறாயினும், மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று என்னவெனில் 2020 க்கு முன்னர் காணப்பட்ட சராசரி நாளாந்த வர்த்தக எண்ணிக்கையான 3000, பத்து மடங்கால் அதிகரித்ததன் காரணமாக அதிகரித்த கேள்வியுடன் கண்காணிப்புப் பிரிவு ஏற்புத்தன்மையுடன் காணப்பட்டதாகும். 2020 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஓர் சராசரியாக ஒரு நாளில் 30000 வர்த்தகங்கள் இடம்பெறும்போது இந்த மிகப்பெரிய வர்த்தகங்களை கண்காணிப்பதற்காக கொள்திறனை உடனடியாக அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த முற்றிலும் சுறுசுறுப்பான மற்றும் வலுவான சந்தைக்கு சேவையளிப்பதற்காக, ஓர் புதிய கண்காணிப்பு அமைப்புமுறைமையினை கொள்வனவு செய்தல் கட்டாயமாகும் என்பதுடன் இபிபஆ அதன் பங்காளிகளுக்கு சிறந்த சேவையாற்றுவதற்காக செயற்கை நுண்ணறிவு (செநு) அதி நவீன பகுப்பாய்வு கருவிகளை ஒருங்கிணைக்கும் தெரிவுகளையும் ஆராய்ந்துள்ளது. புதிய அதிநவீன கண்காணிப்பு அமைப்புமுறைமையின் கொள்வனவானது 2021 இனுள் இடம்பெறும்.

பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களின் மீளாய்வு

இபிபஆ இல் நாம் பயனுறுதிமிக்க பங்காளிகளுடனான ஈடபாடானது குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் அவர்களது அக்கறைகள் மற்றும் கருத்துக்களை எழுப்புவதற்கு அனுமதியளிக்கும் என நம்புகின்றோம்.

வலுவான உட்கட்டமைப்புடன் திடமான அடித்தளம்

புதிய இயலுமையாக்கும் உட்கட்டமைப்பின் சிறப்பம்சமானது கொபப இன் விநியோகம் எதிர் கொடுப்பனவு (விஎகொ) அமைப்புமுறையாகும் என்பதுடன் இது இடர்நேர்கைகளை குறைப்பதனையும் சந்தைக்கு புதிய கருவிகள் / மேடைகளுக்கு வசதியளிப்பதனையும் நோக்காகக் கொண்டதாகும். இது சந்தையில் உள்ளடங்கியுள்ள வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கைகளை குறைக்கும். அதாவது, ஓர் வெளித்தோன்றும் சந்தை நிலைமைக்கு அதனை தரமுயர்த்துவதற்கு அவசியமான தேவைப்பாடுகளை பகுதியளவில் நிறைவுசெய்யும் என்பதை கூறுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இது எதிர்காலத்தில் சந்தைக்கு ஓர் பூரணமான மத்திய எதிர்தரத்தவர் (மஎ) பொறிமுறையினை கொண்டிருப்பதற்கு அடித்தளத்தினை இடும்.

சாளரவழி மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல்களுக்கான கொள்ளவுக்கு கொபப உடனான கொள்கை கட்டமைப்பின் முடிவுறுத்தலானது நாட்டின் பிணையங்கள் சந்தையினை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்லும் இபிபஆ இன் தொலைநோக்கிற்கு உறுதுணையளிப்பது மற்றுமோர் மைற்கல்லாகும். இதற்கும் மேலாக கொபப உம் அதன் பட்டியலிடல் வரம்புறுகையினை திருத்தியமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன், இது விசேடமாக ஆரம்ப பட்டியலிடல் செயல்முறையினை சீரான மற்றும் செயற்திறனாக ஆக்குவதில் முறைமைப்படுத்தல் நிரற்பாட்டினை பரவலாக்கும் நோக்கத்தினாலாகும். மேலும், மற்றுமோர் இயலுமையாக்கும் கட்டமைப்பாக தன்னியக்க வர்த்தக அமைப்புமுறைமையின் விலைமாற்றத்தின் சிறும அலகின் அளவிலான திருத்தமானது சந்தையின் திரவத்தன்மையினை அதிகரிக்கும்.

சந்தை அபிவிருத்திக்காக பங்காளிகளுடனான ஈடுபாடு

இபிபஆ கொள்கைகளை முடிவுறுத்துவதில் மற்றும் சந்தைக்கு புதிய ஒழுங்குவிதிகளை கொண்டுவருவதில் அதன் பங்காளிகளுடன் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது. இதன் காரணமாக, பங்காளிகளது சிறந்த அக்கறைகளை நிறைவேற்றுவதற்காக இபிபஆ தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு பிரதிநிதித்துவங்களை மேற்கொள்கின்றது. இதன்பிரகாரம், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்களின் (இ-ஆநபொ) புதிய பட்டியலிடல்களை ஊக்குவிப்பதற்காக வரி ஊக்குவிப்புகளை வழங்கக்கூடிய சாத்தியத்தினை தொடர்கின்றது. மேலும், பிணையங்கள் சந்தைக்கு புதிய முதலீட்டாளர்களை கவரும் விடயத்தில் அனைத்து பங்காளிகளுடனும் முனைப்பாக ஈடுபடுவதற்கு பன்முகப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு விசேடமாக பிணையங்கள் சந்தையில் ஈடுபாடு கொண்டிராத இலக்குவைத்த குழுக்களை அணுகுவதாகும்.

இபிபஆ இல் பயனுறுதிமிக்க பங்காளிகளுடனான ஈடுபாடானது குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக அவர்களது அக்கறைகள் மற்றும் கருத்துக்களை எழுப்புவதற்கு அனுமதிக்கும் என நாம் நம்புகின்றோம். சந்தை பங்குபற்றுனர்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் சந்தையில் காணப்படும் துடிப்பினை அளவிடுவதற்கு இபிபஆ க்கு அனுமதியளிப்பதுடன் பிணையங்கள் சந்தையில் வெளிப்படுத்தப்படும் புதிய கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகள் தொடர்பாக பங்குபற்றுனர்கள் நிலையொத்து காணப்படுவதற்கு அனுமதியளிக்கின்றது. இபிபஆ தொடர்ச்சியாக, கொபப, பங்குத்தரகர்கள், எல்லைக்கடன் வழங்குனர்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கம்பனிகள், பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகள் போன்றவற்றுடன் ஈடுபடுகின்றது. "பங்குத்தரகரின் சிறந்த நடைமுறை வழிகாட்டி" மற்றும் "கூட்டாண்மை ஆளுகை நியமம்" (தற்போது விருத்திசெய்யப்பட்டவண்ணமுள்ளது)ஆகியவற்றின் அறிமுகமானது அத்தகைய நடவடிக்கைகளின் சில உதாரணங்களாகும்.

பிணையங்கள் சந்தை அடிச்சுவட்டினை விரிவாக்குதல்

இபிபஆ இன் தலைவரினால் நியமிக்கப்பட்ட, கொபப இன் பிரதிநிதிகளை உள்ளடக்கிய, ஓர் கூட்டுக்குழுவின் வழிகாட்டலின் கீழ் பொது மக்களுக்கு கல்விசார் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள் நடாத்தப்பட்டன. தேசிய கல்வி நிருவகத்துடன் சேர்ந்து இபிபஆ 2023 ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்களின் கல்வி பாடத்திட்டங்களில் பிணையங்கள் சந்தையினை ஓர் பாடமாக அறிமுகப்படுத்துதல் நோக்கி செயலாற்றுகின்றது. மேலும், இபிபஆ அதன் முயற்சியான புதிய முதலீட்டாளர்கள் மற்றும் கம்பனிகளை கவர்வதற்காக பிணையங்கள் சந்தையில் பட்டியலிடுவதற்கான சாத்தியம் குறித்து தனியார் நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இபிபஆ இன் வரலாற்றில் முதற்தடவையாக, மூலதனச் சந்தை கல்வி மற்றும் விழிப்புணர்வு அங்கமானது முகநூல், டுவிட்டர் மற்றும் யூடியூப் போன்ற சமூக ஊடக மேடைகளில் பல்வேறுவகையான சந்தை பங்குபற்றுனர்களிடையே விழிப்புணர்வினை எழுப்புவதற்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆரம்பித்தது. இலங்கையின் சனத்தொகையில் ஓர் மதிப்பிடப்பட்ட தொகையான 36% மானோர் சமூக ஊடக மேடைகளை பயன்படுத்துவதுடன் இவர்களுள் பெரும்பாலானோர் இளம் சந்ததியினராகும். எனவே, சந்தைக்கு ஓர் புதிய இனத்திலான முதலீட்டாளர்களை கவர்வதற்கு சமூக ஊடகம் ஓர் பொருத்தமான மேடையாகும் என நம்புவதுடன் பிணையங்கள் சந்தையில் முதலீடு செய்தல் ஓர் வீட்டு நடைமுறையாக மாறிவிடும். இதற்கும் மேலாக, இபிபஆ மற்றும் கொபப இனால் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட சமீபத்தைய முன்னெடுப்பாக அதிகாரமளிக்கப்பட்ட பொறிமுறைகளினூடாக பிணையங்கள் சந்தைக்கு நாட்டின் அனைத்து பாகங்களிலிருந்தும் முதலீட்டாளர்களை இணைப்பதற்காக பல்வேறு சேவை வழங்குநர்களை வரவேற்பதாகும். உதாரணமாக, இலங்கையில் காணப்படும் ஓர் முன்னணி தொலைதொடர்பு சேவை வழங்குநரான டயலொக் எக்சியாட்டா பிஎல்சி சமீபத்தில் சந்தைக்கு சாத்தியமான முதலீட்டாளர்களை உள்வாங்குவதற்காகவும் பொதுமக்களுக்கு சந்தையினை பரவலாக்குவதனையும் ஆராய்வதற்காக கொபப உடன் கைகோர்த்தது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் ஜப்பான், சிங்கப்பூர் போன்றவற்றில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களூடாக நிறுவப்பட்ட ஓர் மேடையினூடாக ஈடுபடுவதற்காக செயற்திறனான நடவடிக்கைகளையும் இபிபஆ

மேற்கொண்டுள்ளது. நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்கள் தளத்தினை விரிவாக்குவதற்கும் மற்றும் பன்முகத்தன்மையினை வரவேற்பதற்காகவும் நாட்டிற்கு வெளிநாட்டு முதலீட்டு தேக்கங்களை கவர்வதற்கான விழிப்புணர்வினை மேற்கொள்வதனை நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

சந்தையினை மேம்படுத்துவதற்கான கூட்டுமுயற்சி

பலதரப்பு மற்றும் இருதரப்பு அபிவிருத்தி பங்காளிகள் ஓர் தொடரான வளங்கள், நிபுணத்துவம் மற்றும் வாய்ப்புக்களை வெளிக்கொண்டுவருகின்றார்கள். ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ஆஅவ) முன்னெடுக்கப்பட்ட மூலதனச் சந்தை அபிவிருத்தி திட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ஓர் கொள்கை அடிப்படையிலான கடன் மற்றும் தொழில்நுட்ப உறுதுணை திட்டமாகும். பின்வருவன தொடர்பாக இபிபஆ க்கு விசேட தொழில்நுட்ப உறுதுணை வழங்கப்பட்டது. கூட்டு முதலீட்டு திட்டங்கள் கோவை, கொபப இன் பரஸ்பரமற்றமயமாக்கல், மூலதனச் சந்தை சான்றளித்தல் செயல்முறையினை புதுப்பித்தல், நிதியியல் அறிவினை மேம்படுத்தல் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கான வெளிக்களம், உரித்துவ கூட்டு நிதிநல்கை, கட்டமைக்கப்பட்ட ஆணைப்பத்திரங்கள், மற்றும் பசுமை முறிகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்றாற்போல் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையினை புதுப்பித்தல் என்பவை தொடர்பாக குறிப்பிட்ட தொழில்நுட்ப உதவி இபிபஆ க்கு வழங்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான (ஆஅவ) கூட்டுமுயற்சி தொடர்பான சிறப்பம்சம் 2021-2025 காலப்பகுதிக்கான மூலதனச் சந்தை மூலோபாயத்தினை முடிவுறுத்தியமை ஆகும். இது முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு குறிக்கோள்களுடன் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளுடன் சேர்ந்ததாகும். இந்தச் செயல்திட்டமானது இலங்கையின் மூலதனச் சந்தையின் அடுத்த ஐந்து (5) வருடங்களுக்கான பாதையினை தீர்மானிப்பதுடன் விளைவு சார்ந்த முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான ஓர் மதிப்பீடாகும். மேலும், ஆஅவ இன் ஆதரவின் கீழ் மூலதனச் சந்தை ஆலோசனைச் சபையொன்று (மூசஆச) மதிப்பிற்குரிய இராஜாங்க அமைச்சர், பணம், மூலதனச் சந்தைகள் மற்றும் அரச நிறுவன சீர்திருத்தங்கள் அஜித் நிவார்ட் கப்ரால் அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் மீள்கூட்டப்பட்டது. மூசஆச ஆனது பன்முக பங்காளிகளது உயர் மட்ட அங்கம் என்பதுடன் இது முறைமைப்படுத்துபவர்களான இலங்கை மத்திய வங்கி (இமவ), இபிபஆ, இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு (இகாமுஆ), இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (இககநிகச), ஊழியர் சேமலாப நிதியம் (ஊசேநி), மற்றும் கொபப போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இது கொள்கை உருவாக்கலில் மூலோபாய வழிநடத்தல், மற்றும் ஆஅவ இனால் முன்னணி வகிக்கப்படும் நீண்டகால மூசஅதி இன் முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்காக முகவர்களிடையேயான ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கும். இதற்கும் மேலாக, ஆஅவ கருத்துக்கணிப்புகளை நடாத்துவதில் மற்றும் சந்தையில் காணப்படும் இடைவெளிகளை இனங்காண்பதற்காக மூலாதாரப் பிணையங்களுக்கான கேள்வியிலான கருத்துக்கணிப்புகள் போன்ற தேவை மதிப்புகளில் துணையளித்துள்ளது.

> கூட்டுமுயற்சியானது எமக்கு பன்முகமான நலன்களை அளித்துள்ளதுடன் இலங்கையின் பிணையங்கள் சந்தையினை பலப்படுத்துவதற்காக நாம் இந்த கூட்டாண்மைகளை கட்டியெழுப்புவதற்கு ஆர்வமாயுள்ளோம்.

இரண்டாவதாக, நிதிச் சந்தையின் நிலைப்புத்தன்மை மற்றும் ஆழத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக்கொண்ட ஒரு திட்டத்தில் உலக வங்கி கூட்டுச் சேர்ந்துள்ளது. இதில் முன்னிறுத்தப்பட்ட விசேட பகுதிகள், நிதிச் சந்தை உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல், நிதியியல் துறை முறைமைப்படுத்துபவர்களின் ஆற்றல் முறையினை பலப்படுத்துதல், நிதியியல் அமைப்புமுறைமைக்கு தேவையான சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகைகளை தரமுயர்த்துதல் என்பனவாகும். இந்த தறுவாயில், இபிபஆ உறுதுணை தேவையான பின்வரும் முக்கிய பிரிவுகளை இனங்கண்டுள்ளது. ஓர் நிறுவன ததொ மூலோபாயத்தினை செயலாற்றுவதற்கான அறிவுரை, கண்காணிப்பிற்கான அறிவுரை, மனிதவளப் பிரிவு பணியாட்களின் கொள்திறனை கட்டியெழுப்புதல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கலான ஓர் நிறுவன மனித வளங்கள் (மவ) மூலோபாயத்தினை அபிவிருத்தி செய்தல், புலனாய்வு மற்றும் வலியுறுத்தல் பிரிவுகளில் கொள்திறனை கட்டியெழுப்புதல் மற்றும் இடர்நோக்கை அடிப்படையிலான மேற்பார்வையினை செயற்படுத்துவதற்கான அறிவுரை என்பனவாகும். கூட்டுமுயற்சியானது எமக்கு பன்முகமான நலன்களை வழங்கியுள்ளதுடன் இலங்கையின் பிணையங்கள் சந்தையினை பலப்படுத்துவதற்கு இந்த கூட்டாண்மைகளை கட்டியெழுப்புவதில் நாம் ஆர்வமாயுள்ளோம்.

பணியாட்கள் சேனை: ஓர் ஒப்பிடமுடியாத சொத்து

இபிபஆ இல், எமது அனைத்து பணியாட்டொகுதி அங்கத்தவர்களையும் எமது நீட்டிக்கப்பட்ட குடும்பமாக மற்றும் மிகவும் பெறுமதிமிக்க சொத்தாக நாம் கருதுகின்றோம். எமது பங்காளிகளுக்கு உயர்ந்த சேவையினை விநியோகிப்பதற்கு தொழிற்படும்வேளை நாம் அவர்களது பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளோம். கோவிட்-19 தொற்றானது ஆரம்பித்தவுடன் நாம் எமது பணியாட்டொகுதி அங்கத்தவர்களது ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை காப்பதற்காக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இபிபஆ இல் கோவிட்-19 தொற்றின்போது சவால்களை வெற்றிகொள்வதற்கு மற்றும் செயற்பாட்டளவில் சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு பொருந்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் நிறைவான பணியாட்டொகுதி முக்கியம் என நாம் புரிந்துகொண்டுள்ளோம். கூறப்பட்டுள்ளவாறு, உங்களது பணியாட்களால் உங்களது வாடிக்கையாளர்கள் கவனிக்கப்படுவார்கள். இது அவர்கள் எவ்வாறு உங்களால் கவனிக்கப்படுகின்றார்கள் என்ற அடிப்படையிலாகும். ஏனெனில் மக்கள் அவர்களை பாராட்டி புகழும்போது அவர்கள் செழிப்படைகின்றார்கள். ஓர் நீண்ட காலத்தின் பின்னர் இபிபஆ இன் செயற்பாட்டு ஆற்றல் மற்றும் வலிமையினை பலப்படுத்துவதற்காக இவ்வாண்டில் பணியாட்டொகுதி பதவி உயர்வுகள் நடாத்தப்பட்டதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அமைப்பில் தொற்றின் மத்தியில் எமது பங்காளிகளுக்கு நாம் தொடர்ந்தும் தடையற்ற சேவைகளை வழங்கினோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். மேற்குறிப்பிட்டவற்றின் நிமித்தம் இந்த கடினமான நேரத்தில் முகங்கொடுத்த சவால்களை வெற்றிகொள்வதில் அவர்களது மனமார்ந்த ஒத்துழைப்பினை வழங்கியமைக்காக நான் இந்த சந்தர்ப்பத்தில் பணியாட்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களின் மீளாய்வு

எதிர்காலத்திற்கான மனப்போக்குடன் செயலாற்றல்

கோவிட்-19 ஓர் நீண்டகாலத்திற்கு ஓர் சிக்கலாக இருக்கும். இருப்பினும், கடந்த காலங்களில் ஏனைய சூழ்நிலைகளில் நாம் நடந்துள்ளவாறு சில காலங்களுக்கு நாம் கோவிட்-19 உடன் வாழப் பழகிக்கொள்ளவேண்டும். இது நீண்டகாலத்தில் மனிதகுலத்தினால் முகங்கொடுத்த மிகவும் பயங்கரமான ஓர் சிக்கலாகும். கோவிட்-19 இன் நிமித்தம் உலகளாவிய பொருளாதாரமானது கிட்டத்தட்ட ஓர் நிறுத்தத்திற்கு வந்துள்ளது. அரசாங்கங்கள், வணிகங்கள், பொருளாதாரங்கள் மற்றும் தொழில்களுக்கு துணைபுரிவதற்காக டிரில்லியன் அளவிலான டொலர்களை செலவுசெய்துள்ளன. இருப்பினும் பத்து மில்லியன்களுக்கும் மேலான தொழில்வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன. குடும்பங்கள் சிரமங்களை அனுபவிக்கின்றன மற்றும் நாம் மொத்தமான முன்னெப்போதும் நிகழாத சூழலுக்கு முகங்கொடுக்கின்றோம்.

எமது பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது, எமது நாடு முன்னெப்போதும் அனுபவித்திறாத மிகவும் மோசமான சுருக்கத்தினை அனுபவிக்கின்றது. எமது நாடானது சுற்றுலாத்துறை, வெளிநாட்டு பணமனுப்பல்கள் மற்றும் முதலீடுகளில் பெருமளவு தங்கியிருப்பதுடன் தொற்றின் காரணமாக இவை அனைத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. எமது நாட்டின் பொருளாதாரம் கோவிட்-19 இற்கு முன்னரான வழமைக்கு திரும்புவதற்கு சிறிது காலம் செல்லும். எவ்வாறாயினும், இந்த அளவற்ற சவால்களுக்கு மத்தியில் நாடானது அதன் முன்னோக்கிய பாதையில் தடுமாற்றமடையாது.

முதலாவதாக, நாம் உலகப் போக்கான வர்த்தகம், முதலீடு, மூலதனம் மற்றும் மக்களுடன் இணைந்துகொள்ளல் வேண்டும். சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு பாதைகளில் புதிய விதிமுறைகள் திறக்கப்படக்கூடும் என்பதுடன் சர்வதேச பங்குடைமைக்கு புதிய சந்தைகள் மற்றும் வாய்ப்புக்கள் காணப்படலாம். நாடானது புதிய பாதைகள் மற்றும் போக்குகளுடன் அதனை இணைத்துகொள்வதற்கு தயாராயிருப்பதுடன் இழந்தவற்றை மாற்றீடு செய்வதற்காக புதிய வணிகங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும். இந்த குறிக்கோளினை அடைவதற்கு நாம் கடினமாக உழைக்கவும் சாமர்த்தியமாகவும் இருத்தல் வேண்டும்.

குழப்பமடைந்துள்ள உலகத்தில், விதிகளின் பிரகாரம் செயலாற்றும் சந்தையின் உறுதிமொழியினை முதலீட்டாளர்கள் மதிக்கின்றார்கள். கோவிட்-19 க்கு இவ்வாறு நடந்துகொண்ட விதம், செயற்திறனுடனும் பொறுப்பாகவும், யதார்த்தத்தினை தவிர்க்காது, பிரச்சனையின் முதல் அறிகுறியில் தன்னிச்சையாக இயங்காதது என்பன இந்த அனுகூலத்தினை பலப்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் எம்மை ஆசியா மற்றும் உலகத்தில் குறிப்பிடத்தக்கவாறு காண்பதனை இயலுமையாக்கியது. கோவிட்-19 இன் பின்னர் உலகம் எவ்வாறு காணப்படும் என யாராலும் துல்லியமாக எதிர்வுகூற இயலாது. எவ்வாறிருப்பினும், உலகம் பூராவுமான புதிய பொருளாதார அபிவிருத்திகள் எமக்கு பல்வேறு வாய்ப்புக்களை வழங்கும் என்பதுடன் இவற்றை தற்போதே நாம் மிகவும் தீவிரமாக பின்தொடர்வது கட்டாயமாகும்.

> தொற்றானது அதன் அனைத்து வில்லங்கங்களுடன் என்ன செய்துள்ளது என்றால் அது சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கையின் பிணையங்கள் சந்தையினை தொழில்நுட்பரீதியில் மேம்பட்ட, போட்டித்தன்மையான மற்றும் இலாபகரமான பிணையங்கள் சந்தையாக உருமாற்றும் ஆழமாக வேரூன்றியிருந்த எமது வாஞ்சையினை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

அடுத்ததாக, எமது மீட்புக்கு பங்களிப்பதற்காக ஆற்றல் மற்றும் முதலீடுகளை தக்கவைப்பதில் மற்றும் கவர்வதற்கு நாம் கடினமாக செயற்படுகின்றோம். சில நாடுகள் தங்களது கதவுகளை மூடும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் எமது கதவுகளை திறந்து வைத்துள்ளோம். தற்போதைய சூழலினை நன்கு பயன்படுத்தி எமது பணியாளர்கள் மற்றும் துறைகள் சிக்கலிலிருந்து பிழைத்து விரைவாகவும் பலமாகவும் மீண்டெழும்.

மூன்றாவதாக, எமக்கு முன்னால் காணப்படும் சவால்களை சமாளிப்பதற்கு நாம் நெகிழ்வுத்தன்மையான, நேரகாலத்துடனான, மற்றும் செயற்திறனான திட்டங்களைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

எமது திட்டங்கள் வெற்றிபெறவும் மற்றும் எமது நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் நனவாவதற்கு எமக்கு ஒரு இறுதியான ஒரு மூலப்பொருள் தேவை: எமது மக்களின் ஒற்றுமை மற்றும் மீளெழுச்சியாகும். எப்போதாவது ஒரு முறை, நாம் தற்போது உள்ளவாறு, தேசங்கள் மற்றும் மக்கள் கடுமையாக பரிசீலிக்கப்படுகின்றார்கள். சிலர் அழுத்தத்தின் கீழ் வளைந்து சிக்கலின் மத்தியில் தோல்வியடைந்து வெளிவருகின்றார்கள். ஏனையோர் அவர்கள் பயங்கரமான முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்கும்போது மிகவும் தீர்மானத்துடன் வளர்ச்சியடைகின்றார்கள். அவர்களுக்குள்ளே காணப்படும் வலுவின் ஒதுக்கங்களை கண்டுபிடித்து அதன்மூலம் உருமாற்றமடைந்து புத்தாக்கமடைந்து வெளிவருகின்றார்கள். இறுதியாகக் காணப்படுவதே எமது கதையாகும் என்பதுடன் வரவிருக்கும் வருடங்களிலும் அவ்வாறே இருக்கும்: சிக்கல்களில் நாம் ஒருபோதும் ஆபத்திலிருந்து வாய்ப்புக்களை போராடிப் பெற்றுக்கொள்வதில் தவறியதில்லை.

தற்போது, எமது வரலாற்றில் மற்றுமோர் இடத்தில், ஓர் சந்ததியின் சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டியது எமது வாய்ப்பாகும். தற்போது நாம் மேற்கொள்ளும் தெரிவுகள், ஓர் நாடாக யார் நாம் என்று வரையறை செய்வதுடன், எதிர்கால சந்ததிகளுக்கு என்ன விழுமியங்கள் மற்றும் இலட்சியங்களை நாம் வழங்குகின்றோம் என்பதைப் பொறுத்ததாகும். காலப்பகுதியில், முதலீட்டாளர் நம்பகத்தன்மையானது அபாரமாக அதிகரித்துள்ளது மற்றும் நாடானது பொருளாதார சீர்திருத்தத்தினை தொடங்கியுள்ளது. 2021 மற்றும் வரவிருக்கும் வருடங்களில் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு தயாராயுள்ளது. ஒவ்வொருவரும் அவர்களது கனவுகளை விரட்டும்சமயம் நாம் தொடர்ச்சியாக விதிவிலக்காக இருக்கமுடியும் என நான் நம்புகின்றேன். இபிஎஆ முழுவதுமான துறையின் உறுதுணையோடு, இலங்கை இந்த நீடித்த தொலைநோக்கினை நோக்கி சிறப்பாக எம்மை வழிநடத்தும். ஒவ்வொருவரும் எம்முடன் இணைந்து செயலாற்றுவது எமக்கு தேவை. கூட்டாக, இந்த சிக்கலிலிருந்து எமது நாட்டினை மீட்டெடுத்து உலகத்தின் எமது உணர்வுகள் செழிப்படையட்டும்.

கடந்த ஆண்டில் இபிஅ பொறுப்பேற்ற பணியினை மற்றும் அடைந்த வெற்றியினைப் பார்க்கும்போது ஒரு விடயம் புரிந்துகொள்ளப்பட வேண்டுமாயின், அது இபிஅ ஓர் மாற்றம் நோக்கிய பயணத்தில் காணப்படுகின்றது. ஓர் மாற்றத்தினைக் கொண்டுவருவதற்கான விருப்பம் இல்லாவிடின் எந்த மாற்றமும் சாத்தியமாகாது. இதற்கமைய நீங்கள் செயற்படவேண்டும் மற்றும் விடயங்களை செயல்படுத்த வைக்கவேண்டும். தொற்று இடம்பெற்ற அதன் அனைத்து வில்லங்கங்களுடன் எமது ஆழ்ந்த அவாக்களை கட்டவிழ்த்துவிட்டது. இலங்கையின் பிணையங்கள் சந்தையினை தொழில்நுட்பரீதியில் மேம்பட்டதாக, போட்டித்தன்மையான மற்றும் இலாபகரமானதாக சர்வதேச தரங்களுக்கு ஏற்றாற்போன்ற பிணையங்கள் சந்தையாக உருமாற்றியமைப்பதாகும். தொற்றானது நாம் இபிஅ மற்றும் பிணையங்கள் சந்தைக்கு எதிர்பார்த்த அனைத்தையும் எம்மை மேற்கொள்ள தூண்டியதுடன் அது மெய்யாக நிகழ்ந்துள்ளது. பின்வருவனவற்றை உறுதிப்பாட்டுடன் சொல்லக்கூடியதாயுள்ளது. நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முதலீட்டிற்கான ஓர் உகந்த சூழ்நிலையினை உருவாக்குவதன் மூலம் இதிலும் பார்க்க சிறந்த வாய்ப்புக்களை வழங்குவதற்கு இபிஅ கடுமையாக உழைக்கும். நிலைநாட்டப்பட்ட மற்றும் வளர்ந்துவரும் நிறுவனங்கள் இலங்கையின் மூலதனச் சந்தையினை வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஓர் மேடையாக நோக்குவதற்கான ஓர் பிணையங்கள் சந்தையினை உருவாக்குவதற்கு நாம் கடுமையாக முயற்சிப்போம். முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குனர்களுக்கு அவர்கள் எவ்வளவு சிறிதாயிருந்தாலும் சரி எவ்வளவு பெரிதாயிருந்தாலும் சரி கனவுகள் நனவாகுவதற்கான இடமாக மூலதனச் சந்தையினை ஏற்படுத்துவதற்கு நாம் எண்ணியுள்ளோம். சந்தையின் முறைமைப்படுத்துபவராக, அதிக முறைமைப்படுத்தலின் அபாயங்களை நாம் அறிந்துள்ளதுடன், இலங்கையின் மூலதனச் சந்தையினுள் நீடிப்புத்திறனை ஒருங்கிணைப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் இருக்கும்வேளை நாம் தொடர்ச்சியாக சரியான சமநிலையினை அடைவதற்கு முயற்சிக்கின்றோம். அது தொடர்பில், கொபப இன் குழு, விசேடமாக கொபப இன் தலைவர்,திரு. துமித் பர்னாந்து, பிரதம நிறைவேற்று அதிகாரி, திரு. ரஜீவ பண்டாரநாயக்க மற்றும் பிரதம முறைமைப்படுத்தல் அதிகாரி, திரு. ரேணுக்க விஜேவர்தன ஆகியோருக்கு அவர்களது அயராத உழைப்பு மற்றும் அளவான மற்றும் நம்பிக்கையான தலைமைத்துவத்திற்கு நான் மகிழ்ச்சியடைவதுடன் கொபப இரண்டு நிறுவனங்களினதும் கூட்டாண்மையினை உறுதிசெய்துள்ளதுடன் தொடர்ச்சியாக கூட்டாக பணியாற்றுவதற்கு நான் எதிர்நோக்குகின்றேன்.

> எவ்வாறு அமெரிக்கா மற்றும் உலகத்தின் அபிவிருத்தியடைந்த சந்தைகள் அந்தளவுக்கு பொருளாதார வாய்ப்பு மற்றும் செல்வாக்கினை உருவாக்கியது? புகழ்பெற்ற, நோபள் பரிசினை வென்ற பொருளாதார வல்லுனரான டக்ளஸ் நோர்த் இந்த கேள்வியினை பரிசீலனை செய்தார். அவருடைய வார்த்தைகளில் சொல்வதாயின், நவீன மனிதர்களை குகை மனிதர்களிலிருந்து வேறுபடுத்துவது நம்பிக்கையாகும்.

முறைமைப்படுத்தலானது இபிஅ இன் செயற்பாடுகளின் இருதயமாக காணப்பட்டாலும், முன்னர் கூறியதுபோன்று, நாம் மரபு ரீதியான முறைமைப்படுத்துபவர் பங்களிப்பிற்கு மாத்திரம் எம்மை மட்டுப்படுத்துவதில் நாம் நம்பிக்கை கொள்ளவில்லை. இபிஅ அடைந்த ஒன்றுமே பின்வருவன இன்றி சாத்தியப்பட்டிருக்காது. மதிப்பிற்குரிய பிரதம மந்திரி, மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர், மதிப்பிற்குரிய அஜித் நிவார்ட் கப்ரால், இராஜாங்க அமைச்சர் பணம் மற்றும் மூலதனச் சந்தை மற்றும் அரச நிறுவனங்கள் சீரமைப்பகள், மதிப்பிற்குரி பி.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர், திரு. எஸ்.ஆர்.ஆட்டிகல, திறைசேரியின் செயலாளர், மற்றும் திரு. பிரியந்த ரத்நாயக்க, மூலதனச் சந்தை மற்றும் அரச நிறுவனங்கள் சீரமைப்புகள் செயலாளர் ஆகியோரது தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் வழங்கப்பட்ட உறுதுணையின்றி சாத்தியமாயிருக்காது.

2020 ஆம் ஆண்டு கடினமான ஆண்டாகும் என்பதுடன், இபிஅ இன் தொலைநோக்கினை அடைவது நோக்கிய எமது திடமான கடப்பாடு மற்றும் அர்ப்பணிப்புக்கு பல்வேறு தடைகளுக்கு மத்தியில் செயற்பட்ட மற்றும் தொடர்ச்சியாக அயராது செயற்படும் இபிஅ இன் பணியாட்களின் அர்ப்பணிப்பானது ஓர் சான்றாகும். நான் இந்த சந்தர்ப்பத்தில் எமது தலைவர். திரு. விராஜ் தயாரத்ன அவர்களுக்கு அவரது விவேகமுள்ள அறிவுரை மற்றும் எந்நேரமும் வழங்கிய அயராத உறுதுணை ஆகியவற்றிற்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். செயலகத்தின் சார்பிலும் தனிப்பட்ட ரீதியில் எம்மில் வைத்த நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்கு நான மனமார நன்றியினைத் தெரிவிக்கின்றேன். நான் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அவர்களது அசைவற்ற உறுதுணை, திடமான ஆலோசனை, கூட்டு நிபுணத்துவம் மற்றும் இச்செயல்முறையில் அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் கடப்பாடுகளின் தியாகம் என்பவற்றுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

இலங்கையின் பிணையங்கள் சந்தையானது உங்களது நிறுவனங்களை பல்வேறு விதத்தில் உருமாற்றக்கூடிய மற்றும் வளப்படுத்தும் ஆற்றலினைக் கொண்டுள்ளதனால், நான் பொதுமக்கள் மற்றும் தனியார் துறையினை இலங்கையின் பிணையங்கள் சந்தையுடன் ஈடுபடுமாறு வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாரிய கனவுகள் மற்றும் அவற்றின் நிநைவேற்றல்களினால் வழிநடத்தப்படும் எதிர்காலத்தினை மீள்வரையறை செய்வது நோக்கி நாம் முன்னேறும்போது இபிஅ உடன் கைகோர்ப்பதற்கு இந்த நேரத்தினைத் தவிர சிறந்த நேரம் வேறுஏதும் இல்லை. துறையின் அனைத்து பங்காளிகளுக்கும், இந்தக் காலமானது எம்மைப்போன்று உங்களது மீளெழுச்சியினையும் பரிசீலிக்கும், ஆனால் உங்களது வழியில் குறுக்கிடும் நிச்சயமற்றதன்மைகள் குறித்து கலக்கமடைய வேண்டாம். அவை உங்களது கனவுகளை திணறடிக்க விடவேண்டாம், ஆனால் அவற்றிலிருந்தான வாய்ப்புக்களை பயன்படுத்துங்கள். எத்தகைய சூழ்நிலைகள் காணப்பட்டாலும் கனவு காண்பதற்கு துணிவுள்ளவர்களே தனச்சிறப்பினை அடைபவர்களாவார்கள்.



சிந்தக்க மெண்டிஸ்
பணிப்பாளர் தலைமை அதிபதி

20 மே 2021

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்



இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்:

திரு. மனில் ஜயசிங்க,
திரு. விராஜ் தயாரத்ன (தலைவர்)

இடமிருந்து வலம் நிற்பவர்கள்:

திரு. சுனில் லங்காதிலக்க, திரு. பிரியந்த ரத்நாயக்க, திரு. நரேஷ் அபேசேகர, திரு. சிசிர ரத்நாயக்க, திரு. சுஹத கமலத்
சமூகமளிக்காதவர்: திரு. என்.டபிள்யு.ஜி.ஆர்.டி. நாணயக்கார



ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

திரு. விராஜ். தயாரத்ன, ஜ.ச.
தலைவர்

திரு. விராஜ் தயாரத்ன, ஜனாபதி சட்டத்தரணி, அவர்கள் 2020 ஜனவரி 22 இல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராகப் பதவியேற்றார். திரு. தயாரத்ன, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சர்வேதச தொடர்புகளில் இளமானி கலைத்துறை பட்டத்தையும் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச வர்த்தக சட்டத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் 1989 இல் பிரவேசித்து நவம்பர் 1992 இல் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

இவர் ஜனவரி 1993 இல் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாக இணைந்து மே 2018 இல் மேலதிக மன்றாடி அதிபதியாக உயர்வு பெற்றார். அதே வருடத்தின் ஜூன் மாதத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் ஜனாபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அவரது முதலாவது ஆறு வருட காலப்பகுதியில், திரு. தயாரத்ன அவர்கள் குற்றவியல் பிரிவுடன் இணைந்திருந்ததுடன் நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுப்புக்களை நடாத்தியதுடன் மேல் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் அரசுக்காக ஆஜராகினார். இதன் பின்னர், இவர் குடியியல் மற்றும் வர்த்தகச் சட்டப் பிரிவிற்கு நகர்ந்து அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களை ஆரம்ப நீதிமன்றங்களுடன் மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் செய்தார். இவை பலவற்றுக்கிடையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள், பொதுச் சட்டம், வர்த்தகச் சட்டம், வரி, வங்கியியல், சுங்கம் மற்றும் தொழில் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவையாகும். இவர் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் பல வர்த்தக நடுத்தீர்ப்புகளில் பிரசன்னமாகியுள்ளார். இவரது பணியானது அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய சட்டபூர்வமான நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட சட்ட விடயங்களில் அறிவுரை வழங்குவதனை உள்ளடக்கும்.

திரு. தயாரத்ன அவர்கள் விஜி குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வருகைதரும் நீதிபதி மற்றும் மலேஷியாவிலுள்ள ஆசிய சர்வதேச நடுத்தீர்ப்புகள் மத்திய நிலையத்தின் (ஆசடமறி) நீதிகாண்பவர்கள் குழாமின் ஓர் நீதிகாண்பவருமாவார். இவர் ICLP நடுத்தீர்ப்பு மத்திய நிலையத்தின் ஆசிரியப் பணியாளர் சபையின் அங்கத்தவருமார். இவர் கட்டுமாண நடுத்தீர்ப்பு மற்றும் நீதிகாண்தலில் வருகைதரும் விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்

இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் நடுத்தீர்ப்பு சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் நிர்வாகச் சட்டத்தில் ஓர் பரீட்சிப்பவருமாக கடமையாற்றியுள்ளார். இவர் இன்வோர்மட்டிக்ஸ் இன்ஸ்ட்டிடியூட் ஒவ் டெக்னோலஜி இனால் நடாத்தப்படும் இலண்டன் இளமானி சட்டப் படிப்பு பாடக்கோப்புக்கு ஒப்பந்தச் சட்டத்தில் வருகைதரும் விரிவுரையாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. தயாரத்ன அவர்கள் ஓமான் சுல்தானகத்தின் பாதுகாப்பு அமைச்சின் ஒப்பந்தங்கள் மற்றும் சட்ட அலுவல்கள் இயக்கத்தின் சட்ட நிபுணராக 2009 முதல் 2011 வரையான இரண்டு வருட காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளார். இவர் இலங்கையின் அரச நிறுவனங்களது சீர்திருத்த ஆணைக்குழுவினதும் இலஞ்சமும் ஊழலும் சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினதும் சட்ட ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கை வான் படையின் நீதிபதி வழக்குரைஞர் அதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் பின்வரும் திட்டங்கள் தொடர்பாக திட்ட உடன்படிக்கைகளை வரைந்த திட்டக் குழுக்களின் அங்கத்தவராவார். மகாவலி சிறு நீர்மின் திட்டத்தை கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து /கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து மாற்றல்செய் அடிப்படையிலும் கிளிநொச்சி மாவட்ட மின்மயமாக்கல் திட்டத்தை கட்டியெழுப்பு சொந்தமாக்கு செயற்படுத்து அடிப்படையில் ஆகும். அத்துடன் இலங்கைக்கும் ஓமானுக்கும் இடையிலான இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கையினை பேச்சுவார்த்தை நடாத்திய இலங்கை அரசாங்கத் தூதுக் குழுவின் அங்கத்தவருமாவார். இவர் பல சர்வதேச கருத்தரங்குகளில் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதுடன் பல பிரசுரங்களுக்கு சட்டத்தின் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளை எழுதியுள்ளார். அரச சேவைகள் ஆணைக்குழுவானது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இ.பி.ப.ஆ. இன் தலைவர் கடமையினை பொறுப்பேற்பதற்காக விடுவிக்கப்பட்டார்.

திரு. மனில் ஜயசிங்க

திரு. மனில் ஜயசிங்க அவர்கள் (ஐ.இ.) பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் மற்றும் அரச நிதியியல் மற்றும் கணக்கீட்டுக்கான பட்டய நிருவகத்தின் அங்கத்தவருமாவார்.

இவர் 38 வருடங்கள் பரவலான அனுபவத்தினை இலங்கை எர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தில் கொண்டுள்ளதுடன் தற்போது வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகளுக்குப் பொறுப்பான உறுதித் தலைமைப் பதவியினை வகிக்கின்றார்.

தற்போது இவர் பின்வரும் பதவிகளில் சேவையாற்றுகின்றார்:-

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர்,
- சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர், சட்டரீதியான கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர் மற்றும் வேறு பல குழுக்களிலும் சேவையாற்றுகின்றார்.
- தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தலைவர்
- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் அங்கத்தவர்
- சி.எம்.ஏ. ஸ்ரீ லங்காவின் சபை உறுப்பினர்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களில் ஆலோசகராக கடமையாற்றுதல்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தேர்வுக் குழுவின் தலைவராகவும், கடந்த வருடத்தில் சட்டரீதியான கணக்கீட்டு நியமங்கள் குழுவின் மாற்றீடு தலைவராகவும், சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் சர்வதேச கணக்கீட்டு கல்வி தரங்கள் சபையின் அங்கத்தவராகவும், மொரட்டுவ பல்கலைக்கழகத்தினது சங்கத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. சுஹத கமலத், ஜ.ச.

திரு. கமலத், ஜனாதிபதி சட்டத்தரணி அவர்கள் முன்னாள் மன்றாடி அதிபதி என்பதுடன் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க

திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திலான உத்தியோகத்தர் என்பதுடன், தற்போது பொதுத் திறைசேரிக்கு பிரதிச் செயலாளராக பணிபுரிகின்றார். இவர் அரச சேவையில் 25 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நோர்வே பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் முதுமானி பட்டத்தையும் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விஞ்ஞான (விசேட) பட்டத்தையும் வைத்துள்ளார்.

இவர் 1994 இல் அரச சேவையில் இணைந்ததுடன் பொதுத் திறைசேரியில் தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிவாரி வளங்கள் திணைக்களம் போன்றவற்றில் பல்வேறு பதவிகளை வகித்திருந்தார். வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதற்காக அபிவிருத்தி பங்காளிகள், கடன்வழங்கும் முகவர்கள் மற்றும் மூலதனச் சந்தை என்பவற்றுடனான ஒருங்கிணைப்பிற்கு பொறுப்பாளியாக இருந்தார். அத்துடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதுடன் வெளிநாட்டு நிதியானது நேரகாலத்துடன் வழங்கப்படுவதற்கு வசதியளித்தும் உள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் மாற்று நிறைவேற்று பணிப்பாளராகவும், தேசிய சேமிப்பு வங்கியின் தலைவராகவும், மக்கள் வங்கியின் பணிப்பாளராகவும், பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிருவகத்தினது முகாமைத்துவச் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் அரசு மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும், இலங்கையின் சிவில் விமானப் பிரயாண அதிகாரசபையின் பணிப்பாளராகவும், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளராகவும், தேசிய மருந்துகள் முறைமைப்படுத்தல் அதிகாரசபையின் அங்கத்தவராகவும் கடமை புரிந்துள்ளார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் பல் வேறு துறைகளில் / பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளார்.

திரு. சிசிர ரத்நாயக்க

திரு. ரத்நாயக்க அவர்கள் 35 வருடங்களாக சட்டத்துறையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளதுடன் இலங்கையில் குடியியல் மற்றும் குற்றவியல் சட்டத்தில் பரவலான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின், ஸ்கொட்லாந்திலுள்ள அபர்டீன் பல்கலைக்கழகத்தில் வணிகச் சட்டத்தில் பாராட்டுக்களுடன் முதுமானி பட்டத்தைப் (L.L.M.) பெற்றுள்ளதுடன் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்ட வழக்கறிஞருமாவார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் நீதித்துறையில், நீதிவானாக, மாவட்ட நீதிபதியாக, மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் மற்றும் இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களில் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் சேவையாற்றியுள்ளார். 2013 -2105 காலப்பகுதியில் இவர் நீதிச்சேவை ஆணைக்குழுவில் செயலாளராக கடமையாற்றியுள்ளார். இவர் 2007-2008 காலப்பகுதியில் நிதி அமைச்சில் மேலதிக செயலாளர் (சட்டம்) ஆகவும் சேவையாற்றியுள்ளார்.

இவர் நீதிச் சேவைகள் சங்கத்தின் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (நீதிச் சேவைகள் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகளை உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்). இவர் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத்தில் பிரதி தலைவராகவும், தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கமானது நாட்டிலுள்ள அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளையும் உள்ளடக்கிய ஓர் சங்கமாகும்).

இவர் பின்வரும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். ஹொங்கொங்கில் இடம்பெற்ற, “கம்பனிகள் சட்டத்திலான நவீன போக்குகளில் மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்”, சிங்கப்பூரில், “பிராந்திய நீதித்தறை கருத்தரங்கு 2007”, சிங்கப்பூரில் இலங்கையின் சிரேஷ்ட நீதித்துறை அங்கத்தவர்களுக்கான “சர்வதேச நடுத்தீர்ப்பு மற்றும் பொருளமைத்தல் சட்டத்திலான நிறைவேற்று பயிற்சி”, இந்தியாவில், “இலங்கை நீதிபதிகளுக்கான அறிவுசெறிந்த நிகழ்ச்சித்திட்டம்”, சிங்கப்பூர் அரச சேவை கல்லூரியில் இடம்பெற்ற “நீதித்துறை மற்றும் தனிச்சிறப்பு சிங்கப்பூரில் கற்கை விஜயம்”, தென் கொரியாவில் “KOICA பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்”, இங்கிலாந்தின் எடின்பேர்க்கில் “UKELA வருடாந்த கருத்தரங்கு” என்பவையாகும். இவர் இந்தியாவில் இடம்பெற்ற நீதிமன்ற முகாமைத்துவம், வழக்கு முகாமைத்துவம், குடியியல் சட்ட மறுசீரமைப்பு மற்றும் குடும்ப சட்ட மறுசீரமைப்பு ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.

இவர் பின்வரும் உலகளாவிய நிகழ்வுகளில் இலங்கையினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். தென் ஆபிரிக்கா, கேப் டவுனில் இடம்பெற்ற “ஆசிய-ஆபிரிக்க சட்ட ஆலோசனை ஒழுங்கமைப்பின் 46 ஆவது அமர்வு”, அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி. இல் இடம்பெற்ற “நீதித்துறை பேச்சுவழக்கு”, அமெரிக்காவில் இடம்பெற்ற “கடனிறுக்க வகையின்மையில் INSOL/UNCITRAL/உலக வங்கி கூட்டு பல்தேச நீதித்துறை பேச்சுவழக்கு” என்பவற்றிலும் பங்குபற்றியுள்ளார்.

திரு. சுனில் லங்காதிலக்க

திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுனராவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியலில் முதுமானி விஞ்ஞான பட்டத்தையும் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன், பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து வணிகத்தில் முதலாம் வகுப்பு இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான விவசாயத்துறை நிருவகத்திலிருந்து விவசாயப் பொருளியலில் முதுமானி தத்துவப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை, நிதியியல் துறை ஸ்திரத்தன்மை மற்றும் முகவர் தொழிற்பாடுகள் போன்ற பிரிவுகளில் 32 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1986 இல் இலங்கை மத்திய வங்கியில் சேரும் முன்னர் இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் இவரது 32 வருடகால சேவையில், திரு. லங்காதிலக்க அவர்கள் பின்வரும் பிரசித்தி பெற்ற பயிற்சி வழங்குனர்களினால் நடாத்தப்பட்ட அதிக எண்ணிக்கையிலான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் பின்வரும் தலைப்புகளில் பயிற்சி பெற்றுள்ளார். பாரிய பொருளாதார முகாமைத்தும், பாரிய பொருளாதார மாதிரியமைத்தல், நிதியியல் நிரலாக்கல், வர்த்தக கொள்கைகள், போட்டித்தன்மை, திட்ட முகாமைத்துவம், வெளிநாட்டு முதலீடு, மூலோபாய திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

மற்றும் தொடர்பாடல் கொள்கை என்பனவாகும். திரு. லங்காதிலக்க அவர்கள் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவராகவும், பதிவாளர் அதிபதி திணைக்களத்தின் உரிமைக் காப்பீட்டு நிதியத்தின் முகாமைத்துவ சபை, தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு மற்றும் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு ஏனைய குழுக்களில் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். திரு. லங்காதிலக்க அவர்கள் விசேடமாக வங்கியியல் உறவுகள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்ற பிரிவுகளிலான பல்வேறு அரசாங்க தூதுக்குழுக்கள் மற்றும் பேச்சுவார்த்தை குழுக்களில் இலங்கை மத்திய வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். திரு. லங்காதிலக்க அவர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் அவற்றை பிரசித்திபெற்ற சர்வதேச மற்றும் உள்ளூர் சஞ்சிகைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரசுரங்களிலும் வெளியிட்டுள்ளார். இவை பொருளாதார விடயங்கள், சிற்றளவு கைத்தொழில்கள், சர்வதேச வர்த்தகம், மாணிக்கக்கல் துறை, ஆடைத் துறை போன்றவற்றை உள்ளடக்கும்.

திரு. லங்காதிலக்க அவர்கள் பல்வேறு மன்றங்களில் பல்வேறு தராதரங்களில் திட்ட முகாமைத்துவம், திட்ட மதிப்பீடு, நுண்ணிய மற்றும் பாரிய பொருளாதாரம் போன்ற பிரிவுகளில் பிரசித்திபெற்ற வளவாளரும் ஆவார். திரு. லங்காதிலக்க அவர்கள் பொருளாதாரத்தின் பரவலான தலைப்புகளில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் அதிகளவு எண்ணிக்கையிலான விளக்கக்காட்சிகளை நடாத்தியுள்ளார்.

திரு. நரேஷ் அபேசேகர

தொழில்முனைவர், முதன்மைப் பேச்சாளர், ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி – SECQUORO உருமாற்றுகை மூலோபாயம், நிதி, எண் மின் நிலை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் விசேடத்துவம் கொண்டது.

திரு. அபேசேகர அவர்கள் மிலேனியம் ஐடி(இலண்டன் பங்குப் பரிவர்த்தனைக் குழு தொழில்நுட்பம்) குழுமத்தின் பிரதம நிதி அதிகாரியாயிருந்தார். லண்டன், ஹொங்கொங், சிங்கப்பூர், கனடா, இத்தாலி, மலேஷியா, ஜொஹனர்ஸ்பேர்க் மற்றும் ஆபிரிக்கக் கண்டத்தின் அனேகமான பரிவர்த்தனைகளை உள்ளடக்கிய உலகளவில் பரந்து காணப்படும் 40 உரித்துவ வர்த்தக இடங்களுக்கு உலகின் அதிவேகமான வர்த்தக மேடையினை வழங்கிய மூலதனச் சந்தை தொழில்நுட்பத்தினை விருத்திசெய்த உலகின் முன்னணி நிறுவனமாகும். இவர் லண்டன் பங்குப் பரிவர்த்தனை குழுமத்தின் உலகளாவிய தலைமைத்துவ குழுவிலும் காணப்பட்டார். இக்குழுமமானது சந்தை மூலதனவாக்க ரீதியாக ஒரு பிரதம நிறைவேற்று அதிகாரியின் கீழ் உலகில் காணப்படும் இரு பாரிய முன்னணி பரிவர்த்தனை குழுமத்தின் ஒன்றாகும் என்பதுடன் ஹாவார்ட் வணிக மீளாய்வில் உலகின் முன்னணி 100 ஆக தரவரிசைப்படுத்தப்பட்டது. ஆசியாவிலேயே 200 நிறுவனங்களில் சிறந்தது என வோர்ப்ஸ் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தெற்காசியாவிலேயே மிகப்பெரிய உற்பத்தி வசதியினை பட்டியலிடுவதற்கு இவரும் கருவியாகக் காணப்பட்டார்.

'தெற்காசியாவின் சிறந்த ஆண்டறிக்கையினை' தயாரித்தமைக்காக நிதியியல் அறிக்கையிடலுக்காக மற்றும் நிறுவன வள திட்டமிடல் அமுலாக்கல்களுக்கு பிராந்திய ரீதியில் பாராட்டுக்களை வெல்வதற்கு கருவியாகச் செயற்பட்டார்.

இவர் உள்வாரி கணக்காய்வு நிருவகத்தின் இலங்கை சங்கத்தினை இணை நிறுவினார். இது இலங்கையில் இடர்நேர்கை மற்றும் ஆளுகை அறிவு வரம்புறுகையினை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டதுடன், நகோயா-ஜப்பான் டொயோட்டா உற்பத்திப் ஆலையில் தொடர்ச்சியான மேம்படுத்தல் நடைமுறைகளில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம், பட்டய முகாமைத்துவ கணக்காளர் (லண்டன்), பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர் ஆகியவற்றின் சமூக அங்கத்தவராவதுடன் பிரசித்தி பெற்ற பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தில் வணிக நிருவாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திரு. என். டபிள்யு. ஜி. ஆர். டி. நாணயக்கார

திரு. நாணயக்கார அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகிக்கின்றார். இவர் இலங்கை மத்திய வங்கியில் 27 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், விசேடமாக வங்கிகளது மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல், வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவம், சர்வதேச செயற்பாடுகள், நாணயக் கொள்கை மற்றும் தொடர்புடைய உள்ளூர் செயற்பாடுகளை அமுல்படுத்துதல், பாரியவிவேகமான கண்காணிப்பு, பிராந்திய அபிவிருத்தி மற்றும் பொதுக் கடன் முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளிலாகும்.

திரு. நாணயக்கார அவர்கள் வாஷிங்டன் டிசி இல் உள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்திலிருந்து முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவர் (FCMA), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் (ACA) மற்றும் அமெரிக்காவின் உள்ளக கணக்காய்வாளர்கள் நிருவகத்தின் சான்றளிக்கப்பட்ட நிதிச் சேவைகள் கணக்காளருமாவார் (CFSA).

விரிவான, முயற்சி சார்ந்த, நடைமுறையான மற்றும் அளவிடக்கூடிய மூலதனச்சந்தை மூலோபாயம் 2020 - 2025

இது தற்போது இபிபஆ ஆல் செயற்படுத்தப்பட்டவண்ணமுள்ளது.



அதிகரிக்கும் பொறுப்பேற்பு மற்றும் சந்தை மேற்பார்வை

உட்கட்டமைப்பினை விருத்திசெய்தல் மற்றும் புதிய கருவிகளை இயலுமையாக்குதல்

நடைமுறையானது

அளவிடக்கூடியது

சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை பலப்படுத்தல் (இபி சட்டமூலம். பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம், பொமஇ கோவை)

உள்ளூர் செயலாற்றலினை கட்டியெழுப்புதல்

திரவத்தன்மையினை ஆழமாக்குதல் மற்றும் சந்தை பங்குபற்றலை விரிவாக்குதல்

மூலதனச் சந்தை பங்குபற்றுனர்களின் தரம் மற்றும் திறமையினை உயர்த்துதல்

வெளிநாட்டு நிதி முகாமையாளர்களிடையே கட்புலனை மேம்படுத்துதல்

முயற்சி சார்ந்தவை

மூலதன உருவாக்கத்திற்கு ஓர் இயலுமையான சூழலை உருவாக்குதல்

கொபப இனை ஓர் MSCI வெளித்தோன்றும் சந்தைக்கு தரமுயர்த்துதல்

விரிவானது

முறைமைசார் இடர்நேர்கையினை முகாமைப்படுத்தல் மற்றும் குறைத்தல்

பங்குச்சந்தையின் முனையம் முதல் முனையம் வரையான டிஜிட்டல்மயமாக்கல்

முக்கிய முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள்

இவை இபிபஆ ஆல் நிறைவேற்றப்பட்டவண்ணமுள்ளன


நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்கு தனியார் துறையினை வளர்த்தல்


- புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலத்தினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- கொபய இன் பட்டியலிடல் விதிகளது மதிப்பீடு மற்றும் மீளாய்வு
- சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான அனைத்து விதிகளையும் மீளாய்வு செய்தல்
- பொ.ஒ.அ.ஒ. இனால் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளுடன் ஒத்ததாக கூட்டாண்மை ஆளுகை கோவையினை மீளாய்வு செய்தல்
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிச் கோவையினை மீளாய்வு செய்தல்
- புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையினை முடிவுறுத்தல்
- பிணையங்களாக்குதில் சட்டக் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல்

- வர்த்தகத்தினை செயற்திறனாக கண்காணிப்பதற்காக நவீன செயற்பாட்டுடன் கண்காணிப்பு அமைப்புமுறையினை தரமுயர்த்துதல்
- பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் நிதியியல் கண்காணிப்பிலான ஓர் விரிவான வரம்புறுகையின் அபிவிருத்தி
- பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக துணைச் சேவை வழங்குநர்களில் கடமைகளை இடுதல்
- அனைத்து மூலதனச் சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களது இபிபஆ மேற்பார்வையினை மேம்படுத்துதல்
- மூலதனச் சந்தை துர்நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்காக ஓர் பயனுள்ள தடுத்தல் பொறிமுறையின் அறிமுகம்
- சந்தை தவறுகளின் உடனடியான புலனாய்வுகள்

- மூலதனச் சந்தை நிறுவனங்கள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான பொருத்தமான மற்றும் சரியான நியமங்களை மேம்படுத்துதல்
- சந்தை பங்குபற்றுனர்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை தரப்படுத்துல்
- மூலதனச் சந்தை பங்குபற்றுனர்களது தற்போதுள்ள தகமை வரன்முறையினை மீளாய்வு செய்தல் மற்றும் தரமுயர்த்தல்
- அனைத்து சொத்து வகைகளுக்கும் வசதியளிப்பதற்கான ஓர் பல்அடுக்கு உரிமமளித்தல் வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் மற்றும் முதலீட்டு முகாமையாளர்களுக்கு உலக முதலீட்டு செயற்திறன் நியமங்களை (உமுசெநி) அறிமுகப்படுத்துவதன் சாத்தியத்தினை மதிப்பீடு செய்தல்
- பணம் சலவை செய்தலை விழித்துரைப்பதற்காக இபிபஆ இன் முறைமைப்படுத்தப்படுபவர்களுக்கு பிரயோகிக்கக்கூடிய உ.வா.தெ. தேவைப்பாடுகளை மேம்படுத்துதல்
- நிதியியல்ரீதியான சவாலுக்குள்ளான கம்பனிகளின் வகைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்
- முறைமைப்படுத்தல் தேவைப்பாடு தொடர்பாக பங்கு பெறுமதியிடலுக்கான வழிகாட்டிகளை விருத்திசெய்தல்

- விநியோகம் எதிர் கொடுப்பனவு (விஎகொ) மற்றும் ஓர் மத்திய எதிர்தரத்தவர் (மஎ) பொறிமுறையின் செயலாற்றலுக்கு வசதியளித்தல்
- மூலதனச் சந்தை நிறுவனங்கள் மற்றும் இடையீட்டாளர்களுக்கு இடர்நேர்கை நிறையிடப்பட்ட மூலதனப் போதுமை வரம்புறுகையினை விருத்திசெய்தல்
- தளத்திலான மேற்பார்வைக்கு ஓர் இடர்நேர்கை அடிப்படையான மதிப்பீட்டு வரம்புறுகையினை விருத்திசெய்தல்





- மூலதனச் சந்தையினை அணுகுவதற்கு பருமன், அளவு மற்றும் திரவத்தன்மையுடைய நிறுவனங்களுக்கான ஓர் மேடையினை உருவாக்குதல்
- கூட்டாண்மை கடன்களுக்கான சந்தையினை விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையினூடாக உட்கட்டமைப்பு நிதியளிப்பிற்கான ஓர் வரம்புறுகையின் அறிமுகம்
- புதிய சந்தைப் பிரிவுகளுக்கு சேவையளிக்கக்கூடிய மாற்றீட்டு பட்டியலிடல் பலகைகளை நிறுவுதல்
- மோர்கன் ஸ்டான்லி கெப்பிட்டல் இன்டர்நேஷனல் (மோ.ஸ்.கெ.இ.) வெளித்தோன்றும் சந்தை நிலைக்கு உயர்வடைதல்

- சிறிய முதலீட்டாளர்கள் சந்தையினை அணுகுவதற்காக நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சித் துறையினை ஓர் கால்வாயாக விருத்திசெய்தல்
- மூலதனச் சந்தையில் ஓய்வூதிய நிதியங்களின் பங்குபற்றலை அதிகரித்தல்
- வெளிநாட்டு முதலீட்டுத்தேக்க முதலீட்டாளர்களை கவர்வதற்காக ஓர் உகந்த சூழலினை இயலுமையாக்குதல்
- குறை விற்பனை, பிணையங்கள் கடன்பெறல் மற்றும் கடன்வழங்கல்களது அறிமுகத்திற்கான ஓர் ஆய்வுநெறிமுறையினை உருவாக்குதல்
- திரவத்தன்மையினை அதிகரிப்பதற்காக உயர்ந்த பொதுப் புழக்க தேவைப்பாடுகளை செயலாற்றுதல்

- முறைமைப்படுத்தல் அறிக்கையிடலுக்கு இலத்திரணியல்-கோப்பிடுதல் முறைமையினை மேம்படுத்துதல்
- பங்குத் தரகுத் துறை பூராவும் நிலையான பின்புலக் காரியாலயம் மற்றும் கட்டளை முகாமைத்துவ அமைப்புமுறைமைகளை செயற்படுத்துதல்
- ஓர் தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் வணிக அறிக்கையிடுதல் மேடையினை அறிமுகப்படுத்துதல்
- ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்கள் (ஆ.மு.ந.பொ) மற்றும் பரிமாற்றந வர்த்தகச் செய்யப்படும் நிதியங்கள் (ப.வ.நி.) போன்ற புதிய கருவிகளுக்கான கொள்கைகள் மற்றும் விதிகளை உருவாக்குதல்
- இடர்நேர்கை காப்பிடப்பட்ட கருவிகளின் அறிமுகத்திற்கான ஓர் மேடையின் உருவாக்கம்

- பங்குச் சந்தை செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்கல்
- கொபப செயற்பாடுகளின் பரஸ்பரமற்றமயமாக்கல்
- இபிபஆ இன் செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்கல்
- ஓர் பயனுறுதிமிக்க, செயற்திறனான மற்றும் நேரத்துக்கேற்ற விதத்தில் இபிபஆ அதன் குறிக்கோள்களை மேற்கொள்வதற்காக பொறுப்புணர்ச்சியினை உறுதிசெய்தல்
- ஓர் திறமையான செயலணியினை பணிக்கமர்த்த மற்றும் தக்கவைப்பதற்கான நடைமுறைகளை வைத்திருப்பதன் மூலம் முறைமைப்படுத்துபவரின் திறமைகளை கட்டியெழுப்புதல்
- மூலதனச் சந்தை தொடர்பாக அனைத்து பங்காளிகளினதும் நிதியியல் அறிவு மற்றும் மூலதனச் சந்தை வெளிப்பாட்டினை மேம்படுத்துதல்
- தொடர்ச்சியான முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல்

பங்குச் சந்தையின் செயற்பாடுகளை முனைவு இலிருந்து முனைவு வரை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இபிபஆ/ கொபப கூட்டுக் குழு

திரு.விராஜ் தயாரத்ன, ஜச, தலைவர் இபிபஆ அதன் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் அதன் அதிகாரிகள் மற்றும் கொபப இன் சபை அங்கத்தவர்கள் மற்றும் அதன் அதிகாரிகளை பங்குச் சந்தையின் செயற்பாடுகளை முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல்மயமாக்கலுக்காக நடவடிக்கை மேற்கொள்வதற்காக நியமித்தார்.



இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்:

திரு. ரஜீவ பண்டாரநாயக்க - பிரதம நிறைவேற்று அதிகாரி கொபப, திரு. மனில் ஜயசிங்க - இபிபஆ ஆணைக்குழு அங்கத்தவர், திரு. நரேஷ் அபேசேகர - இபிபஆ ஆணைக்குழு அங்கத்தவர் மற்றும் இபிபஆ/கொபப கூட்டு டிஜிட்டல்மயமாக்கல் குழுவின் தலைவர், திரு. சிந்தக்க மென்டிஸ் - இபிபஆ பணிப்பாளர் தலைமை அதிபதி, திரு. ஜயந்த பர்னாந்து - கொபப சபை அங்கத்தவர், திரு. டில்ஷான் வீரசேகர - கொபப சபை அங்கத்தவர்

முதல் வரிசை இடமிருந்து வலம் நிற்பவர்கள்:

செல்வி. கவுஷல்யா விஜேசிறி - இபிபஆ, செல்வி. சர்மிளா பண்டித்தரத்ன - இபிபஆ, திரு. ரந்திக்க சில்வா - இபிபஆ, திரு. ரசிக்க வல்பிட்டிகம - இபிபஆ, திரு. பிரபாஷ் வணிகதுங்க - இபிபஆ, கலாநிதி. ஹர்சன பீரிஸ் சூரியபெரும - இபிபஆ, திரு. சந்திரகாந்த் ஜயசிங்க - கொபப, திரு. ரேணுக விஜேவர்தன - கொபப, திரு. துசார ஜயரத்ன - இபிபஆ

இரண்டாம் வரிசை இடமிருந்து வலம் நிற்பவர்கள்:

திரு. நிரோஷன் விஜேசுந்தர - கொபப, திரு. கவுஷால் சிறிவர்தன - கொபப, திரு. செராஜ் ஒபேசேகர - கொபப, செல்வி, கோஷிலா அல்விஸ் - கொபப, திரு. மாலிக் இப்ராஹீம் - கொபப, திரு. இந்திரஜித் கருணாசேன - கொபப, திரு. நதீர அசங்க அத்துகோரல - கொபப

டிஜிட்டல்மயமாக்கலினூடாக ஒவ்வொரு இலங்கையரையும் அணுகுதல்

முனைவிலிருந்து முனைவுவரையான ஊடாட்டமான முதலீட்டாளர் உள்வாங்கல் செயல்முறையானது முதலீட்டு அனுபவத்தினை மேம்படுத்தவும் மற்றும் உடனடியான வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து உடல்ரீதியான செயல்முறைகளை அகற்றுவதனூடாக இலங்கை தேஅஅ மற்றும் வங்கிக் கணக்குடன் எங்கிருந்தும் விரைவான முதலீட்டினை இயலுமைப்படுத்தல்

இபிஎ-கொபப கூட்டுக் குழுவானது இபிஎ இனது இலங்கையின் மூலதனச் சந்தையினை டிஜிட்டல் உருமாற்றமாக்குவதனை ஆரம்பிப்பதற்கான ஓர் முன்னெடுப்பாகும். இது எங்கிருந்தும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினை உடனடியாக அணுகுவதற்கு ஒவ்வொரு இலங்கையரையும் இயலுமையாக்குவதற்காகும்.

வரைபடத்தில் குறிப்பிட்ட முக்கிய இயலுமையாக்கிகளுடன் பங்குச் சந்தையின் டிஜிட்டல்மயமாக்கலின் விரிவான நிகழ்ச்சிநிரலை குழுவானது வெளியிட்டது.

முதல் கட்டத்தில் கடந்த 3 மாதங்களில் குழுவின் டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளின் விளைவுகள் கீழ்காணும் அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன. இது வளர்ச்சி, அணுக்கம், கல்வி மற்றும் உள்ளடக்க விதியோகம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஓர் திடமான டிஜிட்டல் உட்கட்டமைப்பினை உருவாக்கும். இது சந்தையினை ஓர் வலுவான மற்றும் செயற்திறனான பங்குச் சந்தை முறைமைக்கு கொண்டுசெல்லும்.

பின்வருவனவற்றிற்காக குழுவானது மூலதன திரட்டலின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய புத்தாக்க தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை தொடர்ந்தும் கொண்டுவரும். வளர்ச்சியினை மூட்டும், புத்தாக்கம் மற்றும் அபிவிருத்தி என்பன தேசிய நிகழ்ச்சிநிரலுக்கு துணைபுரிவதற்காக பொறுமையான மூலதனத்தை பயனுறுதி மற்றும் செயற்திறன் ஊடாக திரட்டுதல், இது புதிய யோசனைகளுக்கு வசதியளிக்கும் ஓர் பொறியாக மற்றும் முயற்சியாண்மைக்கு துணையளிக்கும்.



இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு டிஜிட்டல்மயமாக்கலின் செயலணியினது பரிந்துரையில் ஓர் விரிவான கற்கை நடாத்தப்பட்டது. இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் இணைந்து "அடுத்த சந்ததி மூலதனச் சந்தை தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை" கட்டியெழுப்புவதற்கு முற்றான மூலதனச் சந்தை முறைமையின் எதிர்காலத்தின் முற்றான டிஜிட்டல்மயமாக்கல் செயல்முறை மற்றும் வடிவமைப்பிற்கு வசதியளிப்பதற்காக எதிர்காலத்திலான விதிகளது மாற்றங்களை நிறுவுவதற்காகும்.

டிஜிட்டல் மயமாக்கலினூடாக ஒவ்வொரு இலங்கையரையும் எட்டுதல்





	முதலீட்டாளர்	பட்டியலிடப்பட்ட கம்பனி
5 நிமிடங்களினுள் இயங்கலை மவைதி கணக்கினை திறத்தல் "முனைவிலிருந்து முனைவுவரையான ஊடாட்டமான முதலீட்டாளர் உள்வாங்கல் செயல்முறையானது முதலீட்டு அனுபவத்தினை மேம்படுத்தவும் மற்றும் உடனடியான வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து உடல்ரீதியான செயல்முறைகளை அகற்றுவதனூடாக இலங்கை தேஅஅ மற்றும் வங்கிக் கணக்குடன் எங்கிருந்தும் விரைவான முதலீட்டினை இயலுமைப்படுத்தல்."	பின்வரும் சிறப்பம்சங்களுடன் விரைவான வர்த்தகத்திற்கான ஓர் மேம்படுத்தப்பட்ட முதலீட்டு அனுபவத்திற்கு வசதயளிப்பதற்காக இயங்கலை கணக்கினை திறத்தல். • டிஜிட்டல் உள்வாங்கல்: எங்கிருந்தும் 5 நிமிடங்களுக்கும் குறைவான காலத்தில் இ-உவாதெ உடன் இயங்கலை மவைதி கணக்கின் உருவாக்கம் மற்றும் முனைவிலிருந்து முனைவுவரையான முதலீட்டாளர் டிஜிட்டல் உள்வாங்கல். • உயிரளவையியல் அங்கீகாரம்: மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பிற்காக உயிரளவையியல் அடையாளங்காணல் ஊடான அணுக்கம். • தன்னியக்கமயமாக்கப்பட்ட தேஅஅ சரிபார்த்தல் (இலங்கையில் முதலாவது முறையாக): ஆட்களைப் பதிவுசெய்தல் திணைக்களத்துடன் (ஆபதி) நேரடியான தன்னியக்க தேஅஅ சரிபார்த்தல். • மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தியூடாக ஊடாட்டமான படிப்படியான கணக்கு உருவாக்கம்.	இயங்கலை கணக்கு திறத்தல் செயல்முறையானது முதலீட்டாளருடன் நேரடியான தொடர்பினை நிலைநாட்டுவதற்காக மின்னஞ்சல் மற்றும் கைப்பேசி இலக்கங்கள் போன்ற முக்கியமான தகவல்களை உறுதிசெய்யும். • ஆண்டறிக்கைகளது விநியோகம்: ஆண்டறிக்கைகள், காலாண்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்களை விதந்துரைக்கப்பட்ட விதத்தில் அனுப்பிவைப்பதற்கு மின்னஞ்சல் முகவரியின் கிடைப்புத்தன்மை. இது பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு இணக்கப்பாட்டு செலவினங்களை குறைக்கும். • இலத்திரணியல் பங்கிலாபக் கொடுப்பனவுகள் : பங்கிலாபக் கொடுப்பனவுத் திகதியின் பின்னர் 02 நாட்களினுள் பங்கிலாபங்களை செலுத்துவதற்காக பங்குதாரர்களது வங்கிக் கணக்குத் தகவல்கள் கிடைக்கக்கூடியமை. இது இணக்கப்பாட்டு செலவினங்களை குறைக்கும்.
டிஜிட்டல் ஊடாட்டம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் "பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான தொடர்பாடலானது பன்முகமான டிஜிட்டல் வடிவத்தில் உடனடி தொடர்பாடலில் புதிய உச்சத்தினை எட்டியுள்ளது"	பன்முக டிஜிட்டல் வடிவத்தில் முதலீட்டாளர் மற்றும் பங்குதாரருடனான உடனடி தொடர்பாடல் • குறுஞ்செய்தி : மவைதி உருவாக்கப்பட்ட தன்னியக்க நாள் இறுதி குறுஞ்செய்தி கொடுக்கல் வாங்கல் சுருக்கம். • InApp செய்தியனுப்பல் : அனைத்து அறிவித்தல்கள், விழிப்பூட்டல்கள் மற்றும் அறியப்படுத்தல்கள் InApp செய்தியனுப்பலூடாக. • மின்னஞ்சல் : மவைதி கூற்றுக்கள், தரகர் கூற்றுக்கள், அறியப்படுத்தல்கள் மற்றும் விழிப்பூட்டல்கள். • ஆண்டறிக்கைகள் : புதிய கொப செயலியூடாக InApp செய்தியனுப்பல் மற்றும் மின்னஞ்சலூடாக. • சிறி மற்றும் அலெக்சா (செ‌று துணையாளர்கள் : செப்டம்பர் 2020 இன் இறுதியில் - ஊடாட்டமான செ‌று துணையாளர்களான "சிறி" மற்றும் அலெக்சா என்பன ஆரம்பிக்கப்பட்டு வாய்மொழியான ஊடாட்டத்தினூடாக சந்தை அசைவுகளை சரிபார்ப்பதற்காக ஒருங்கிணைக்கப்படும்.	விரைவான டிஜிட்டல் ஆண்டறிக்கையின் விநியோகம்: • சில நிமிடங்களில் ஆண்டறிக்கைகளை பங்குதாரருக்கு விநியோகித்தல் InApp செய்தியனுப்பல் மற்றும் மின்னஞ்சல் ஊடாக. ஏதேனும் இலத்திரணியல் வடிவங்களுக்கு வசதியளிப்பதற்காக விதிகள் திருத்தியமைக்கப்பட்டன. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் உடனடி டிஜிட்டல் அறிவித்தல்கள் • அனைத்து பங்கிலாபங்கள், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய கம்பனியின் அறிவித்தல்கள் InApp செய்தியனுப்பல் மற்றும் ஏனைய டிஜிட்டல் அறிவுறுத்தல்கள் மூலம் உடனடியாக மேற்கொள்ளக்கூடியமை.
கட்டுரை மற்றும் காணொளி உள்ளடக்கங்களின் டிஜிட்டல் பிரசுரிப்பு "கட்டுரை மற்றும் காணொளி வடிவிலான டிஜிட்டல் உள்ளடக்கம் புதிய கொப செயலியில் நிரற்படுத்தப்படலாம். இது சந்தை தரவுகளுக்கான அணுக்கம் உள்ளடங்கலாக அனைத்து முதலீட்டு தகவல்களும் "முதலீட்டாளர்களின் உள்ளங்கையில்" கிடைக்கின்றது."	சிறந்த முதலீட்டு தீர்மானங்களுக்கான தகவல்கள் இற்றைப்படுத்தப்படும் பட்டியலிடப்பட்ட கம்பனி, பொருளாதார மற்றும் சர்வதேச சந்தை என்பன சிறந்த தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்களில் ஓர் தாக்கத்தைக் கொண்டிருக்கும். இது பின்வருவன உள்ளடங்கலாக கொப இன் புதிய செயலியூடாக "முதலீட்டாளரது உள்ளங்கையில்" கிடைக்கின்றது : • முதலீட்டு ஆய்வு அறிக்கைகள் • பட்டியலிடப்பட்ட கம்பனி பிநிஅ நேர்காணல்கள் • பொருளாதார இற்றைப்படுத்தல்கள் • மத்திய வங்கி இற்றைப்படுத்தல்கள் • பாதீட்டு மற்றும் கொள்கை இற்றைப்படுத்தல்கள் • ஆபொவ கம்பனி உள்ளடக்கம் • சந்தை தரவு : சிறந்த தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் வரலாற்று சந்தை தகவல்களுக்கு செயலியூடாக உடனடி அணுக்கம்.	பட்டியலிடப்பட்ட கம்பனி உட்கூறுகளின் டிஜிட்டல் பிரசுரம்: • பின்வருவனவற்றிலான உள்ளடக்கங்கள் புதிய கொப செயலியூடாக காணொளி வடிவில் அல்லது கட்டுரை வடிவில் பிரசுரிக்க இயலும். புதிய கம்பனி தகவல்கள், பிநிஅ நேர்காணல்கள். புதிய கருவிகளின் அங்குரார்ப்பணங்கள், மூலோபாய இற்றைப்படுத்தல்கள் என்பன எவ்வித கிரயமுமின்றி நேரடியாக புதிய கொப செயலியூடாக நேரடியாக பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் ஒரு களஞ்சியத்திலிருந்து. தொடர்பாடக்கூடியதாய் உள்ளது. இது பட்டியிலிடப்பட்ட கம்பனிகளின் இணக்கப்பாட்டு மற்றும் முதலீட்டாளர் தொடர்பான கிரயங்களைக் குறைக்கும். பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் காலாண்டு இற்றைப்படுத்தல்கள் • பட்டியலிடப்பட்ட கம்பனி தொடர்பான தொடர்பாடல் அவசியமான யாரேனும் முதலீட்டாளர் மற்றும் பங்குதாரர் தரவு இற்றைப்படுத்தப்பட்டவுடன் உடனடியான இது கொப க்கு அனுப்பப்பட்டு புதிய கொப செயலியில் முதலீட்டாளர் விழிப்பூட்டலுடன் பிரசுரிக்கப்படும்.

பங்குத்தரகர்

இயங்கலை கணக்கு உருவாக்கம், டிஜிட்டல் உட்கூறுகளது விநியோகம் மற்றும் அவர்களது சொந்த இணையத்தளம் மற்றும் சமூக ஊடகப் பக்கங்களுடன் இணைப்பதனூடாக பங்குத்தரகர்கள் டிஜிட்டல் மூலம் புதிய முதலீட்டாளார்களை பெற்றுக்கொள்வதனை இயலுமையாக்குதல்.

- மெய்ம்மையான கிளைகள் : பௌதீக கிளைகளின் அவசியமின்றி தரகர் காரியாலங்களை மெய்ம்மைப்படுத்தல்.
- டிஜிட்டல் உட்கூறு: தரகர் ஆய்வு அறிக்கை மற்றும் முதலீட்டாளர் தகவல்களது நேரடி விநியோகம் எவ்வித கிரையமுமின்றி.
- சமூக ஊடக ஒருங்கிணைப்பு : சாத்தியமான முதலீட்டாளர்களுடன் சமூக ஊடகத்தினூடாக ஈடுபடுவதற்கான ஆற்றல் மற்றும் உடனடியான இயங்கலை முனைவிலிருந்து முனைவுவரையான மவைதி கணக்கின் உருவாக்கம்.
- In App செய்திடல் : கொபப இன் புதிய செயலியூடாக வாடிக்கையாளர்களுடனான நேரடி ஈடுபாடு.

பங்குப் பரிவர்த்தனை (கொபப)

கணக்குக் கூற்றுக்களை விரைவாகவும் இலகுவாகவும் முதலீட்டாளர்களுக்கு விநியோகிப்பதற்காக ஓர் நேரடி இணைப்பினை நிலைநாட்டுதல்.

- மவைதி கூற்றுக்கள் : ஒரு சில நாட்களினுள் மவைதி மாதாந்த கூற்றுக்களை அனுப்பக்கூடிய இயலுமை.
- டிஜிட்டல் முதலீட்டாளர் ஊடாட்டம் : InApp செய்தியனுப்பல், குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் ஊடாக முதலீட்டாளருடனான டிஜிட்டல் மூலமான ஊடாட்டம்.
- முதலீட்டாளர் முதலீட்டுத்தேக்கம் : அடுத்த சில மாதங்களில் “இ-இணைப்பு” ஆரம்பிக்கப்படும். இது முதலீட்டாளர்களுக்கு அவர்களது மவைதி கணக்கிற்கான அணுக்கத்தை வழங்குவதுடன் இது இலத்திரணியல் மூலமான முதலீட்டுத்தேக்க மாற்றல்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சிறப்பம்சங்களையும் வழங்குகின்றது.

பங்குத் தரகர் - சந்தை இற்றைப்படுத்தல்கள் மற்றும் விதிகளது மாற்றங்கள் உள்ளடங்கலாக செயற்திறன மற்றும் எளிமைக்கான பன்முகமான தொடர்பாடல் வடிவங்களில் பங்குத்தரகர் - வாடிக்கையாளர் ஊடாட்டங்கள் தற்போது டிஜிட்டல் மூலம் இடம்பெறலாம்.

- பங்குத்தரகர்களுடன் In-app மூலமாக தொடர்புகொள்ளல்.
- மின்னஞ்சலூடாக கணக்குக் கூற்றுக்களை அனுப்பக்கூடிய இயலுமை..
- மின்னஞ்சலூடாக ஒப்பந்தக் குறிப்புக்களை அனுப்பக்கூடிய இயலுமை.
- மவைதி ஆல் உருவாக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களிலான தன்னியக்கமயமாக்கப்பட்ட குறுஞ்செய்தியானது முதலீட்டுச் செயல்முறையில் அதிகளவு ஆளுகையினை நிலைநாட்டுகின்றது. இது வாடிக்கையாளர் தரகர் உறவினை கட்டியெழுப்பும் ஓர் சுயாதீன மூன்றாம் தரப்பு உறுதிப்பாடாகும்.

தாள் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் தொடர்பாடல்கள் முழுவதுமான டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த கூற்றுக்கள் மின்னஞ்சலூடாக அனுப்பப்படலாம், இது அச்சிடல், திணித்தல் மற்றும் தபால் செலவினைக் குறைக்கும்.
- பதிவுசெய்யப்பட்ட பிணையங்கள் கணக்குகளின் பிணையங்கள் கணக்குத் திறத்தல் படிவங்களது டிஜிட்டல்மயமான களஞ்சியப்படுத்தல்.

தரகர்கள் அவர்களது முதலீட்டு உள்ளடக்கம் மற்றும் ஆய்வு அறிக்கைகளை பிரசுரிப்பதன் மூலம் முதலீட்டாளர்கள் அவற்றை அணுகி தகவலறிந்த சிறந்த முதலீட்டுத் தீர்மானத்தினை மேற்கொள்ள இயலும்.

- சிறந்த முதலீட்டாளர் ஈடுபாட்டினை உருவாக்குவதற்காக ஆய்வு அறிக்கைகளை பிரசுரிக்கக்கூடிய ஆற்றல்.
- சாத்தியமான மற்றும் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர் சமூகங்களை இலக்குவைத்து டிஜிட்டல் மேடைகளை பயன்படுத்தக்கூடிய ஆற்றல்.

அதிக பங்குபற்றல் மற்றும் சிறந்த தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்வதற்காக முதலீட்டாளர் அபிவிருத்தியினை இயலுமையாக்கும் தகவல் சேவைகளை கொபப ஆரம்பிக்கவுள்ளது.

- இபிஎ கல்வி யூடியூப் சேனல் : யூடியூப் மற்றும் ஏனைய டிஜிட்டல் மேடைகளூடாக கல்வி கட்டுரைகளை பிரசுரிப்பதற்கான இயலுமை. இது முதலீட்டாளர்களை கற்பிப்பதற்காக மற்றும் முதலீட்டாளர் நோக்கிய உள்ளடக்கத்தினை கட்டியெழுப்புவதற்கான பின்னூட்டம் மற்றும் கருத்துக்கள் மூலமான ஊடாட்டம்.
- பாரிய முதலீட்டாளர் கட்புலனுக்காக பட்டியலிடப்பட்ட கம்பனி பிநிஅ இன் நேர்காணல்கள்.
- அடிப்படைகளில் தங்கிய பொருளாதார மற்றும் துறைசார் நிபுணத்துவ உள்ளடக்கம்.

எதிர்காலத்திற்கான மிகையான பாய்ச்சல்

பங்குச் சந்தையின் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல்மயமாக்கல் 17 செப்டம்பர் 2020 இல் தொடங்கப்பட்டது. "எதிர்காலத்திற்கான மிகையான பாய்ச்சல்" என்ற கருப்பொருளிலான ஆரம்ப நிகழ்வானது பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றது.





















சிரேஷ்ட முகாமைத்துவம்



இடமிருந்து வலம் நிற்பவர்கள்:

செல்வி. மதுகயனி பலப்பிட்டிய - உதவிப் பணிப்பாளர், மனித வளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்

திரு. சுனெத் பெரேரா - உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை

திரு. துஷார ஜயரத்ன - பணிப்பாளர், வெளிவாரி உறவுகள் மற்றும் மூலதனச் சந்தைக் கல்வி

திருமதி. அயந்தி அபேவிக்கிரம - பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல் மற்றும் மாற்றாள் பணிப்பாளர், புலனாய்வுகள்

திரு. சிந்தக்க மெண்டிஸ் - பணிப்பாளர் தலைமை அதிபதி



இடமிருந்து வலம் நிற்பவர்கள்:

கலாநிதி. ஹர்சன பீரிஸ் சூரியப்பெரும - பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள் மற்றும் மாற்றாள் பணிப்பாளர், மேற்பார்வை

திரு. பிரபாஷ் வணிகதுங்க - பணிப்பாளர், கண்காணிப்பு மற்றும் மாற்றாள் பணிப்பாளர் மூலதனச் சந்தை அபிவிருத்தி

திரு. டி.எம்.ஜி. பிரியந்த - உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்

செல்வி. மனுாரி வீரசிங்க - உதவிப் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்

திருமதி. ஜி.பி.என். டிலானி - பணிப்பாளர், நிதி

சமூகமளிக்காதவர்: திரு. தம்மிக்க பெரேரா - பிரதி பணிப்பாளர் தலைமை அதிபதி

சிரேஷ்ட முகாமையாளர்கள்



திருமதி. சஜீவனி பக்மீதெனிய
சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தைக் கல்வி



திருமதி. ரன்மினி ஜயதிலக்க
சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம்



செல்வி. சர்மிளா பண்டித்தரத்ன
சிரேஷ்ட முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்



திருமதி. சவுமி கொடிப்பிலி
சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை

முகாமையாளர்கள்



திருமதி. தக்ஷிலா பிரான்சிஸ்
முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி



செல்வி. மேகலா ஜயபால
முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள்



திரு. நிமால் குமாரசிங்க
முகாமையாளர், வெளிவாரி உறவுகள்



செல்வி. வீனா குணரத்ன
முகாமையாளர். வெளிவாரி உறவுகள்



திருமதி.லக்ஷ்மி விக்கிரமநாயக்க
முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம்



திருமதி. அசோகா தயாரத்ன
முகாமையாளர், மனித வளங்கள்



திருமதி. அநுலா விஜேசிங்க
முகாமையாளர், புலனாய்வுகள்



திருமதி. பிரதிபானி ஹேரத்
முகாமையாளர், மேற்பார்வை

சமூகமளிக்காதோர் : திரு. ஆர்.கே.வசந்த சுனிமல் - முகாமையாளர், புலனாய்வுகள், திருமதி, பி.எம். நிரோஷிகா உதயங்கனி - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி. மஞ்சுளா சந்திரரத்ன - முகாமையாளர், மேற்பார்வை

பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்

மூலதனச் சந்தை அபிவிருத்திப் பிரிவு



திருமதி, ஒலிவி சொலங்காராச்சி
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. தசுன் பெரேரா
உதவி முகாமையாளர்

தலைவரது காரியாலயம்



திருமதி. சமில்கா கருணாநாயக்க
உதவி முகாமையாளர்

கூட்டாண்மை அலுவல்கள் பிரிவு



திருமதி. கிரிஷாந்தி முத்துதந்திரிகே
சிரேஷ்ட நிறைவேற்று செயலாளர்



செல்வி. மேரியன் ஜி. சந்தானம்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திருமதி. சமந்தி குணவர்தன
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



செல்வி. செமினி தயனிக்க
உதவி முகாமையாளர்



திருமதி. சரண்யா அனுதினன்
உதவி முகாமையாளர்



செல்வி. கே.எம்.சனிக்கா குணசிங்க
உதவி முகாமையாளர்

பணிப்பாளர் தலைமை அதிபதியின் காரியாலயம்



திருமதி. ரோஷினி பீரிஸ்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. ரசிக்க வல்பிட்டிகம
உதவி முகாமையாளர்



செல்வி. அஷாரா செனவிரத்ன
உதவி முகாமையாளர்

வெளிவாரி உறவுகள் பிரிவு



திருமதி.நிஷோக்கா ஜயதுங்க
நிறைவேற்றுச் செயலாளர்

மூலதனச் சந்தை கல்விப் பிரிவு



திரு. எம்.ஏ. இம்ரான்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திருமதி. ஜே.கே.பிரியதர்சினி
சிரேஷ்ட உதவி முகாமையாளர்

நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு



செல்வி. துலாரி முஹாந்திரம்
உதவி முகாமையாளர்



திரு. கயன் லொக்குகமகே
உதவி முகாமையாளர்



திரு. ஏ.சி.டயஸ்
உத்தியோகத்தர்

பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்

நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு



செல்வி. ஹேன் கிரிஷாந்தி பர்னாந்து
வரவேற்பாளர் உடன் தொலைபேசி இயக்குநர்



திரு. எஸ். டி. தர்மசிறி



திரு. எல்.டபிள்யு.எல்.பியதிஸ்ஸ



திரு. சி.சி.நாகேந்திரன்



திரு. டபிள்யு. ஆரியரத்ன



திரு. பெத்தும் நிரோஷன



திரு. புத்திக பலபிட்டிய



திரு. சமித் பிரேமரத்ன



திரு. ரஜித்த வருண

மனித வளங்கள் பிரிவு



திருமதி. தனேஷா ராஜபுர
சிரேஷ்ட உதவி முகாமையாளர்

தகவல் தொழில்நுட்ப பிரிவு



திருமதி. ரசாங்கி திசாநாயக்க
உதவி முகாமையாளர்



திரு. ரந்திக்க சில்வா
உதவி முகாமையாளர்

புலனாய்வுகள் பிரிவு



திரு. ஜயநாத் காலங்க
உதவி முகாமையாளர்



திரு. பிரியந்த ஹேரத்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திருமதி. புத்தினி என். ஹேரத்
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. ரக்கித்த திசாநாயக்க
உதவி முகாமையாளர்



திரு. டபிள்யு.எம்.எஸ்.டுலேந்திர விஜேவர்தன
உதவி முகாமையாளர்



செல்வி. பி.ஜி.என்.ஹசானி பொன்சேகா
உதவி முகாமையாளர்

பணியாட்டொகுதி அங்கத்தவர்கள்

புலனாய்வுகள் பிரிவு



செல்வி. கலைவாணி ராஜகுமாரன்
உதவி முகாமையாளர்



திருமதி. பரமி ரணசிங்க
உதவி முகாமையாளர்



திருமதி. மனீஷா சேனரத்தாரச்சி
உதவி முகாமையாளர்

சட்டம் மற்றும் வலியுறுத்தல் பிரிவு



திருமதி. சி.எரந்தி வைத்தியசேகர
சிரேஷ்ட உதவி முகாமையாளர்

மேற்பார்வைப் பிரிவு



செல்வி. கௌஷல்யா குணவர்தன
உதவி முகாமையாளர்



செல்வி. பூர்ணி வீரசேகர
உதவி முகாமையாளர்



செல்வி. சமினா கருணாரத்ன
உதவி முகாமையாளர்



திரு. சச்சித்ர வருசுவிதான
உதவி முகாமையாளர்

கண்காணிப்புப் பிரிவு



திரு. லலிந்த தயாரத்ன
சிரேஷ்ட உதவி முகாமையாளர்



திரு. தசங்க வர்ணகுலசூரிய
உதவி முகாமையாளர்



செல்வி. ருச்சிகா சேனாரத்ன
உதவி முகாமையாளர்



செல்வி. டபிள்யு.ஏ.ஜே.கங்கா டி கொஸ்ட்டா
உதவி முகாமையாளர்



செல்வி. நிலான்ஜனா சிவாஜி
உதவி முகாமையாளர்

சமூகமளிக்காதோர் : திருமதி, எரங்க மந்திரிரத்ன - சிரேஷ்ட உதவிமுகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள், திரு. தனிஷ்க திலக்கரத்ன - உதவி முகாமையாளர், கூட்டாண்மை அலுவல்கள், செல்வி. கிரிஷ்டோபல் சில்வா - சிரேஷ்ட நிறைவேற்று செயலாளர், கூட்டாண்மை அலுவல்கள், திருமதி. கவீஷா கும்புக்கே - உதவி முகாமையாளர், பணிப்பாளர் தலைமை அதிபதியின் காரியாலயம், திருமதி. ராதா ஜி. பிரதீபா - உதவி முகாமையாளர், பணிப்பாளர் தலைமை அதிபதியின் காரியாலயம், திருமதி. சச்சின் வீரசூரிய - உதவி முகாமையாளர், வெளிவாரி உறவுகள், திருமதி. ஜுலி அலகக்கோன் - அந்தரங்க காரியதரிசி, வெளிவாரி உறவுகள், திருமதி. வை.டி. சந்தமாலி - சிரேஷ்ட உதவி முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், திருமதி. பிரீனிக்கா நிலக்ஷி பெரேரா - சிரேஷ்ட உதவி முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம், திருமதி. தனுஷி தல்பிட்ட - வரவேற்பாளர் உடன் தொலைபேசி இயக்குநர், திரு. ஆர்.கே. வசந்த சுனிமல் - முகாமையாளர், புலனாய்வுகள், திரு. ஜி.டி. கபில குமார - சிரேஷ்ட உதவி முகாமையாளர், புலனாய்வுகள், செல்வி. பிஷ்மா எலியதுர - உதவி முகாமையாளர், புலனாய்வுகள், திருமதி. லக்ஷ்மி அத்தபத்து - அந்தரங்க காரியதரிசி, புலனாய்வுகள், திருமதி, பி.எம்.நிரோஷிகா உதயாங்கனி - முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி, உதானி விக்கிரமரத்ன - உதவி முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி. குமாரி சிறிவர்தன - அந்தரங்க காரியதரிசி, சட்டம் மற்றும் வலியுறுத்தல், திருமதி. மஞ்சுளா சந்திரரத்ன - முகாமையாளர், மேற்பார்வை, திருமதி. நொமானி செனவிரத்ன - சிரேஷ்ட உதவி முகாமையாளர், மேற்பார்வை, திருமதி, சுதாரா வீரக்கொடி - சிரேஷ்ட உதவி முகாமையாளர், மேற்பார்வை, திருமதி. சுரேகா ஜயசேகர - உதவி முகாமையாளர், மேற்பார்வை

செயற்பாட்டு மீளாய்வு

பங்குச் சந்தை செயற்பாடுகளின் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல் மயமாக்கலை இயலுமையாக்குவதற்காக இபிபஆ மற்றும் கொபப ஓர் முற்போக்கான தேசிய முன்னெடுப்பினை தொடங்கியது மற்றும் ஏதேனும் தேசிய அவசரத்தின்போது ஏதேனும் தடையின்றி செயற்படுவதற்கு கொபப க்கு வசதியளித்தது.

முறைமைப்படுத்தல்

பிணையங்கள் சந்தை முறைமைப்படுத்தலானது சந்தைகள் நியாயமாகவும், ஒழுங்கானதாகவும் மற்றும் வெளிப்படையானதாகவும் காணப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. வணிகங்கள் பயனுடைய கிரயத்திலான மூலதனத்திற்கான அணுக்கம் மற்றும் முதலீட்டாளர்கள் செல்வத்தை உருவாக்கும் வாய்ப்புக்களைக் கொண்ட சிறந்து செயற்படும் பிணையங்கள் சந்தையினை பராமரிப்பதற்கு இபிபஆ, பல்வேறு நடைமுறைகளை ஈடுபடுத்துகின்றது.

உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

முறைமைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நிறுவனங்கள் இ.பி.ப.ஆ. இடமிருந்து, சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, ஓர் உரிமத்தினை அல்லது பதிவீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர்கள் / பங்கு வர்த்தகள் மற்றும் சந்தை இடையீட்டாளர்களது வாடிக்கையாளர்களுடன் வணிகத்தொடர்பு கொள்ளும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் நபர்களது தகுதி மற்றும் பொருத்தம் தொடர்பான சத்தியக்கடதாசிகளை இபிபஆ மீளாய்வு செய்கின்றது. இது முறைமைப்படுத்தப்பட்ட மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் அவர்களது வாடிக்கையாளர்களது அக்கறைகளை பாதுகாக்கும் விதமாக நடந்துகொள்வார்கள் மற்றும் சந்தையின் நம்பகத்தன்மையினை பாதுகாக்க உதவுவார்கள் என்ற முதலீட்டாளர் நம்பிக்கையினை உண்டுபண்ணும்.

அத்தகைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் மற்றும் பதிவீட்டுச் சான்றிதழ்கள் மீளாய்வாண்டில் பின்வருமாறு புதுப்பிக்கப்பட்டன. (உருவம் 01)

உருவம் 01: உரிமமளித்தல் மற்றும் பதிவீடு

முறைமைப்படுத்தப்படும் நிறுவனத்தின் வகை	31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறான உரிமமளிக்கப்பட்ட/ பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை
பங்குப் பரிவர்த்தனைகள்	01
பங்குத் தரகு கம்பனிகள்*	29
பங்கு வர்த்தக கம்பனிகள்	11
நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனிகள்	16
நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்	75
முதலீட்டு முகாமையாளர்கள்	24
எல்லைக் கடன் வழங்குநர்கள்	24
ஒப்புரவாளர்கள்	07
கடன் தரப்படுத்தல் முகவர்கள்	02
தீர்வக இல்லங்கள்	01

* மூன்று பங்குத்தரகு கம்பனிகள் வணிகச் செயற்பாடுகளில் மனமுவந்த செயல்முடக்கத்தின் கீழ் உள்ளன.

கொள்கை முன்னெடுப்புகள்

இபிபஆ அதன் ஆதிகக்கவரம்பினுள் உள்ள அனைத்து முறைமைப்படுத்தப்படுபவர்களை முறைமைப்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள சட்ட வரம்புறுகையினை மேம்படுத்துவதற்காக கொள்கை முன்னெடுப்புக்களை பொறுப்பேற்கின்றது.

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள்

2017 இல் வர்த்தமானியிடப்பட்ட பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலத்தின் ஏற்பாடுகளில் பல பங்காளிகள் தங்களது அக்கறைகளை தெரிவித்ததன் காரணமாக, இபிபஆ ஓர் மீளாய்வு செயல்முறையினை முன்னெடுத்ததுடன் பல ஏற்பாடுகள் திருத்தியமைப்பதற்காக இனங்காணப்பட்டன. குறித்த திருத்தங்கள் அமைச்சர்களது அவையினால் ஏப்ரல் 2019 இல் அங்கீகரிக்கப்பட்டதுடன் சட்டமூலமானது மாற்றங்களை ஒருங்கிணைப்பதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. எவ்வாறாயினும், பாராளுமன்றம் தள்ளிவைக்கப்பட்டதன் காரணமாக இந்த செயல்முறையானது மீள் முன்னெடுக்க வேண்டியதாயிற்று.

2020 ஜனவரியின் இறுதிப் பகுதியில் புதிய ஆணைக்குழுவின் நியமனத்தினைத் தொடர்ந்து வரைவு சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனமாக ஆராய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பயனுடைமையினை உறுதிப்படுத்துவதற்காக மேலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த வரைவானது 14 செப்டம்பர் 2020 இல் அமைச்சர்கள் அவைக்கு முன்னால் இடுவதற்காக நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வரைவானது மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களினால் நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சர்கள் அவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு 26 ஒக்டோபர் 2020 இல் இடம்பெற்ற அமைச்சரவையின் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டது. இதன்பின்னர், அமைச்சர்களது அவையானது சட்ட வரைஞரை ஓர் வரைவு சட்டமூலத்தினை தயாரிக்குமாறு பணிப்பதற்கு சம்மதத்தினை தெரிவித்தார்கள். இது இபிபஆ ஆல் முன்மொழியப்பட்ட திருத்தங்களை ஒருங்கிணைத்த புதிய சட்டமானது நடைமுறையிலுள்ள சட்டத்தினை மாற்றீடு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.



திருமதி. அயந்தி அபேவிக்கிரம
பணிப்பாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்



செல்வி. சர்மிளா பண்டித்தரத்ன
சிரேஷ்ட முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்

கொபப இன் பரஸ்பரமற்றமயமாக்கல்

இ.பி.ப.ஆ. பிரேரிக்கப்பட்டுள்ள பரஸ்பரமற்றமயமாக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பங்குகளது பகிர்வினைப் பற்றி கலந்துரையாடுவதற்காக கொ.ப.ப. மற்றும் பங்குத்தரகு நிறுவனங்களுடன் ஓர் தொடரான கூட்டங்களில் பங்கேற்றது. பகிரப்படும் பங்குகளை மூலதனச் சந்தை அபிவிருத்தி நிதியத்திற்கு 70 : 30 என்ற விகிதாசாரப்படி பகிர்ந்தளிப்பதற்காக பங்குத்தரகர்களுடன் ஒருமித்த கருத்தானது எட்டப்பட்டது.

முன்மொழியப்பட்ட மாற்றங்கள் அமைச்சர்களின் அவைக்கு முன்னால் வைக்கப்படவுள்ளன.

தகுதி மற்றும் பொருத்தத்திலான வழிகாட்டிகள்

இபிபஆ இன் முறைமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு நிதிச் சேவைகளை வழங்கும்போது வாடிக்கையாளர்களுடன் வணிகத்தொடர்புடைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் நபர்களின் தகுதி மற்றும் பொருத்தம் தொடர்பான வரைவு விதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் நியமங்களை இபிபஆ விருத்திசெய்தது.

கொழும்ப பங்குப் பரிவர்த்தனையின் முக்கிய கடமைகளது டிஜிட்டல் மயமாக்கல்

பங்குச் சந்தையின் முனைவிலிருந்து முனைவுவரையான செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்குவதனை இயலுமையாக்குவதற்காக இபிபஆ மற்றும் கொபப ஓர் முற்போக்கான தேசிய முன்னெடுப்பினை தொடங்கியதுடன் ஏதேனும் தேசிய அவசரத்தின்போது ஏதேனும் தடையின்றி கொபப செயற்படுவதற்காக வசதியளித்தது. இந்த முன்னெடுப்பானது பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் அனைத்து முக்கிய நடவடிக்கைகளையும டிஜிட்டல் மயமாக்கும் அரசாங்கத்தின் முன்னெடுப்புடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது. .

இபிபஆ இன் பணிப்புடன், வழிகாட்டலுடன் மற்றும் உடன்பாட்டுடன் கொபப மற்றும் அதன் முழுவதும் உடைமையான மவைதி ஆகியன சாத்தியமான மவைதி கணக்கு வைத்திருப்பவர்கள் ஓர் பங்குத் தரகரின் கிளை காரியாலயத்திற்கு விஜயம் மேற்கொள்ளாது மற்றும் ஓர் தாள் விண்ணப்பப் படிவத்தினை உடல்ரீதியாக பூர்த்தி செய்யாது மவைதி கணக்குகளை டிஜிட்டல் முறையில் திறப்பதனை அறிமுகப்படுத்தியது (டிஜிட்டல் மவைதி கணக்கு திறக்கும் வசதி): மற்றும் மவைதி விதிகள் தொடர்பாக அவசியமான அனைத்து திருத்தங்களுக்கும் வசதியளித்துள்ளது.

ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களம் மற்றும் இபிபஆ, கொபப மற்றும் மவைதி ஆகியவற்றினால் அவற்றிற்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

இபிபஆ, ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி, மற்றும் கொபப என்பன பின்வருவனவற்றிற்காக ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (புஒ)கைச்சாத்திட்டன. இது கொபப மற்றும் அதன் முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட மவைதி ஆகியன “தகவல் அமைப்புமுறைமை” ஊடாக ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் அனுப்பப்படும் தகவல்களை, தேசிய அடையான அட்டை வழங்கப்பட்டவர்கள் குறித்த டிஜிட்டல் மூலமான மவைதி கணக்குகளை திறத்தல் வசதியின் மூலம் மவைதி கணக்குகளை திறக்கவிரும்புபவர்களது தகவல்களது நம்பகத்தன்மையினை சரிபார்க்கும் நோக்கத்திற்காக பெற்றுக்கொள்வதற்காகும்.

இந்த புஒ இன் குறிக்கோள் என்னவெனில் கொபப மற்றும் மவைதி இன் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை ஆட்கள் பதிவுசெய்தல் திணைக்களத்தின் கணினி முனையம், கிடைக்கக்கூடிய தரவு ஆவண உருவங்கள், வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றை பயன்படுத்தவும், டிஜிட்டல் மவைதி கணக்கு திறத்தல் வசதியூடாக மவைதி கணக்கொன்றினை திறப்பதற்கு உத்தேசித்துள்ள ஒருவரது தேஅஅ தொடர்பான தகவல்களது நம்பகத்தன்மையினை சரிபார்ப்பதற்காக யாரேனும் நபரினால் சமர்ப்பிக்கப்பட்ட தேஅஅ தொடர்பான தரவு மற்றும் உருவங்களை பார்வையிடுவதற்கும் இயலுமையாக்குவதாகும்.

ஏனைய முன்னெடுப்புகள்

ஒப்பந்தப் பேரம்பேசல்கள்

இபிபஆ மற்றும் வெளிவாரி சேவை வழங்குனர்களிடையே மற்றும் அவர்களால் உள்நுழைந்த பல் ஒப்பந்தங்கள் / உடன்படிக்கைகளை இபிபஆ கூர்மதிப்பீடு செய்தது.

மேலாக, இபிபஆ நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின் (நிதுநதி) ஓர் அங்கமான விநியோகம் எதிர் கொடுப்பனவு வரம்புறுகையின் செயலாற்றலுக்கு வழிகாட்டுவதற்காக நிபுணத்துவத்திலான உலக வங்கியின் உடன்படிக்கை மற்றும் மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையின் செயலாக்கத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட ஓர் கொள்கை வரம்புறுகை என்பவற்றை மீளாய்வு செய்து அவதானிப்புகளை வழங்கியது.

முன்மொழியப்பட்ட குற்ற வருவாய் சட்டத்திற்கான இபிபஆ இன் பிரதிநிதித்துவம்

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா இனால் ஒருங்கிணைக்கப்பட்டு வசதியளிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட “குற்ற வருவாய் சட்டத்தில்” ஓர் வல்லுநராக பிரதிநிதித்துவம் செய்யுமாறு இபிபஆ வரவேற்கப்பட்டது.

செயற்பாட்டு மீளாய்வு

இலங்கையில் பட்டியலிடப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்வதற்கு இபிபஆ 83 உலகளாவிய, பிராந்திய, மற்றும் தேச நிதியங்களுக்கு அங்கீகாரம் அளித்ததுடன் 57 பெயர் மாற்றல்களையும் குறித்தது.

முறைமைப்படுத்தப்படுபவர்களுக்கு உரிமம் / பதிவீடு செல்லுபடிநிலைமையில் இபிபஆ ஆல் வழங்கப்பட்ட மறுப்பின்மைக் கடிதம்

உரிமம் / பதிவீடு செல்லுபடிநிலைமையின்போது முறைமைப்படுத்தப்படுபவர்களது அத்தியாவசிய வெளிநாட்டு பணியாட்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு வதிவிட வீசாக்களை வழங்குவதற்காக நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சிற்கு இபிபஆ அல் மறுப்பின்மைக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்கு சேவைகளை வழங்குவதற்காக வெளிநாட்டு பங்குபற்றுநர்களுக்கு வசதியளித்தலின் ஓர் அங்கமாக, நிதி அமைச்சிற்கு மறுப்பின்மைக் கடிதங்களை வழங்குகின்றது. இது உரிமங்கள் மற்றும் பதிவீடுகள் வழங்கப்பட்டதன் பின்னர் அவை செல்லுபடியாகும் காலங்கள் வரைக்கும் அவை முறைமைப்படுத்தப்படும் கடமைகளை செயலாற்றுவதற்கு முக்கியமானதென கருதப்படும் வெளிநாட்டு நபர்கள் சார்பில் வழங்கப்படுகின்றன.

உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்களிலான தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் வேண்டுதல்கள்

இமவ இன் சார்பில் போதிய கவனஞ் செயல்முறைக்கு இபிபஆ வசதியளித்தது. 2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பணிப்புரையின் பிரகாரம் (நிறைவேற்று கடமைகளை செயலாற்றும் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் தகமை மற்றும் பொருத்தம் மதிப்பீடு) உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளில் நிறைவேற்று கடமைகளை செயற்படுத்துவதற்காக நியமிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நபர்கள் அல்லது ஏற்கனவே பணிப்பாளர்களாக அல்லது உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களது பின்னணியினை பிரித்தாராய்வதன் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு வசதியளித்தது. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பிரிவு 21 (1) இன் பிரகாரம் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு அத்தகைய நபர்கள் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுவதிலிருந்து தடுக்கக்கூடிய இபிபஆ இன் முறைமைப்படுத்தல் வரம்புறுகையின் கீழ் ஏதேனும் அவதானிப்புகள் / பாதகமான கண்டுபிடிப்புகளை இமப இபிபஆ இடமிருந்து வேண்டியது.

அங்கீகாரங்கள்

தேச, பிராந்திய மற்றும் உலகளாவிய நிதியங்களுக்கான அங்கீகாரங்கள்

வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்புத் திட்டத்தின் பரிந்துரைக்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு இணங்கியொழுகுவதனைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் இபிபஆ 83 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் 57 பெயர் மாற்றங்களையும் குறித்துக்கொண்டது.

கொப இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பங்குத் தரகர் விதிகளின் மீளாய்வு

மீளாய்வாண்டில் பின்வரும் பட்டியலிடல் விதிகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் இபிபஆ சட்டத்தின் பிரிவு 24 இன் ஏற்பாடுகளுக்கமைய அங்கீகாரம் வழங்கப்பட்டது. ;

- ஆகக்குறைந்த பொது உரித்துடைமைத் தேவைப்பாட்டுடன் இணக்கப்பாடு காணாத மற்றும் இரண்டாம் பலகையிலுள்ள கம்பனிகளுக்கு ஓர் தடுப்பானாக வழக்கமான வருடாந்த உரிமமளித்தல் கட்டணத்தின் இரட்டிப்புத் தொகையினை அறவிடுவதற்கு வசதியளிக்கும் கொப இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 12 இற்காக கொப இனால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள்.
- ஒவ்வொரு பட்டியலிடப்பட்ட கம்பனி தொடர்பான ஆகக்குறைந்த பொது உரித்துடைமையுடன் இணங்குவதற்கு காலநீடிப்பிற்கான ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் ஒவ்வொன்று ஒவ்வொன்றாக மதிப்பீடு செய்து ஓர் நியாயமான அடிப்படையில் ஓர் விட்டுவிடுகை மூலமான நிவாரணத்தினை வழங்குமாறு இபிபஆ கொப இனை அறிவுறுத்தியது.
- பட்டியலிடல் விதிகளின் பிரிவு 5 இன் ஏற்பாடுகளுக்கமைய ஓர் தனித்தனியான அடிப்படையில் மேலதிக பிணையங்களை வழங்குதல் தொடர்பாக பட்டியலிடப்பட்ட கம்பனிகள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணுமாறு ஆணைக்குழுவானது கொப இனை அறிவுறுத்தியது.

பட்டியலிலிருந்து நீங்குதல்

- மீளாய்வாண்டில், த வைனான்ஸ் கம்பனி பிஎல்சி கொப இன் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இது இபிபஆ விதிகளின் விதிகள் 4 (2) மற்றும 4 (3) இன் ஏற்பாடுகளுக்கமைய கட்டாயமாக நீக்கப்பட்டது.
- மொரிசன் பிஎல்சி மற்றும் ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பிஎல்சி என்பன அவற்றின் பிணையங்களை இபிபஆ விதிகளின் விதி 5 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மனமுவந்து நீக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கொப இன் பட்டியலிடல் விதிகள் 5.4 (பி) இன் ஏற்பாடுகளுக்கமைய விட்டுவிடுகைகள்

தனிப்பட்ட இடுகைகளின் மூலம் பங்குகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செய்முறைப்படுத்துகின்றது. தற்போது வழங்கப்பட்டுள்ள பங்குகளில் இத்தகைய தனிப்பட்ட இடுகைகளின் ஊடாக வழங்கப்படும் பங்குகள் வழங்கலின் பின்னர் உடனடியாக 20%க்கு அதிகரிக்கும்போது இவ்விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 5.4 (பி) இலிருந்து ஒரு விண்ணப்பம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டது.

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் நிர்வாகம்

இந்த பொறுப்பேற்புக்களை நிர்வகிப்பதற்கு முன்னர் இ.பி.ப.ஆ. சுயாதீன ஆலோசகரது அறிக்கையின் உள்ளடக்கத்தினையும், மற்றும் பெறுமதியிடல் நுட்பங்கள், பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள் நியாயமானதா மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக உள்ளதா என்பதை

இனங்காண்பதற்காக கடைப்பிடிக்கப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள் அத்தகைய மதிப்பீட்டு மாதிரிகளில் பயன்படுத்தப்பட்ட அனுமானங்களையும் மீளாய்வு செய்தது. இது வெளிப்படுத்தல்களின் தெளிவு மற்றும் உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதற்காகும். 31 டிசம்பர் 2020 இல் பின்வரும் பொறுப்பேற்புகள் தூண்டப்பட்டன (உருவம் 02).

உருவம் 02: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்

கொடைமுனைபவர்	பொறுப்பேற்கப்படுபவர்	கொடைமுனைவின் தன்மை	நிலைமை
ஈடன் லங்கா ஹோட்டல் பிஎல்சி	செரன்டிப் ஹோட்டல்ஸ் பிஎல்சி	கட்டாயக் கொடைமுனை	நிலுவையில்
ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பனி லிமிட்டட்	எச்வீஏ வுட்ஸ் பிஎல்சி	மனமுவந்த கொடைமுனை	நிலுவையில்
லங்கா ரியலிட்டி இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி	ஒனாலி ஹோல்டிங்ஸ் பிஎல்சி	கட்டாய கொடைமுனை	நிலுவையில்

ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக கால நீடிப்பு

பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 7.13.3(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு அசாதாரணமான நிலைமாற்றல் சூழல்களின் நிமித்தம், விசேடமாக கோவிட்-19 தொற்றின் கீழ் ஆகக் குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடுகளுக்கு குறைவாகக் காணப்பட்ட பதினொரு பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு இணங்கியொழுகுவதற்காக கால அவகாச நீடிப்பினை வழங்குவதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு இ.பி.ப.ஆ. அதன் உடன்பாட்டினை வழங்கியது.

கொபப இன் அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தங்கள்

கூட்டங்களை ஒலி அல்லது ஒலி மற்றும் ஒளித் தொடர்பாடலின் மூலம் நடாத்துவதற்கான முறையிற்கு வசதியளிப்பதற்காக கொபப இன் அமைப்பு அகவிதிகளிலான மாற்றங்களுக்கு இபிபஆ அங்கீகாரம் அளித்து.

இபிபஆ கொபப இன் அமைப்பு அகவிதிகளுக்கான திருத்தத்தில் ஓர் புதிய உறுப்புரை 55 ஏ இனை உள்ளடக்குவதற்கு அங்கீகாரமளித்தது. இது உலகளாவிய ரீதியில் ஏனைய பரிமாற்றகங்களினால் மேற்கொள்ளப்படும் வணிக செயற்பாடுகளுக்கு ஒத்ததாக அதன் உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை விரிவாக்குவதற்காக தொலைமுறைக் கலந்துரையாடலூடாக கூட்டங்களை வைத்தல் முறை தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கும்.

இந்த சேவையானது கொபப இனால் வழங்கப்படும் கூட்டாண்மை சேவைகளின் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் தொற்றுச் சூழல் போன்ற தேசிய / உலகளாவிய அவசரநிலையின்போது பரிவர்த்தனையின் தடையற்ற செயற்பாட்டினை இயலுமையாக்கும்.

ஒரு பங்குத் தரகு நிறுவனத்தின் வணிக செயற்பாடுகளை மனமுவந்து செயல்முடக்கம் செய்தல்

சந்தையில் கோவிட்-19 தொற்றினால் ஏற்பட்ட தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு ஓர் தரகுக் கம்பனி அதன் வணிகச் செயற்பாட்டினை மீள்செயல்படுத்துவதற்காக மேலதிகமாக மூன்று மாத கால நீடிப்பு வழங்கப்பட்டது. இதற்கமைய, குறித்த கம்பனி அதன் வணிகத்தினை மீள்செயல்படுத்துவதற்கு 25 மே 2021 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

பங்குத் தரகர் விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டில் பங்குத்தரகு விதிகளின் பல ஏற்பாடுகளை திருத்தியமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இவை தரகர் -வாடிக்கையாளர் இடையேயான உறவினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் நடைமுறையிலுள்ள ஓர் முதலீட்டு ஆலோசகர் தொழிலினை மாற்றினால் முதலீட்டு ஆலோசகரது மாற்றத்திற்கு வசதியளிப்பதற்காகும். பங்குத்தரகர் விதி 3.9 ஆனது இணக்கப்பாட்டு உத்தியோகத்தரின் பங்கினை மேம்படுத்துவதற்காக திருத்தியமைக்கப்பட்டது. விதி 9 ஆனது தகவல்கள் வழங்கலினை மேம்படுத்துவதற்காகவும் கொபப இன் பரிசீலனைகள் மற்றும் புலனாய்வுகளை உரிய காலத்தில் பயனுறுதிமிக்க விதத்தில் மேற்கொள்வதற்காக திருத்தியமைக்கப்பட்டது.

கொபப இன் பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர்களின் தெரிவு

இபிபஆ சட்டத்தின் அட்டவணை பகுதி 1 (ஜி) இன் ஏற்பாடுகளுக்கமைய மற்றும் கொபப இன் அமைப்பு அகவிதிகளின் உறுப்புரை 50 இன் பிரகாரம் கொபப இன் பணிப்பாளர் சபைக்கு இரண்டு பணிப்பாளர்களை மீள்-தெரிவுசெய்வதற்கு இபிபஆ அங்கீகாரமளித்தது.

இலங்கை ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்களுக்கான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கோவை (இல-ஆமநபொ)

வருமானம் உருவாக்கும் ஆதனவியலில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான ஓர் மாற்றீட்டு முதலீட்டு தெரிவாக "நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கோவை - இலங்கை ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்கள்" (இல-ஆமநபொ) தொடர்பான விதிகளை இபிபஆ வழங்கியது. இந்த புதிய கருவியானது பொதுமக்கள் வளர்ச்சியடையும் ஆதனத்துறையினை அணுகுவதற்கு இயலுமையாக்குகின்றது. இல்லாவிடின், ஆதனத்தின் அளவுக்கதிகமான விலைகளை இதில் முதலீடு செய்வதனை கட்டுப்படுத்துகின்றது.

ஓர் ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது REIT என்பது ஓர் கூட்டு முதலீட்டு வாகனமாகச் செயற்படும் ஓர் உபயிரிவான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளாகும். REIT முதலீட்டாளர்களிடமிருந்து பணத்தை திரட்டி அத்தகைய பணமானது பின்வரும் ஆதனச் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். வதிவிட மற்றும் வணிக ஆதனம், சில்லறை வர்த்தக அல்லது கைத்தொழில் ஆதனங்கள், உட்கட்டமைப்பு அல்லது ஏனைய ஆதனத்துறை தொடர்பான சொத்துக்களில் முதலீடு செய்யலாம். REIT இன் முதலீட்டாளர்கள் அத்தகைய ஆதனங்களின் வருமானம் மற்றும் மூலதன பெறுமதியேற்றம் ஆகியவற்றிலிருந்து நன்மையடையலாம்.

REIT ஆசிய பிராந்தியம் உள்ளடங்கலான ஏனைய பல நாடுகளில் ஓர் பிரபல்யமான மாற்றீட்டு முதலீட்டுத் தெரிவாகும் என்பதுடன் பல தசாப்தங்களாக நடைமுறையிலுள்ளது. இலங்கை-REIT ஆனது கொபப இல் பட்டியலிடப்பட்ட REIT ஆக மாத்திரமே வசதியளிக்கப்பட்டுள்ளதுடன் இது இபிபஆ ஆல் வழங்கப்படும் ஓர் உரிமத்தினூடாகும்.

SL - REIT க்கான நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி கோவை தொடர்பான இந்த விதிகள் உருவாக்கப்பட்டு இபிபஆ சட்டத்தின் பிரிவு 53 இன் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானியிடப்பட்டது.

செயற்பாட்டு மீளாய்வு

இபிபஆ சட்டத்தின் பிரிவு 28 ஏ இன் கீழான அங்கீகாரங்கள்

உரிமமளிக்கப்பட்ட ஓர் பரிமாற்றகத்தில் ஏதேனும் ஒரு பொதுக் கம்பனி பட்டியலிடுவதற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின், கடைசியாக ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் ஏதேனும் அத்தகைய கம்பனியின் பங்குகளையோ அல்லது பங்காக மாற்றக்கூடிய ஏதேனும் பிணையங்களையோ ஓர் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடலாகாது. அத்தகைய பட்டியலிடலுக்கு முன்னர் ஆணைக்குழுவிடமிருந்து அதற்கான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வருடத்தில் கிரேன்ஸ் என் கிரீன் லிமிட்டட்டின் விண்ணப்பமானது மதிப்பிடப்பட்டது. இவ்வாண்டில், இவோக் இன்டர்நேஷனல் லிமிட்டட் மற்றும் கிரிஸ்வேர்ல்ட் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இபிபஆ சட்டத்தின் பிரிவு 29 ஏ இன் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்வரும் நிறுவனங்களிற்கு ஆணைக்குழுவினது அங்கீகாரம் வழங்கப்பட்டன. (உருவம் 03)

உருவம் 03 : இபிபஆ சட்டத்தின் பிரிவு 29 ஏ இன் கீழான அங்கீகாரங்கள்

வழங்குநரின் பெயர்	பிணையத்தின் வகை	அங்கீகரிக்கப்பட்ட தொகை	காலம்
பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் பிஎல்சி	பாசல் III இணக்கப்பாட்டு அடுக்கு 2 மூலதனம், பட்டியலிடப்படா, பிணைசாரா, தாழ்நிலை, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள் வாழுமையற்ற மாற்ற வாசகத்துடன்	ரூ. 1250 மில்லியன்	ஐந்து வருடங்கள்
இலங்கை வங்கி பிஎல்சி	பாசல் III இணக்கப்பாட்டு, பட்டியலிடப்படா, பிணைசாரா, தாழ்நிலை, நிரந்தர, மேலதிக அடுக்கு 1 மூலதன முறிகள்	ரூ. 5 பில்லியன்	ஐந்து வருடங்கள்
டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி	சிரேஷ்ட, பட்டியலிடப்படா, தரப்படுத்தப்பட்ட, பிணைசாரா, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள்	ரூ. 5 பில்லியன்	ஐந்து வருடங்கள்
அமானா டக்காவுல் பிஎல்சி	தரப்படுத்தப்படா, பட்டிலிடப்படா, பிணைசாரா, மாற்றத்தக்க, மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள்	ரூ. 300 மில்லியன்	ஐந்து வருடங்கள்
ஜனசக்தி பிஎல்சி	சிரேஷ்ட, பட்டிலிடப்படா, பிணைசாரா, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள்	ரூ. 2 பில்லியன்	மூன்று வருடங்கள்
இலங்கை வங்கி பிஎல்சி	பாசல் III இணக்கப்பாட்டு, தரப்படுத்தப்பட்ட, பட்டியலிடப்படா, பிணைசாரா, தாழ்நிலை, நிரந்தர, மேலதிக அடுக்கு 1 (AT1) மூலதன முறிகள்	ரூ. 10 பில்லியன்	ஐந்து வருடங்கள்
ஜனசக்தி பிஎல்சி	சிரேஷ்ட, பட்டியலிடப்படா, பிணைசாரா, மீட்கத்தகு தொகுதிக்கடன்கள்	ரூ. 1 பில்லியன்	வகை A - இரண்டு வருடங்கள் வகை B – மூன்று வருடங்கள் தொடர்புடைய நிறுவனம் 4 டிசம்பர் 2020 முதல் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதன் நிமித்தம் கம்பனியானது இபிபஆ இடமிருந்து அங்கீகாரத்திற்கான வேண்டுதலை வாபஸ் பெற்றது.

கொபப இந் வலியுறுத்தல் விதிகளின் ஒத்திப்போடல்

இபிபஆ இவ்வருடத்தில் கொபப இல் பிணையங்களின் வர்த்தகத்தினை இடைநிறுத்துவதிலிருந்து ஒத்திவைத்தல் தொடர்பான ஒரு விடயத்தினை பெற்று மீளாய்வு செய்தது. இந்த ஒத்திவைப்பானது கொபப இன் பட்டியலிடல் விதியின் பிரிவு 7.5 (டி)(ii) தொடர்பாக மல்டி வைனான்ஸ் பிஎல்சி தொடர்பானதாகும். .

தளத்திற்கப்பாலான பங்கு கொடுக்கல் வாங்கல்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 28 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய “உரிமமளிக்கப்பட்ட ஓர் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக செயல்முறைக்கு இணங்கியொழுகினாலன்றி, ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி, அத்தகைய பிணையங்களை கொள்வனவு, விற்பனை, கொடை அல்லது இல்லையெனில் வர்த்தகம் செய்வதற்கு இயலாது.”

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. இன் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட 590 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 85 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், ஒற்றைக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்குகளுக்கு, கூட்டுக் கணக்கிலிருந்து கூட்டுக் கணக்குகளுக்கு, கூட்டுக் கணக்கிலிருந்து ஒற்றைக் கணக்குகளுக்கு, நிதியளித்தல் வசதிகள், தானம் (விசேட), காப்பான் / நம்பிக்கைப் பொறுப்பாளரில் மாற்றங்கள், மனமுவந்த கொடைமுனைவுகள், கட்டாயக் கொடைமுனைவுகள், காப்பானிலிருந்து வங்கிக்கு, காப்பானிலிருந்து தரகர் கணக்கிற்கு, இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு பணிப்புரைகள் 15, தனிநபரிடமிருந்து உலகளாவிய காப்பானுக்கு சொத்துக்களது மாற்றல் மற்றும் இரண்டு கணக்குகளுக்கிடையேயான மாற்றல்கள் ஆகியவற்றிற்கு வசதியளிப்பதற்காக அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

விட்டுவிடல்கள் மற்றும் மீள்கட்டமைப்பு தொடர்பான விடயங்கள்

இவோக் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டட்

பட்டியலிடல் விதிகளில் காணப்படும் கட்டுப்பாடு தொடர்பாக இவோக் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டட்டுக்கு கொபப ஓர் விட்டுவிடுகையினை வழங்குவதற்கு முன்மொழிந்தது. இது ஆரம்ப

பட்டியலிடல் விண்ணப்பத் திகதிக்கு பதினெட்டு (18) மாதங்களுக்கு முன்னர் அதற்குக் குறைவான காலப்பகுதியில் பங்குகளை வைத்திருந்த பங்குதாரர்களது பங்குகளை (ஆரம்ப பொது வழங்கலூடாக) விற்றுவிடுவதற்கு வசதியளிப்பதற்காகும். விபரங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் இபிபஆ இதற்கு வசதியளித்தது.

எல்.ஓ.எல்.சி. குழுமம்

வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவருதல் உள்ளடங்கலாக கூட்டாண்மை குறிக்கோள்களை சந்திப்பதற்காக எல்.ஓ.எல்.சி. ஹோல்டிங்ஸ் பிஎல்சி இனால் மீள்கட்டமைப்பு விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டது. விபரங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் இபிபஆ இதற்கு வசதியளித்தது.

இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபையினை பட்டியலிடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக கொபப பட்டியலிடல் விதிகளிலிருந்து முன்விவரணக்கோவையில் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு ஓர் விட்டுவிடுகையினை கோரியது. 12 மாதங்களுக்கு விஞ்சாத இற்றைப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், பட்டியலிடல் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு விஞ்சாத இற்றைப்படுத்தப்பட்ட இடைக்கால நிதிக் கூற்றுக்கள் மற்றும் விண்ணப்பத் திகதிக்கு முன்னரான ஐந்து வருட காலங்களுக்கான சுருக்கமான இலாபம் மற்றும் நட்டக் கணக்கு மற்றும் ஐந்தொகை என்பனவாகும்.

மேலும். கொபப வேதனக் குழு மற்றும் கணக்காய்வு குழு தொடர்பான கூட்டாண்மை ஆளுகை தேவைப்பாடுகளை நெகிழ்ச்சிப்படுத்தல் தொடர்பாக இபிபஆ இன் உள்ளீட்டினை வேண்டியது. விபரங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் இபிபஆ அதற்கு வசதியளித்தது.

மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

இபிபஆ நியாயமான, ஒழுங்கான, செயற்திறனான மற்றும் வெளிப்படையாக சந்தைகளின் செயற்பாட்டிற்கு முதலீட்டாளர்களுக்கு உரிய நேரத்தில் துல்லியமான மற்றும் பொருத்தமான தகவல்களை வழங்குவதூடாக துணைபுரிகின்றது. தகவல் சமச்சீரின்மையினை குறைப்பதற்காக, பட்டியலிடப்பட்ட சந்தைக்கு பரப்புவதற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள சந்தை வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்கின்றது. சந்தை இடையீட்டாளர்களின் மேற்பார்வையானது பின்வருவனவற்றை உள்ளடக்கும். வாடிக்கையாளர்களது சொத்துக்களை கடனிறுக்க வகையின்மையிலிருந்து பாதுகாத்தல், தவறுதல்கள் மற்றும் சந்தையின் திடீர் இடையூறுகளுக்கு எதிராக பாதுகாத்தல், மற்றும் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்கள் தங்களது வாடிக்கையாளர்களுடனான வணிகத்தொடர்பில் நியாயமாகவும் அக்கறையாகவும் செயற்படுவதனை உறுதிப்படுத்தல் என்பனவாகும். முறைமைப்படுத்தலானது, உரிமமளித்தல் நியமங்கள், விவேகமான நியமங்கள், வணிக நடத்தை விதிகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவ நியமங்கள் என்பவற்றை குறிப்பிடுகின்றது.



கலாநிதி. ஹர்சன பீரிஸ் சூரியபெரும
பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்



செல்வி. மனூரி வீரசிங்க
உதவிப் பணிப்பாளர் கூட்டாண்மை அலுவல்கள்

பட்டியலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் அவற்றின் பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து இணங்கியொழுகாத விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறியப்படுத்துகின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பதிலளிப்பானது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் தகவல் பரப்புதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநிறுத்துவதற்காகவும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கியமான தகவல்களை உடனடியாக பரப்புதல் வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படுகின்றது

வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதில் இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்தியது:

- கொபப இன் பட்டியலிடல் விதிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- நிதியியல் சிறப்பம்சங்கள்
- தலைவரது அறிக்கை
- பணிப்பாளர்களது அறிக்கை
- சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்
- சபை உப குழுக்களிலான அறிக்கைகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைய வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிப்பதில் கம்பனிகளிடையே அவர்களில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வு மட்டத்தினை மேம்படுத்துவதற்கு இச்செயல்முறையானது தொடர்ந்தும் பங்களிப்பு செய்யும்.

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 108 பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்களில் மீளாய்வினை நடாத்தி இணங்கியொழுகுதலை மேம்படுத்துமாறும் வெளிப்படுத்தல்களை செழுமைப்படுத்துமாறும் 81 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன

இதற்கும் மேலாக, கடன் பிணையங்களுக்கான 07 முன்விவரணக்கோவைகளை மீளாய்வு செய்து முடிவுறுத்தப்பட்டதுடன் 01 உரித்துவ முன்விவரணக்கோவையும் மீளாய்வு செய்யப்பட்டது.

இபிபஆ நடைமுறையிலுள்ள பங்குதாரர்களிடமிருந்து மேலதிக நிதியினை திரட்டுவதற்காக விண்ணப்பித்த 12 கம்பனிகளின் பங்குதாரர் சுற்றறிக்கைகளை இபிபஆ மீளாய்வு செய்ததடன் வெளிப்படுத்தல்களை மேம்படுத்துமாறு பின்னூட்டம் வழங்கப்பட்டது.

பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கையின் மீளாய்வுகளைத் தொடர்ந்து அசாதாரணமான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் இணக்கப்பாடின்மை தொடர்பாக 14 விடயங்கள் மேலதிக விசாரணைக்காக இனங்காணப்பட்டன.

பட்டியலிடப்பட்ட பொது கம்பனிகளது வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன (உருவம்:04)

செயற்பாட்டு மீளாய்வு

உருவம்: 04: பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது வெளிப்படுத்தல்கள் மற்றும் கூட்டாண்மை அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் நடவடிக்கைகள்

வெளிப்படுத்தல்கள் / கூட்டாண்மை அலுவல்கள்	நேர்வுகளின் எண்ணிக்கை / பட்டியலிடப்பட்ட கம்பனிகள்
விளக்கம் கோரப்பட்டுள்ளது* (சம்பந்தப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் தொடர்பாக விடயங்களை ஏற்புடையதாக்குவதற்கு)	103

** இவ்வருடத்தில் இபிஆ பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் சந்தை அறிவித்தல்களூடாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மீளாய்வு செய்து 103 குறிப்பீடுகள் தொடர்பாக கம்பனியிடமிருந்து அல்லது கொ.ப.ப. இடமிருந்து தெளிவுறுத்தல்களை வேண்டியது. அத்தகைய தெளிவுறுத்தல்கள் கம்பனி இரண்டாந்தரப் பட்டியலில் இருக்கும்போது அதன் பணிப்பாளர்களது வியாபாரம் தொடர்பாக (02), பணிப்பாளர்களது வியாபாரம் - தாமதமான வெளிப்படுத்தல்கள் (35), பணிப்பாளர்களது வியாபாரம் - இருட்டடிப்பு காலத்தின்போதான வியாபாரம் (பவி8.6) (14), பணிப்பாளர்களிலான மாற்றங்கள் (41), தொடர்புடைய நபர்களது கொடுக்கல் வாங்கல்கள் (03) மற்றும் ஏனைய கூட்டாண்மை வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் (08).

ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

பின்வரும் விடயங்கள், அங்கீகாரம், அளவீடு மற்றும் வெளிப்படுத்தல்கள் பொருத்தமான நியமங்களுக்கு இணங்க காணப்படுகின்றதா என்பதில் விளக்கத்தினைப் பெறுவதற்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது (உருவம்:05)

உருவம் 05: ஏனைய முறைமைப்படுத்துபவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

முறைமைப்படுத்துபவர்	விடயங்களது எண்ணிக்கை	விடயத்தின் விபரம்
இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை (இகநிகச)	03	ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி: பதிவுசெய்யப்படாத பங்குகள் தொடர்பாக உரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலான தாக்கத்தின் மீளாய்வு
		மகாவலி கொக்கனட் பிளான்டேஷன்ஸ் லிமிட்டட் பட்டியலிடப்படா கம்பனிகளின் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு அறிக்கையில் முக்கிய கணக்காய்வு விடயத் தகவல்களை வழங்குவதற்கான தேவை உள்ளதா என்ற விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக.
		காப்புறுதிக் கம்பனிகள்: LKAS 07 - காசுப் பாய்ச்சல்கள் நோக்கத்திற்காக ஓர் காப்புறுதிக் கம்பனி ஓர் "நிதி நிறுவனமாக" கருதப்படலாமா மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் "நிதி நிறுவனமாக" கருதப்படாவிட்டால், அந்த கம்பனிகள் முதலீடுகள் தொடர்பான காசுப்பாய்ச்சல்களை நிகரீடு செய்து அவற்றை ஓர் நிகர அடிப்படையில் அறிக்கையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பதில் விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக.

> பங்குத்தரகு நிறுவனங்களின் மேற்பார்வைக்கான அணுகுமுறையானது ஓர் இடர்நேர்கை மதிப்பீட்டு வரம்புறுகை அடிப்படையிலானதாகும், இது கம்பனிகளின் சார்புடைய இடர்நேர்கை தோற்றுருவங்களை மதிப்பிடுகின்றது.

உரிமமளிக்கப்பட்ட / பதிவீட செய்யப்பட்ட நிறுவனங்களின் மேற்பார்வை

பங்குத் தரகு நிறுவனங்கள்

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தில் (திருத்தியமைக்கப்பட்டவாறு), மற்றும் இதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு இ.பி.ப.ஆ. க்கு பங்குத் தரகு நிறுவனங்களுக்கு உரிமமளித்தல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்பார்வையின் நோக்கம் என்னவெனில் பங்குத் தரகு நிறுவனங்களின் நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இயலுமை என்பவற்றை உறுதிசெய்வதனூடாக மூலதனச் சந்தையில் முதலீட்டாளார் பாதுகாப்பினை பலப்படுத்துவதுடன் மூலதனச் சந்தையில் முதலீட்டாளர் நம்பகத்தன்மையினையும் வளர்ப்பதுமாகும்.

பங்குத்தரகு நிறுவனங்களின் மேற்பார்வைக்கான அணுகுமுறையானது ஓர் இடர்நேர்கை மதிப்பீட்டு வரம்புறுகை அடிப்படையிலானதாகும். இங்கு ஒவ்வொரு பங்குத்தரகு நிறுவனம் தொடர்பாகவும் இடர்நேர்கை நிகழக்கூடிய சாத்தியப்பாடு மற்றும் அதன் தாக்கம் ஆகிய இரண்டினையும் கவனத்திலெடுத்து அவற்றிற்கான இடர்நேர்கை தோற்றுருவமானது மதிப்பிடப்படுகின்றது. இங்கு பங்குத்தரகர்கள் சந்திக்கும் இடர்நேர்கைகள் விவேகம், திரவத்தன்மை, எதிர்தரத்தவர், நிதியியல், கடன், செயற்பாடு, நிலை மற்றும் சட்ட இடர்நேர்கைகள் என இனங்காணப்படலாம்.

தளத்திற்கப்பாலான பரிசீலனைகள் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தரகுக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள், சட்டமுறையான அறிக்கைகள் மற்றும் இலத்திரணியல் கோப்பீட்டு முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்படும் அறிக்கைகள் மற்றும் ஏதேனும் ஏனைய அறிக்கைகள் என்பன மீளாய்வு செய்வதளையும் பகுப்பாய்வு செய்வதனையும் உள்ளடக்குகின்றது. தளத்திற்கப்பாலான மீளாய்வுகளில் அவதானிக்கப்பட்ட ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் இணக்கப்பாடின்மைகள் திருத்தத்திற்காக கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்றின் பரவல் காணப்பட்டபோதிலும், நிதியியல் சமர்ப்பிப்புக்கள் மற்றும் ஏனைய அறிக்கைப்பட்டிகளில் அதிக கடுமையான நுண்ணாய்வினூடாக பயனுறுதிமிக்க வலியுறுத்தலை அடைவது நோக்கி நாம் எமது கடப்பாட்டினை காட்சிப்படுத்தியதுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக செயற்திறனான பின்தொடரலையும் மேற்கொண்டோம்.

தொற்றின் காரணமாக பங்குத் தரகுத் துறையினால் எதிர்கொண்ட சிரமங்களைக் கருத்திற்கொண்டு மீளாய்வாண்டில் உரிமமளிக்கப்பட்ட/பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சில நிவாரண நடைமுறைகள் வழங்கப்பட்டன. அத்தகைய நடைமுறைகள் நிதியியல் சமர்ப்பிப்புக்களுக்கான கால நீடிப்பு மற்றும் அத்தகைய நிறுவனங்கள் வேண்டும் பட்சத்தில் 2020 ஆண்டிற்கான இபிபஆ இன் உரிமமளித்தல் / பதிவீட்டு கட்டணங்களை ஒரு வருடத்திற்கு ஒத்திப்போடுதல் என்பவற்றை உள்ளடக்கும். .

மீளாய்வாண்டின்போது, கொபப பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒரு பங்குத் தரகு நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகள் இரண்டு வருட காலத்திற்கு செயலலிழப்பு செய்யப்பட்டது. கொபப இன் பணிப்பாளர்கள் சபையானது கொபப இன் பங்குத்தரகர் விதிகளின் பிரிவு 12 இற்கு இணங்க குறித்த நிறுவனம் செயலலிழப்பு செயல்முறையினை உரியவாறு பூர்த்திசெய்துள்ளது என இபிபஆ க்கு பரிந்துரை செய்ததன் பின்னர் குறித்த பங்குத்தரகரது வணிகச் செயற்பாடுகள் இபிபஆ இன் இறுதி அங்கீகாரத்தின் பின்னர் செயலலிழப்பு செய்யப்பட்டது.

மீளாய்வாண்டின்போது பங்குத்தரகுத் துறையின் மொத்த புரள்வானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 159% அல் அதிகரித்தது. துறையின் இலாபகரத்தன்மையானது 4821% மீளெழுச்சியடைந்து 2019 இல் காணப்பட்ட ரூபா 37 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடும்போது 2020 இல் வரிக்கு பிந்திய தேறிய இலாபமாக ரூபா 1,751 மில்லியனை பதிவுசெய்தது. இது பெரும்பாலும் இவ்வருடத்தில் இமவ இனால் வங்கி வட்டி வீதத்தினை குறைத்ததன் காரணமாக, பாரிய எண்ணிக்கையிலான முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை முதலீட்டுத் தெரிவாக வந்தமை மற்றும் மூலதனச் சந்தையினை விருத்திசெய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முன்னேற்றச் செயற்பாடுகள் என்பவற்றின் காரணத்திலாகும். மேலதிகமாக, இபிபஆ இன் தலைவரினால் நியமிக்கப்பட்ட இபிபஆ மற்றும் கொபப கூட்டுக்குழுவினால் வழிநடத்தப்பட்ட கொபப இன் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல் மயமாக்கலும் துறையின் புரள்வு மற்றும் இலாபகரத்தன்மையில் இந்த வளர்ச்சிக்கு பங்களித்தது. பங்குத்தரகுத் துறையின் செயற்திறனின் ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன (உருவம் 06)

உவரும்: 06: பங்குத் தரகுத் துறையின் சிறப்பம்சங்கள்

	2020 (ரூ. '000)	2019 (ரூ. '000)	மாற்றம் %
புரள்வு	4,303,668	1,663,045	158.8
தேறிய தரகு	3,929,094	1,440,766	172.7
ஏனைய வருமானம்	851,656	707,329	20.4
செயற்பாட்டு இலாபம் /நட்டம்	2,113,479	40,483	5120.7
வரிக்கு முந்திய தேறிய இலாபம் / நட்டம்	1,905,233	(79,453)	2497.9
வரிக்கு பிந்திய தேறிய இலாபம் / நட்டம்	1,751,330	(37,096)	4821.1
மொத்த சொத்துக்கள்*	19,893,383	9,726,649	104.5
மொத்த பொறுப்புக்கள் *	12,943,874	4,571,124	183.2
பங்குதாரர் நிதியங்கள்*	6,949,509	5,155,525	34.8

*டிசம்பர் 31 இல் உள்ளவாறானது

மூலம்: பங்குத்தரகு நிறுவனங்களினால் இபிபஆ க்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்கள்

சந்தை இடையீட்டாளர்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இ.பி.ப.ஆ. க்கு சந்தை இடையீட்டாளர்களாக கடமையாற்றுவதற்கு எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் தீர்வக இல்லம் ஆகிய ஐந்து வகையான சந்தை இடையீட்டாளர்களுக்கு இ.பி.ப.ஆ. பதிவீடுகளை வழங்குவதற்கும் முறைமைப்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்களிப்பானது மூலதனச் சந்தை இடையீட்டாளர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றை உள்ளடக்கும். இது அனைத்து பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களும் நிதியியல் ரீதியாக ஸ்திரமாக காணப்படுதல், தொழிற்பாட்டு ரீதியாக சாத்தியமாகக் காணப்படுதல், மற்றும் போதுமான உள்வாரி கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டுள்ளமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காகும்.

சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான இடர்நோக்கைகளை இனங்காணுதல், கண்காணித்தல், குறைத்தல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பவற்றுக்காக ஓர் செயற்திறனான தளத்திலான மற்றும் தளத்திற்கு அப்பாலான மேற்பார்வைகளில் ஓர் பயனுறுதிமிக்க மற்றும் திடமான வரம்புறுகையானது கடைப்பிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கோவிட்-19 தொற்றின் ஆரம்பம் மற்றும் அதன் விளைவாக நாட்டில் அமுல்படுத்தப்பட்ட முடக்கல்களுடன், சந்தை இடையீட்டாளர்களுக்கு பொருத்தமான குறிப்பிட்ட நியமங்களுடனான இணக்கப்பாடானது கடுமையான தளத்திற்கப்பாலான மேற்பார்வையூடாக மதிப்பீடு செய்யப்பட்டது.

மீளாய்வாண்டில் பங்குத் தரகுத் துறையின் மொத்த புரள்வானது 2109 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 159% ஆல் அதிகரித்தது.

செயற்பாட்டு மீளாய்வு

கோவிட்-19 தொற்றின் ஆரம்பத் தொடக்கத்தில் சந்தை வீழ்ச்சியின் காரணமாக முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தினை கருத்திற்கொண்டு இபிபஆ பதிவுசெய்யப்பட்ட எல்லைக்கடன் வழங்குனர்களது வாடிக்கையாளர்களுக்கு வட்டி மற்றும் வழங்கப்பட்ட எல்லைக்கடன்களின் கொடுப்பனவினை நீட்டி ஓர் கடன் காலந்தாழ்த்தித் தீர்க்கும் வசதியூடாக நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்பட்டன. இதன் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட எல்லைக்கடன் வழங்குனர்கள் இமவ இனால் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களிலிருந்து பெறப்படும் நலன்களை அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்குமாறு பணிக்கப்பட்டன. மேலும், 30 ஜூன் 2020 வரை வழங்கப்பட்ட கடனை மீட்பதிலும் அதில் வட்டி அறவிடுவதிலிருந்தும் தவிர்க்குமாறு பணிக்கப்பட்டார்கள்.

2020 ஆம் ஆண்டில், இரண்டு புதிய முதலீட்டு முகாமையாளர் பதிவீடுகள் வழங்கப்பட்டதுடன் இரண்டு எல்லைக் கடன் வழங்குனர்கள் தங்களது செயற்பாடுகளை தொடர்வதற்கு விரும்பாததனால் அவர்களது பதிவீடுகளை மனமுவந்து ஒப்படைத்தார்கள். (உருவம்: 07)

உருவம்: 07: சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் சிறப்பம்சங்கள் (ரூ.மில்லியன்)

வகை	மொத்த வருவாய்	வரிக்கு முந்திய தேறிய இலாபம்	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புக்கள்
எல்லைக்கடன் வழங்குனர்	137,507	41,628	2,133,811	1,882,494
முதலீட்டு முகாமையாளர்	1,733	322	10,893	5,095
ஒப்புரவாளர்	649	570	2,571	272
கடன் தரப்படுத்தல் முகவர்கள்	181	75	325	83
பன்நோக்கு நிறுவனங்கள்*	212,884	105,436	7,633,634	7,008,833
தீர்வக இல்லம்	236	137	853	120

*இபிபஆ இன் பதிவீட்டின் பல்வேறு வகைகளில் செயலாற்றும் நிறுவனங்கள்

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை

கோவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து காணப்பட்ட முன்னெப்போதுமில்லாத சூழலைக் கருத்திற்கொண்டு இபிபஆ நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் (நஅபொமுக) தளத்திற்கப்பாலான மேற்பார்வையினை பலப்படுத்தியது. இவ்வருடத்தில் தளத்திற்கப்பாலான மேற்பார்வையில் நாம் இடர்நேர்கை அடிப்படையிலான அணுகுமுறையினை நடாத்தினோம். இவை விவேகம், செயற்பாடு மற்றும் முகாமைத்துவக் கொள்கைகளிலான பிரதான இடர்நேர்கைகளை உள்ளடக்குகின்றது. இது அவற்றின் நிதியியல் பலம் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் விதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு என்பவற்றை மதிப்பிடுவதற்காகும்.

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளிலான மேற்கூறப்பட்ட தளத்திற்கப்பாலான மேற்பார்வையானது நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளது நிதியியல் நிலைமையானது திடமாகக் காணப்படுதல் மற்றும் இ.பி.ப.ஆ. ஆல் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகி செயற்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வினூடாக பலப்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாக, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் வெளிப்பாட்டு மட்டங்கள் மற்றும் திரவத்தன்மை என்பன அவை நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி விதிக்கோவை, உரிய நம்பிக்கை அலகுப் பொறுப்புறுதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களுக்குள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக ஆராயப்பட்டன.

மேலும், முன்னெப்பொழுதுமில்லாத சூழ்நிலையின் காரணமாக சில முறைமைப்பாட்டு தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் முகங்கொடுக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாகச் சவால்களைக் கருத்திற்கொண்டு இபிபஆ பின்வரும் நிவாரணங்களை வழங்கியது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் வருடாந்த மற்றும் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டிய திகதியிலான நீடிப்பு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட கால நீடிப்பு இருந்த போதிலும், அத்தகைய நிறுவனங்கள் தங்களது கடப்பாட்டினை சந்திப்பதற்கான ஆற்றலினை மோசமாகப் பாதிக்கும் அல்லது பாதிப்பு நேரக்கூடும் என்பதற்கான ஏதேனும் விதிவிலக்கான விடயங்கள் காணப்படுமாயின் அவற்றை உடனடியாக இபிபஆ க்கு அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றன.



திரு. சுனெத் பெரேரா
உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை



திருமதி. சவுமி கொடிப்பிலி
சிரேஷ்ட முகாமையாளர், மேற்பார்வை


31 டிசம்பர் 2020 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 201 பில்லியனாகக் காணப்பட்டதுடன் அலகு உடைமையாளர்களின் எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 12.7% ஆல் அதிகரித்தது. (உருவங்கள் 08, 09)

உருவம்: 08: நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை

வகை	31.12.2020 இல் உள்ளவாறானது	31.12.2019 இல் உள்ளவாறானது	மாற்றம் %
அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை	75	71	5.6
நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சிகளின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா பில்லியன் அண்ணளவாக)	201.00	104.79	91.8
அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை	52,402	46,481	12.7
வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (அண்ணளவாக மில்லியனில்)	8,014	4,769	68.0
உரித்துவத்திலான முதலீடு (ரூ. மில். அண்ணளவாக)	14,019	9,841	42.5
அரசாங்கப் பிணையங்களில் முதலீடு (ரூ.மில். அண்ணள.)	28,803	9,150	214.8
ஏனைய கருவிகளிலான முதலீடு* (ரூ.மில். அண்ணள.)	158,656	84,542	87.6

*வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புக்கள் போன்றன.
மூலம்: நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி முகாமைத்துவ கம்பனிகளது முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்

உருவம் : 09: 31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தைப் பங்களிப்பு



- சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
- கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- வெர்ஸ் கெப்பிட்ட் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
- கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டட்
- ஆர்ப்பிக்கோ அட்டரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
- சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
- சொவ்ட்டலொஜிக் எஸட் மெனேஜ்மன்ட்
- ஏசியா செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட்

கண்காணிப்பு, புலனாய்வுகள் மற்றும் வலியுறுத்தல்

கொபய இல் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் நியாயமானதாகவும் ஒழுங்கானதாகவும் காணப்படுவதனை இபிஅ உறுதிப்படுத்துவதற்கு முனைகின்றது. இதனை அடைவதற்கு, ஒழுங்கான வர்த்தகத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை இனங்காண்பதற்காக சந்தை கண்காணிப்பு பொறுப்பேற்கப்படுகின்றது. பிணையங்கள் சட்டத்தின் சாத்தியமான மீறல்கள் மேலதிக புலனாய்வுகளுக்காக மற்றும் உரிய வலியுறுத்தல் நடவடிக்கைக்காக மேலனுப்பப்படுகின்றது.

கண்காணிப்பு

எந்தவொரு மூலதனச் சந்தையிலும் சந்தையின் நேர்மையானது ஓர் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. எனவே கண்காணிப்பு செயற்பாட்டின் பிரதான பங்கு பிணையங்கள் ஓர் கிரமமான அடிப்படையிலும் நியாயமான விதத்திலும் வழங்கப்படும் மற்றும் வர்த்தகம் செய்யப்படும் ஓர் சந்தையினை பராமரிப்பதாகும். இந்த நோக்கத்திற்காக, தவறுகளை கட்டுப்படுத்துவதற்காக நுண்ணறிவு மற்றும் கண்டுபிடிப்பு என்பவற்றினூடாக பொருத்தமான மூலோபாயங்கள் செயலாற்றப்படுகின்றன. அதேசமயம் இவற்றை தடைசெய்யும் வேளை முறைமைப்படுத்தலுக்கும் சந்தை இயக்கவியல் என்பவற்றுக்கிடையே ஓர் சமநிலையானது மதிக்கப்படுகின்றது.

பிணையங்கள் வர்த்தகத்தில் சாத்தியமான சட்ட மீறுகைகளை தடுப்பதற்காக ஓர் தன்னியக்க கண்காணிப்பு முறையினை பயன்படுத்தி இபிஅ சந்தையினை ஓர் நிகழ்நேர அடிப்படையில் அசாதாரண விலை மற்றும் பருமன்களிலான அசைவுகளை கண்டுபிடிக்கின்றது. சந்தேகத்திற்கிடமான வர்த்தக நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்படும்போது அவை வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட கையாளுகைகளை மற்றும் நேர்மையான ஊக வணிகம் இடையேயான வேறுபடுத்தலுக்காக ஓர் ஆழந்த பகுப்பாய்வு நடாத்தப்படும். அவசியமாயின், கண்காணிப்பு மேலனுப்பல்கள் / குறிப்புகள் என்பவற்றை தயாரிப்பதன் மூலம் பொருத்தமான நடவடிக்கை தூண்டிவிடப்படுவதுடன் இபிஅ இன் கண்காணிப்பு மற்றும் புலனாய்வுகள் குழுவுக்கு (கபகு) அனுப்பி வைக்கப்படுகின்றது. கூட்டாண்மை வெளிப்படுத்தல்களும் அத்துடன் தொடர்புடைய பிணையங்கள் கொடுக்கல் வாங்கலும் கூர்மையாக அவதானிக்கப்படுகின்றன. இது சந்தை தூர்நடத்தைகளை கண்டுபிடிப்பதற்கான நடத்திகளை எடுப்பதற்கு துணைபுரியும்.

சந்தையானது 1 ஜனவரி 2020 முதல் 19 மார்ச் 2020 வரை வர்த்தகத்திற்காக திறந்திருந்ததுடன் சந்தையினை திறக்க இயலாமைக்காக வர்த்தகமானது தற்காலிகமாக 20 மார்ச் 2020 முதல் 11 மே 2020 வரை மூடப்பட்டிருந்தது. கோவிட்-19 இன் சூழ்நிலைகள் வர்த்தக நடவடிக்கைகளில் செயற்பாடு மற்றும் மேற்பார்வையில் தனித்துவமான சவால்களை விதித்தபோதிலும், சந்தையின் மீள்-திறத்தலிலிருந்து சந்தையில் முடுக்கிவிடப்பட்ட உத்வேகத்தினை அவதானிக்கக்கூடியதாயிருந்தது வர்த்தக நடவடிக்கைகளின் டிஜிட்டல் மயமாக்கல் குறிப்பாக மேம்படுத்தப்பட்ட சந்தை நடவடிக்கைகளுக்கு இட்டுச்சென்றது. இது அதிகரித்த எண்ணிக்கையிலான கணக்கு திறத்தலினாலாகும் என்பதுடன் 2020 இன் இறுதிப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள பலப்படுத்தவும் செய்தது.

செயற்திறனான கண்காணிப்பு

இபிஅ முதலீட்டாளர்கள், தரகர்கள் மற்றும ஏனையோரது சந்தை அசைவுகள் மற்றும் போக்குகளை செயற்திறனுடன் கண்காணிக்கின்றது. இது சந்தையில் சாத்தியமான எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்காக சந்தை தவறுகள் மற்றும் தூர்நடத்தைச் சந்தர்ப்பங்களை தெரிந்துகொள்வதற்காகும். அசாதாரணமான வர்த்தக நடவடிக்கைகளில் ஓர் விரிவான பகுப்பாய்வினைத் தொடர்ந்து இபிஅ உடனடியாக தொலைபேசி அழைப்புகளூடாக முதலீட்டு ஆலோசகர்கள், இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் முதலீடாளர்களிடமிருந்து 37 விடயங்கள் தொடர்பாக தெளிவுறுத்தல்களை வேண்டியதுடன் 2020 இல் முதலீட்டாளர்கள் மற்றும் கம்பனிகளின் பணிப்பாளர்களிடமிருந்து 13 கடிதங்களுடாக விளக்கங்களை கோரியது. அத்தகைய செயற்திறனான நடவடிக்கைகள் நம்பகமான தடைகளை பரப்புவதற்கு உதவுவதுடன் முதலீட்டாளர் சமூகத்தின் நம்பகத்தன்மையினை சீராக்கும்.

செயற்பாட்டு மீளாய்வு

கண்காணிப்பு பரிந்துரைகள்

இபிபஆ இன் கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், கொப இன் கண்காணிப்பு பரிந்துரைகள் மற்றும் முறையீடுகள் என்பவற்றின் அடிப்படையில் கடுமையான சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகள் இனங்காணப்பட்டு இந்த கண்காணிப்பு பரிந்துரைகள்/ கண்காணிப்பு குறிப்புகள் பின்வரும் வரம்புறுகையின் கீழ் ஆழ்ந்த ஆராய்விற்காக மற்றும் தீர்மானங்களுக்காக கபுகு இற்கு அனுப்பிவைக்கப்படும்.

1. ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், குறித்த கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறனுடைய தகவலை தன்வசம் வைத்திருக்கும்போது வர்த்தகம் மேற்கொள்ளும் ஓர் தொடர்புடைய நபர் (இபிபஆ சட்டம் பிரிவு 32)
2. உருவாக்குதல், உருவாக்குவதற்கு ஏற்படுத்தல் அல்லது ஓர் பொய்யான அல்லது தவறாக வழிநடத்தும் தோற்றம் அல்லது துடிப்பான வர்த்தகமான அபிப்பிராயம் அல்லது சந்தையினை ஏற்படுத்துவதற்காக கணிப்பிடப்பட்ட ஏதேனும் செய்கை மற்றும் அல்லது சூழ்ச்சியின் பின்னர் பொருத்தமான செயற்பாடு என்பனவாகும்.

2020 ஆம் ஆண்டில், ஐந்து கண்காணிப்பு பரிந்துரைகளும் இரண்டு குறிப்புகளும் பூர்த்திசெய்யப்பட்டு கபுகு க்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த பரிந்துரைகள் மற்றும் குறிப்புகள் மூன்று சாத்தியமான உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் நான்கு சாத்தியமான விலைக் கையாளுகையினையும் உள்ளடக்குகின்றது.



திரு. பிரபாவ்ஷ் வணிகதுங்க
பணிப்பாளர், கண்காணிப்பு

முன்னோக்கிய வழி

அதிநவீன எச்சரிப்பு தொகுதிகளுடாக விரும்பத்தகாத நடத்தைகளை இனங்காண்பதற்கு போதுமான கருவிகளுடனான ஓர் அதிநவீன புதிய கண்காணிப்பு முறையொன்றை கொள்முதல் செய்யும் செயல்முறையில் இ.பி.ப.ஆ. உள்ளது. இக்கண்காணிப்பு முறையானது ஓர் திடமான மற்றும் நெகிழ்வான பணிப்பாய்வினை கொண்டிருப்பதுடன் இதற்கு சந்தை – வழிகாட்டும் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் கருவிகளினால் உறுதுணையளிக்கப்படுகின்றது. கண்காணிப்புப் பிரிவானது மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வு கருவினை பரிசீலனை செய்வதில் செயற்திறனுடன் ஈடுபடுகின்றது. செயற்கை நுண்ணறிவு போன்று மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் பயன்பாட்டுடன் விரைவூட்டப்பட்ட சந்தை நடவடிக்கைகளின் விளைவாக மூலதனச் சந்தையில் அதிகரித்த உத்வேகத்திற்கு சேவையளிப்பதற்காகும். செயல்முறைக்கான திறனான தொழில்நுட்பத்தினை வழங்குவதன் மூலம் சந்தை அசைவுகள் மற்றும் போக்குகளில் நுண்ணறிவினை திரட்டிக்கொள்வதனை மேம்படுத்தப்பட்ட கருவிகளுடன் புதிய பொறி பயிலல் இயலுமையாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த வருடத்தில் கண்காணிப்பு பொறுப்பேற்புக்களை வலுப்படுத்துவதற்காக கொள்திறன் கட்டியெழுப்புதல் மற்றும் நடைமுறையிலுள்ள செயல்முறைகளை சீராக்குதலை உறுதிப்படுத்துவதற்காக உலக வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டமான - "நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டத்தின்" கீழ் ஓர் திறமையான ஆலோசகரது வசதியளிப்பினை இபிபஆ வேண்டுவதற்கு எதிர்பார்க்கின்றது.

புலனாய்வுகள்

ஏதேனும் கூறப்பட்ட மீறல்கள் அல்லது இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது ஏதேனும் விதி அல்லது அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதி என்பன யாரேனும் நபரினால் மீறப்பட்டிருப்பின் அவற்றில் புலனாய்வுகளை நடாத்துவதற்கு இபிபஆ பொறுப்பாயுள்ளது. இபிபஆ இன் கண்காணிப்பு பிரிவிலிருந்து உருவாக்கப்பட்ட கண்காணிப்பு பரிந்துரையின் அடிப்படையில் ஓர் புலனாய்வு பொதுவாக ஆரம்பிக்கப்படுகின்றது அல்லது ஓர் முறையீட்டினை பெற்றதன் விளைவாக ஆரம்பிக்கப்படுகின்றது. பரிந்துரையானது உருவாக்கப்பட்டதன் பின்னர், அது கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவுக்கு (கபுகு) பரிந்துரைக்கு ஓர் புலனாய்வு தேவையா என்று தீர்மானிப்பதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. ஓர் புலனாய்வு நடாத்தப்பட்டவுடன் புலனாய்வு அறிக்கையானது கபுகு க்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அதனை கபுகு புலனாய்வு அறிக்கையினை ஆராய்ந்து அவசியமான பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு மேற்கொள்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளும் இந்த கூட்டங்களில் பங்கேற்குமாறு வரவேற்கப்படுவதுடன் கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் / சான்றுகளின் இறுதி மதிப்பீட்டிற்கு குழுவிற்கு துணைபுரிவதற்காகும். அதன் பின்னர் புலனாய்வு அறிக்கையானது கபுகு இன் பரிந்துரைகளுடன் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. புலனாய்வு அறிக்கை மற்றும் அத்துடன் கபுகு இன் பரிந்துரைகளிலான ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது ஆழ்ந்தாராய்வின் பின்னர் ஆணைக்குழு ஒன்றில் அங்கீகரிக்கும், நிராகரிக்கும் அல்லது கபுகு இன் பரிந்துரைகளை மாற்றலாம். அதன்பின்னர் ஆணைக்குழுவின் தீர்மானம் செயலாற்றப்படும்.

புலனாய்வுகள் நடாத்தப்பட்டதனைத் தொடர்ந்து, இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஓர் தவறினை இழைத்ததாக யாரேனும் நபருக்கெதிராக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வலியுறுத்தல் நடவடிக்கை/ கள், மேற்கொள்ளப்படும்.



திருமதி. அயந்தி அபேவிக்கிரம
மாற்றாள் பணிப்பாளர், புலனாய்வுகள்



திரு. டி.எம்.ஜி. பிரியந்த
உதவிப் பணிப்பாளர், புலனாய்வுகள்

2020 ஆம் ஆண்டில் இலங்கையில் கோவிட்-19 தொற்றின் காரணமாக காணப்பட்ட சவால்மிக்க சூழலுக்கு மத்தியில் 11 புலனாய்வுகளை நிறைவுசெய்தது.

இவ்வருடத்தில் நிறைவுசெய்யப்பட்ட புலனாய்வுகளில் ஏழு புலனாய்வுகள் தொடர்பாக ஆணைக்குழு வலியுறுத்தல் நடவடிக்கைகள் மற்றும் / அல்லது ஏனைய முறைமைப்படுத்தல் அங்கங்களுக்கு பரிந்துரைப்பதற்கு தீர்மானித்ததுடன் நான்கு புலளாய்வுகள் பின்வரும் காரணத்திற்காக வலியுறுத்தல் நடவடிக்கை ஏதுமின்றி நிறைவுசெய்யப்பட்டது. புலனாய்வுக்கு உட்பட்ட நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் தவறானது கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளின் மூலம் நிலைநாட்டப்படவில்லை.

ஏதேனும் கூறப்பட்ட மீறல்கள் அல்லது இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது ஏதேனும் விதி அல்லது அதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதி என்பன யாரேனும் நபரினால் மீறப்பட்டிருப்பின் அவற்றில் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கு இபிபஆ பொறுப்பாயுள்ளது. இபிபஆ இன் கண்காணிப்பு பிரிவிலிருந்து உருவாக்கப்பட்ட கண்காணிப்பு பரிந்துரையின் அடிப்படையில் ஓர் புலனாய்வு பொதுவாக ஆரம்பிக்கப்படுகின்றது அல்லது ஓர் முறையீட்டினை பெற்றதன் விளைவாக ஆரம்பிக்கப்படுகின்றது.

மீளாய்வாண்டின்போது பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன;

ஓர் கூறப்பட்ட சந்தை கையாளுகையில் நடாத்தப்பட்ட ஒரு புலனாய்வு தொடர்பாக பொருத்தமான வலியுறுத்தல் நடவடிக்கையினை தீர்மானிப்பதற்கு முன்னர் ஐந்து நபர்களுக்கு காரணக் காட்டு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. ஒரு புலனாய்வு தொடர்பாக சான்றுகளை வழங்குவதற்காக இபிபஆ முன்னால் தோன்றுவதற்கு தவறிய இரண்டு நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஒரு புலனாய்வின் பொருத்தமான கண்டுபிடிப்புக்கள் அவசியமான நடவடிக்கைக்காக இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் நுண்ணறிவுப் பிரிவிற்கு (நிநுபி) அனுப்பிவைக்கப்பட்டது. இரண்டு பங்குத் தரகர்களின் பொருத்தமான கண்டுபிடிப்புகள் உரிய விசாரணையின் பின்னர் அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஓர் முன்னோடுதல் தவறு இழைக்கப்பட்டுள்ளதா என்று உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நடாத்தப்பட்ட ஓர் புலனாய்வினைத் தொடர்ந்து ஒரு முதலீட்டாளர் அவரது நம்பக நிலை கடமைகளை மீறுவதில் அவரது நெறிமுறையற்ற நடத்தைக்காக எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவரது தொழில் வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டது.

ஓர் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களுக்கு வழங்கப்பட்ட தரப்படுத்தல்களில் தரப்படுத்தல் திருத்தத்தினை உடனடியாக வெளிப்படுத்துவதற்கு தவறியமை மற்றும் சந்தைக்கு ஓர் தவறாக இட்டுச்செல்லும் வெளிப்படுத்தலை மேற்கொண்டமை.

இபிபஆ சட்டத்தின் பிரிவு 51 ஏ இன் ஏற்பாடுகளுக்கமைய, எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் சில கடந்த மற்றும் நடைமுறையிலுள்ள பணிப்பாளர்கள் அவர்களினால் இழைக்கப்பட்ட சில தவறுகளுக்கு ஒத்திணங்குவதற்காக இபிபஆ க்கு ரூபா முப்பத்து ஆறு மில்லியன் முன்னூறு ஆயிரம் இனை செலுத்தினார்கள். குறித்த தொகையானது இபிபஆ இன் இழப்பீட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டதுடன் ஒத்திணங்கியதன் விளைவாக இதுநாள்வரைக்கும் குறித்த நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ஆகக்கூடிய மொத்த தொகையாகும்.

இபிபஆ மே 2016 முதல் மே 2018 வரை கம்பனியின் பணிப்பாளர் சபையில் சேவையாற்றிய எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்களுக்கு பின்வரும் காரணத்திற்காக வழக்கறிவித்தலை வழங்கியது. எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களுக்கு நான்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கடன் தரப்படுத்தல் கீழிறக்கத்தினை உடனடியாக வெளிப்படுத்தாமையின் நிமித்தம் கொபப இன் பட்டியலிடல் விதிகளினை மீறியமை மற்றும் 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இபிபஆ சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் (திருத்தியமைக்கப்பட்டது) மற்றும் வர்த்தமானியிடப்பட்ட 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இன் கீழ் இபிபஆ ஆல் வழங்கப்பட்ட இபிபஆ விதிகளை மீறியமைக்காகும்.

ஜனவரி 2019 இல் எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றிய பணிப்பாளர் சபைக்கு, 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இபிபஆ சட்டத்தின் பிரிவு 51 இனை மீறும் ஓர் தவறாக இட்டுச்செல்லும் வெளிப்படுத்தலை 17 ஜனவரி 2019 இல் சந்தைக்கு மேற்கொண்டமைக்காக மற்றுமோர் வழக்கறிவித்தல் வழங்கப்பட்டது.

குறித்த தவறுகளுக்கு ஒத்திணங்குமாறு இக்குறிப்பிட்ட காலப்பகுதியில் எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இல் பணிப்பாளர் சபையில் சேவையாற்றிய எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்களினால் அவர்களது வழக்கறிஞர்கள் ஊடாக ஓர் விண்ணப்பம் மேற்கொள்ளப்பட்டது. இபிபஆ முதலாம் வழக்கறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட தவறுகளுக்காக அவர்களது மொத்த கொடுப்பனவாக ரூபா முப்பத்து ஐந்து மில்லியன் எண்ணூராயிரம் (ரூபா 30.8 மில்லியன்) இனை செலுத்துவதற்குட்பட்டு 11 பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளுக்கான ஒத்திணைங்கலை அங்கீகரித்தது. அதேபோன்று இரண்டாவது வழக்கறிவித்தல் தொடர்பாக ஐந்து பணிப்பாளர்களுக்கு எதிராக ஓர் மொத்த தொகையான ரூபா ஐந்து மில்லியன் ஐந்நூறு ஆயிரம் (ரூபா 5.5 மில்லியன்) இனை செலுத்துவதற்குட்பட்டு ஒத்திணங்கலுக்கு அங்கீகாரம் வழங்கியது.

எம்டிடி வோர்க்கர்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்கள் சார்பில் செலுத்தவேண்டிய முற்றும் இறுதியுமான மொத்த தொகையான ரூபா முப்பத்து ஆறு மில்லியன் முன்னூறு ஆயிரத்தினை இபிபஆ பெற்றவுடன் இரண்டு வழக்கறிவித்தல்களிலும் உள்ளடக்கப்பட்ட தவறுகள் ஒத்திணங்கப்பட்டதுடன் பெறப்பட்ட குறிப்பிட்ட தொகைகள் இபிபஆ சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ் நிறுவப்பட்ட இபிபஆ இன் இழப்பீட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

ஓர் பொது பட்டியலிடப்பட்ட நிதிக் கம்பனி மற்றும் அதன் பணிப்பாளர்கள் சபைக்கு, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை உரிய நேரத்தில் சந்தைக்கு வெளிப்படுத்தாமைக்காக அவர்களுக்கெதிராக இபிபஆ ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாக என விளக்குமாறு ஓர் “காரணங் காட்டுதல் அறிவித்தல்” வழங்கப்பட்டது.

மூன்று பட்டியலிடப்பட்ட கம்பனிகள் ஓர் கட்டாய பட்டியலிலிருந்து அகலுவதிலிருந்து ஒத்திப்போடுவதனை மறுதலித்தமை

கொபப இன் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓர் கட்டாய பட்டியலிலிருந்து முன்று பட்டியலிடப்பட்ட கம்பனிகள் அகல்வதனை, அவை தொடர்ச்சியாக ஆண்டறிக்கைகள் மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுக்களை சந்தைக்கு வெளிப்படுத்துவதற்கு தவறியமைக்காக, அனுமதிப்பதற்கு இபிபஆ மறுத்தது. பணிப்பாளர்கள் சபையும் பின்வருவனவற்றிற்காக எச்சரிக்கப்பட்டார்கள். 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இன் மூலம் வழங்கப்பட்ட இபிபஆ இன் விதிகளின் விதி இலக்கம் 3 (1) மற்றும் 17 இன் கீழ்

செயற்பாட்டு மீளாய்வு

கட்டாயமாக்கப்பட்ட கொபய இன் பட்டியலிடல் விதிகளுடன் இணங்கவேண்டிய சட்ட மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகளை பின்பற்றுவதற்கான பொறுப்பினை காட்சிப்படுத்துவதற்கு அவர்கள் தவறியமைக்காகும். இது விசேடமாக இவ்விடயங்களை ஓர் நீண்டகாலத்திற்கு கம்பனிகள் திருத்திக்கொள்வதற்கு முன்வராததனாலாகும்.

வழக்காடல்கள்

இபிபஆ எதிர் எம். ஐ சம்சுதீன் மற்றும் எம். பி. நிஷார்.

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 51 (1) (ஏ) இன் கீழ் மற்றும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 113 (பி) மற்றும் 102 இனை 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளில் விதி இலக்கம் 12 இனையும் சேர்த்து வாசித்து இவற்றின் கீழ் தண்டிக்கத்தகு சந்தை/விலை கையாளுகைக்கு சதி செய்தமை மற்றும் சந்தை/விலை கையாளுகையினை செய்தமைக்காக மேற்குறிப்பிட்ட வழக்கினை இ.பி.ப.ஆ. கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் எம். இம்தியாஸ் சம்சுதீன் மற்றும் பாவிக் நிஷார் என்பவர்களுக்கெதிராக தாக்கல் செய்தது.

இவ்விடயமானது கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது

டலீப் தவ்வீக் அல் நகீப் எதிர் இபிபஆ மற்றும் கொபய

மதிப்பிற்குரிய கொழும்பு மாவட்ட நீதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேன்முறையிடுவதற்கான அனுமதி வேண்டி மேற்குறிப்பிட்ட விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிட்ட வழக்கு இலக்கம் DSP/20/2016 டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் இ.பி.ப.ஆ. க்கும் கொ.ப.ப. க்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு இலக்கம் DSP/20/2016 கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கொ.ப.ப. மற்றும் இ.பி.ப.ஆ. க்கு எதிராக பின்வருவனவற்றை வேண்டி திரு டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட கம்பனியான ஹன்டர் அன்ட் கம்பனி பி எல் சி இன் பட்டியலிடப்படாத துணைக்கம்பனியான ஹீத் அன்ட் கம்பனி

> ஓர் பரிந்துரைத்தல் உருவாக்கப்பட்டதன் பின்னர், அப்பரிந்துரைக்கு ஓர் புலனாய்வு அவசியமா எனத் தீர்மானிப்பதற்காக கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவுக்கு (கபுகு) சமர்ப்பிக்கப்படுகின்றது. ஓர் புலனாய்வினை நடாத்தியதன் பின்னர், புலனாய்வு அறிக்கையானது கபுகு க்கு சமர்ப்பிக்கப்பட்டு அது அந்த புலனாய்வு அறிக்கையினை ஆராய்ந்து ஆணைக்குழுவுக்கு அவசியமான பரிந்துரைகளை மேற்கொள்கின்றது.

(சிலோன்) லிமிட்டட்டினது விடயங்களில் கொ.ப.ப. உம் இ.பி.ப.ஆ. உம் புலனாய்வு செய்வதற்கு கடப்பாடுடையதான பிரகடனத்திற்கு கொ.ப.ப. க்கும் இ.பி.ப.ஆ. க்கும் எதிராக தீர்ப்பு மற்றும் தீர்வையினை வேண்டி மேற்கொள்ளப்பட்டது. மதிப்பிற்குரிய மாவட்ட நீதிபதி அவர்கள் விண்ணப்பதாரி டலிப் தவ்வீக் அல் நகீப் அவர்களால் இ.பி.ப.ஆ. க்கும் கொ.ப.ப. க்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்யும் கட்டளையினை வழங்கினார்.

விண்ணப்பதாரி மாவாட்ட நீதிமன்றத்தின் வழக்கினைத் தள்ளுபடி செய்த தீர்ப்பிற்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார். இவ்விடயமானது கொழும்பு மேல் நீதிமன்றத்தின் முன்னால் (குடியியல் மேன்முறையீடு) நிலுவையிலுள்ளது.

மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இபிபஆ

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக அறிவுபடைத்த கொழும்பு கோட்டை நீதிவான் அவர்களினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தீர்ப்புக்கும் அவர்களது தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். நீதிமன்றமானது குற்றஞ் சுமத்தப்பட்டவர்களில் மூவருக்கு எதிராக தீர்ப்பினை மீள்-உறுதிப்படுத்தியதுடன் மேன்முறையீட்டில் தண்டனைத்தீர்ப்பினை தணித்தது. குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

இபிபஆ எதிர் சேன யத்தெஹிகே மற்றும் எஸ். தினமணி

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 32 மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 102 இனையும் மீறியதுடன் உள்ளுறைபவர் வர்த்தகம் மற்றும் உதவி செய்தலும் உடந்தையாயிருந்தமைக்காக 2019 மார்ச் 07ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் கலாநிதி. சேன யத்தெஹிகே மற்றும் திரு. சுப்பிரமணியம் தினமணி ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த நபர்களுக்கெதிராக அறிவுபடைத்த நீதவான் அவர்களால் அழைப்பாணை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ்விடயமானது உயர்நீதிமன்றத்தின் SC/SPL/LA 100/19 இன் கட்டளை முடிவுசெய்யும்வரை நிறுத்தி வைக்கப்பட்டது.

சேன யெத்தெஹிகே எதிர் இபிபஆ

கலாநிதி சேன யத்தெஹிகே அவர்கள் 2017 இல் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால், ஏனையவற்றுக்கிடையில் நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வேண்டி இ.பி.ப.ஆ. க்கு எதிராக இந்த விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார். இபிபஆ கோட்டை நீதவான நீதிமன்றத்தின் முன்னால் மார்ச் 2017 இல் அவருக்கெதிராக வழக்கல் தாக்கல் செய்தபோது அவர் பேராணை விண்ணப்பத்திற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் 2019 மார்ச் 22 இல் நீதவான் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதற்கு மறுத்ததுடன் அறிவித்தல் வழங்குவதில் எழுத்துமூல சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்யுமாறு கட்டளையினை வழங்கியது.

இதுநாள் வரைக்கும் சேன யெத்தெஹிகே எதிர் இபிபஆ, SC/SPL/LA 100/19 வழக்கின் கட்டளையானது இன்னமும் நிலுவையிலிருப்பதனால், இவ்விடயமானது தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டது.

சேன யெத்தெஹிகே எதிர் இபிபஆ

மேநீ/பேராணை/417/2017 இல் மேற்குறிப்பிட்ட கட்டளையினால் இடருற்று கலநிதி. யத்தெஹிகே மேன்முறையிடுவதற்காக விசேட அனுமதி மூலம் மேநீ/போராணை 417/2017 வழக்கு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை சவால்செய்து உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தார். சத்தியம் மற்றும் உறுதிப்படுத்தல் கட்டளைச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கலாநிதி யத்தெஹிகே அவர்களால் நீதிமன்றத்தின் முன்னே செல்லுபடியாகும் சத்தியக்கடதாசி காணப்படவில்லை என்ற ஆட்சேபனையை இ.பி.ப.ஆ. முன்வைத்தது. அத்துடன் குறித்த சத்தியக்கடதாசியானது 1981 ஆம் ஆண்டின் தூதரகச் செயற்பாடுகள் சட்டத்துடன் இணங்கவில்லை என இ.பி.ப.ஆ. சமர்ப்பித்தது. எனவே அனுமதி வழங்குவதற்கு நீதிமன்றத்தின் முன்னால் முறையான விண்ணப்பம் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைய, உயர் நீதிமன்றம் 2019 மே 3 இல் இ.பி.ப.ஆ. ஆல் எழுப்பப்பட்ட ஆரம்ப ஆட்சேபனையில் கட்டளைக்காக விடயத்தினை நிர்ணயித்ததுடன், நீதவான் நீதிமன்றம் (நீ.நீ./கோட்டை/12639/2018) மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் (மே.நீ./பெராணை/417/2017) ஆகியவற்றின் முன்னால் உள்ள விடயங்களை தற்காலிகமாக நிறுத்திவைத்தது. குறித்த ஆரம்ப ஆட்சேபனையிலான உயர்நீதிமன்றத்தின் கட்டளையானது இற்றை வரையில் நிலுவையாயுள்ளது.

இபிபஆ எதிர் லங்கா கன்னங்கர, கபில சேனரத், வாரிக் வுர்கான் மற்றும் ரவீந்திர மல்லாவாரச்சி

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் தண்டிக்கத்தகு, இ.பி.ப.ஆ. சட்டத்தின் 51 (1)(ஏ) பிரிவு மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 2001 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறான இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு கூட்டு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக நான்கு முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிராக 2019 ஜூலை 25 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கானது இற்றைக்கு நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இபிபஆ எதிர் டபிள்யு.கே.எச். வெகபிட்டிய, திலக் டி சில்வா மற்றும் தக்ஷிலா ஹுலங்கமுவ

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் தண்டிக்கதகு, இ.பி.ப.ஆ. சட்டத்தின் 51 (1)(ஏ) பிரிவு மற்றும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 113(பி) மற்றும் 102 மற்றும் 18 டிசம்பர் 2001 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்ட இ.பி.ப.ஆ. விதிகளில் விதி இலக்கம் 12 இல் ஓர் தவறாகக் கருதப்படும் சந்தை கையாளுகை, சந்தை கையாளுகையினை செய்வதற்கு சதி செய்தமை மற்றும் உதவியாயும் உடந்தையாயும் இருந்த குற்றத்திற்காக 2020 ஜூலை 16 இல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இபிபஆ எதிர் செல்வி. தனுஷ்யா குலாம்ஹுசேன்

இபிபஆ செல்வி தனுஷ்யா குலாம்ஹுசேன் அவர்களுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 11 செப்டம்பர் 2020 இல் ஓர் கூற்றினை பதவுசெய்வதற்கு இபிபஆ க்கு முன் தோற்றாமைக்காக வழக்கினை தாக்கல் செய்தது. இது இபிபஆ சட்டத்தின் பிரிவு 46 ஏ(4) இன் மீறுகையாகும். திருமதி. குலாம்ஹுசேன் அவர்கள் ஏனைய சிலரினால் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள் விதிக்கோவையினை சந்தேகத்திற்கிடமாக மீறியதாக இபிபஆ க்கு கிடைக்கப்பெற்ற ஓர் சார்த்துரை தொடர்பாக ஓர் கூற்றினை பதிவுசெய்வதற்காக அழைக்கப்பட்டார். இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

இபிபஆ எதிர் திரு. சந்தானம் ராஜு

பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையினை மீறியமை தொடர்பான ஓர் புலனாய்வு தொடர்பாக ஓர் கூற்றினை பதிவு செய்வதற்காக அழைக்கப்பட்டபோது இபிபஆ க்கு முன்னால் தோன்றுவதற்கு தவறியமையின் நிமித்தம் இபிபஆ சட்டத்தின் பிரிவு 46 ஏ(4) இனை மீறியமைக்காக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 11 செப்டம்பர் 2020 இல் திரு. சந்தானம் ராஜுவுக்கு எதிராக இபிபஆ வழக்கு தாக்கல் செய்தது. இவ்விடயமானது நீதிமன்றத்தின் முன்னால் நிலுவையிலுள்ளது.

முறையீடுகள் குறைதீர்த்தல் முறைமை

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறையீடுகளது நிலவரம் மற்றும் அவற்றுக்கான குறைதீர்த்தல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: (உருவம் 10)

உருவம் 10 : பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான முறையீடுகள் மற்றும் விடயங்களது கையாளுகை

முறையீட்டின் தன்மை	கையாண்ட முறையீடுகளின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம்
பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையின் நடத்தை	2	2 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவுசெய்யப்பட்டன.
பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நடத்தை	5	5 விடயங்கள் பொருத்தமானவாறு தீர்க்கப்பட்டன.
இபிபஆ விதிகள் / கொப விதிகளுடன் இணக்கப்பாடின்மை	1	1 விடயம் பொருத்தமானவாறு நிறைவுசெய்யப்பட்டது.
ஏனைய/நிர்வாக விடயங்கள்/இபிபஆ இன் நோக்கெல்லையினுள் இல்லாதவை	7	7 விடயங்கள் பொருத்தமானவாறு நிறைவுசெய்யப்பட்டன.
ஏனைய பிரிவுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டவை	1	1 விடயமானது சட்டப் பிரிவிற்கு பரிந்துரைக்கப்பட்டது.
மொத்தம்	16	

செயற்பாட்டு மீளாய்வு

இழப்பீட்டுக் குழுவின் நியமனம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் (திருத்தியமைக்கப்பட்டவாறு) பிரிவு 38 இன் உபபிரிவு (1) இன் கீழ், யாரேனும் உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு இழப்பீட்டு நிதியமொன்று நிறுவப்பட்டு பராமரிக்கப்படுதல் இபிபஆ இன் சட்டரீதியான பொறுப்பாகும்.

இபிபஆ சட்டத்தின் பிரிவு 39 இன் உபபிரிவு (1) ஆனது பின்வருமாறு வேண்டுகின்றது. அமைச்சர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களிடையே இருந்து மூன்று அங்கத்தவர்களை ஆணைக்குழுவின் இழப்பீட்டுக் குழுவிற்கு நியமித்தல் வேண்டும். இக்குழுவானது இபிபஆ சட்டத்தின் பிரிவு 40 இன் கீழ் இழப்பீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக மதிப்பீடு செய்து இழப்பீட்டினை வழங்குவதற்கு பொறுப்பாயுள்ளது.

இதன்பிரகாரம், இழப்பீட்டுக் குழுவினை ஒருங்கிணைப்பதற்காக ஆணைக்குழுவின் மூன்று அங்கத்தவர்களை நியமிக்குமாறு நிதி விடயத்திற்கு பொறுப்பாயுள்ள மதிப்பிற்குரிய அமைச்சருக்கு ஆணைக்குழு பரிந்துரைத்தது.

இவ்விடயமானது நிதி அமைச்சின் முன்னால் நிலுவையிலுள்ளது.

மூலதனச் சந்தை அபிவிருத்தி

பொருளாதார வளர்ச்சி மற்றும் செல்வ உருவாக்கத்திற்கு மூலதனச் சந்தையானது மிகவும் சக்திவாய்ந்த இயக்கிகளுள் ஒன்றாகும். இபிபஆ இலங்கையின் மூலதனச் சந்தையினை, சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கான கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை உருவாக்குவதனூடாக வளர்ப்பதில் ஈடுபடுகின்றது. அத்துடன் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளின் செயலாற்றலிற்கு வசதி செய்கின்றது. மீளாய்வுக் காலப்பகுதியில் இபிபஆ ஆல் வசதியளிக்கப்பட்ட முக்கிய சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

பங்குச் சந்தை செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கல்

பங்குச் சந்தை செயற்பாடுகளது டிஜிட்டல் மயமாக்கலானது இபிபஆ மற்றும் கொபப இனால் 2020 இல் கூட்டாக வசதியளிக்கப்பட்ட பாரிய சந்தை அபிவிருத்தி முன்னெடுப்பாகும் என்பதுடன் இது பங்குச் சந்தை செயற்திறனில் ஓர் ஈர்க்கக்கூடிய வளர்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளது. பங்குச் சந்தை செயற்பாடுகளின் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல் மயமாக்கலானது முதலீட்டாளர்களுக்கு பின்வருவனவற்றை வழங்குகின்றது. முழுவதுமான டிஜிட்டல் உள்வருகை அனுபவம், தடையற்ற வர்த்தகத்தின் பின்னரான மற்றும் தீர்ப்பனவு செயல்முறை, மற்றும் பிராந்தியத்தில் மிகவும் தொழில்நுட்ப ஆர்வமுள்ள பங்குச் சந்தைகளுள் ஒன்றாக கொபப இனை செய்தல் நோக்கிய பங்களிப்பு மற்றும் உலகில் காணப்படும் ஏனைய அபிவிருத்தியடைந்த சந்தைகளுக்கு ஒத்ததாகக் கொண்டுவருதல்.

டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பானது இபிபஆ இன் தலைவரினால் இபிபஆ மற்றும் கொபப இன் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் கூட்டுக் குழுவின் நியமனத்துடன் ஆரம்பமாகியது. இது பங்குச் சந்தை செயற்பாடுகளின் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல் மயமாக்கலை ஆராய்வதுடன் மூன்று கட்டங்களில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முதல் கட்டத்தின் நிறைவு : “எதிர்காலத்திற்கான மிகையான பாய்ச்சல்”

மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களின் தலைமையின் கீழ் டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பின் கட்டம் 1, “எதிர்காலத்திற்கான மிகையான பாய்ச்சல்” 17 செப்டம்பர் 2020 இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட முக்கிய டிஜிட்டல் கருவிகள் பின்வருவனவாகும். கொபப கைப்பேசி செயலி, புதிய கொபப இணையத்தளம், புதிய மவைதி இணையத்தளம், புதிதாக மீள்வடிவமைக்கப்பட்ட இபிபஆ இணையத்தளம், இபிபஆ யூடியூப் சேனல் மற்றும் இ-கட்டளைக் குறிப்புகள், இ-கூற்றுக்கள் மற்றும் இ-பங்கிலாபங்களை இயலுமையாக்குதல் என்பனவாகும்.

கொபப கைப்பேசி செயலி

கொபப கைப்பேசி செயலியானது சாத்தியமான முதலீட்டாளர் ஒருவருக்கு ஓர் பங்குத் தரகு நிறுவனத்திற்கு விஜயம் செய்யாது ஓர் மவைதி கணக்கினை திறப்பதற்கு இயலுமையாக்குவதுடன் பங்குச் சந்தையில் பயனாளிகளுக்கு தகவல்களுக்கான சிறந்த அணுக்கத்தினை வழங்குவதுடன் மற்றும் தனியொருவருக்கான நோக்கினையும் கொண்டிருக்கும். புதிய செயலியுடன், பயனாளிகள் தனிப்பயனாக்க அறிவுறுத்தல்கள், பகுப்பாய்வு கருவிகள், கல்விக் கட்டுரைகள், பங்குகள் மற்றும் சுட்டிகளின் வரலாற்றுரீதியான அசைவுகள் என்பவற்றுக்கான அணுக்கத்தினைப் பெறுவதுடன் முதலீடு செய்ததன் பின்னர் முதலீட்டாளர்கள் தங்களது மவைதி கணக்கினை முகாமைப்படுத்தக்கூடிய சிறப்பியல்பினையும் கொண்டிருக்கும். இந்தச் செயலியானது சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கப்பெறுவதுடன் வர்த்தக நேரங்களில் நேரடி தரவுகளை காட்சிப்படுத்துவதுடன் பயனாளிகள் பன்முக தகவல் மூலங்களை அணுகுவதற்கான அவசியத்தினை மட்டுப்படுத்துகின்றது. செயலி ஆரம்பித்ததன் பின்னர், சந்தையானது பிரதானமாக புதிதாக திறக்கப்பட்ட மவைதி கணக்குகளிலிருந்து உருவாக்கப்பட்ட புதிய வர்த்தக நடவடிக்கைகளின் காரணமாக சந்தையின் செழிப்பான வளர்ச்சியினை கண்டது. மவைதி பதிவுகளின் பிரகாரம், புதிய மவைதி கணக்குகளில் 90% க்கும் அதிகமானவை கொபப இன் கைப்பேசி செயலியூடாக திறக்கப்பட்டவையாகும்.

மேலும், ஆட்கள் பதிவு செய்தல் திணைக்களத்துடன் செய்துகொண்ட ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஓர் ஒருங்கிணைப்பினூடாக தேசிய அடையான அட்டையின் சான்றுறுதியினை மவைதி சரிபார்க்கக்கூடிய ஆற்றலானது ஓர் அடையாள முகாமைத்துவத்திற்காக மவைதி கணக்குத் திறத்தல் செயலியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கொபப இல் விநியோகம் எதிர் கொடுப்பனவு மற்றும் மேம்படுத்தப்பட்ட விடுமிகைத்தல் முறையின் செயலாக்கத்திற்கு வசதியளித்தல்

சந்தையில் நிலவும் வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்கையினை பயனுறுதிமிக்க விதத்தில் முகாமைப்படுத்தும் ஓர் குறிக்கோளுடன் இபிபஆ விஎகொ பொறிமுறையினை கொபப இல் செயற்படுத்துவதற்கு வசதியளிக்கின்றது. முன்மொழியப்பட்ட வணிக மற்றும் செயற்பாட்டு வரன்முறைகள் கொபப உடன் கூட்டாக முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் ஓர் விஎகொ மற்றும் மேம்படுத்தப்பட்ட விடுமிகை மாதிரியினை செயற்படுத்துவதற்காக முடிவுறுத்தப்பட்ட மாதிரிக்கு இபிபஆ இடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது. அதன் பின்னர், முன்மொழியப்பட்ட மாதிரியினை செயற்படுத்துமாறு கொபப அறிவுறுத்தப்பட்டதுடன் இது 2021 இன் 2ஆம் காலாண்டில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த முன்னெடுப்பின் உயர்ந்த தொழில்நுட்ப தன்மையினைக் கருத்திற்கொண்டு உலக வங்கியின் நிதுநுதி இன் கீழ் ஓர் நிபுணர் நியமிக்கப்பட்டார். இவர் விஎகொ செயற்படுத்தல் செயல்முறைக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கும் மற்றும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட மஎத பொறிமுறையினை நிறுவுவதற்கான கொள்கை வரம்புறுகையினை உருவாக்குவதற்கும் பிணையங்கள் கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்கலூடாக காப்பிட்ட குறை விற்பனைக்கான வரம்புறுகையினை உருவாக்குவதற்குமாகும். இதுதொடர்பாக இபிபஆ நிபுணருடனும் கொபப உடனும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

விஎகொ பொறிமுறையின் செயலாக்கமானது கொபப இனை மோர்கன் ஸ்டான்லி கெப்பிட்டல் இன்டர்நேஷனல் இனால் வெளித்தோன்றும் சந்தை நிலைக்கு விதந்துரைப்பதற்கான தேவைப்பாடுகளில் பகுதியளவு நிறைவுறுத்தலுக்கு வழிசமைக்கும் என்பதுடன் நாட்டிற்கு வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவது நோக்கி பங்களிக்கும்.

கொபப இல் அதிக பட்டியலிடல்களுக்கு வசதியளிப்பதற்காக பட்டியலிடல் வரம்புறுகையினை விரிவாக்குதல்

வெவ்வேறு அளவிலான பன்முக கம்பனிகளை பட்டியலிடச்செய்வதற்கு வசதியளிப்பதற்காக இபிபஆ மற்றும் கொபப கூட்டாக ஓர் கொள்கையினை முடிவுறுத்தியது. இது நிறுவனங்களின் ஆரம்ப பட்டியலிடலை ஆளுகை செய்யும் முறைமைப்படுத்தல் வரம்புறுகையினை விரிவாக்குவதற்காக மற்றும் பட்டியலிடல் செயல்முறையினை மிகவும் பயனுறுதிமிக்கதாக செய்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டன. இதன்பிரகாரம், பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

கொபப இன் சாளர வழி (சாவ) மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களிலான மீள்கொள்வனவு உடன்படிக்கை (மீகொ) கொடுக்கல் வாங்கலினை இயலுமையாக்குதல்

கொபப ஊடாக கூட்டாண்மை கடன் சந்தையினை முடுக்கிவிடுவதற்காக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிச் சங்கத்துடன் சில வர்த்தக வங்கிகள் மற்றும் முதன்மை வர்த்தகர்கள் கொபப இடம் கொபப இன் சாளர வழி வர்த்தக மேடையினூடாக கூட்டாண்மை கடன் பிணையங்களுக்கு ஓர் மீகொ கொடுக்கல் வாங்கல் பொறிமுறையினை செயற்படுத்துமாறு வேண்டியது. இதன் பிரகாரம், அத்தகைய மீகொ கொடுக்கல் வாங்கல்களை இயலுமையாக்குவதற்கான இறுதிக் கொள்கையானது கொபப உடன் இணைந்து நிறைவுசெய்ப்பட்டதுடன் அத்தகைய பொறிமுறையினை செயலாற்றுமாறு கொபப க்கு கொள்கையளவில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கொபப இன் தன்னியக்க வர்த்தக முறையின் (தவமு) விலைமாற்றத்தின் சிறும அலகின் அளவினை திருத்தியமைப்பதற்கு வசதியளித்தமை

சந்தையின் நுண்கட்டமைப்பிற்கான மேம்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது விலை செயற்திறன், திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பங்குகளின் நிலையற்றதன்மையினை குறைப்பதற்காகவும் கொபப இல் தவமு இன் விலைமாற்றத்தின் சிறும அலகின் அளவிலான திருத்தத்திற்கு வசதியளிக்கப்பட்டது. இதன்பிரகாரம், ரூபா 100.00 க்கு சமனானன அல்லது குறைவான பெறுமதியுடைய பங்குகளுக்கு விலைமாற்றத்தின் சிறும அலகானது திருத்தியமைக்கப்பட்டு அது ரூபா 0.10 ஆகவும் ரூபா 100.00 க்கும் அதிகமான பெறுமதியுடைய பங்குகளுக்கு விலைமாற்றத்தின் சிறும அலகானது ரூபா 0.25 ஆகவும் மாற்றியமைக்கப்பட்டது.

இலங்கை ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்களுக்கு (இல-ஆமுநபொ) மற்றும் கொபப இல் கம்பனிகளது பட்டியலிடலுக்காக வரி ஊக்குவிப்பினை வழங்குமாறு அரசாங்கத்திற்கு பிரதிநிதித்துவங்கள் மேற்கொள்ளப்பட்டன

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இல-ஆமுநபொக்கு துணைபுரிவதற்காகவும் கொபப இல் கம்பனிகள் பட்டியலிடுவதனை தூண்டுவதற்காகவும் கவர்வதற்காகவும் இபிபஆ நிதி அமைச்சிற்கு பாதீட்டு முன்மொழிவுகள் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவங்களை சமர்ப்பித்தது. மேலும், பட்டியலிடப்பட்ட நிறுவனங்களும் சந்தை பங்குபற்றுனர்களும் தேசிய பாதீட்டில் உள்ளடக்குவதற்கு விரும்பும் அல்லது கருதப்படும் பிரேரணைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டார்கள். அவ்வாறு பெறப்பட்ட அத்தகைய பிரேரணைகள் மற்றும் பரிந்துரைகளின் ஓர் தொகுப்பானது இபிபஆ இன் பிரேரணைகளுடன் நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கொடையாளி முகவர் திட்டங்களை ஒருங்கிணைத்தல்:

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ஆஅவ) மூலதனச் சந்தை அபிவிருத்தித் திட்டம் (மூசஅதி)

மூசஅதி என்பது ஆஅவ இனால் இலங்கை அரசாங்கத்துக்கான ஓர் கொள்கை அடிப்படையிலான கடன் மற்றும் தொழில்நுட்ப உதவித் திட்டமாகும். மூசஅதி இன் கீழ், இபிபஆ கூட்டு முதலீட்டுத் திட்டங்களின் (கூமுதி) கோவையினை வரைவதில், கொபப இன் பரஸ்பரமற்றமயமாக்கல், மூலதனச் சந்தை சான்றிதழளிப்பு செயல்முறையினை புதுப்பித்தல், நிதியியல் அறிவினை மேம்படுத்துதல் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கான வெளிக்களத்திட்டம் போன்ற பல முன்னெடுப்புகளுக்கு தொழில்நுட்ப உதவியினை பெற்றுள்ளது.

மூசஅதி இன் பகுதி 1 தொடர்பான கொள்கை நடவடிக்கைகளை நிறைவேற்றியவுடன், அரசாங்கமானது அமெரிக்க டொலர்கள் 125 மில்லியனை மூசஅதி இன் உடன்பாடு கண்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் பெற்றுக்கொண்டது. தற்போது, பகுதி 2 இன் கீழான கொள்கை நடவடிக்கைகள் நடந்தவண்ணமுள்ளன.

உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் திட்டம் (நிதுநதி)

உலக வங்கியின் நிதுநதி இன் கீழ் இபிபஆ பல முக்கியமான முறைமைப்படுத்தல் மற்றும் கொள்கை அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கான நிதியினைப் பெற்றுள்ளது. இதன் பிரகாரம், நிதியளிப்பானது இனங்காணப்பட்ட பொருட்கள் மற்றும் ஆலோசனை கொள்முதல்களுக்கு பெறப்படுகின்றது.

தொழில்நுட்ப நிபுணத்துவம்

அ. இதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் பின்வரும் ஆலோசனை கொள்முதல்கள் வழங்கப்பட்டன:

- விஎகொ இன் செயலாக்கம் மற்றும் மஎத இனை செயற்படுத்துவதற்கான கொள்கை வரம்புறுகை (தனியான ஆலோசகர்) என்பவற்றுக்கான உடன்படிக்கை வரையீடுகள் (உவ).
- கல்வி மற்றும் விநியோக வழிமுறைகளின் விழிப்புணர்விற்கான உவ - இபிபஆ/மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி (மூசகப) / மூலதனச் சந்தை தகவல் மையம் (மூசதமை) இணையத்தளங்கள் என்பவற்றுக்கான உவ.

ஆ. பல முக்கிய தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் கொள்முதலானது தற்போது நடந்தவண்ணமுள்ளன:

- ததொ மூலோபாயத்தினை விருத்திசெய்தல்/ செயலாற்றல் கண்காணிப்பு என்பவற்றுக்கான நிபுணத்துவம்
- இபிபஆ க்கு கண்காணிப்பு நிபுணத்துவம்
- இபிபஆ க்கு மேற்பார்வை வரம்புறுகையினை விருத்திசெய்வதற்கான நிபுணத்துவம்

பொருட்களின் கொள்முதல்கள்

இனங்காணப்பட்ட ததொ பொருட்கள் ததொ மூலோபாய ஆலோசகரின் பரிந்துரையின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும்.

- கண்காணிப்பு ஆலோசகரின் பரிந்துரையின் அடிப்படையில் ஓர் கண்காணிப்பு முறைக்கான கொள்முதலுக்கு நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.

இபிபஆ இன் பணியாட்களுக்கான பயிற்சியினை செயலாற்றுவதற்கான நிதியளிப்பு பெறப்பட்டது.

உலக வங்கிக்கு மேற்கொண்ட பரிந்துரைகளின் பிரகாரம் இபிபஆ இனால் விருத்திசெய்யப்பட்ட ஓர் பயிற்றுவித்தல் திட்டத்தின் அடிப்படையில் இபிபஆ இன் பணியாட்களது கொள்திறனை கட்டியெழுப்புவதற்காக நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு மீளாய்வு

மூலாதாரக் கருவிகளுக்கான சந்தை மதிப்பீட்டு கருத்துக்கணிப்பு

இபிபஆ ஆஅவ இனால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் சேர்ந்து இனங்காணப்பட்ட பங்காளிகளிடையே மூலாதாரக் கருவிகளிலான ஓர் கருத்துக்கணிப்பினை நடாத்தியது. இது மூலாதாரங்களுக்கான அவசியம் மற்றும் சந்தையில் மூலாதாரக் கருவிகளுக்கான கேள்வி என்பவற்றை மதிப்பிடுவதற்காகும்.

ஏனைய கொள்கை முன்னெடுப்புக்கள்

- பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புக்கள், பட்டியலிப்பட்ட நிறுவனங்களின் பட்டியலிடல் மற்றும் பட்டியலிலிருந்து அகலுதல் போன்ற முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளது பெறுமதியிடலுக்கான வழிகாட்டிகளை விருத்திசெய்தல்.
- கூட்டாண்மை ஆளுகையில், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பு (பொஒஅஒ)கொள்கைகள், பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பு (பிஆசஒ) கொள்கைகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கமைய கூட்டாண்மை ஆளுகைக் கோவையின் செயலாக்கம்.
- பின்வருவனவற்றிற்கு ஓர் புதிய பட்டியலிடல் மேடையினை இயலுமையாக்குவதற்காக செயற்பாட்டு வரம்புறுகை, இடர்நேர்கை இனங்காணல், விதிகள் ஆலோசனை மற்றும் அளவுகோலிடல் ஆகியவற்றின் விரிவான மீளாய்வு
  - அ) உள்ளூர் நிறுவனங்களினால் பன்முக நாணய கடன் பட்டியலிடுதல்கள்
  - ஆ) சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் பட்டியலிடல்கள்
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக கணக்காய்வாளர்களுக்கு பிரயோகிக்கத்தக்க ஓர் விரிவான வழிகாட்டியினை உருவாக்குவதற்கான நடைமுறையிலுள்ள தேவைப்பாடுகளை பலப்படுத்துவதற்கும் வெளிப்படுத்தப்படும் தகவல்களின் நேர்மையினை மேப்படுத்தவும் பங்காளிகளது நம்பகத்தன்மையினை பாதுகாக்கவும் ஓர் வரம்புறுகையினை உருவாக்குவதற்கான சாத்தியத்தினை மதிப்பீடு செய்தல்.
- புதிய இபிபஆ சட்டத்தின் பிரிவு 75 (1) இன் கீழ் பட்டியலிடப்படா கூட்டாண்மை நிறுவனங்களது பொது வழங்கல்களுக்கு தேவையான அங்கீகாரத்தினை வழங்குவதற்கான ஓர் செயல்முறையினை விருத்திசெய்தல்.
- ஓர் இடர்நேர்கை அடிப்படையிலான வெளிப்படுத்தல் அணுகுமுறையினை செயற்படுத்தி 'நிதியியல் கண்காணிப்பில்" வரம்புறுகையினை விருத்தி செய்து செயலாற்றல்; இதற்கு வசதியளிப்பதற்காக உள்ளக கொள்திறனை கட்டியெழுப்புதல்.
- இலங்கையின் மூலதனச் சந்தைக்கு தரப்படுத்தப்பட்ட நிதி அறிக்கையிடல் முறைமையின் மதிப்பீடு மற்றும் அறிமுகம்.

கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள்

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் (கொபப) பட்டியலிடப்பட்ட வழங்குனர்களது வெளிப்படுத்தலிலான நிதியியல் கண்காணிப்பு /மேற்பார்வைக்கான ஓர் உள்ளக வரம்புறுகையினை விருத்திசெய்தல்.

உலக வங்கியின் வணிகம் செய்தல் முன்னெடுப்பு

உலக வங்கியின் வணிகம் செய்தல் முன்னெடுப்பிற்கு மேற்கொண்ட பிரதிநிதித்துவங்களின் அடிப்படையில், மதிப்பீட்டாளர்கள் கம்பனிகள் சட்டத்திலுள்ள பொருத்தமான ஏற்பாடுகளுடன் கொபப பட்டியலிடல் விதிகளையும் சேர்த்து அவற்றினூடாக மூலதனச் சந்தையினை முறைமைப்படுத்துவதற்கான இபிபஆ இன் வரம்புறுகையினை தெரிந்துகொண்டுள்ளார்கள். உலக வங்கியின் பிரகாரம் இலங்கை 99 ஆவது நிலைக்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளதுடன் 190 நியாயாதிக்கங்களில் சிற்றளவு பாதுகாத்தல் சுட்டியில் 28 ஆவது நிலையினைப் பெற்றுள்ளது.



திரு. பிரபாஷ் வணிகதுங்க
மாற்றாள் பணிப்பாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி



திருமதி. தக்ஷிலா பிரான்சிஸ்
முகாமையாளர், மூலதனச் சந்தை அபிவிருத்தி

முன்னோக்கிய பாதை

இலங்கையின் மூலதனச் சந்தையினை அடுத்த கட்ட அபிவிருத்திக்கு எடுத்துச்செல்லும் நோக்கில் செயலாற்றப்படும் முக்கிய முன்னெடுப்புகளுள் சில பின்வருவனவாகும்:

டிஜிட்டல் மயமாக்கல் முன்னெடுப்பின் கட்டம் 2 மற்றும் 3 ஆகியவற்றின் ஓர் பகுதியாக செயலாற்றப்பட ஆயத்தாமாயுள்ள முன்னெடுப்புகள்

- இலத்திரணியல் பணப்பை (இ-பணப்பை) : இலத்திரணியல் முதலீடுகள் / நிதி திரட்டல் போன்றவற்றினை இயலுமையாக்குவதற்கான மேடை
- இலத்திரணியல் ஆரம்ப பொது வழங்கல் (இ-ஆபொவ)
- ஓர் ஆபொவ இக்கு இலத்திரணியல் பங்களிப்பு
- இலத்திரணியல் வாசல் (இ-வாசல்): வாடிக்கையாளர்கள் நேரடியாக அவர்களது மவைதி கணக்கிற்கு சென்று தேவையான தகவல்களை பெறக்கூடிய மேடை
- ஏனைய நியாயதிக்கங்களில் இலங்கை தூதரகங்களிலான இணையத்தள வாசல்கள் - ஏனைய நியாயதிக்கங்களிலுள்ள இலங்கை தூதரகங்களில் இணையத்தள வாசல்கள் நிறுவப்படும். இது உள்நுழையும் செயல்முறையினை சீரமைத்து நாட்டினுள் அதிக வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் வருவதனை இயலுமையாக்கும் குறிக்கோளை கொண்டதாகும்.

கொபப இன் சாளரவழி வர்த்தக மேடையினூடாக தாள் தங்கத்தின் (தாத) அறிமுகத்திற்கு வசதியளித்தல்

தங்கம் மிகவும் பாதுகாப்பான முதலீட்டு சொத்து வகுப்பினுள் காணப்படும் ஒன்றாக கருதப்படுவதுடன் தாத இல் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக பங்காளிகளிடமிருந்து பிரேரணைகள் பெறப்பட்டுள்ளன. சாளரவழி மேடையினூடாக தாத வர்த்தகத்தின் அறிமுகத்திற்கான வரம்புறுகையானது தற்போது கொபப உடன் இணைந்து முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன. இது சந்தைக்கு ஓர் புதிய முதலீட்டு சொத்து வகுப்பினை வழங்கும் என்று எதிர்பார்ப்புடன் அரசாங்கத்திற்கு ஓர் புதிய வரி வருமான மூலத்தினை உருவாக்கும்.

விசேட நோக்க கையகப்படுத்தல் கம்பனிகளுடான (விநோகைக)ஓர் மாற்றீட்டு பட்டியலிடல் வழியினது அறிமுகத்திற்கு வசதியளித்தல்

ஓர் விநோகைக என்பது நடைமுறையில் எவ்வித செயற்பாடுகளோ அல்லது உள்ளார்ந்த வணிகங்களோ இன்றி புதிதாக ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் கம்பனியாகும். இது ஒன்று (அல்லது ஓர் குழுமமான) ஆதரவாளர்களினால், இவர்கள் நன்கு அறிந்த

முயற்சியாளர்கள், தனிப்பட்ட உரித்துவம் அல்லது துறைசார் நிபுணர்களாய் இருப்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கையகப்படுத்தலை மேற்கொள்ளும் குறிக்கோளினைக் கொண்டதாகும். அதன் நிதிகள் ஓர் பங்குப் பரிவர்த்தனையில் அதன் பங்குகளின் / அலகுகளின் மூலம் நிதிகள் திரடடப்படுவதுடன் மற்றும் அத்தகைய நிதிகள் அதன் கையகப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும். தற்போது கொபப உடன் சேர்ந்து விநோகைக இனை பட்டியலிடுவதனை இயலுமையாக்குவதற்கான கொள்கையானது முடிவுறுத்தப்பட்டவண்ணுமுள்ளது.

கூட்டுநிதி நல்கை போன்ற இயங்கலை மேடையூடாக நிதி திரட்டலுக்கு வசதியளித்தல்

கூட்டுநிதிநல்கை என்பது ஓர் குறிப்பிட்ட திட்டத்திற்காக, வணிக முயற்சிக்காக ஓர் இணைய அடிப்படையிலான மேடையூடாக அல்லது சமூக வலையிணைப்பு தளத்தினூடாக பன்முக முதலீட்டாளர்களிடமிருந்து நிதியினை (சிறிய தொகைகள்) வேண்டுவதாகும்.

தற்போது, இ-பணப்பையினூடாக உரித்துவ / கடன் கூட்டுநிதிநல்கை மற்றும் சகாவிலிருந்து சகாவுக்கான கடன் வழங்கல் என்பவற்றை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியமானது டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பின் இரண்டாம் கட்டத்தின் ஓர் பாகமாக அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது கொபப உடன் இணைந்து மதிப்பிடப்படுவதுடன் மூலதனக் கிரயம் மற்றும் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய இடைநிலை கிரயத்தினையும் குறைக்கும்.

பிணையங்கள் கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக காப்பிட்ட குறை விற்பனைக்கு வசதியளித்தல்

கொபப இல் ஓர் விஎகொ முறை மற்றும் மேம்படுத்தப்பட்ட விடுமிகைத்தல் முறையின் செயலாக்கத்தின் பின்னர் கடன் பெறுதல் மற்றும் கடன் வழங்கல் ஊடாக காப்பிட்ட குறை விற்பனையின் அறிமுகத்திற்கு வசதியளிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் இது சந்தையில் பயனுறுதிமிக்க விலை கண்டுபிடிப்பு, உயர்ந்த சந்தை திரவத்தன்மை மற்றும் சிறந்த இழப்புக் காப்பு வாய்ப்புக்களையும் இயலுமையாக்கும். தற்போது, பிணையங்கள் கடன் பெறுகை மற்றும் கடன் வழங்கலூடாக காப்பிட்ட குறை விற்பனையினை இயலுமையாக்குதல் உலக வங்கியின் நிதுநதி இன் கீழ் விஎகொ நிபுணத்துவ ஆணைக்குழுவிலிருந்து தொழில்நுட்ப உள்ளீடுகள் முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன.

மூலதனச் சந்தை கல்வி

2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட மூலதனச் சந்தை தகமை வரம்புறுகையானது 2020 இல் வெற்றிகரமாக செயலாற்றப்பட்டதுடன் இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்து வகுப்புகளுக்கான சான்றிதழளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்களை உள்ளடக்கும். அதாவது, உரித்துவப் பிணையங்கள், கடன் பிணையங்கள், மூலாதாரங்கள் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள் என்பனவாகும். பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (பமுஆ) தகமையானது பிணையங்கள் துறையில் அனைத்து சொத்து வகுப்புக்களையும் உள்ளடக்கும் ஓர் உச்ச தகமையாக மேம்படுத்தப்பட்டதுடன் முதலீட்டு ஆலோசகர்களுக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் திருத்தியமைக்கப்படவில்லை.

உரிமமளித்தல் ஆதிக்கத்தின் ஓர் பகுதியாக இபிபஆ, பமுஆ மற்றும் சான்றளிக்கப்பட்ட உரித்துவ பிணையங்கள் ஆலோசகர் சான்றிதழ்களை நிர்வகிப்பதுடன் இவை உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகு நிறுவனங்களில் ஓர் முதலீட்டு ஆலோசகராக கடமையாற்றுவதற்கு கட்டாயமாகும்.

மேலும், திருத்தியமைக்கப்பட்ட தகமை வரம்புறுகையின் கீழ் ஓர் கட்டமைக்கப்பட்ட தகமையானது நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சித் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு செயலாற்றப்பட்டது. இது பங்குத் தரகு நிறுவனங்களின் முதலீட்டு ஆலோசகர்களுக்கு நடைமுறையிலுள்ள வரம்புறுகைக்கு ஒத்ததாகும். இது தொடர்பான ஓர் பணிப்புரையானது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறைக்கு 14 ஆகஸ்ட் 2020 இல் கட்டாயத் தேவைப்பாட்டினைக் குறிப்பிட்டு சுற்றனுப்பப்பட்டது. அதாவது, சான்றளிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி ஆலோசகர் (சாநஅஆ) சான்றிதழை பெறவிரும்பும் ஓர் விண்ணப்பதாரர் நான்கு கட்டாயப் பாடங்களில் சித்தி எய்தல் வேண்டும். பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் (தொடர் 1), நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சிகள் (தொடர் 5), நிதியியில் திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் (தொடர் 6) மற்றும் பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறைகள் (தொடா 7) என்பவையாகும். இந்த சான்றளிப்பினை நிறைவுசெய்து 6 மாதங்கள் பொருத்தமான துறைசார் அனுபவத்துடன், விண்ணப்பதாரிகள் வாய்மொழித்தேர்வு பரீட்சையினை சந்திப்பதுடன் தகமையினை தக்கவைப்பதற்காக வருடாந்தம் ஆகக்குறைந்தது நான்கு தொதொஅ கருத்தரங்கு வரவுகளுடன் தொதொஅ தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.


மேலதிகமாக, 10 ஜூலை 2020 இல் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர்களிடையே பின்வருவனவற்றுக்கான மற்றுமோர் பணிப்புரையினை சுற்றனுப்பியது. இது வருடாந்த தொதொஅ தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாமைக்காக உரிமங்கள் காலாவதியான முதலீட்டு ஆலோசகர்களை மீளமர்த்துதல் மற்றும் அவர்களது பமுஆ நிலையினை புதுப்பித்தல் தொடர்பானதாகும். அதாவது, ஐந்து வருடங்களுக்கும் குறைவான துறைசார் அனுபவத்தினைக் கொண்ட முதலீட்டு ஆலோசகர்கள் மீளமர்த்தப்படுவதற்காக மீள் உரிமமளித்தல் பரீட்சை மற்றும் பமுஆ வாய்மொழித்தேர்வு பரீட்சையினையும் சித்தியெய்தல் வேண்டும். 5 -10 வருடங்களுக்கிடையேயான துறைசார் அனுபவத்தினைக் கொண்ட முதலீட்டு ஆலோசகர்கள் பமுஆ நிலையினை புதுப்பிப்பதற்காக முதலாவதாக பமுஆ வாய்மொழித்தேர்விற்கு முகங்கொடுத்து ஒரு வருடத்தினுள் மீள் உரிமமளித்தல் பரீட்சையினை சித்தியெய்தல் வேண்டும். 10 வருடங்களுக்கும் அதிகமான துறைசார் அனுபவத்தினைக் கொண்ட முதலீட்டு ஆலோசகர்கள் பமுஆ வாய்மொழித்தேர்வு பரீட்சைக்கு மாத்திரம் தோன்றி மீளமர்த்தப்படலாம்.

மேலும், கோவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து முன்னெப்போதுமில்லாத சூழ்நிலைகளின் காரணமாக சில முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதில் உரிமமளிக்கப்பட்ட /பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்கள் முகங்கொடுக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாக சவால்களை கருத்திலெடுத்து முன்னைய தகமை வரம்புறுகையிலிருந்து புதிய தகமை வரம்புறுகைக்கு அனைத்து முதலீட்டு ஆலோசகர்களையும் மாற்றல் செய்வதற்காக கூட்டாக தொதொஅ தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் நிபந்தனையானது ஆறு மாத காலத்திற்கு 30 ஜூன் 2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 30 ஏப்ரல் 2020 இல் ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட முடக்கல் காலமானது நிறைவடைந்ததன் பின்னர், நான்கு பாடத்திட்டங்களும், அதாவது மூலதனச் சந்தைகள் சான்றிதழ் (மூசசா), மூலதனச் சந்தைகளிலான டிப்ளோமா (மூசடி), முதலீடு செய்வதிலான நிகழ்ச்சித்திட்டம் (முநி), முதலீடு செய்வதில் மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (முமேநி) மற்றும் வாய்மொழித்தேர்வு பரீட்சைகள் இயங்கலை மூலம் Zoom மேடையினூடாக தடையின்றி நடாத்தப்பட்டது. தொதொஅ வெபினார் வடிவத்தில் நடாத்தப்பட்டன. மேலும், 2020 இன் ஆரம்பத்திலும் மற்றும் இறுதிப் பகுதியிலும் வகுப்பறை விரிவுரைகள், தாள் அடிப்படையிலான பரீட்சைகள் மற்றும் வாய்மொழித்தேர்வு பரீட்சைகள் நடாத்தப்பட்டன (உருவம் 11)

செயற்பாட்டு மீளாய்வு

உருவம் 11: நடைமுறை தகமை வரம்புறுகை



மூலதனச் சந்தைகள் சான்றிதழ் (மூசசா), உரித்துவப் பிணையங்களிலான சான்றிதழ் (உபிசா), கடன் பிணையங்களிலான சான்றிதழ் (கபிசா)மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சிகளிலான சான்றிதழ் (நஅசா)

மூலதனச் சந்தையில் தொழில்புரிபவர்களுக்கும் மேலாக துறைசாராத தனிநபர்கள், பாடசாலை விட்டு விலகியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய துறையில் தொழில்புரிவோர் மூசசா இல் தொடர்ச்சியான ஆர்வத்தினையும் இணைந்துகொள்வதனையும் நாம் அவதானித்தோம். (உருவம்: 12, 13)

உருவம் 12: செயற்திறன் புள்ளிவிபரம்

பதிவுசெய்த மொத்தம்	பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் தொடர்களை பூர்த்திசெய்தவர்கள்	உரித்துவத் தொடரினை பூர்த்திசெய்தவர்கள்	கடன் தொடரினை பூர்த்தி செய்தவர்கள்	நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி துறையினைப் பூர்த்தி செய்தவர்கள்	நிதி திட்டமிடல், ஆலோசனை வழங்கல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்	பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறை தொடர்
54	18	16	2020 இல் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை	2020 இல் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை	11	13

உருவம் 13: வாய்மொழித்தேர்வு பரீட்சையின் செயற்திறனது புள்ளிவிபரம்

நிகழ்ச்சித்திட்டம்	பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	சித்தி %
பதிவீடளிக்கப்பட்ட முதலீட்டு ஆலோசகர்	16	62.5
சான்றளிக்கப்பட்ட உரித்துவப் பிணையங்கள் ஆலோசகர்	2	100
மீளமர்த்தல்கள்	5	60

மூலதனச் சந்தைகளில் டிப்ளோமா (மூசடி)

இந்த வருடத்தில், இபிபஆ மூசடி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் நிர்வகித்ததுடன் இது ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகளுக்கான பட்டய நிருவகம் (பிமுபநி). 13 ஆவது தொகுதிக்கான விரிவுரைகள் நிறைவுசெய்யப்பட்டதுடன் புதிய தொகுதி (தொகுதி 14) பெப்ரவரி 2020 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 17 மாணவர்கள் பதிவு செய்திருந்தார்கள்.



திரு. துஷார ஜயரத்ன
பணிப்பாளர், மூலதனச் சந்தைக் கல்வி



திருமதி. சஜீவனி பக்மீதெனிய
சிரேஷ்ட முகாமையாளர், மூலதனச் சந்தைக் கல்வி

தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வாண்டில் பங்குத் தரகு கம்பனிகளின் நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு 6 தொதொஅ நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இது அவர்களை உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளின் நவீன போக்குகளுடன் தங்களை தொடர்ச்சியாக மதிப்பிடவும் இற்றைப்படுத்திக்கொள்ளவும் இயலுமையாக்குகின்றன. ஆறு நிகழ்ச்சித்திட்டங்களினுள், பழைய தகமை வரம்புறுகையிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட வரம்புறுகைக்கு மாற்றல் செய்யும் முதலீட்டு ஆலோசகர்களுக்கு மூன்று திட்டங்கள் கட்டாயமாக்கப்பட்டவையாகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்களை 900 க்கும் அதிகமான பங்குபற்றுனர்களைக் கவர்ந்ததுடன் இது பங்குத்தரகு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் ஆய்வாளர்களை உள்ளடக்கியது.

நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அடுத்த ஆண்டில் தங்களது பமுஆ நிலையினை புதுப்பிப்பதற்கு வருடத்தில் ஆகக்குறைந்தது 4 தொதொஅ கருத்தரங்கு வரவுகளை பெற்றிருத்தல் வேண்டும் என்பது இபிபஆ ஆல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 இன் காரணமாக அனைத்து தொதொஅ நிகழ்ச்சித்திட்டங்களும் இயங்கலையில் வெபினார்களாக நடாத்தப்பட்டதுடன் ஒரு தொதொஅ திட்டம் மாத்திரம் பங்குபற்றுனர்களது பிரசன்னத்துடன் நேரடியாக நடைபெற்றது. (உருவம்: 14)

உருவம் 14: தொதொஅ நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம் : ஆண்டு 2020

தொதொஅ நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள் (இயற்பியல்)	99
முன்மொழியப்பட்ட விஎகொ வணிக மற்றும் செயற்பாட்டு மாதிரியின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களது அறிமுகம்	200
டிஜிட்டல்மயமாக்கல்	212
ஆதனவியல் முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்கள்	151
முன்மொழியப்பட்ட விஎகொ வணிக மற்றும் செயற்பாட்டு மாதிரியின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களது அறிமுகம் (மறுசெயல்)	55
பிணையங்கள் சந்தைகள் மற்றும் கருவிகள்	188
இலங்கையில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறையினை ஓர் கண்ணோட்டம் மற்றும் அதன் எதிர்காலத் தோற்றம்.	231

முதலீடு செய்வதிலான நிகழ்ச்சித்திட்டம்

சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தின் அடிப்படை கொள்கைவழி மற்றும் நடைமுறை தோற்றுருவத்தினை வழங்குவதற்காக இவ்வருடத்தில் ஆறு கிழமைகள் இடம்பெறும் இரண்டு ஆங்கிலமொழி மூல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 24 ஆம் மற்றும் 25 ஆம் தொகுதிகள் முறையே பெப்ரவரி மற்றும் ஆகஸ்ட் 2020 இல் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாண்டில் இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 47 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

முதலீடு செய்வதில் மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் மேம்படுத்தப்பட்ட கொள்கைவழி மற்றும் நடைமுறை தோற்றுருவத்தினை வழங்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டது. இவ்வருடத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 49 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

தங்க பதக்கம் மற்றும் பணக் கொடைத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை நாம் தொடந்தோம். இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) தேசிய பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

செயற்பாட்டு மீளாய்வு

கோவிட்-19 தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக, பல தேசிய பல்கலைக்கழகங்கள் வெற்றிகரமாக பரீட்சைகளை நடாத்த முடியாமல் காணப்பட்டது. எனவே ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு மாத்திரமே 2020 இல் தங்கப் பதக்கமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டது.

மூலதனச் சந்தை தகவல் மையம் (மூசதமை)

மூலதனச் சந்தையின் முறைமைப்படுத்துபவர் என்ற வகையில் இபிஅ எந்நேரமும் நாட்டில் நிதியியல் கல்வியறிவினை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. மூலதனச் சந்தையின் நிலைபேறுல்ல அபிவிருத்திக்கு ஓர் அறிவு-அடிப்படையிலான, அறிவு-வழிகாட்டப்பட்ட துறையின் உருவாக்கம் முக்கியமானது என நாம் நம்புகின்றோம். இதன் விளைவாக இலங்கையிலுள்ள அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களிலும் 2008 இல் மூசதமை யங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. ஆய்வு மற்றும் கல்வி நோக்கங்களுக்காக மூலதனச் சந்தையில் தங்களது புரிந்துணர்வினை மேற்கொள்வதற்கும் முதலீடு செய்வதில் அவர்களது அறிவினை இற்றைப்படுத்திக்கொள்வதற்கும் ஆர்வமுள்ள கல்விமான்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஓர் இலத்திரணியல் கற்கை சூழலூடாக மூலதனச் சந்தை தகவல்கள், தரவுகள் மற்றும் ஏனைய கல்விக் கருவிகளை நாம் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். தற்போது நாம் இணையத்தளத்தினை புதுப்பிக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளோம்.

மூலதனச் சந்தை விழிப்புணர்வு மற்றும் வெளிவாரி உறவுகள்

இபிஅ இன் பிரதான பணிநோக்கு முதலீட்டாளர்களது நலனைப் பாதுகாப்பதாகும். அறிவுபடைத்த முதலீட்டாளர் தகவலறிந்த முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலும் எனவும் பிணையங்கள் மோசடிக்கு இரையாக்கப்படுவது அரிதாகக் காணப்படும் என நாம் கருதுகின்றோம். இபிஅ கருத்தரங்குகள், செயலமர்வுகள், கல்விக் கட்டுரைகள், டிஜிட்டல் மற்றும் அச்சு ஊடகம் உள்ளடங்கலாக பன்முக வழிகளூடாக எவ்வாறு புத்திசாலித்தனமாக முதலீடு செய்வது மற்றும் எவ்வாறு தங்களது முதலீடுகளை பாதுகாத்துக்கொள்வது பற்றி முதலீட்டாளர்களை கற்பிக்கின்றது.

குறுகிய அசைவூட்டக் காணொளிகள்

இபிஅ மூன்று மொழிகளிலும் நான்கு குறுகிய அசைவூட்டக் காணொளிகளை இபிஅ/கொபப இணையத்தளங்களூடாக மற்றும் சமூக ஊடக வலையமைப்பகளூடாக பரப்புவதற்காக தயாரித்தது. அதாவது, முகநூல், யூடியூப், டுவிட்டர் முதலியன. இந்த ஒலி-ஒளி வளங்களை எந்நேரமும் எங்கிருந்தும் அணுகக்கூடியதாயிருக்கும் என்பதுடன் திறமையாக மற்றும் பயனுறுதியான விதத்தில், தூரம், மொழி, கலாச்சாரம் போன்ற தடைகளைக் தாண்டி அறிவினை வழங்கக் கூடியதாயுள்ளது. இதற்கும் மேலாக, இந்த காணொளிகள் மிகவும் பயனுறுதியுள்ளதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் அவை பலபுலன் உணர்வுடையது, மற்றும் ஊடாட்டமானது என்பதுடன் பிரயோகத்தின் இறுதி பயனாளிகள் உள்ளடக்கம் மற்றும் தகவல்களது ஓட்டத்தினை கட்டுப்படுத்துவதனையும் இயலுமையாக்குகின்றது.

கொபப இன் வெவ்வேறு பலகைகளில் பட்டியலிடுவதன் நன்மைகள், முறைகள் மற்றும் செயல்முறைகளில் சாத்தியமான பட்டியலிடப்படக்கூடிய கம்பனிகளை கற்பிப்பதற்காக, இபிஅ ஆங்கில மொழியில் “உங்களது கம்பனியின் பெறுமதியினை திறந்துவிடுங்கள்” என்ற தலைப்பில் ஓர் விளக்கக் காணொளியினை தயாரித்தது.

இபிஅ ஆல் தயாரிக்கப்பட்ட குறுகிய அசைவூட்டக் காணொளிகள்

















இபிபஆ இன் இணைய வாசலை புதுப்பித்தல்

மீளாய்வுக் காலப்பகுதியில் இபிபஆ உலக வங்கி நிதியளிப்புடன் இணைய வாசலை மூன்று மொழிகளிலும் புதுப்பிப்பதனை ஆரம்பித்தது. விரிவான இணையத் தளங்கள் இபிபஆ, மூலதனச் சந்தை கல்வி மற்றும் முதலீட்டாளர்கள் மூசதமை ஆகியவற்றுக்கான இரண்டு தனிப்பயனான நீட்டப்பட்ட சமச்சீரான வளம் காட்டிகளையும் (சவகா) உள்ளடக்குகின்றன. முதலீட்டாளர் மூலையானது நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு நீட்டப்பட்ட சவகா தனிப்பயனாகக் காணப்படுவதுடன் அவர்கள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு துணைபுரிவதற்கான கருவிகளும் காணப்படும்.

மூலதனச் சந்தை பாடத்தினை பிரபலப்படுத்துவதற்கு மற்றும் ஆய்வினை ஊக்கப்படுத்துவதற்கு, இபிபஆ இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூசத மையங்களை நிறுவியுள்ளது. மூசதமை ஓர் இ-கற்கை சூழலை வழங்கும் என எதிர்பார்ப்பதுடன் இதனூடாக மூலதனச் சந்தை தகவல்கள், தரவு மற்றும் ஏனைய கல்விக் கருவிகள் மூலதனச் சந்தை ஆய்வில் தங்களது புரிந்துணர்வினை மேற்படுத்திக்கொள்ள விரும்பும் மற்றும் முதலிடுவதில் அறிவினை இற்றைப்படுத்த விரும்பும் கல்விமான்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வழங்கும். நீட்டப்பட்ட சவாக ஆனது மூலதனச் சந்தையில் அறிவினைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களுக்கான வளங்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்குச் சந்தையின் நடவடிக்கைகளை முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல் மயமாக்கலுடன் ஒன்றிப்பொருந்துமாறு 17 செப்டம்பர் 2020 இல் இபிபஆ இன் ஆங்கில இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. இபிபஆ சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான தளத்தினை செயலாற்றும் செயல்முறையிலுள்ளது.



திரு. துஷார ஜயரத்ன
பணிப்பாளர், வெளிவாரி உறவுகள்



செல்வி. ஷீனா குணரத்ன
முகாமையாளர், வெளிவாரி உறவுகள்

செயற்பாட்டு மீளாய்வு

இபிபஆ இன் சமூக ஊடக பிரசன்னம்

2020 ஆம் ஆண்டில் இபிபஆ "மூலதனச் சந்தை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி" எனத் தலைப்பிட்ட சமூக ஊடக பிரசன்னத்தினை வெற்றிகரமாக ஆரம்பித்தது. நாம் முக்கியமான முறைமைப்படுத்தல் மற்றும் முதலீட்டாளர் கல்வி தகவல்களை பரப்பக்கூடியதாயிருந்ததுடன் இபிபஆ க்கு ஓர் திடமான வணிக மனப்படிமத்தினை கட்டியெழுப்பக்கூடியதாகவும் இருந்தது. இபிபஆ சமூக ஊடக மேடையானது, முகப்புத்தகப் பக்கம், டுவிட்டர் கணக்கு மற்றும் ஓர் யூடியூப் செனல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. ஆரம்பித்து 3 மாதங்களினுள் இபிபஆ இன் சமூக ஊடக மேடையானது பாரிய எண்ணிக்கையிலான பின்பற்றுபவர்களை கவரக் கூடியதாயிருந்தது.

பங்காளிகளது கூட்டங்களுக்கு வசதியளித்தல்

இபிபஆ இன் தலைவர் ஏனைய ஆணைக்குழு அங்கத்தவர்களுடன் இலங்கை வர்த்தச் சம்மேளனம், சட்ட நிறுவனங்கள் மற்றும் பங்குத் தரகு நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்தார்கள். இந்த ஊடாட்டங்கள் பரஸ்பரமான நலனுடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கான ஓர் தொடரான கூட்டங்களின் பகுதியாக இடம்பெற்றது. இந்த கூட்டங்களின் போது பங்குபற்றுனர்கள் வினாக்களை எழுப்பி சந்தையின் அபிவிருத்தி தொடர்பாக இபிபஆ க்கு பரிந்துரைகளை மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது.

ஊடக வெளிக்களம்

அச்சு ஊடகம்

கொழும்பு பங்குச் சந்தையின் முனைவிலிருந்து முனைவுவரையான டிஜிட்டல்மயமாக்கலுடன் ஒன்றிப்பொருந்துவதுபோல் இபிபஆ கொபப உடன் சேர்ந்து டெய்லிமிரர், டெய்லி எவ்டி, சன்டே டைம்ஸ் மற்றும் த மோர்னிங் ஆகியவற்றில் செய்தித்தாள் இணைப்புக்களை பிரசுரித்தது. இந்த பிரசுரங்கள் பங்குச் சந்தையின் டிஜிட்டல் மயமாக்களின் விளைவாக முதலீட்டாளர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள், பங்குத் தரகர்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை என்பன பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளின் விரிவான கண்ணோட்டத்தினை உள்ளடக்கியிருந்தது.

செய்தித்தாள் இணைப்புக்கள் "எதிர்காலத்திற்கான பாரிய பாய்ச்சல்" என்று தலைப்பிட்ட ஓர் கேலிச்சித்திரம், ஆரம்பிக்கப்பட்ட கொபப கைப்பேசி செயலியினூடாக முதலீட்டாளர்கள் பெறக்கூடிய நலன்களை மூன்று மொழிகளிலும் விபரிக்கின்றது.



இவ்வாண்டில், நாம் ஊடக வெளியீடுகளூடாக முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகள், வலியுறுத்தல் நடவடிக்கைகள், பொது விழிப்புணர்வு விடயங்களிலான அறிவித்தல்கள் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி பொறுப்பேற்புக்கள் என்பவற்றை பிரசுரித்தோம்.

மூலதனச் சந்தை பாடத்தினை உட்படுத்துதல்

தற்போது மூலதனச் சந்தைப் பாடமானது கல்லூரிப் பாடத்திட்டத்தில் தரம் 9 தொடக்கமே உள்ளடக்கப்பட்டுள்ளது. முதலிடுதல் என்பது செல்வத்தை கட்டியெழுப்புவதற்கும் எதிர்காலத்திற்கு சேமிப்பதற்கும் ஓர் முக்கியமான வழியாகும். ஓர் இளம் வயதில் மூலதனச் சந்தை பாடத்தை உட்படுத்துவது வயதுவந்தவர்களாக சிறந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் வாழ்க்கையில் பின்னர் ஓர் சிறந்த விளைவினையும் அவர்களுக்கு வழங்கும்.

இபிபஆ கலாநிதி, பி.பி.ஜயசுந்தர, இலங்கையின் ஜனாதிபதியின் செயலாளர், கல்வி சீர்திருத்த இராஜாங்க அமைச்சின் செயலாளர், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைவிலிருந்து கற்றல் ஊக்குவிப்பு என்பவர்களுடன் 2023 தொடக்கம் கல்லூரி பாடத்திட்டத்தில் தரம் 6 தொடக்கம் மற்றும் தேசிய பல்கலைக்கழக பாடத்திட்டத்தினுள்ளும் உள்ளடக்குவதற்காக கலந்துரையாடல்களை நடாத்தியது.

கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளூடான விழிப்புணர்வு

நிதியியல் விழிப்புணர்வினை பரப்புவதற்காக இபிபஆ ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை தொடர்ந்தும் ஒழுங்கு செய்கின்றது. (உருவம் : 15)

உருவம் 15: விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

திட்டங்களின் வகை	திட்டங்களின் எண்ணிக்கை
கல்வி அமைச்சுடன் ஆசிரியர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (மூன்று மொழிகளிலும்)	08
காடசாலை கருத்தரங்குகள் (உ/த மாணவர்களுக்கு)	04
(மூன்று மொழிகளிலும்)	02
பல்கலைக்கழக மாணவர் நிகழ்ச்சித்திட்டங்கள்	01
கொபப 4 பகுதி செயலமர்வுகள்	55

ஒதிபப (ஒத்திசைவான, திறந்த, பதிலளிக்கக்கூடிய மற்றும் பயனுறுதியுள்ள) நீதித் திட்டங்கள்


இலங்கையின் சட்டத் தொழில்துறையின் ஆளுகை, தகமைகள் மற்றும் வேறுபாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை சட்டக் கல்லூரி என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட பெண் சட்ட மாணவிகளுக்கான உள்ளூர்மயமாக்கப்பட்ட இரண்டு கற்கை சுற்றுலாக்களுக்கு இ.பி.ப.ஆ. வசதியளித்தது. சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய மாநில முகவரமைப்புடன் ஒன்றிணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டமானது இ.பி.ப.ஆ. போன்ற

நிறுவனங்களது (கற்கையின் மையமாக முக்கிய நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாக இ.பி.ப.ஆ. காணப்பட்டது) தொழிற்பாடுகளை பார்வையிடுவதற்கு மாணவர்களுக்கு அதிகாரமளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதுடன் சட்டத் துறையில் காணப்படக்கூடிய பல்வேறு வேலை வாய்ப்புக்களில் ஓர் புரிந்துணர்வினையும் பெற்றுக்கொள்வதற்காகும்.

சபிஆஒ உடனான ஈடுபாடு

இபிபஆ சபிஆஒ இன் ஓர் சாதாரண அங்கத்தவர் மற்றும் வளர்ச்சி மற்றும் வெளித்தோன்றும் சந்தைகள் குழு (வவெசகு) மற்றும் ஆசிய பசிபிக் பிராந்திய குழு (ஆபபிகு) இன் அங்கத்தவராகவும் உள்ளது. சபிஆஒ இன் அனேகமான பணிகள் அதன் கொள்கை குழுக்களில் இடம்பெறுவதுடன், இபிபஆ சிலவற்றில் பங்குபற்றுகின்றது. அவையாவன, வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றக் குழு (குழு 4) மற்றும் சிற்றளவு முதலீட்டாளர்கள் குழு (குழு 8) என்பவற்றிலாகும். இபிபஆ சபிஆஒ உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கையொப்பதாரியாகும். இபிபஆ இரண்டு கொள்கை குழுக்களின் கூட்டங்களில் செயற்திறனுடன் பங்குபற்றுவதுடன் கருத்துக்கணிப்புகள் மற்றும் வினாக்கொத்துக்கள் ஆகியவற்றிற்கு பதிலளிப்பதன் ஊடாக பல்வேறு பணி ஓட்டங்களுக்கு பங்களிப்பு செய்கின்றது.

இபிபஆ சமூக ஊடக மேடையினூடாக விழிப்புணர்வினை உருவாக்குதல்













செயற்பாட்டு மீளாய்வு

இபிபஆ சமூக ஊடக மேடையினூடாக விழிப்புணர்வினை உருவாக்குதல்


















කොටස් වෙළෙඳපොළ පිළිබඳ තොරතුරු ලබා ගැනීමේදී..
SEC


සමාජ මාධ්‍ය
හරහා ආයෝජන උපදෙස් ලබාදෙන පුද්ගලයින් සහ සමාගම්වල
භාත්ත්වය හා විශ්වාසනීයත්වය
සහවුරු කර ගැනීමට ආයෝජකයන් කැමිවීටම උත්සාහ කළ යුතුය
SEC


எப்பொழுதும் விழிப்புடன் இருங்கள்
வலைப்பதிவுகள் மற்றும் சமூக ஊடக தகவல்களில் மட்டும் தங்கி இருக்க வேண்டாம்.
அனைத்து தகவல்களையும் நம்பாமலும் ஆராயாமலும் இணைக்கும் தகவல்களை சரிபார்த்து கொள்ளுங்கள்
SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA


11 Important Things to Analyze in an Annual Report
1. Vision and mission statements of the company
2. Corporate information
3. Chairman's report
4. Products/services overview and financial highlights in last 5 to 10 years
5. Auditors report
6. Income statement and Balance sheet
7. Cash flows statement
8. Contingent liabilities and auditor qualifications, if any
9. Management discussion and analysis (MDA)
10. Report on Corporate governance
11. Information on shares of the company


costs


இலங்கை முதலீட்டாளர்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டத்தைப்படி, ஆணைக்குழுவினால் உரிமம் அளிக்கப்படாத எந்தவொரு நிறுவனமும் அல்லது தனிநபரும் "பங்குச் சந்தை" "பங்கு தரகர்" அல்லது "பங்கு முகவர்" என்ற சொற்களைப் பயன்படுத்த முடியாது.
DID YOU KNOW?


Top EIGHT Factors to Avoid When Investing
No trading plan
Not doing due diligence
Blindly following the crowd
Holding on to losses
Lack of knowledge
Trying to get rich quick
Taking profits early
Going YOLO
#YOLO

செயற்பாட்டு மீளாய்வு

மனித வளங்கள்

எமது பொறுப்பாணையினை நிறைவேற்றுவதில் தனிச்சிறப்பினை அடைவதற்காக, இ.பி.ப.ஆ. சரியான நபர்களை சரியான பதவிகளுக்கு சரியான நேரத்தில் பணிக்கமர்த்துவதற்கு முயற்சிக்கின்றது. இபிபஆ இன் மனித மூலதனத்திற்கு இலங்கையின் மூலதனச் சந்தையின் அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆற்றலுள்ள, உயர்ந்த திறமையுள்ள, அறிவு. திறன்கள் மற்றும் திறமைகளுடைய தொழில்வல்லுனர்களுக்கு இபிபஆ இன் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்காக முக்கியமான பங்களிப்புகள் வழங்கப்படுகின்றன.

பணிக்கமர்த்தல்

இ.பி.ப.ஆ. அதன் பணியாட்களுக்கு ஓர் பாதுகாப்பான, பத்திரமான மற்றும் உகந்த சூழலை வழங்குவதுடன் பின்வருவனவற்றையும் ஊக்குவிக்கின்றது. சவால்மிக்க சூழல்களில் அனுபவத்தினை பெற்றுக்கொள்ளுதல், திருப்தியினை மேம்படுத்துதல் மற்றும் தொழில்-வாழ்க்கை சமநிலையினை பராமரித்தல் என்பவற்றிற்கு சாதகமான பணியிட கலாச்சாரத்தினை ஊக்குவிக்கின்றது.

மீளாய்வாண்டின்போது, பணிப்பாளர் மேற்பார்வை நிலைக்கு ஓர் பொருத்தமான தகமையுடை மற்றும் அனுபவமுடைய பணியாளர் ஒருவரை வெற்றிகரமாக பணிக்கமர்த்தினோம். மூன்று உதவி முகாமையாளர்களும் மீளாய்வாண்டின்போது பணிக்கமர்த்தப்பட்டார்கள். மேலும், வெளிவாரி வேட்பாளர்களுடன் போட்டியிட்ட மூன்று உள்ளக வேட்பாளர்கள் பணிப்பாளர் நிதி, உதவிப் பணிப்பாளர் மனித வளங்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர் புலனாய்வுகள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

இ.பி.ப.ஆ. பல்இயல் குழுவினைக் கொண்டுள்ளதுடன் எமது மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளினூடாக பாலினச் சமத்துவத்தினை அடைவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். மேலும், பணியாட்டொகுதியினரது அர்ப்பணிப்பு மற்றும் தொழில்சார்திறன் என்பவை பாராட்டப்பட்டும், மரியாதைக்குட்படுத்தப்பட்டும் மற்றும் மதிக்கப்பட்டும் உள்ளது.

மேம்படுத்தப்பட்ட பணியாள் திருப்தி மற்றும் மனவுறுதி

இ.பி.ப.ஆ. இன் பணியாட்டொகுதியினர் நிறுவனத்திற்கான அவர்களது நீண்டகால சேவை மற்றும் அவர்களது செயற்திறன் என்பவை உரியவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பணியாட்கள் அவர்களது செயற்திறன், தொழில் திருப்தியினை மேம்படுத்துதல் மற்றும் சிறந்து செயற்படுவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

மீளாய்வாண்டில், பணிப்பாளர் தலைமை அதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட மனிதவளக் குழுவானது பணியாட்களது தோற்றுருவத்தினை ஆராய்ந்து அவர்களது நீண்டகால சேவை மற்றும் இபிபஆ இன் செயலகத்தில் பல்வேறு துறைகள் தொடர்பாக அனுபவத்தினைப் பெற்றுக்கொண்ட பல தொழில்வல்லுனர்களை பதவியுயர்வு செய்வதற்கான சாத்தியத்தினை ஆராய்ந்தது.


இளைப்பாறுதல்கள் மற்றும் பதவிவிலகள்கள்

மார்ச் 2020 இல் முன்னாள் பணிப்பாளர் தலைமை அதிபதி திரு. வஜிரா விஜேகுணவர்தன அவர்கள் நிதி அமைச்சிற்கு மாற்றல் செய்யப்பட்டதுடன் நிதி அமைச்சானது இபிபஆ இன் பணிப்பாளர் தலைமை அதிபதியாக திரு. சிந்தக்க மெண்டிசை நியமித்தது.


மேலும், ஏப்ரல் 2020 இல் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட முன்னாள் பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகத்தின் இளைப்பாறுதலை அடுத்து ஒப்பந்தம் நிறைவடைந்தது. ஓர் நிலையான தவணை ஒப்பந்தத்தின் கீழ் செயலகத்தில் சேவையாற்றிய 60 வயதுக்கும் மேற்பட்ட ஓர் பெண் அலுவலக உதவியாளர் ஓர் புதிய அலுவலக உதவியாளரினால் மாற்றீடு செய்யப்பட்டார்.

2020 ஆம் ஆண்டில், ஓர் சிரேஷ்ட உதவி முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஒருவர் பதவியிலிருந்து விலகியதுடன் இவ்வருடத்தில் ஓர் பணியாள் புரள்வாக 6% இனையும் தக்கவைத்தல் வீதமாக 94% இனையும் பதிவுசெய்தது. (உருவங்கள்: 16,17,18,19,20,21)


உருவம் 16: சேவைக்கால தகவல்கள்




உருவம் 17: பால் ஆய்வியல்



உருவம் 18: தகமை வரம்புறுகை



உருவம் 19: வயது ஆய்வியல்



உருவம் 20: நடைமுறையிலுள்ள சேனை



உருவம் 21: 31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறான சேனைகளின் தொகுப்பு

பதவிப்பெயர்கள்	இன்றைய திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட சேனை	14 பெப்ரவரி 2017 இன் 384 ஆவது கூட்டம் மற்றும் 22 ஜனவரி 2018 இன் 404 ஆம் கூட்டம் ஆகியவற்றில் ஆணைக்குழுவின் தீர்மானங்களின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட சேனை	31.12 2020 இல் உள்ளவாறான மொத்த சேனை	நடைமுறையிலுள்ள சேனை		வெற்றிடங்கள்
				நிரந்தரம்	ஒப்பந்தம்	
நிறைவேற்று பணியாட்கள்						
பணிப்பாளர் தலைமை அதிபதி	1		1	1		-
பிரதி பணிப்பாளர் தலைமை அதிபதி	1	1	2	1		1
பணிப்பாளர்கள்	11		11	6		5
உதவிப் பணிப்பாளர்கள்	5	5	10	4		6
முகாமையாளர்கள்	8	10	18	7		11
சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள்	43		63	19		20
உதவி முகாமையாளர்கள்		20		21		
சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசிகள்				2		
நிறைவேற்று காரியதரிசி				1		
நிறைவேற்றுநர்கள் / உத்தியோகத்தர்கள்	11		11	6		5
நிறைவேற்றுநரல்லாதோர்						
அந்தரங்க காரியதரிசிகள்	6		6	3		1
தொலைபேசி இயக்குனர்கள்				2		
நிறைவேற்றுநரல்லாதோர் (தேவையின் அடிப்படையில் பதவிப்பெயரிடப்படும்)		3	3	-		3
உதவிப் பணியாட்கள்						
சிரேஷ்ட அலுவலக உதவியாளர்கள்	10		12	4		2
அலுவலக உதவியாளர்கள்				1		
அலுவலக உதவிகள் / ஓட்டுநர்கள்		2		4	1	
மொத்தம்	96	41	137	82	1	54

செயற்பாட்டு மீளாய்வு

பணியாட்டொகுதியினர் நலன்கள்

ஆகஸ்ட் 2020 இல் கோவிட்-19 பின்னரான மாதங்களில் இபிஎ இன் செயலகத்தின் தடையற்ற செயற்பாடு நோக்கிய கூட்டு முயற்சியினை பாராட்டும் விதமாக பணியாட்டொகுதியினருக்கு ஓர் சமூக நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டதுடன் இது பணியாட்டொகுதியினர் அவர்களது சகாக்களுடன் கூட்டுசேர்வதற்கும் தோழமையினை வளர்ப்பதற்கும் இயலுமையாக்கியது.

மீளாய்வாண்டில், மவ பிரிவானது நடைமுறையிலுள்ள அறுவைச்சிகிச்சை மற்றும் மருத்தவமனைக் காப்புறுதி காப்பீட்டு வரையறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. மேலும், சில தீவிர நோய்கள் தொடர்பாக ஓர் ஆயுள் காப்புறுதி காப்பீடு மற்றும் ஓர் காப்புறுதிக் காப்பீடு என்பன பணியாட்டொகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

எந்தவொரு நிறுவனத்திற்கும் அதன் பணியாட்கள் அதன் செல்வமாகும் ஆதலால் இபிஎ பணியாட்களை ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்திசெய்வதில் முன்னிறுத்தம் செய்தது. இது சர்வதேச அரங்கில் உள்ள முறைமைப்படுத்தல் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தியிலான புதிய போக்குகளுடன் இணையாக இருப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

பயிற்றுவித்தலானது ஓர் துணையான பணியிடத்தினை உருவாக்குவதுடன் தொடர்ச்சியான அடிப்படையில் பணியாட்களுக்கு பயற்றுவித்தல் வசதிகள் வழங்கப்படுவதன் விளைவாக அவர்கள் தனித்தனியாக முயன்றிராத பயிற்றுவித்தலுக்கான அணுக்கத்தினை பெறக்கூடியதாயுள்ளது.

இவ்வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் ஐந்து பணியாட்கள் சபிஆஒ இனால் ஸ்பெயின் மற்றும் மாலைதீவுகளில் ஒழுங்குசெய்யப்பட்ட 2 நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றார்கள். 2020 ஆம் ஆண்டிற்காக சபிஆஒ, ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆபபொஒ) மற்றும் ஏனைய சர்வதேச முகவர்களினால் திட்டமிடப்பட்ட ஏனைய அனைத்து வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் உலகம் பூராவும் பரந்த கோவிட்-19 தொற்றின் காரணமாக இடம்பெறவில்லை.

2020 இல் பணியாளர்களது வெளிநாட்டு பயிற்சிக்காக ரூபா 25 மில்லியன் பாதீடு செய்யப்பட்டிருந்தபோதிலும் அத்தகைய பயிற்சிக்கு ரூபா 2.31 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில், உள்ளூரில் ஒழுங்குசெய்யப்பட்ட பொருளாதார கருத்தரங்கு 2020 மற்றும் பட்டயக் கணக்காளர்களின் தேசிய கருத்தரங்கில் இபிஎ பணியாட்களுக்கு இயங்கலையூடாக பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கியது. 2020 ஆம் ஆண்டில், உள்ளூர் பயிற்சிக்காக இபிஎ அண்ணளவாக ரூபா 0.4 மில்லியனை செலவிட்டது.

எவ்வாறாயினும் முன்னைய வருடங்களில் இபிஎ பணியாட்கள் அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஐக்கிய இராச்சியம், ரஸ்யா போன்று நாடுகளில் இடம்பெற்ற மூலதனச் சந்தை முறைமைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சியினைப் பெற்றுள்ளார்கள். நாம் சபிஎ மற்றும் ஆபபொஒ மற்றும் சர்வதேச முகவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தமைக்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவை மூலதனச் சந்தை அரங்கில் காணப்படும் நடைமுறை போக்கில் முன்னேற்றமடைவதற்கு அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் பங்குபற்றுவதனை இயலுமையாக்கியது.

பணியாட்கள் கல்விக்கான கடப்பாட்டினை வெளிப்படுத்தும் விதமாக, இ.பி.ப.ஆ. இன் பயிற்றுவித்தல் அங்கமானது பணியாட்களுக்கு மூலதனச் சந்தை அரங்கத்தில் அவர்களது அறிவினை மேம்படுத்துவதில் முனைப்புடனான கற்கை பாடநெறிகளை பின்பற்றுவதற்கு தொடர்ச்சியாக வாய்ப்புக்களை வழங்குகின்றது. பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர் நிருவகமானது (ப.நி.ப.) கழிவிறக்கம் செய்யப்பட்ட வீதத்தில் பணியாட்கள் பாடநெறிகளை பின்பற்றுவதற்கு அனுசரணை வழங்குகின்றது. பட்டப்படிப்பின் பின்னரான பட்டம் உள்ளடங்களான உயர் கல்வியினை பின்பற்றுவதற்கு பணியாட்களுக்கு நாம் அனுசரணை வழங்குகின்றோம். மீளாய்வாண்டில் உயர் கல்விக்கான அனுசரணை மற்றும் அங்கத்துவ கட்டணங்களுக்காக ரூபா 2.2 மில்லியனை செலவழித்தது.

உள்ளிருப்புப் பயிற்சிகள்

2020 ஆம் ஆண்டில் இபிஎ தேசிய பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சிக்கான வாய்ப்புக்கனை வழங்குவதனை தொடர்ந்தோம். மேலும், இபிஎ இன் முறைமைப்படுத்தல் செயற்பாட்டில் ஓர் வெளிப்படுத்தலை உரிய மாணவர்களுக்கு வழங்குவதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் மாணவர்களுக்கும் உள்ளிருப்பு பயிற்சிகளை வழங்கினோம்.

தகவல் தொழில்நுட்பம்

நிறைவடைந்த வருடமானது இபிஎ இன் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளில் ஈடுபட்ட பணியாட்களுக்கு மிகவும் சவால்மிக்க



செல்வி. மதுகயனி பலபிட்டிய
உதவிப் பணிப்பாளர், மனித வளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்



திருமதி. ரன்மினி ஜயதிலக்க
சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம்



திருமதி. அசோகா தயாரத்ன
முகாமையாளர், மனித வளங்கள்

காலமாகும். மார்ச் நடுப்பகுதியிலிருந்து மே வரையான நாடு பூராவுமான முடக்கல் மற்றும் ஒக்டோபர் முதல் கோவிட்-19 இன் இரண்டாவது அலையின் தாக்கம் என்பவற்றிக் காரணமாக ஆகும். எவ்வாறாயினும், ததொ குழுவானது இரண்டாவது அலையின்போது "வீட்டிலிருந்து பணிபுரியும்" ஓர் முழுநீள தீர்வினை செயலாற்றுவதில் வெற்றிகண்டது.

பொதுமக்களுக்கு மூலதனச் சந்தை தகவல்களை பரப்புவதற்காக ஓர் தகவலடங்கிய, அதி நவீன, பயனாளர் தோழமையான இணையத்தளத்தினையும் இபிஎ வெற்றிகரமாக ஆரம்பித்தது.

மேலும், மீளாய்வாண்டில் இபிபஆ இன் முறைமைப்படுத்தல் செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

சட்டரீதியான நிதியங்கள்

தீர்வை நிதியம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14ஏ மற்றும் 14பீ பிரிவுகளும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டமும் தீர்வை நிதியத்தின் செயற்பாட்டிற்கான செயல்முறை மற்றும் அதன் குறிக்கோள்களை பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

14A (1)அமைச்சரின் உத்தரவின் பேரில் குறிப்பிடப்பட்ட ஓர் கட்டணம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் அறிவிக்கப்பட்ட கொள்வனவிலும் விற்பனையிலும் தீர்வையாக கோரி வசூல் செய்து செலுத்தப்படல்வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

2)இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படல்வேண்டும்.

14B(1) 14 A பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படல்வேண்டும்.

2)ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம் :

அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு

ஆ) 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்தல்

இ) ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3)ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வை நிதியத்திலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும்.



திருமதி. ஜி.பி.என். டில்லானி
பணிப்பாளர், நிதி



திருமதி. லக்ஷ்மி விக்கிரமநாயக்க
முகாமையாளர், நிதி மற்றும் நிர்வாகம்

உரித்துவப் பிணையங்களுக்கான இபிபஆ தீர்வை

கொபப இன் வழிகாட்டிகளின் பிரகாரம், இ.பி.ப.ஆ ஆல் அறவிடப்படும் தீர்வைக் கட்டணமானது இரண்டாவது தடவையாக 2010 ஆகஸ்ட் 01 முதல் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து 0.072% ஆகக் குறைக்கப்பட்டது. முன்னைய குறைப்பானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாந் திகதி தொடக்கம் பிரயோகத்திலுள்ள தீர்வகக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

மேலும் மேற்குறிப்பிட்ட வீதங்கள் பிரயோகிக்கப்படும் குறுமட்டம் 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியனாக திருத்தியமைக்கப்பட்டது. முன்னர், 2011 ஜனவரி 1 முதல் இ.பி.ப.ஆ. தீர்வையானது ரூபா 50 மில்லியன் வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.072% உம்,ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.045% உம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பின்னர், 27 ஜூன் 2017 முதல் ரூபா 100 மில்லியன் வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.072% ஆகவும் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.045% ஆகவும் திருத்தியமைக்கப்பட்டது.

இதற்கும் மேலாக, 2006 பெப்ரவரி 15 தொடக்கம் ஒரே நாளிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு இ.பி.ப.ஆ. க்குக் கொடுபடவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணமானது ஒரு பக்க கொடுக்கல் வாங்கலுக்கு அறவிடப்படமாட்டாது. ஒரே நாள் கொடுக்கல் வாங்கல் என்பது ஒரு வாடிக்கையாளர் ஒரே நாளில் ஒரே பிணையத்தை ஒரே தரகருடாக வாங்கி விற்று அல்லது விற்று வாங்கியிருத்தல் என்று பொருள்படும்.

கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது. வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை விற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது. ஒரு வாடிக்கையாளரின் ஒரே பிணையத்திலான மொத்த கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் இபிபஆ கொடுக்கல் வாங்கல் கட்டணத்தினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக கருத்திலெடுக்கப்படுகின்றது. இருப்பினும், அரசாங்க பங்குக் கொடுக்கல் வாங்கல் வரியான 0.300% ஆனது இரண்டு பக்கக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அறவிடப்படும்.

தீர்வை நிதியத்தின் செயற்பாடு

இழப்பீட்டு நிதியத்தினை பலப்படுத்துவதற்காக ரூபா 50 மில்லியன் 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்டது. மேலும், 2009 மற்றும் 2010 வருடங்களில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தினை பலப்படுத்துவதற்காக மொத்தம் ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தலா ரூபா 50 மில்லியன் வீதம் மாற்றல் செய்யப்பட்டது.

ஐந்து தடவைகளில் 2010, 2012, 2013, 2019 மற்றும் 2020 இல் முறையே ரூபா 276 மில்லியன், ரூபா 380 மில்லியன், ரூபா 94 மில்லியன், ரூபா 52 மில்லியன் மற்றும் ரூபா 312 மில்லியன் திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.


2020 ஆம் ஆண்டின் இறுதியியல் உள்ளவாறான தீர்வை நிதியத்தின் வரவு மீதி ரூபா 2,800.3 மில்லியன் ஆகும் என்பதுடன், இதில் 12 மாதங்களினுள் எய்தப்பெறும் திறைசேரி முறிகளில் ரூபா 204.1 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், 12 மாதங்களின் பின்னர்

செயற்பாட்டு மீளாய்வு

எய்தப்பெறும் திறைசேரி முறிகளில் ரூபா 969.9 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 1,425.8 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

2010 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இந்நிதியத்தின் அசைவுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன. (உருவம் :22)

உருவம் 22: தீர்வை நிதியம்



2020 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்வை நிதியத்தின் வரவு மீதியானது ரூபா 2,800.3 மில்லியனை எட்டியதுடன், இதில் ரூபா 204.1 மில்லியன் திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

இழப்பீட்டு நிதியம்

1987 இல் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (திருத்தியமைக்கப்பட்டவாறு) ஓர் இழப்பீட்டு நிதியத்தினை நிறுவி பராமரித்தல் இபிபஆ இன் ஓர் சட்டரீதியான பொறுப்பாகும். இதன்பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை பராமரிப்பதற்கான குறிக்கோள் மற்றும் வழிகாட்டிகள் பின்வருமாறு.

38 (1) உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு இழப்பீட்டு நிதியமொன்று நிறுவப்படல் வேண்டும்.

(2) இந்த இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(அ) இந்நிதியத்தின் நோக்கத்திற்காகப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணத்தொகைகள்.

(ஆ) 51 ஏ பிரிவின் கீழ் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய பணத்தொகைகள். (51 ஏ பிரிவானது தவறுகளுக்கான ஒத்திணங்குதல் பற்றியது.)

(இ) இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14 பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படும் பணத்தொகைகள்.

(3) இழப்பீட்டு நிதியத்திற்கு உரித்தான பணத்தொகைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் தீர்மானிக்கப்படும் விதத்தில் முதலீடு செய்யப்படலாம்.

இபிபஆ சட்டத்தின் பிரிவு 39 (1) அமைச்சர் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்து இழப்பீட்டுக் குழுவை நியமிக்கவேண்டும் என்ற தேவைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். இன்னமும், இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாடு


இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது.

மீளாய்வாண்டில், ஒத்திணங்குதல் குற்றப்பணமாக ரூபா 36.3 மில்லியன் இழப்பீட்டு நிதியத்தினால் பெறப்பட்டது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வரவு மீதியானது ரூபா 540.6 மில்லியனை எட்டியது. இவற்றுள், 12 மாதங்களினுள் எய்தப்பெறுவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 39.6 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதுடன், 12 மாதங்களின் பின்னர் எய்தப்பெறுவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 242.8 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதுடன் ரூபா 248.7 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு செய்யப்பட்டன.

2010 முதல் 2020 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் அசைவுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன. (உருவம்: 23)

உருவம் 23: இழப்பீட்டு நிதியம்




தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீஉநி)

தீஉநி 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீஉநி இன் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஒரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் ரி+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை ரி+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது 4ஆவது சந்தை நாளில். உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவு இடர்நேர்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீஉநி தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர்,இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் தலைமை அதிபதி.
- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகையானது அரசாங்கப் பிணையங்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீஉநி ஆனது மீள் நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவு இடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவு இடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய எதிர்தரத்தவர் பொறிமுறையினை (ம.எ.பொ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை.

உருவம் 24: தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்



தீஉநி இன் செயற்பாடு

இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தலா ரூபா 50 மில்லியன் வீதம் இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் தீஉநி இன் வரவு மீதி ரூபா 987.7 மில்லியனை எட்டியது. இதில் பன்னிரண்டு மாதங்களினுள் எய்தப்பெறுவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 155.1 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதுடன், பன்னிரண்டு மாதங்களின் பின்னர் எய்தப்பெறுவதற்கு எதிர்பார்க்கும் திறைசேரி முறிகளில் ரூபா 473.6 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதுடன் ரூபா 300 மில்லியன் அரச வங்கிகளின் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டதுடன் ரூபா 30.4 மில்லியன் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் முதலீடு செய்யப்பட்டது.

2010 முதல் 2020 வரையான காலப்பகுதியில் நிதியத்தின் அசைவானது பின்வரும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் : 24)

மேலதிகத் தகவல்கள்

உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர்கள்

1. எக்யூட்டி ஸ்டொக்ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. ஆஷா செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
3. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
4. எசட்லைன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் *
5. பாட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
6. கென்டோர் ஈக்கியூட்டீஸ் லிமிட்டட்
7. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
8. கெப்பிட்டல் எலாயன்ஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
9. கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
10. சிடி சிஎல்எஸ்ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
11. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
12. வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
13. வெர்ஸ்ட் கார்டியன் ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
14. ஜேபி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
15. ஜோன் கீல்ஸ் ஸ்டொக் ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
16. லங்கா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
17. எல்ஓஎல்சி செக்கியூரிட்டீஸ் லிமிட்டட்
18. நேஷன் லங்கா ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
19. நவாரா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் *
20. என்டிபி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
21. என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)
22. ரிச்சர்ட் பீரிஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
23. எஸ்சி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
24. எஸ்எம்பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
25. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
26. சமர்வில் ஸ்டொக் ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
27. டெப்ரோபேன் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
28. டிகேஎஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் *
29. வெல்த் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (கடன் பிணையங்கள்)

உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர்கள்

1. ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
2. பாட்லீட் ரெலிகெயார் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன்)
3. கெப்பிட்டல் எலாயன்ஸ் லிமிட்டட் (கடன்)
4. என்டர்பிரைஸ் சிலோன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
5. ஜேபி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்
6. என்எஸ்பி வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் (கடன்)
7. செலான் பேங்க் பிஎல்சி (கடன்)
8. எஸ்எம்பி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன்)
9. சொவ்ட்லொஜிக் ஸ்டொக்ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
10. வெல்த் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் லிமிட்டட் (கடன்)
11. சிடி சிஎல்எஸ்ஏ செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்

நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சியின் உரிமமளிக்கப்பட்ட முகாமைத்துவக் கம்பனிகள்

1. சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்
   - சிலோன் டொலர் பொன்ட் வன்ட்
   - சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
   - சிலோன் இன்கம் வன்ட்
   - சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
   - சிலோன் ஜபிஒ வன்ட்
   - சிலோன் மணி மார்க்கட் வன்ட்
   - சிலோன் டுஹரிசம் வன்ட்
   - சிலோன் டிரசரி இன்கம் வன்ட்

2. கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்
   - கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்
   - கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
   - கொம்ரஸ்ட் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
   - கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்

3 என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   - என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
   - என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
   - என்டிபி வெல்த் குரோத் வன்ட்
   - என்டிபி வெல்த் இன்கம் வன்ட்
   - என்டிபி வெல்த் இன்கம் ப்ளஸ் வன்ட்
   - என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்
   - என்டிபி வெல்த் மணி வன்ட்
   - என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்

4. சீ பேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்
   - சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
   - சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (ஏ சீரீஸ்)
   - சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (பி சீரீஸ்)
   - சீபேங்க் ஐ ஹீல்ட் வன்ட்
   - சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மணி மார்க்கட் வன்ட்
   - சீபேங்க் சுரகும் கிள்ட் எட்ஜ் வன்ட்
   - சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட் வன்ட்

5. நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   - நாமல் குரோத் வன்ட்
   - நாமல் ஐ ஹீல்ட் வன்ட்
   - நாமல் இன்கம் வன்ட்
   - நாமல் மணி மார்க்கட் வன்ட்
   - நெஷனல் இக்யுடி வன்ட்
   - நாமல் கில்ட் வன்ட்
   - நாமல் பேங் வன்ட்

6. வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் ஈக்யுட்டி வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் மணி மார்க்கட் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்

7. ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்
   - ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
   - ஜே பி வான்டேஜ் சோர்ட் டேர்ம் கிள்ட் வன்ட்
   - ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்

8. கார்டியன் எக்யூட்டி எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
   - கார்டியன் எக்யூட்டி ஈக்யுட்டி வன்ட்
   - கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் வன்ட்
   - கார்டியன் எக்யூட்டி இன்கம் வன்ட்

9. சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
   - சென்வின் குரோத் வன்ட்
   - சென்வின் மணி மார்க்கட் வன்ட்
   - சென்வின் ஷாரியா இன்கம் வன்ட்
   - சென்வின் ஷாரியா பெலன்ஸ்ட் வன்ட்
   - சென்வின் டைனமிக் இன்கம் வன்ட்

10. எசட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    - எஸ்ரூ அல்பா வன்ட்
    - எஸ்ரூ எக்டிவ் இன்கம் வன்ட்

11. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட்
    - கெல் பெலன்ஸ்ட் வன்ட்
    - கெல் கோர்ப்பரேட் டெட் அன்ட் கிள்ட் டிரேடிங் வன்ட்
    - கெல் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்
    - கெல் கிள்ட் வன்ட்
    - கெல் கிள்ட் மணி மார்க்கட் வன்ட்
    - கெல் கிள்ட் ட்ரேடிங் வன்ட்
    - கெல் ஐ ஹீல்ட் வன்ட்
    - கெல் இன்கம் வன்ட்
    - கெல் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்
    - கெல் மீடியம் ரிஸ்க் வன்ட்
    - கெல் குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்

12. ஆர்பிக்கோ ஹடரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    - ஆர்பிக்கோ ஹடரக்ஷியா கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
    - ஆர்பிக்கோ ஹடரக்ஷியா ஈக்கியூட்டி இன்கம் வன்ட்
    - ஆர்பிக்கோ ஹடரக்ஷியா ரிபோ இன்வெஸ்ட்மன்ட் வன்ட்
    - ஆர்பிக்கோ ஹடரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட்

13. பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
    - பிரீமியர் க்ரோத் வன்ட்
    - பிரீமியர் மணி மார்க்கட் வன்ட்

14. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்
    - எஸட்லைன் இன்கம் வன்ட்
    - எஸட்லைன் இன்கம் ப்ளஸ் க்ரோத் வன்ட்

15. சொவ்ட்லொஜிக் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    - சொவ்ட்லொஜிக் ஈக்கியூட்டி வன்ட்
    - சொவ்ட்லொஜிக் மணி மார்க்கட் வன்ட்

16. ஏசிய செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்
    - ஏசியா செக்கியூரிட்டீஸ் மணி மார்க்கட் வன்ட்

வகை	முதலீட்டு முகாமையாளர்	எல்லைக் கடன் வழங்குநர்	ஒப்புரவாளர்
எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்		✓	
அதெல் ஈக்யுட்டீஸ் லிமிட்டட்		✓	
அமானா எஸட் லிமிட்டட் **	✓		
ஏசியா செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
ஆஷா வைனான்சியல் சேர்விசஸ் லிமிட்டட்		✓	
எஸட்லைன் லீசிங் கம்பனி லிமிட்டட்		✓	
எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
எஸட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
இலங்கை வங்கி	✓		✓
பான்சாய் செக்கியுரிட்டீஸ் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்		✓	
பாட்லீட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்	✓		
கெப்பிட்டல் ட்ரஸட் கிரடிட் (பிரைவேட்) லிமிட்டெட்		✓	
சீபேங் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
சிட்டிஸன் டெவலப்மன்ட் பிஸினஸ் வைனான்ஸ் பி.எல்.சி.		✓	
டயலொக் வைனான்ஸ் பி.எல்.சி. (முன்னால் கொழும்பு ட்ரஸ்ட் வைனான்ஸ் பி.எல்.சி.)		✓	
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பி.எல்.சி		✓	✓
கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
டீஎவ்சிசி பேங்க் பி.எல்.சி.		✓	✓

மேலதிகத் தகவல்கள்

வகை	முதலீட்டு முகாமையாளர்	எல்லைக் கடன் வழங்குநர்	ஒப்புரவாளர்
வெஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
கார்டியன் வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
ஹட்டன் நஷனல் பேங்க் பி.எல்.சி.		✓	✓
ஹெலியோஸ் வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
இனோவெஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
ஜேபி கிரடிட்(பிரைவேட்) லிமிட்டட்		✓	
ஜேபி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
எல்பி வைனான்ஸ் பி.எல்.சி.		✓	
எல்.ஓ.எல்.சி. வைனான்ஸ் பி.எல்.சி.		✓	
லீனியர் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
மேர்ச்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.	✓	✓	✓
நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
நேஷன் லங்கா கெப்பிட்டல் லிமிட்டட்		✓	
நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பி.எல்.சி.		✓	
என் டி பி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
என் டி பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்			✓
ஒராயன் வன்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
பேன் ஏசியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி.		✓	
பீப்பல்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.		✓	
பிரீமியர் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	✓		
பீப்பல்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பி.எல்.சி.		✓	
ரிச்சர்ட் பீரிஸ் வைனான்சியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட்		✓	
சம்பத் பேங்க் பி.எல்.சி		✓	✓
சென்வின் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	✓		
செலான் பேங்க் பி.எல்.சி.		✓	
சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பி.எல்.சி.	✓		
யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பி.எல்.சி.		✓	
வோல்டொக் மெகென்ஸி லிமிட்டெட்	✓	✓	

** அமானா எஸட் லிமிட்டட்டின் முதலீட்டாளர்களது தீர்ப்பனவினை இயலுமையாக்குவதற்காக பதிவீடு புதுப்பிக்கப்பட்டது. கம்பனியானது புதிய வாடிக்கையாளர்களையோ அல்லது முதலீடுகளையோ பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

தீர்வக இல்லம் எனும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

சென்ரல் டிபொசிடரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

கடன் தரப்படுத்தல் முகவர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்:

1. விட்ச் ரேட்டிங்
2. இக்ரா லங்கா லிமிட்டட்

ஆண்டு	2015	2016	2017	2018	2019	2020
வருடாந்தப் புரள்வு (ரூ.மில்.) உரித்துவம்	253,251.0	176,935	220,591	200,069	171,408	396,882
உள்ளூர் (ரூ.மில்.)	166,151.5	102,544	117,135	111,378	109,003	318,354
வெளியூர் (ரூ.மில்.)	87,099.5	74,391	103,456	88,691	62,405	78,527
சந்தை நாட்கள் (எண்.)	239	240	241	240	241	209
தினசரி சராசரி புரள்வு (ரூ.மில்.)உரித்துவம்	1,059.6	737.2	915.3	834	711	3,217
வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண். மில்.) உரித்துவம்	9,414	7,196	8,468	6,001	9,855	21,349
உள்ளூர் (எண்.மில்.)	7,693	5,776	6,529	4,821	7,091	19,808
வெளியூர் (எண்.மில்.)	1,721	1,420	1,939	1,180	2,764	1,541
வர்த்தகங்கள் (எண்.) உரித்துவம்	1,506,790	1,056,849	981,977	885,657	1,197,205	3,070,021
உள்ளூர் (எண்.)	1,431,750	1,002,476	928,276	838,784	1,150,486	2,968,092
வெளியூர் (எண்.)	75,040	54,373	53,701	46,873	46,719	101,929
புதிய பட்டியலிடல்கள் (எண்.)	5	4	3	3	2	1
பட்டியலிலிருந்து நீங்குதல் (எண்.)	3	2	2	2	10	7
பட்டியலிடப்பட்ட கம்பனிகள் (எண்.)	294	295	296	297	289	283
வர்த்தகம் செய்யப்பட்ட கம்பனிகள் (எண்.)	278	240	279	279	279	266
சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.)	2938.0	2,745.41	2,899.29	2,839.45	2,851.31	2,960.65
சந்தை வி.உ.வீ. வருட இறுதி (மடங்கு)	18.0	12.37	10.60	9.65	10.83	11.3
சந்தை மூலதனவாக்கத்திற்கு புரள்வு (%)	8.6	6.2	7.6	7.0	6.01	13.4
பங்கிலாப விளைவு வருட இறுதி (%)	2.18	2.75	3.19	3.09	3.17	2.7
புத்தகப் பெறுமதிக்கு விலை வருட இறுதி (மடங்கு)	1.99	1.42	1.31	1.18	1.14	1.1
மொஉஉ இன் % ஆக சந்தை மூலதனவாக்கம்	30	25	25	21	22	20
விலைச் சுட்டிகள்						
அனைத்து பங்கு விலைச் சுட்டி (அபவிசு)	6894.5	6,228.26	6,369.26	6,052.37	6,129.21	6,774.22
வருடத்திலிருந்து வருடம் மாற்றம் %	(5.5)	(9.7)	2.3	(5.0)	1.27	10.52
எஸ். அன்ட் பி ஸ்ரீலங்கா 20	3625.7	3,496.44	3,671.72	3,135.18	2,936.96	2,638.10
வருடத்திலிருந்து வருடம் மாற்றம் %	(11.3)	(3.6)	5.0	(14.6)	(6.32)	(10.18)
மொத்த விளைவு சுட்டிகள்						
அபவிசு இன் மொத்த விளைவு சுட்டி (அபமொவிசு)	9079.9	8,232.66	8,457.09	8,066.97	8,203.82	9,078.65
வருடத்திலிருந்து வருடம் மாற்றம் %	(5.2)	(9.3)	2.7	(4.6)	1.70	10.7
மிவிசு இன் மொத்த விளைவு சுட்டி (மிவிமொவிசு)	-	-				
வருடத்திலிருந்து வருடம் மாற்றம் %	-	-				
எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 இன் மொத்த விளைவு சுட்டி (எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 மொவிசு)	4861.5	4,843.17	5,259.85	4,686.71	4,603.57	4,332.84
வருடத்திலிருந்து வருடம் மாற்றம்	(8.8)	(0.4)	8.6	(10.9)	(1.77)	(5.9)

மேலதிகத் தகவல்கள்

ஆண்டு	2015	2016	2017	2018	2019	2020
தேசியமல்லாத நடவடிக்கை						
வருடாந்தப் புரள்வு (ரூ.மில்.)	87,099.50	74,391	103,456	88,691	62,405	78,527
கொள்வனவுகள் (ரூ.மில்.)	84,414.56	74,583	112,285	77,067	56,537	52,889
விற்பனைகள் (ரூ.மில்.)	89,784.44	74,199	94,627	100,315	68,272	104,165
தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல்	(5,369.9)	383.5	17,657.4	(23,247.5)	(11,735)	(51,276)
வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகள் (எண்.மில்.)	1,721.50	1,420	1,939	1,180	2,764	1,541
கொள்வனவுகள் (எண்.மில்.)	1,730.72	1,572	2,062	1,060	3,896	928
விற்பனைகள் (எண்.மில்.)	1,712.27	1,267	1,817	1,299	1,631	2,154
வர்த்தகங்கள்	75,040	54,373	53,701	46,873	46,719	101,929
கொள்வனவுகள் (எண்.)	65,932	51,656	56,643	37,855	25,759	42,134
விற்பனைகள் (எண்.)	84,149	57,091	50,760	55,892	67,680	161,725
கடன் சந்தை						
கூட்டாண்மைக் கடன்						
புரள்வு (ரூ. 000)	4,714,012.7	2,932,154.0	3,592,905.5	4,540,599	5,677,080	5,856,002
வர்த்தகங்களின் எண்ணிக்கை	220	291	529	293	234	243
வர்த்தகம் செய்யப்பட்ட தொகுதிக்கடன்களின் எண். (000)	42,201	28,335	35,696	44,024	55,643	54,230
நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகள்						
தேறிய சொத்தின் பெறுமதி (தேசொபெ) (ரூ.மில்.)	129,844	103,890	128,804	64.22	104.79	200.94
அலகு உடைமையாளர்கள் (எண்.)	38,140	41,154	41,037	42,093	46,481	51,707
வழங்கப்பட்ட அலகுகள் (எண். 000)	8,812	7,142	7,639	3,368	4,769	8,210
உரித்துவத்திலான முதலீடு (ரூ.மில்.)	14,376	13,786	12,466	9,416	9,841	14,019
திறைசேரி உண்டியல்களிலான முதலீடு (ரூ.மில்.)	28,294	49,299	24,386	3,379	9,150	28,613
ஏனைய கருவிகளிலான முதலீடு **(ரூ.மில்.)	87,272	40,553	91,732	50,601	84,542	158,725

மூலங்கள்: கொபப, நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிக் கம்பனிகளின் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்.

வளர்ச்சியின் ஓர் கதை



நிதியியல் அறிக்கைகள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - **81** கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை | **84** நிதி நிலைமைக் கூற்று | **85** நிதிச் செயற்திறன் கூற்று | **86** தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று | **87** காசுப் பாய்ச்சல் கூற்று | **89** நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள

26. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

திரு. விராஜ் தயாரத்ன, ஜச அவர்கள் இபிஎ இன் தலைவராக 08 ஜனவரி 2020 இல் நியமிக்கப்பட்டதுடன் இவர் 22 ஜனவரி 2020 முதல் கடமையினை பொறுப்பேற்றார்.

ஆணைக்குழுவின் பின்வரும் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 2020 ஆம் வருடத்தில் பதவி வகித்தார்கள்.

- திரு. மனில் ஜயசிங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதனால் 07 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. டி.என்.ஆர். சிறிவர்தன அவர்கள், கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி பதவியினை வகிப்பதனால் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க அவர்கள் பொது திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியினை வகிப்பதனால் 16 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுஹத கமலத், ஜச அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சிசிர ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. நரே' அபேசேகர அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பதவியிலிருந்து நீங்கினார்கள்.

- திரு. எச். ஏ. கருணாரத்ன அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததனால் 23 நவம்பர் 2018 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 08 செப்டம்பர் 2020 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.
- திரு. கே. எம். மஹிந்த சிறிவர்தன அவர்கள் இலங்கை வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததனால் 15 செப்டம்பர் 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 31 டிசம்பர் 2020 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவி வகித்த ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது தொடர்புகளை குறிப்பிடுகின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு.விராஜ் தயாரத்ன, ஜச	தீர்ப்பனவு உத்தராவாத நிதியம்	நம்பிக்கைப் பொறுப்பாளராக 08 ஜனவரி 2020 முதல் நியமிக்கப்பட்டார் மற்றும் 22 ஜனவரி 2020 இல் கடமையினைப் பொறுப்பேற்றார்.
திரு.மனில் ஜயசிங்க	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	07 ஜனவரி 2020 முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
	ஏர்ன்ஸ்ட் அன்ட் யங்	பங்காளி
திரு.டி.என்.ஆர்.சிறிவர்தன	கம்பனிகள் பதிவாளர் திணைக்கயம்	கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை	அங்கத்தவர்
திரு.ஆர்.எம்.பி.ரத்நாயக்க	பொது திறைசேரி	பிரதி செயலாளர்
	இலங்கை வங்கி (இவ)	28 ஏப்ரல் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ் (கரன்ட்டி) லிமிட்டட்	24 ஆகஸ்ட் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியம் (உகஅநி)	ஆணையாளர் மற்றும் 14 செப்டம்பர் 2020 முதல் தலைவர்
	தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	16 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர்

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு. சுனில் லங்காதிலக்க	நிதி அமைச்சு	சபை அங்கத்தவர் (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நிய செலாவணி விசாரணை சபையின் அங்கத்தவர்) மூன்று வருடங்களுக்கு 03 ஜனவரி 2021 தொடக்கம்.
திரு. சிசிர ரத்நாயக்க	பூச்சியம்	பூச்சியம்
திரு. நரே' அபேசேகர	பூச்சியம்	பூச்சியம்

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவியிலிருந்து நீங்கிய ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களின் தொடர்புகளை குறிப்பிடுகின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு.எச்.ஏ.கருணாரத்ன	இலங்கை மத்திய வங்கி	05 செப்டம்பர் 2020 வரை பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்ரீலங்கா	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
	கொழும்பு டொக்யாட் பிஎல்சி	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
திரு. கே.எம்.மஹிந்த சிறிவர்தன	இலங்கை மத்திய வங்கி	பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	பாதுகாப்பு அமைச்சு - 'அப்பி வெனுவென் அப்பி நிதியம;" முகாமைத்துவச் சபை	02 மார்ச் 2020 முதலி அங்கத்தவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை அங்கத்தவர்

வழக்கமான வணிகப் போக்கில் சந்தை வீதங்களிலான பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மீளாய்வாண்டில் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் எவ்விதமான கொடுக்கல் வாங்கலும் இடம்பெறவில்லை.

இபிபஆ இலங்கை வங்கியில் பின்வரும் ஐந்து நடைமுறை கணக்குகளை பராமரிப்பதுடன் வங்கி மீதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

நடைமுறை கணக்கின் பெயர்	கணக்கு இலக்கம்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி	31.12.2019 இல் உள்ளவாறான மீதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	0000001694	32,730,612	(15,714,817)
	0009919753	4,777,980	1,869,016
	83810081	856,470	14,922,951

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

26. தொடர்படைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி...)

2020 ஆம் ஆண்டில் பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியூடாக மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டு வகை	இவ்வருடத்தில் இலங்கை வங்கியில் மேற்கொண்ட முதலீடுகள் (ரூ.)	31 டிசம்பர் 2020 இல் இலங்கை வங்கியில் உள்ள மீதி (ரூ.)
மீள்கொள்வனவு உடன்படிக்கையிலான முதலீடு	396,000,000	50,000,000
மொத்தம்	396,000,000	50,000,000

இதற்கும் மேலாக, பின்வரும் அட்டவணையானது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஆளுகை அங்கங்களின் அங்கத்தவர்களாக உள்ள நிறுவனங்களுடன் இடம்பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிடுகின்றது.

பணம்பெறுபவர்	கொடுப்பனவின் விபரம்	கொடுப்பனவுத் திகதி	செலுத்திய தொகை
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	இபிபஆ இன் அங்கத்துவ புதுப்பிப்பு ஓர் பயிற்றுவித்தல் நிறுவனமாக 2015 முதல் 2020	10/8/2020	77,500.00
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	இபிபஆ இன் 11 பணியாட்கள் 2020 ஆம் வருடத்தில் இபகநி இன் தேசிய கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக செலுத்தப்பட்ட கட்டணம்	11/19/2020	166,000.00
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	2021 ஆம் ஆண்டிற்கான இபிபஆ இல் தொழில்புரியும் பட்டயக் கணக்காளர்களின் அங்கத்துவ புதுப்பிப்பு கட்டணம்	12/31/2020	156,000.00
அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ்	அகடமி ஒவ் வைனான்சியல் இனால் நடாத்தப்பட்ட சபை கருத்தாய்வு கருத்தரங்கிற்கான பதிவீட்டுக் கட்டணம்	9/16/2020	13,000.00
அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ்	அகடமி ஒவ் வைனான்சியல் இனால் நடாத்தப்பட்ட கொள்வனவு வழிகாட்டி கருத்தரங்கிற்கான பதிவீட்டுக் கட்டணம்	9/22/2020	18,000.00
அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ்	அகடமி ஒவ் வைனான்சியல் இனால் நடாத்தப்பட்ட இ-கொள்வனவு பயிற்சிக் கருத்தரங்கிற்கான பதிவீட்டுக் கட்டணம்	11/19/2020	4,000.00

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/H/SEC/COM/1/20/5
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 21 June 2021

தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது தீர்வை நிதியத்தின் ("நிதியம்") 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலங்க நிதிச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

தீர்வை நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 1.3 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ஜாතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், நான் கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்தான தோற்றத்தின் பிரகாரம் நிதியத்தினால் முறையான கணக்கீட்டு பதிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.

2.2 செயலாற்றப்பட்ட செயல்முறைகள் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், இவை கணிசநிலையான விடயங்களுக்கு மற்றும் வரையறை செய்யப்பட்டுள்ளன, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை ;

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் நிதியத்தின் ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் நிதியத்தினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், நிதியத்தின் ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு நிதியமானது இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப நிதியமானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் நிதியத்தின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு



டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறானது	2020 ரூ.	2019 ரூ.
சொத்துக்கள்		
நடைமுறையல்லா சொத்துக்கள்		
திறைசேரி முறிகளிலான முதலீடு	969,902,655	1,174,059,197
வருமதியான பணியாட்டொகுதி கடன்	-	16,257,393
வாடகை வைப்பு	-	42,985,944
நடைமுறை சொத்துக்கள்		
12 மாதங்களினுள் வருமதியான பணியாட்டொகுதி கடன்கள்	-	5,089,937
அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்	-	306,607,487
திறைசேரி முறிகளிலான முதலீடு	204,156,542	738,949,681
திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி	46,794,137	63,504,429
மீள்கொள்வனவு உடன்படிக்கையில் வருமதியான வட்டி	183,599	371,575
வருமதியான தீர்வை	11,266,847	3,231,075
இபிபஆ இடமிருந்து வருதியானவை	130,331,961	84,150,977
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு	1,425,824,301	350,000,000
வங்கியிலுள்ள காசு	11,855,751	4,555,986
மொத்த சொத்துக்கள்	2,800,315,793	2,789,763,682
நிதிகள் மற்றும் பொறுப்புக்கள்		
பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள்		
திரண்ட நிதியம்	2,800,315,793	2,789,763,682
மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புக்கள்	2,800,315,793	2,789,763,682

பக்கங்கள் 110 முதல் 113 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பிற்கு பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்காக மற்றும் அதன் சார்பில்

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் தலைமை அதிபதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

விராஜ் தயாரத்ன ஜச
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

ஜி பி என் டில்ஹானி
பணிப்பாளர் நிதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு
11 மே 2021

நிதிச் செயற்திறன் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்து ஆண்டிற்கானது	குறிப்பு	2020 ரூ.	2019 ரூ.
வருமானம்			
வருடத்தில் பெறப்பட்ட தீர்வை		528,483,025	223,020,518
திறைசேரி முறிகளிலான வட்டி		167,565,413	223,049,955
திறைசேரி உண்டியல்களிலான வட்டி		5,724,385	31,259,631
மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி		46,017,563	10,656,817
பணியாட்டொகுதி கடன்களிலான வட்டி		-	849,384
மொத்த வருமானம்		747,790,386	488,836,305
செலவினம்			
செயற்பாட்டு செலவினங்களுக்கான இபிபஆ க்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள்		(396,457,822)	(417,350,886)
வங்கிக் கட்டணங்கள்		(13,796)	(50,175)
மொத்த செலவினம்		(396,471,618)	(417,401,061)
வருமான வரிச் செலவினம்	7	(28,434,785)	-
செலவினத்தினை விஞ்சிய வருமானம்		322,883,983	71,435,244

பக்கங்கள் 110 முதல் 113 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

தீர்வை நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ	2019 ரூ.
திரண்ட நிதியம்		
வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி	2,789,763,682	2,770,944,811
வருடத்திற்கான செலவினை விஞ்சிய வருமானம்	322,883,983	71,435,244
திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள்	(312,331,872)	(52,616,373)
வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி	2,800,315,793	2,789,763,682

பக்கங்கள் 110 முதல் 113 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ.	2019 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
செலவினத்தினை விஞ்சிய வருமானம்	322,883,983	71,435,244
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு/(குறைவு)	322,883,983	71,435,244
தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்		
பணியாட்டொகுதி கடன்களிலான (அதகரிப்பு)/குறைவு	21,347,330	713,208
வருமதியிலான தீர்வையின் (அதிகரிப்பு)/குறைவு	(8,035,772)	(1,822,794)
வருமதியிலான (அதிகரிப்பு)/குறைவு - சம்பத் வங்கி	-	4,611
வருமதியிலான (அதிகரிப்பு)/குறைவு - இபிபஆ	(46,180,984)	(84,150,977)
திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு	16,710,292	(31,291,094)
திறைசேரி உண்டியல்களில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு	-	1,904,008
மீள்கொள்வனவு உடன்படிக்கையில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு	187,976	(318,424
குத்தகை வாடகை வைப்பிலான (அதிகரிப்பு)/குறைவு	42,985,944	(2,475,444)
செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு / (குறைவு)	-	(23,756,398)
	27,014,786	(141,193,304)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	349,898,769	(69,758,060)
முதலீட்டு நடவடிக்கைகளுக்குள்ளான காசுப் பாய்ச்சல்கள்		
அரச நிறுவனங்களின் தற்காலிக மிகை நிதியத்திலிருந்தான முதலீடு	306,607,487	(18,055,738)
திரண்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட நிதிகள்	(312,331,872)	(52,616,373)
திறைசேரி முறிகளில் முதலீடு	738,949,681	295,456,865
திறைசேரி உண்டியல்களில் முதலீடு	-	134,892,100
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	733,225,296	359,676,854
காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)	1,083,124,065	289,918,794
காலத்தின் ஆரம்பத்தில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு சி)	354,555,986	64,637,192
காலத்தின் இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு டி)	1,437,680,052	354,555,986
குறிப்பு (சி)		
காலத்தின் ஆரம்பத்தில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு	350,000,000	57,420,000
வங்கியிலுள்ள காசு	4,555,986	7,217,192
மொத்தம்	354,555,986	64,637,192
குறிப்பு (டி)		
காலத்தின் இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு	1,425,824,301	350,000,000
வங்கியிலுள்ள காசு	11,855,751	4,555,986
மொத்தம்	1,437,680,052	354,555,986

பக்கங்கள் 110 முதல் 113 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1 பொதுவான தகவல்கள்

1.1 அறிக்கையிடப்படும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியமானது (தீர்வை நிதியம்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் அதன் பிரிவு 14பி(1) இன் கீழ் நிறுவப்பட்டது. இது இவ்வாறு குறிப்பிடுகின்றது. "பிரிவு 14 ஏ இன் கீழ் சுமத்தப்பட்ட தீர்வையானது வரவுவைக்கப்படுவதற்காக தீர்வை நிதியம் என்று அழைக்கப்படும் ஓர் நிதியம் உருவாக்கப்படல் வேண்டும்."

தீர்வை நிதியமானது இலங்கை சனநாயக சோசலி' குடியரசில் இடம்கொண்டுள்ளதுடன் அது கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம் 28 ஆம் மற்றும் 29 ஆம் மாடிகளில் அமைந்துள்ளது.

1.2 செயற்பாட்டின் தன்மை மற்றும் பிரதான நடவடிக்கைகள்

இபிபஆ சட்டத்தின் 14பி(2) இன் பிரகாரம், தீர்வை நிதியத்திலிருந்து பின்வரும் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்படும் அத்தகைய தொகைகள் செலுத்தப்படும் :

(அ) பிணையங்கள் சந்தையினை விருத்திசெய்தல்;

(ஆ) பிரிவு 38 இன் கீழ் உருவாக்கப்பட்ட இழப்பீட்டு நிதியத்தின் வரவில் காணப்படும் பணத்தை மேம்படுத்துதல் : மற்றும்

(இ) அதன் நோக்கங்களை அடைவதற்காக ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல், செயலாற்றுதல் மற்றும் வெளிப்படுத்தல்.

மேலும், இபிபஆ சட்டத்தின் பிரிவு 14பி(3) இன் ஏற்பாடுகளுக்கமைய, தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகையானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

மீளாய்வு செய்யப்படும் நிதியியல் காலப்பகுதியில் தீர்வை நிதியத்தின் குறிக்கோள்களின் தன்மையில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

1.3 இணக்கப்பாட்டு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியமானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

1.5 நிறுவன செயல்நிலைத் தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தீர்வை நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை தீர்வை நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தீர்வை நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

1.6 தயாரிப்பிற்கான அடிப்படை

இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இபிபஆ இன் கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 01 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இபிபஆ இன் தீர்வை நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களிலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் இபிபஆ இன் தீர்வை நிதியத்தின் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

தீர்வை நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய முழு ரூபாய்க்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் அட்டூறு அடிப்படையில் வரலாற்றுக் கிரய முறையில் காலம் முழுவதும் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும்

தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

1.8 செயல்பாட்டு மற்றும் காட்சியளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தீர்வை நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தில் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

1.9 கணிசநிலை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு முக்கியத்துவ வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை முக்கியமானவையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் தீர்வை நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள

அறிக்கையிடப்படும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.13 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2 சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

2.1 முதலீடுகள்

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டூறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறை பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில் செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

4 நிதியியல் செயற்திறன் கூற்று

4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ஓர் அட்டூறு அடிப்படையில் நிதிச் செயற்திறன் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது

4.2 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் காணப்படின் ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

5. செலவின அங்கீகாரம்

தீர்வை நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு நிதியியல் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக வருவாய்க்கு விதிக்கப்படுகின்றது.

6. காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமமானவைகளுக்குள் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் உள்ள மூன்று மாதங்களுக்குக் குறைவான முதிர்வினைக்கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றன.

7. வருமான வரிச் செலவினம்

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டவாறு, கணிப்பிடப்பட்டுள்ளன.

	2020 ரூ.	2019 ரூ.
வரி மதிப்பீட்டாண்டு 2019/2020 க்காக வருமான வரி குறை ஏற்பாடு	14,315,868	-
வரி மதிப்பீட்டாண்டு 2020/21 க்கான வருமான வரிச் செலவினம்	14,118,917	-
மொத்தம்	28,434,785	-

8. மூலதனக் கடப்பாடுகள்

31 டிசம்பர் 2020 இல் எந்த மூலதனக் கடப்படுகளும் காணப்படவில்லை.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

9. எதிர்பாரா பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2020 இல் எந்த எதிர்பாரா பொறுப்புக்களும் காணப்படவில்லை.

10. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

தீர்வை நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது. திரு. விராஜ் தயாரத்ன, ஜச அவர்கள் இபிபஆ இன் தலைவராக 08 ஜனவரி 2020 இல் நியமிக்கப்பட்டதுடன் அவர் தனது கடமையினை 22 ஜனவரி 2020 முதல் பொறுப்பேற்றார்.

10. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி...)

கீழே குறிப்பிட்டுள்ளவாறு 2020 ஆம் ஆண்டில் பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்கள் பதவி வகித்தார்கள்.

- திரு. மனில் ஜயசிங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் பதவியினை வகிப்பதனால் 07 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. டி.என்.ஆர் சிறிவர்தன அவர்கள் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி என்ற வகையில் பதவிவழி அங்கத்தவராவார்.
- திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க அவர்கள் பொதுத் திறைசேரியின் பிரதி செயலாளர் என்ற வகையில் 16 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுஹத கமலத் ஜச அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சிசிர ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. நரே' அபேசேகர அவர்கள் 6 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழ் குறிப்பிட்டவாறு பதவியிலிருந்து நீங்கினார்கள்.

- இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்தமையினால் திரு. எச்.ஏ.கருணாரத்ன அவர்கள் 23 நவம்பர் 2018 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 08 செப்டம்பர் 2020 இல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.
- திரு. கே.எம். மஹிந்த சிறிவர்தன அவர்கள் 15 செப்டம்பர் 2020 இல் இலங்கை வங்கியின் பிரதி ஆளுநர் பதவியினை வகித்ததனால் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 31 டிசம்பர் 2020 இல் பதவியிலிருந்து நீங்கினார்.

மீளாய்வாண்டில் பதவி வகித்த ஆணைக்குழு அங்கத்தவர்களின் தொடர்புகளை பின்வரும் அட்டவணையானது காட்சிப்படுத்துகின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு.விராஜ் தயாரத்ன, ஜச	தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	நம்பிக்கைப் பொறுப்பாளராக 08 ஜனவரி 2020 இல் நியமிக்கப்பட்டதுடன் 22 ஜனவரி 2020 இல் பதவியினைப் பொறுப்பேற்றார்.
திரு.மனில் ஜயசிங்க	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	07 ஜனவரி 2020 முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
	எர்ன்ஸ்ட் அன்ட் யங்	பங்காளி
திரு.டிஎன்.ஆர்.சிறிவர்தன	கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்	கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை	அங்கத்தவர்
திரு.ஆர்.எம்.பி.ரத்நாயக்க	பொது திறைசேரி	பிரதி செயலாளர்
	இலங்கை வங்கி (இவ)	28 ஏப்ரல் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	அகடமி ஒவ் வைனான்சியல் ஸ்டடீஸ் (கரன்டி) லிமிட்டட்	24 ஆகஸ்ட் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியம் (உகஅநி)	14 செப்டம்பர் 2020 முதல் ஆணையாளர் மற்றும் தலைவர்
	தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	16 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர்
திரு. சுனில் லங்காதிலக்க	நிதி அமைச்சு	சபை அங்கத்தவர் (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டத்தின் விசாரணை சபையின் அங்கத்தவர்) 03 ஜனவரி 2021 முதல் மூன்று வருடங்களுக்கு.
திரு. சிசிர ரத்நாயக்க	பூச்சியம்	பூச்சியம்
திரு. நரே' அபேசேகர	பூச்சியம்	பூச்சியம்

பினவரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவி விலகிய ஆணைக்குழுவின் பதவிவழி அங்கத்தவர்களது தொடர்பினை காண்பிக்கின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு. எச்.ஏ.கருணாரத்ன	இலங்கை மத்திய வங்கி	05 செப்டம்பர் 2020 வரை பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்ரீலங்கா	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
	கொழும்பு டொக்யாட் பிஎல்சி	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
திரு. கே.எம்.மஹிந்த சிறிவர்தன	இலங்கை மத்திய வங்கி	பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	பாதுகாப்பு அமைச்சு - "அப்பி வெனுவென் அப்பி நிதியம்" சபையின் முகாமைத்துவச் சபை	02 மார்ச் 2020 முதல் அங்கத்தவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை அங்கத்தவர்

வழக்கமான வணிகப் போக்கில் சந்தை வீதங்களில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர, மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் மீளாய்வாண்டில் வேறு கொடுக்கல் வாங்கல்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இபிபஆ இன் தீர்வை நிதியமானது இலங்கை வங்கியில் (இவ) பின்வரும் நடைமுறை கணக்குகளை பராமரிப்பதுடன் வங்கி மீதியானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது;

நடைமுறை வங்கிக் கணக்கின் பெயர்	கணக்கு இலக்கம்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி	31.12.2019 இல் உள்ளவாறான மீதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்வை நிதியம்	0009834430	1,862,994	1,576,566

2020 ஆம் ஆண்டில் பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டின் வகை	இவ இல் இவ்வாண்டில் மேற்கொண்ட முதலீடு (ரூ.)	31 டிசம்பர் 2020 இல் இவ இல் உள்ளவாறான மீதி (ரூ.)
திறைசேரி முறிகள்	பூச்சியம்	776,677,247
மீள்கொள்வனவு உடன்படிக்கையிலான முதலீடு	585,000,000	பூச்சியம்
மொத்தம்	585,000,000	776,677,247

இபிபஆ இன் தீர்வை நிதியம் இலங்கை வங்கி நிதி முகாமையாளராக செயற்படும் அரசதுறை நிறுவனங்களின் தற்காலிக மிகை நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தில் ரூபா 312,331,872.- பெறுமதியான முதலீடுகளை 01 ஏப்ரல் 2020 வரை வைத்திருந்ததுடன், அத்திகதியில் இவை அரசாங்கத் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்குள் உள்வாங்கப்பட்டது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAF/H/SEC/COM/1/20/5
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 21 June 2021

தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது இழப்பீட்டு நிதியத்தின் ("நிதியம்") 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, இழப்பீட்டு நிதியத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்தின் அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 1.3 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.

2.2 செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் ஆணைக்குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், ஆணைக்குழுவினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு ஆணைக்குழு இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப ஆணைக்குழுவானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்டுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு

டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறானது	2020 ரூ.	2019 ரூ.
சொத்துக்கள்		
நடைமுறையல்லா சொத்துக்கள்		
திறைசேரி முறிகளிலான முதலீடுகள்	242,875,161	282,481,909
நடைமுறை சொத்துக்கள்		
திறைசேரி முறிகளில் முதலீடு	39,606,748	98,973,250
திறைசேரி முறிகளில் வருமதியான வட்டி	9,308,709	10,399,835
மீள்கொள்வனவு உடன்படிக்கையில் வருமதியான வட்டி	32,027	73,489
மீள்கொள்வனவு உடன்படிக்கையில் முதலீடு	248,721,328	69,852,733
வங்கியிலுள்ள மீதி	99,580	182,728
மொத்த சொத்துக்கள்	540,643,553	461,963,944
நிதிகள் மற்றும் பொறுப்புக்கள்		
பயன்படுத்தப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கங்கள்		
திரண்ட நிதியம்	521,752,939	461,963,944
நடைமுறை பொறுப்புக்கள்		
இபிபஆ க்கு செலுத்தவேண்டியவை	18,890,614	-
மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புக்கள்	540,643,553	461,963,944

பக்கங்கள் 121 முதல் 124 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்காக மற்றும் அதன் சார்பாக

சிந்தக்க மென்டிஸ்
பணிப்பாளர் தலைமை அதிபதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

விராஜ் தயாரத்ன ஜச
தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

ஜி.பி.என்.டில்ஹானி
பணிப்பாளர் நிதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

கொழும்பு
11 மே 2021

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

நிதியியல் செயற்திறன் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	2020 ரூ.	2019 ரூ.
வருமானம்			
திறைசேரி முறிகளிலான வட்டி		33,778,140	42,191,522
மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகளிலான வட்டி		8,602,751	2,345,856
இவ்வருடத்தில் பெறப்பட்ட ஒத்திணங்கல் குற்றப்பணங்கள்		36,300,000	-
மொத்த வருமானம்		78,680,891	44,537,378
செலவினம்			
வங்கிக் கட்டணம்		(1,282)	(15,990)
மொத்த செலவினம்		(1,282)	(15,990)
வருமான வரிச் செலவினம்	7	(18,890,614)	-
செலவினத்தினை விஞ்சிய வருமானம்		59,788,995	44,521,388

பக்கங்கள் 121 முதல் 124 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இழப்பீட்டு நிதியத்தின் மாற்றங்களிலான கூற்று

31 டிசம்பர் 2020 நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ.	2019 ரூ.
திரண்ட நிதியம்		
வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி	461,963,944	417,442,556
செலவினத்தினை விஞ்சிய வருமானம்	59,788,995	44,521,388
வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி	521,752,939	461,963,944

பக்கங்கள் 121 முதல் 124 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ.	2019 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
செலவினை விஞ்சிய வருமானம்	59,788,995	44,521,389
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு/(குறைவு)	59,788,995	44,521,389
தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்		
திறைசேரி முறிகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு	1,091,126	(5,026,281)
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் வருமதியான வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு	41,462	(71,939)
இபிஆ க்கு செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு / (குறைவு)	18,890,614	-
	20,023,201	(5,098,220)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்சல்)	79,812,197	39,423,169
முதலீட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்கள்		
திறைசேரி முறிகளில் முதலீடு	98,973,250	29,045,670
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	98,973,250	29,045,670
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு /(குறைவு)	178,785,447	68,468,839
காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு ஈ)	70,035,461	1,566,623
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு எவ்)	248,820,908	70,035,461
குறிப்பு (ஈ)		
காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு	69,852,733	1,458,573
வங்கியிலுள்ள காசு	182,728	108,050
மொத்தம்	70,035,461	1,566,623
குறிப்பு (எவ்)		
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலான முதலீடு	248,721,328	69,852,733
வங்கியிலுள்ள காசு	99,580	182,728
மொத்தம்	248,820,908	70,035,461

பக்கங்கள் 121 முதல் 124 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1 பொதுவான தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியமானது (இழப்பீட்டு நிதியம்) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றால் அதன் பிரிவு 38 (1) இன் கீழ் நிறுவப்பட்டது. இது இவ்வாறு குறிப்பிடுகின்றது. "யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளருக்கு ஏற்படும் பணரீதியான நட்டத்திற்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக இழப்பீட்டு நிதியம் என்றழைக்கப்படும் ஓர் நிதியம் நிறுவப்படல் வேண்டும்".

இழப்பீட்டு நிதியமானது இலங்கை சனநாயக சோசலி' குடியரசில் இடம்கொண்டுள்ளதுடன் அது கொழும்பு 1, எச்சிலன் சதுக்கம், உலக வர்த்தக மையம், கிழக்குக் கோபுரம் 28 ஆம் மற்றும் 29 ஆம் மாடிகளில் அமைந்துள்ளது.

1.2 செயற்பாடுகளின் தன்மை மற்றும் பிரதான நடவடிக்கைகள்

இபிபஆ சட்டத்தின் பிரிவு 38(1) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்தினை நிறுவுவதற்கான காரணம், யாரேனும் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தரகர் அல்லது உரிமமளிக்கப்பட்ட பங்கு வர்த்தகர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திப்பதற்கு ஆற்றலின்றி காணப்படுவதன் விளைவாக யாரேனும் முதலீட்டாளருக்கு ஏற்படும் பணரீதியான நட்டத்திற்கு இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காகும்.

மேலும், இபிபஆ சட்டத்தின் பிரிவு 38 (2) இழப்பீட்டு நிதியம் பின்வருவனவற்றைக் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

(அ) நிதியத்தின் நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடிய அத்தகைய பணத் தொகைகள்;

(ஆ) பிரிவு 51 ஏ இன் கீழ் நிதிக்கு வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத் தொகைகள்;

(இ) பிரிவு 14 பி இன் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படக்கூடிய அத்தகைய பணத் தொகைகள்.

இதற்கும் மேலாக, இபிபஆ சட்டத்தின் பிரிவு 38 (3) இன் பிரகாரம், இழப்பீட்டு நிதியத்திற்கு சொந்தமான பணமானது ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கேற்ப அத்தகைய விதத்தில் ஆணைக்குழுவினால் முதலீடு செய்யப்படலாம்.

மீளாய்வு நிதியாண்டில் இழப்பீட்டு நிதியத்தின் குறிக்கோள்களின் தன்மையில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை.

1.3 இணக்கப்பாட்டு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியமானது அதன் நிதிக்கூற்றுக்களை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.அ.க.நி.) ஏற்ப தயாரித்துள்ளது. நிதிக்கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களில் ஏற்படும் மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் இவற்றுடன் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

1.5 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியத்தின் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இழப்பீட்டு நிதியம் எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றை இழப்பீட்டு நிதியம் எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது இழப்பீட்டு நிதியம் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்ததுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் காலம்பூராவும் முறையாகப் பிரயோகிக்கப்பட்டன.

1.6 தயாரிப்பின் அடிப்படை

இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இபிபஆ இன் கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 01 ஜனவரி 2020 முதல் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழுவானது இபிபஆ இன் இழப்பீட்டு நிதியத்திற்கு தனியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானித்தது. எனவே, இந்த நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயற்திறன் கூற்று, ஒதுக்கங்களிலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றுடன் இபிபஆ இன் இழப்பீட்டு நிதியத்தின் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனை விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது.

இழப்பீட்டு நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய முழு ரூபாய்க்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் அட்டூறு அடிப்படையில் வரலாற்றுக் கிரய முறையில் காலம் முழுவதும் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, அடுத்துவரும் குறிப்புகளில் கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் காலம் முழுவதும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

1.7 மதிப்பீடுகள் மற்றும் நியாயப்பாடுகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பானது முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளவேண்டுமென வேண்டப்படுகின்றது. வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்களும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என அறிக்கையிடப்படும் தொகையில் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அனுமானங்கள் என்பன தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பனவற்றின் நிச்சயமற்றதன்மையானது, எதிர்வரும் காலப்பகுதியில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களது கொண்டுசெல்லப்படும் தொகையில் கணிசமானளவு செம்மையாக்கல்கள் தேவைப்படும் விளைவினை உருவாக்கலாம். மதிப்பீடுகளும் உள்ளார்ந்த அனுமானங்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. மதிப்பீடுகளுக்கான திருத்தியமைத்தல்கள் வருங்காலத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன

1.8 செயல்பாட்டு மற்றும் காட்சியளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது இழப்பீட்டு நிதியத்தின் செயற்பாட்டு நாணயமாகும். மீளாய்வாண்டில் நிறுவனத்தின் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு நாணயத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் யாவும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்ற சமயத்தில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன.

1.9 கணிசநிலை மற்றும் திரள்வு

ஒத்த வகையான உருப்படியின் ஒவ்வொரு முக்கியத்துவ வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாட்டினை உடைய உருப்படிகள் அவை முக்கியமானவையாக இல்லாதவிடத்து மாத்திரமே தனித்தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

1.10 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன பின்வருவனவாறு தேவைப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி ஈடுசெய்யப்படவில்லை. இ.அ.க.நி. அனுமதித்தால் அல்லது கொடுக்கல் வாங்கல் அல்லது ஏனைய நிகழ்வின் சாராம்சத்தினை ஈடுசெய்தல் பிரதிபலித்தால், பயனாளிகள் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் அவை ஏற்பட்ட நிலைமைகள் குறித்து புரிந்துகொள்ளுதல் மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்கான ஆற்றலிலிருந்து விலகியிருந்தால்.

1.11 ஒப்பிடப்படும் தகவல்கள்

ஒப்பிடப்படும் எண்கள் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

1.12 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.13 கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2 சொத்துக்களும் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

2.1 முதலீடுகள்

முதலீடுகள் உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் குறுங்கால முதலீடுகளிலும், அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்க திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலை மற்றும் அறிக்கையிடும் காலப்பகுதி வரைக்குமான அட்டூறு வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

3.1 பொறுப்புக்கள்

நிதி நிலைமைக் கூற்றில் வகைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறை பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து கேட்டவுடன் அல்லது ஒரு வருட காலத்திற்குள் கோரும் பட்சத்தில் செலுத்தவேண்டியவற்றைக் கொண்டுள்ளன. நடைமுறையல்லாத பொறுப்புகள் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் செலுத்தவேண்டிய நிலுவைகளைக் கொண்டுள்ளன.

தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கிரயத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

4 நிதியியல் செயற்திறன் கூற்று

4.1 வட்டி வருமானம்

முதலீடுகளிலான வட்டி வருமானமானது நிதியியல் செயற்திறன் கூற்றில் ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.2 பெறப்பட்ட குற்றப்பணம்

இபிபஆ சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இழப்பீட்டு நிதியத்திற்கு பெறப்படும் குற்றப்பணங்கள் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

4.3 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம், ஏதேனும் இருப்பின் அவை ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

5 செலவின அங்கீகாரம்

இழப்பீட்டு நிதியத்தின் அனைத்து செலவினங்களும் ஓர் அட்டூறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு நிதிச் செயற்திறனை தெரிந்துகொள்வதற்காக வருமானத்தில் ஆட்படுத்தப்படுகின்றன.

6 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக, காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள், கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளுடனான மூன்று மாதங்களுக்கும் குறைவான மீள்கொள்வனவு உடன்படிக்கை முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

7 வருமான வரிச் செலவினம்

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டவாறு, பிரகாரம் கணிப்பிடப்படுகின்றது.

	2020 ரூ.	2019 ரூ.
வரி மதிப்பீட்டாண்டு 2020/2021 க்கான வருமான வரிச் செலவினம்	18,890,614	-
மொத்தம்	18,890,614	-

8 மூலதன கடப்பாடுகள்

31 டிசம்பர் 2020 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

9 எதிர்பாரா பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2020 இல் எவ்விதமான எதிர்பாரா பொறுப்புக்களும் காணப்படவில்லை.

10 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

இழப்பீட்டு நிதியமானது இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவர்களினால் முகாமைப்படுத்தப்படுகின்றது. திரு. விராஜ் தயாரத்ன ஜச அவர்கள் 08 ஜனவரி 2020 முதல் இபிஆ இன் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் இவர் 22 ஜனவரி 2020 இல் தனது பதவியினைப் பொறுப்பேற்றார்.

2020 ஆம் ஆண்டில் கீழ்கண்டவாறு பின்வரும் ஆணைக்குழு அங்கத்தவர்கள் பதவி வகித்தார்கள்.

- திரு. மனில் ஜயசிங்க அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தலைவர் என்ற வகையில் 07 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. டி.என்.ஆர் சிறிவர்தன அவர்கள் கம்பனிகள் பதிவாளர் அதிபதி என்ற வகையில் பதவிவழி அங்கத்தவராயுள்ளார்.
- திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க அவர்கள் பொதுத் திறைசேரியின் பிரதி ஆளுநர் என்ற வகையில் 16 ஜனவரி 2020 முதல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுஹத கமலத் ஜச அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சிசிர ரத்நாயக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. சுனில் லங்காதிலக்க அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.
- திரு. நரே' அபேசேகர அவர்கள் 16 ஜனவரி 2020 முதல் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆணைக்குழுவின் பின்வரும் பதவிவழி அங்கத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பதவியிலிருந்து நீங்கினார்கள்.

- திரு. எச்.ஏ.கருணாரத்ன அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக பதவி வகித்தமையினால் 23 நவம்பர் 2018 இல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 08 செப்டம்பர் 2020 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்து நீங்கினார்.
- திரு. கே.எம்.மஹிந்த சிறிவர்தன அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரத ஆளுநராக பதவி வகித்தமையினால் 15 செப்டம்பர் 2020 இல் பதவிவழி அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 31 டிசம்பர் 2020 முதல் அங்கத்தவர் பதவியிலிருந்த நீங்கினார்.

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் வைத்திருந்த தொடர்புகளை விளக்குகின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு.விராஜ் தயாரத்ன ஜச	தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	08 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு 22 ஜனவரி 2020 இல் பதவியினை பொறுப்பேற்றார்.
திரு. மனில் ஜயசிங்க	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	07 ஜனவரி 2020 முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
	எர்ன்ஸ்ட் அன்ட் யங்	பங்காளி
திரு.டி.என்.ஆர்.சிறிவர்தன	கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்	கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதி
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம்	பதவிவழி அங்கத்தவர்
	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை	அங்கத்தவர்
திரு.ஆர்.எம்.பி.ரத்நாயக்க	பொது திறைசேரி	பிரதி செயலாளர்
	இலங்கை வங்கி (இவ)	28 ஏப்ரல் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	அகடமி ஒவ் வையான்சியல் ஸ்டடீஸ் (கரன்டி) லிமிட்டட்	24 ஆகஸ்ட் 2020 முதல் பதவிவழி அங்கத்தவர்
	உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியம் (உகஅநி)	ஆணையாளர் மற்றும் 14 செப்டம்பர் 2020 முதல் தலைவர்
	தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	16 ஜனவரி 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர்
திரு.சுனில் லங்காதிலக்க	நிதி அமைச்சு	சபை அங்கத்தவர் (2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அந்நிய செலாவணிச் சட்டத்தின் விசாரணை சபையின் அங்கத்தவர்) 03 ஜனவரி 2021 முதல் மூன்று வருடங்களுக்கு
திரு. சிசிர ரத்நாயக்க	பூச்சியம்	பூச்சியம்
திரு. நரே' அபேசேகர	பூச்சியம்	பூச்சியம்

பின்வரும் அட்டவணையானது மீளாய்வாண்டில் பதவிவழி அங்கத்தவர்களாக நீங்கியவர்களின் தொடர்பினை காண்பிக்கின்றது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு
திரு. எச்.ஏ.கருணாரத்ன	இலங்கை மத்திய வங்கி	05 செப்டம்பர் 2020 வரை பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்ரீலங்கா	05 செப்டம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
	கொழும்பு டொக்யாட் பிஎல்சி	05 செப்டம்பர் 2020 வரை பணிப்பாளர்
திரு.கே.எம்.மஹிந்த சிறிவர்தன	இலங்கை மத்திய வங்கி	பிரதி ஆளுநர்
	இலங்கை வங்கியாளர்கள் நிருவகம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	இலங்கை கடன் தகவல் மையம்	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்
	பாதுகாப்பு அமைச்சு - 'அப்பி வெனுவென் அப்பி வன்ட்' சபையின் முகாமைத்துவச் சபை	02 மார்ச் 2020 முதல் அங்கத்தவர்
	இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழு	05 செப்டம்பர் 2020 முதல் 31 டிசம்பர் 2020 வரை தலைவர்

வழக்கமான வணிகப் போக்கில் சந்தை வீதங்களிலான கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மீளாய்வாண்டில் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் வேறு எந்த கொடுக்கல் வாங்கலும் பதிவுசெய்யப்படவில்லை.

இபிபஆ இன் இழப்பீட்டு நிதியமானது இலங்கை வங்கியில் (இவ) பின்வரும் நடைமுறை கணக்கினை பராமரிக்கின்றது மற்றும் வங்கி மீதியானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நடைமுறை கணக்கின் பெயர்	கணக்கு இலக்கம்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி	31.12.2019 இல் உள்ளவாறான மீதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் இழப்பீட்டு நிதியம்	75433985	99,580	182,728

பின்வரும் முதலீடுகள் 2020 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டு வகை	இவ்வாண்டில் இலங்கை வங்கியில் மேற்கொண்ட முதலீடு (ரூ.)	இலங்கை வங்கியில் 31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறான மீதி (ரூ.)
திறைசேரி முறிகள்	பூச்சியம்	158,799,420
மீள்கொள்வனவு உடன்படிக்கையிலான முதலீடு	171,000,000	பூச்சியம்
மொத்தம்	171,000,000	158,799,420

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. BAF/H/SEC/COM/1/20/5
ඔබේ අංකය உமது இல. Your No.
දිනය திகதி Date 21 June 2021

தலைவர்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினது தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் ("நிதியம்") 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 21/22 மே 1998 திகதியிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புறுதி இலக்கம் 1376 இன் பந்தி 11 (டி) என்பவற்றின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்தின் அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 முகாமைத்துவத்தின் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் பொறுப்புக்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஓர் நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான நிதியத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் நிதியத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமைக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு நிதியம் வேண்டப்படுகின்றது.

1.4 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கருதத்தக்கதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்,

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான நிதியத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் நிதியம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுமை தொடர்பாக பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு ஒத்ததாக காணப்படுகின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றது.



டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறானது	குறிப்பு	2020 ரூ.	2019 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
திறைசேரி முறிகளில் முதலீடு		473,635,565	628,786,625
நிலையான வைப்புகளில் முதலீடு		300,000,000	-
நடைமுறை சொத்துக்கள்			
திறைசேரி முறிகளில் முதலீடு		155,151,060	217,524,480
வருமதியான வட்டி	5	28,265,386	21,994,314
மீள்கொள்வனவு உடன்படிக்கையிலான முதலீடுகள்		30,486,575	75,100,000
வங்கியிலுள்ள காசு		238,938	430,853
மொத்த சொத்துக்கள்		987,777,524	943,836,272
ஒதுக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள்			
ஒதுக்கங்கள்			
கொடை - திறைசேரி		50,000,000	50,000,000
கொடை - தீர்வை நிதியம்		100,000,000	100,000,000
கொடை - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை		100,000,000	100,000,000
திரண்ட நிதியம்		732,213,570	657,864,112
நடைமுறை பொறுப்புக்கள்			
செலுத்தவேண்டிய வருமான வரி		5,453,954	35,822,160
ஏனைய செலுத்தவேண்டியவைகள்	6	110,000	150,000
மொத்த ஒதுக்கங்கள் மற்றும் பொறுப்புக்கள்		987,777,524	943,836,272

பக்கங்கள் 131 முதல் 134 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்கள் பொறுபாளியாவார்கள்.

தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்காகவும் அதன் சார்பிலும்

சிந்தக்க மென்டிஸ்
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

விராஜ் தயாரத்ன ஜச
நம்பிக்கைப் பொறுப்பாளர் - தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

கொழும்பு
11மே 2021

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

நிதியியல் செயற்திறன் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	2020 ரூ.	2019 ரூ.
வருமானம்			
முதலீடுகளிலான வட்டி - மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்		6,316,460	4,728,020
முதலீடுகளிலான வட்டி - திறைசேரி முறிகள்		75,022,727	86,456,671
முதலீடுகளிலான வட்டி - நிலையான வைப்புகள்		9,780,823	-
மொத்த வருமானம்		91,120,010	91,184,691
செலவினம்			
கணக்காய்வுக் கட்டணங்கள்		(176,000)	(166,370)
வங்கிக் கட்டணங்கள்		(750)	(15,870)
மொத்த செலவினம்		(176,750)	(182,240)
வருமான வரிச் செலவினம்	7	(16,593,802)	(35,822,160)
செலவினத்தினை விஞ்சிய வருமானம்		74,349,458	55,180,291

பக்கங்கள் 131 முதல் 134 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

தேறிய சொத்துக்களின் மாற்றங்களிலான கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ.	2019 ரூ.
திரண்ட நிதியம்		
வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான மீதி	657,864,112	602,683,822
வருடத்திற்கான செலவினத்தினை விஞ்சிய வருமானம்	74,349,458	55,180,291
வருடத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி	732,213,570	657,864,112

பக்கங்கள் 131 முதல் 134 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது	2020 ரூ.	2019 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
செலவினத்தினை விஞ்சிய வருமானம்	74,349,458	55,180,292
தொழில்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு/(குறைவு)	74,349,458	55,180,292
தொழிற்படு மூலதனத்திலான மாற்றம்		
ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு)/குறைவு	(6,271,072	(4,548,001)
செலுத்தவேண்டியவைகளிலான அதிகரிப்பு /(குறைவு)	(30,408,206)	35,662,160
	(36,679,278)	31,114,159
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)	37,670,180	86,294,451
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
திறைசேரி முறிகளில் முதலீடுகள்	217,524,480	(40,243,085)
நிலையான வைப்புகளில் முதலீடுகள்	(300,000,000)	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் /(வெளிப்பாய்ச்சல்)	(82,475,520)	(40,243,085
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)	(44,805,340)	46,051,366
காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு ஏ)	75,530,853	29,479,487
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் (குறிப்பு பி)	30,725,513	75,530,853
குறிப்பு (ஏ)		
காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகள்	75,100,000	29,000,000
வங்கியிலுள்ள காசு	430,853	479,487
மொத்தம்	75,530,853	29,479,487
குறிப்பு (பி)		
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்		
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடுகள்	30,486,575	75,100,000
வங்கியிலுள்ள காசு	238,938	430,853
மொத்தம்	30,725,513	75,530,853

பக்கங்கள் 131 முதல் 134 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. பொதுவான தகவல்கள்

1.1 இணக்கப்பாட்டு கூற்று

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது (தீ.உ.நி.) ஓர் இலாபமீட்டாத நம்பிக்கை நிதியமாகும். இதன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் மற்றும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாவார்கள்.

1.3 நிறுவன செயல்நிலைத் தொடர்ச்சி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது தீ.உ.நி. இன் தொடர்ச்சியாக தொடர்ந்து செல்லக்கூடிய ஆற்றலை மதிப்பீடு செய்தனர். நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது தீ.உ.நி. எதிர்வரும் காலங்களில் தனது செயற்பாட்டு வாழ்க்கையைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என ஓர் நியாயமான எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளார்கள். எதிர்காலம் பற்றிய கிடைக்கப்பெற்ற அனைத்து தகவல்களையும் கருத்திற்கொண்டு ஒழித்துக்கட்டலுக்கோ அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கான தேவையொன்றையோ நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையானது எதிர்பார்க்கவில்லை. இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தீ.உ.நி. இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நிறுவன செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினை பின்பற்றுவதனைத் தொடர்ந்தார்கள்.

1.4 தயாரிப்பதற்கான அடிப்படை

தீ. உ. நி இன் நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில், கிட்டிய முழு ரூபாய்க்கு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் வரலாற்றுச் செலவு மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்து வரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

1.5 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் தினத்தின் பின்னர் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கவனத்திற்கொள்ளப்பட்டு தேவையானவிடத்து நிதிக்கூற்றுக்களில் உகந்த செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.6 கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்

கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த ஆண்டில் கடைப்பிடிக்கப்பற்றவற்றுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

1.7 ஒப்பிடப்படும் எண்கள்

ஒப்பிடப்படும் எண்கள் தேவையேற்படும் சமயங்களில் நடைமுறை நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாற்றல்களுக்கு அமைவாக செம்மையாக்கப்பட்டுள்ளன.

2. சொத்துக்களும் அவற்றின் பெறுமான மதிப்பீட்டின் ஆதாரங்களும்

2.1 முதலீடுகள்

முதலீடுகள் அரசாங்கத் திறைசேரி முறிகளிலும், உரிமமளிக்கப்பட்ட அரச வங்கிகளில் நிலையான வைப்புகளிலும் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளிலும் மேற்கொள்ளப்பட்டு அவை கொள்விலையில் மற்றும் அறிக்கையிடப்படும் காலம் வரையான அட்டுறு வட்டியுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2 வருமதிகள்

வருமதிகள் மதிப்பிடப்பட்ட தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

3.1 ஓய்வுபெறல் நலன்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய எவ்வித பொறுப்புக்களும் எழவில்லை. ஏனெனில் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தை நம்பிக்கைப் பொறுப்பாளர் நிர்வகிப்பதால் நிதியத்தில் நிரந்தர உத்தியோகத்தர் எவரும் வேலைக்கு அமர்த்தப்படவில்லை.

3.2 கொடுபடவேண்டிய கணக்குகள்

கொடுபடவேண்டியவைகள் கொள்விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. நிதியியல் செயற்திறன் கூற்று

4.1 வருமான அங்கீகாரம்

முதலீடுகளிலிருந்தான வட்டியானது ஓர் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.2 செலவின அங்கீகாரம்

தீ.உ.நி. இனைப் பேணுவதில் ஏற்படும் சகல செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு நிதியியல் செயற்திறனை அறிவதற்காக வருமானத்தில் இருந்து கழிக்கப்படுகின்றது.

4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றிற்காக, காசும் காசுக்குச் சமனானவையும், கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கிகளிடம் மேற்கொள்ளப்பட்ட மூன்று மாதங்களுக்குட்பட்ட முதிர்வினைக் கொண்ட மீள்கொள்வனவு உடன்படிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

5. வருமதிகள்

	2020 ரூ.	2019 ரூ.
வருமதியான வட்டி		
- திறைசேரி முறிகள்	18,480,637	21,915,304
- நிலையான வைப்புகள்	9,780,823	-
- மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்	3,926	79,010
மொத்தம்	28,265,386	21,994,314

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

6. செலுத்தவேண்டியவைகள்

	2020 ரூ.	2019 ரூ.
கணக்காய்வுக் கட்டணங்கள்	110,000	150,000
மொத்தம்	110,000	150,000

7. வருமான வரிச் செலவினம்

வருமான வரிக்கான பொறுப்பானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித்திணைக்களச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டது. பிரகாரம் கணிக்கப்பட்டுள்ளது.

	2020 ரூ.	2019 ரூ.
வரி மதிப்பீட்டாண்டு 2018/2019 க்கான வருமான வரிச் செலவினம்	-	14,205,587
வரி மதிப்பீட்டாண்டு 2019/2020 க்கான வருமான வரிச் செலவினம்	224,015	21,616,573
வரி மதிப்பீட்டாண்டு 2020/2021 க்கான வருமான வரிச் செலவினம்	16,369,787	-
மொத்தம்	16,593,802	35,822,160

8. மூலதனக் கடப்பாடுகள்

31 டிசம்பர் 2020 இல் எவ்விதமான மூலதனக் கடப்பாடுகளும் காணப்படவில்லை.

9. எதிர்பாரா பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2020 இல் எவ்விதமான எதிர்பாரா பொறுப்புக்களும் காணப்படவில்லை.

10. அறிக்கையிடப்படும் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நிகழ்வுகளை நெருக்கமாக கண்காணிப்பதுடன் தேவையானவிடத்து செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் பொருத்தமானவாறு ஐந்தொகையின் பின்னரான கணிசநிலை நிகழ்வுகள் தொடர்பாக நடைமுறை நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

11. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்

நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்களாக, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (இபிபஆ) தலைவர் மற்றும் பணிப்பாளர் தலைமை அதிபதி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொபப) தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.
தீ.உ.நி. இன் பின்வரும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் 2020 ஆம் ஆண்டில் பதவி வகித்தார்கள்.

- திரு. விராஜ் தயாரத்ன ஐச, தலைவர் இபிபஆ (08 ஜனவரி 2020 முதல் நியமிக்கப்பட்டு 22 ஜனவரி 2020 முதல் கடமையினைப் பொறுப்பேற்றார்)
- திரு. துமித் பர்னாந்து, தலைவர் கொபப (01 ஜூலை 2020 இல் நியமிக்கப்பட்டார்)
- திரு. ரஜீவ பண்டாரநாயக்க, பிரதம நிறைவேற்று அதிகாரி கொபப
- திரு. ஆர்.எம்.பி.ரத்நாயக்க, ஆணைக்குழு அங்கத்தவர் மற்றும் திறைசேரியின் பிரதி செயலாளர் (16 ஜனவரி 2020 முதல் நியமிக்கப்பட்டார்)
- திரு. சிந்தக்க மென்டிஸ், பணிப்பாளர் தலைமை அதிபதி இபிபஆ (02 மார்ச் 2020 முதல் நியமிக்கப்பட்டார்)
- திரு. ரே அபேவர்தன, முன்னாள் தலைவர் கொபப (30 ஜூன் 2020 முதல் நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியிலிருந்து நீங்கினார்)
- திரு. வஜிர விஜேகுணவர்தன, முன்னாள் பணிப்பாளர் தலைமை அதிபதி இபிபஆ (28 பெப்ரவரி 2020 முதல் நம்பிக்கை பொறுப்பாளர் பதவியிலிருந்து நீங்கினார்.

பின்வரும் அட்டவணையானது இவ்வருடத்தில் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களது தொடர்புகளை விளக்குகின்றது.

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு	பங்குரித்துவம், ஏதும் இருப்பின்
திரு.விராஜ் தயாரத்ன ஜச	இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	08 ஜனவரி 2020 முதல் தலைவர் நியமிக்கப்பட்டார் மற்றும் 22 ஜனவரி 2020 இல் கடமையினை பொறுப்பேற்றார்.	பூச்சியம்
திரு.துமித் பர்னாந்து	கொழும்பு பங்குப் பரிவர்த்தனை	01 ஜூலை 2020 முதல் தலைவர்	பூச்சியம்
	பெந்தேரா வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	100%
	பிவி கோல் ப்ரொப்பர்ட்டீஸ் (பிரைவேட்)லிமிட்டட்	பணிப்பாளர்	100%
	பிவி ஹில்டொப் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்)லிமிட்டட்	பணிப்பாளர்	100%
	ஓமாக் டென்னோலொஜீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	தலைவர்	<10%
	டெக்கிட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	தலைவர்/பணிப்பாளர்	10.34%
	வன் சீசன் ப்ரொப்பர்ட்டீஸ் (பிரைவேட்)லிமிட்டட்	பணிப்பாளர்	48.6%
	டியூ பெரடைஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	48.6%
	அனீவா (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	<11.8%
	ஜெனரேட்டர் சொலூசன்ஸ் (பிரைவேட்)லிமிட்டட்	பணிப்பாளர்	48.6%
	ஜுவலெக்ஸ் எக்ரி குமாரகம (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	15%
	ஏசியா செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	76.7%
	ஏசியா செக்கியூரிட்டீஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	27.64%
	ஏசியா செக்கியூரிட்டீஸ் வெல்த் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	27.64%
	ஏ-செக் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	100%
	ஏசியா செக்கியூரிட்டீஸ் எட்வைசர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	பணிப்பாளர்	27.64%
	சிங்கர் (ஸ்ரீலங்கா) பிஎல்சி	பணிப்பாளர்	பூச்சியம்
	யூனியன் எசூஹரன்ஸ்	பணிப்பாளர்	பூச்சியம்
திரு. ரஜீவ பண்டாரநாயக்க	கொழும்பு பங்குப் பரிவர்த்தனை	பிரதம நிறைவேற்று அதிகாரி	பூச்சியம்
	லங்கா வைனான்சியல் சேர்விஸஸ் பியூரோ லிமிட்டட் (லவைசேபிலி)	பணிப்பாளர்	பூச்சியம்
திரு.ஆர்.எம்.பி.ரத்நாயக்க	பொது திறைசேரி	பிரதிச் செயலாளர்	பூச்சியம்
	இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	பதவிவழி அங்கத்தவர் 16 ஜனவரி 2020 முதல்	பூச்சியம்
	இலங்கை வங்கி (இவ)	பதவிவழி அங்கத்தவர் 28 ஏப்ரல் 2020 முதல்	பூச்சியம்
	அகடமி ஒவ் வைனான்சியல் சேர்விசஸ் (கரன்டி) லிமிட்டட்	பதவிவழி அங்கத்தவர் 24 ஆகஸ்ட் 2020 முதல்	பூச்சியம்
	உள்;ர் கடன் அபிவிருத்தி நிதியம் (உகஅநி)	ஆணையாளர் மற்றும் தலைவர் 14 செப்டம்பர் 2020 முதல்	பூச்சியம்
திரு. சிந்தக்க மென்டிஸ்	இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	பணிப்பாளர் தலைமை அதிபதி 02 மார்ச் 2020 முதல்	பூச்சியம்
	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை	பதவிவழி அங்கத்தவர் 02 மார்ச் 2020 முதல்	பூச்சியம்
	கட்டுமான உத்தரவாத நிதியம்	நம்பிக்கைப் பொறுப்பாளர் 02 மார்ச் 2020 முதல்	பூச்சியம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பெயர்	தொடர்புடைய நிறுவனத்தின் பெயர்	தொடர்பு	பங்குரித்துவம், ஏதும் இருப்பின்
திரு. ரே அபேவர்தன	கொழும்பு பங்குப் பரிவர்த்தனை	30 ஜூன் 2020 வரை தலைவர் அதன்பின்னர் பணிப்பாளர்	பூச்சியம்
	எக்யூட்டி பார்ட்னர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்	முகாமைத்துவப் பணிப்பாளர் பணிப்பாளர்	பூச்சியம்
	எக்யூட்டி செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்	தலைவர்	பூச்சியம்
	எக்யூட்டி ஸ்டொக்ப்ரோக்கர்ஸ் (பிரைவேட்)லிமிட்டட்	தலைவர்	பூச்சியம்
	சென்ரல் டிப்போசிட்டரி சிஸ்டம் (பிரைவேட்)லிமிட்டட்	பணிப்பாளர்	பூச்சியம்
	சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி	பணிப்பாளர்	பூச்சியம்
	லங்கா வென்சர்ஸ் பிஎல்சி	பணிப்பாளர்	பூச்சியம்
	எல்விஎல் எனர்ஜி வன்ட் லிமிட்டட்	பணிப்பாளர்	பூச்சியம்
	கார்டியன் எக்யூட்டி எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்	பணிப்பாளர்	பூச்சியம்
திரு. வஜிர விஜேகுணவர்தன	இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	பணிப்பாளர் தலைமை அதிபதி 28 பெப்ரவரி 2020 வரை	பூச்சியம்
	இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை	பதவிவழி அங்கத்தவர் 28 பெப்ரவரி 2020 வரை	பூச்சியம்
	கட்டுமான உத்தரவாத நிதியம்	நம்பிக்கைப் பொறுப்பாளர் 28 பெப்ரவரி 2020 வரை	பூச்சியம்

வழக்கமான வணிகப் போக்கில் சந்தை வீதங்களில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைத் தவிர மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுடன் மீளாய்வாண்டில் எவ்விதமான கொடுக்கல் வாங்கலும் இடம்பெறவில்லை.

தீஉநி இலங்கை வங்கியில் (இவ)பின்வரும் நடைமுறை கணக்கினைப் பராமரிப்பதுடன் வங்கி மீதியானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நடைமுறை கணக்கின் பெயர்	கணக்கு இலக்கம்	31.12.2020 இல் உள்ளவாறான மீதி	31.12.2019 இல் உள்ளவாறான மீதி
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம்	1833	238,938	430,853

2020 ஆம் ஆண்டில் பின்வரும் முதலீடுகள் இலங்கை வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டின் வகை	இவ்வருடத்தில் இவ இல் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் (ரூ.)	இவ இல் 31 டிசம்பர் 2020 இல் உள்ளவாறான மீதி (ரூ.)
திறைசேரி முறிகள்	பூச்சியம்	375,874,050
மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் முதலீடு	915,706,442	பூச்சியம்
மொத்தம்	915,706,442	375,874,050

குறிப்புகள்

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

குறிப்புகள்

மேலதிகத் தகவல்கள்

அலுவலக முகவரி

28 மற்றும் 29 ஆம் மாடி
கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
எச்சிலன் சதுக்கம்
கொழும்பு 1
ஸ்ரீலங்கா

தொலைபேசி

+94 11 2143843

தொலைநகல்

+94 11 2439149

மின்னஞ்சல்

mail@sec.gov.lk

இணையம்

www.sec.gov.lk

கணக்கீட்டு ஆண்டு

31 டிசம்பர் 2020 இல் நிறைவடைந்த
ஆண்டிற்கானது

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
சம்பத் வங்கி
கொமர்ஷல் வங்கி



Cover designed by
Miss Ashara Seneviratne, Assistant Manager, SEC

Designed & produced by
emagewise
Printed by Gunaratne Offset (Pvt) Ltd

SEC

SECURITIES AND EXCHANGE
COMMISSION OF SRI LANKA